
மன்னவன் வந்தானடி
மனோரம்யா
மன்னவன் வந்தானடி * மனோரம்யா
மன்னவன் வந்தானடி
மனோரம்யா

## நூல் விவர அட்டவணை

| | |
|---|---|
| நூலின் பெயர் | : மன்னவன் வந்தானடி..! |
| ஆசிரியர் | : மனோ ரம்யா |
| உரிமை | : ஆசிரியருக்கு |
| மொழி | : தமிழ் |
| முதல் பதிப்பு | : மே, 2010 |
| தாள் | : 11.6 kg. வெள்ளைத் தாள். |
| நூலின் அளவு | : 1 x 8 கிரவுன் |
| அச்சு எழுத்து | : 11 புள்ளி |
| மொத்தப் பக்கங்கள் | : 288 |
| பைண்டிங் | : சாதா அட்டை |
| நூல் வெளியிடுவோர் | : அருணோதயம்<br>5/3, கௌடியா மடம் சாலை,<br>இராயப்பேட்டை,<br>சென்னை - 600 014. |

**விலை: ரூ.100.00**

| | |
|---|---|
| கணினி அச்சு | : வேலன் லேசர் - 94441-01753 |
| அச்சிட்டோர் | : ஜீ.எம்.கிராபிக்ஸ்,<br>சென்னை-14. |



# மன்னவன் வந்தானடி..!

# மன்னவன் வந்தானடி..!

## 1



“இப்ப என்ன ஆகிவிட்டதென்று நீ இப்படி பயந்து போய் உட்கார்ந்திருக்கிறாய்? இன்னும் நீ உயிரோடுதான் இருக்கிறாய் ரவி! இது பூலோகமேதான்!” என குறும்பு மிளிரக் கூறி கலகலவெனச் சிரித்தபடியே காரை விட்டிறங்கினாள் ஷண்மதி.

அவளது காலேஜ் பேகை எடுத்து நீட்டியபடியே, “சின்னம்மா... ம்கூம்! இது சரியில்லை! இன்று நீங்கள் என்ன ஸ்பீடில் கல்லூரிக்குக் காரை ஓட்டி வந்திருக்கிறீர்கள் தெரியுமா? இந்த வேகத்திற்கு பயந்துதான் ஐயா உங்

களை ஸ்டீயரிங் வீலைத் தொடவே கூடாதென கண்டிப்பாக கூறியிருக்கிறார். நீங்களோ தினமும் அவருக்குத் தெரியாமல் என்னை மிரட்டி ட்ரைவ் செய்து வருகிறீர்கள். அதுவும் இன்று... அப்பப்பா... உயிர் பிழைப்போமா வென்றே பயந்து போனேன். என்னவானாலும் சரி, இன்று ஐயாவிடம் சொல்லத்தான் போகிறேன்'' என்றான் ட்ரைவர் ஆற்றாமையுடன்.

பேகை க்ராஸாக தோளில் மாட்டியவள் சற்றும் அலட்டிக் கொள்ளாமல், ''ஏய் பயந்தாங்கொள்ளி! நான் எவ்வளவு வேகமாக ஓட்டினாலும் உனக்கோ இந்த காருக்கோ சின்ன கீறல் கூட ஏற்படாமல் என்ன லாவகமாக ஓட்டினேன் பார்த்தாயா? இது புரியாமல் பயந்து கொண்டு...'' என மீண்டும் கிண்டலாகச் சிரித்தாள் ஷண்மதி.

''அப்படியா... இந்த விளக்கமெல்லாம் மாலையில் அப்பாவிடம் கூறிக் கொள்ளுங்கள்.''

''ஏய் ரவி! அப்பாவிடம் மாட்டி விடுவாயா என்ன? அவ்வளவு தைரியம் வந்து விட்டதா உனக்கு?''

''கண்டிப்பாக... மாட்டிதான் விடுவேன்.''

''அப்படியா... அப்ப சரி! நானும் உன்னை மாட்டிவிட்டு விடுகிறேன்'' என தலை சரித்து மிரட்டினாள் ஷண்மதி.

''என்னையா? அப்படி என்ன சொல்வீர்களாம் ஐயாவிடம்? நீங்கள் என்ன போட்டுக் கொடுத்தாலும் உங்கள் கையில் காரைக் கொடுத்ததற்கு ஐயா என்னை திட்ட மாட்டார், ஏனென்றால் உங்கள் பிடிவாதத்திற்கு முன் நான் கண்டைக்காய் என்பது அவருக்குத் தெரியும். மாறாக உங்களைதான் காரை ஏன் ஓட்டினாய் என்று திட்டுவார்.''

அழகாய் உதட்டைப் பிதுக்கினாள் ஷண்மதி. கண்களில் குறும்பு வழிய, ''ட்யூப்லைட் ரவி! அப்பாவிடம்



மாட்டி விட மாட்டேன். மாறாக நேற்று மாலை என்னை அழைக்க வரும்பொழுது ஒரு பச்சை சுடிதாரை இமைக்காமல் பார்த்து டன் கணக்கில் ஜொள்ளு விட்டாயே, அதை உன் மனைவி கலாவிடம் போட்டுக் கொடுத்து விடுவேனாக்கும்'' என மிரட்டலாகக் கூறி கன்னம் குழிய சிரிக்கவும் கையெடுத்துக் கும்பிட்டான் ரவி.

''சின்னம்மா! போதும்மா! குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தி விடாதீர்கள். நான் நேற்று உங்களைதான் தேடினேன். நீங்களும் அதே கலர் சுடிதானே! இப்படியா திரித்துக் கூறுவது! ஆளை விடுங்கம்மா!'' என்றவனுக்கு தன்னை மீறிச் சிரிப்பு வந்தது.

சிரித்தபடியே உற்சாகமாக வகுப்பை நோக்கிச் சென்றாள் ஷண்மதி.

குறும்பும் குதூகலமும் அவள் உடன் பிறந்தவை. அவள் பிறந்ததுமே அவளது தாயார் ஸ்ரீமதி மறைந்தாலும் அவளது தந்தை அவளை தன் கண்ணின் கருமணியாக வளர்த்ததால் தாய் இல்லாத குறையை அவள் உணர்ந்ததே இல்லை.

உற்சாகமும், துறுதுறுப்பும் நிறைந்த அவளிடம் சில நிமிடம் பேசினாலே, வெகு காலம் பழகிய உணர்வு பழகியவர்களுக்கு ஏற்பட்டு விடும். அதுமட்டுமல்லாமல் இப்பொறியியல் கல்லூரியின் சேர்மேன் தன் தந்தை என்ற பொழுதும், துளிக்கூட கர்வமில்லாமல் எல்லோரிடமும் வெகு சகஜமாகவும் நட்புடனும் பழகுவதால் பெரிய நண்பர் பட்டாளமே அவளுக்கு இருந்தது.

டிபார்ட்மெண்டிலும் அவள் செல்லமே. சேர்மேன் பெண் என்பதற்காக அல்லாமல், உண்மையிலேயே தன் படிப்பாலும், மதிப்பெண்களாலும் அனைவரின் பிரியத்தையும் பெற்றிருந்தாள் அவள்.

தோள்வரை அழகாக வெட்டி விடப்பட்டு பின்புறம் சற்று தூக்கி க்ளிப்பிற்குள் அடங்கியிருந்த அடர்ந்த கூந்தல் அப்படியும், இப்படியும் அழகாய் ஆட, உற்சாக மும், குதூகலமுமாக வகுப்பிற்குள் நுழைந்தவளை நண்பர் பட்டாளம் 'ஹோ'வென கைதட்டி ஆரவாரமாக வர வேற்றது.

''வருக மகாராணி! வருக! இரண்டு நாட்கள் விடு முறைக்கு பின் இன்றுதான் கல்லூரிக்கு விஜயம் செய்வ தற்கு தங்கள் திருவுள்ளம் இடம் தந்ததோ?'' எனப் போலி பவ்வியத்துடன் வரவேற்றாள் ப்ரியங்கா.

அவளுக்கு எதிரே டெஸ்க்கின் மீது கேஷ்வலாக ஏறி அமர்ந்தவள், ''தாங்கள் இரண்டு நாள் பூரண ஓய்விற்கு பிறகு இன்றுதான் வருகை தரப்போவதாக கேள்விப் பட்டு தங்களைக் காண்பதற்காகவே வேகமாக ஓடி ஸாரி காரை ஓட்டி வந்தேன் என் ப்ரியமான காயே!'' என வழக் கம்போல் அவள் பெயரைக் கிண்டல் செய்தாள் ஷண்மதி.

உடனே ப்ரியங்காவும், ''ஏய் ஷண்... மதி! மிதி வாங் கப் போகிறாய் என்னிடம் நீ!'' என பதிலுக்கு வாரவும் ஷீத்தல் குறுக்கிட்டு,

''ஏய் ப்ரி! உன்னைதான்டி மிதிக்க வேண்டும். ஷண்மி வீட்டிற்கு அவளது அப்பாவின் பாரின் ப்ரெண்ட்ஸ் வந்திருப்பதால், இரண்டு நாட்களும் அவர்கள் கூடவே இருந்து, உபசரித்து அனுப்பும் பொறுப்பு இருக்கிற தென்று டூ டேஸ் லீவ்வென்று கூறிச் சென்றாள். உனக் கென்னடி வந்தது? நீயும் ஏன் இரண்டு நாட்களாக வரவில்லை'' என விசாரித்தாள்.

''போடி! ஷண்மி இல்லாமல் க்ளாஸே ரொம்ப போர் அடிக் கும். அதான் நானும் டூ டேஸ் கட் அடித்து விட்டேன்.''



''தெரியும்டி! நீ இந்த வேலைதான் செய்திருப்பா யென்று நினைத்தோம்'' என்ற சாம்பவி ஷண்மதியிடம் திரும்பி,

''ஷண்மி! நீ போன தடவை திடீரென்று லீவ் போட் டாயே ஞாபகம் இருக்கிறதா? இப்படிதான் நீ இல்லாமல் ஒரே போரென்று அவள் மதியம் கட் அடித்துவிட்டு எஸ் கேப்பாக, ஹாஃப் டே லீவ் முடிந்து நீ மதியம் காலேஜ் வந்து...'' என அவள் இழுத்து நிறுத்தவும் குபீரென அங்கு சிரிப்பு சத்தம் எழுந்தது.

''போதும்ப்பா சிரிப்பு. இவளது கார் காலேஜ் என்ட் ரென்ஸில் நுழைவதை பார்த்தவுடனே நான்தான் உட னேயே திரும்பி வந்துவிட்டேனே...'' என்றாள் ப்ரியங்கா ரோஷமாக.

''சரி! சரி! கூல் டவுன். இரண்டு நாட்கள் வகுப்பு எப் படிப் போனது? போர்ஷன்ஸ் எவ்வளவு கவராகியிருக் கிறது?'' என விசாரித்தாள் ஷண்மதி.

சட்டென்று நிமிர்ந்து அமர்ந்தாள் ஷீத்தல்.

''ஷண்மி! இவ்வளவு நேர வெட்டி அரட்டையில் ஒரு முக்கியமான விஷயத்தைச் சொல்லவே மறந்து விட் டோம்டி'' என்றாள் சஸ்பென்ஸ் குரலில்.

புருவத்தைத் தூக்கினாள் ஷண்மதி.

''ஏன்டி? முக்கியமான டாபிக் ஏதாவது நடத்தினார் களா? நோ ப்ராப்ளம். நானும் ப்ரீயும் டிபார்ட்மெண்ட்டில் தனி யாகக் கேட்டுக் கொள்கிறோம்'' என்றாள் கவலையற்று.

''போடி படிப்ஸ்! மேட்டர் அதில்லைடி. டேட்டா மைன் னிங் அண்ட் வேர் ஹவுஸிற்கு நியூ அப்பாயின்மெண்ட் போட்டிருக்கிறார்கள். ரேவதி மேம் இடத்திற்கு இன்ன மும் யாரையும் போடவில்லையென்று பேசிக் கொண் டிருந்தோமே!'' என்றாள்.

பாரமிறங்கியவள் போல் ஒரு மூச்சை வெளியிட்ட ப்ரியங்கா, "அப்பாடா சாமி! புண்ணியமாக போகட்டும். டிஸ்ட்ரிபியூட்டட் சிஸ்டம்ஸ் எடுக்கிறாரே பிரபு சார், அவரே டேட்டா மைன்னிங் க்ளாஸையும் ஒரு வாரமா சேர்த்து எடுத்து உயிரை வாங்கி விட்டார். அப்பாடா ஒரு வழியாக தப்பித்தோமென்று சொல்" என கிண்டலடித்தாள்.

"இம்ம்... ரேவதி மேம் போனதற்கு பதில், இந்த பிரபு சார் போயிருக்கலாம். அவரது அறுவையிலிருந்து நாமும் தப்பியிருப்போம்" என வெகு சோகமாக கூறினாள் சாம்பவி.

"ம்ம்ம்..." என காலாட்டியபடி கேட்டுக் கொண்டிருந்த ஷண்மதி சட்டென சிரித்தாள்.

"ரொம்பதான்டி கிண்டல் செய்கிறீர்கள். ஒன்றுக்கு இரண்டு முறை எக்ஸ்ப்ளைன் செய்தால் அறுவை என்று விடுவீர்களே!" என கேலியாகக் கூறியவள், "அது சரி, நியூ அப்பாயின்மெண்ட் எப்படி?" என ஆவலாக விசாரித்தாள்.

"அதைத்தானே சொல்ல வந்தேன். இவர்கள் சொல்ல விட்டால்தானே!" என்ற ஷீத்தலை முந்திக் கொண்டு,

"சூப்பர் சார் தெரியுமா? பெயர் ஸ்ரீதர். மும்பையில் பெரிய சாப்ட்வேர் கன்சர்னில் பெரிய போஸ்ட்டிங்கில் இருந்தவராம். ஏன் இங்கே வந்தாரென்று தெரியவில்லை. பயங்கர பிரிலியண்ட். என்ன அருமையாக க்ளாஸ் எடுக்கிறார் தெரியுமா? இரண்டே நாட்களில் நம்ம பாய்ஸ்க்கெல்லாம் ஹீரோவாகி விட்டாரென்றால் பார்த்துக் கொள்ளேன்" என மூச்சு விடாமல் கூறி முடித்தாள் சாம்பவி.

"பாய்ஸ்க்கு மட்டுமல்ல ஷண்மி. கேர்ள்ஸ்க்கும் இப்ப அவர் ஹீரோவாகிவிட்டார் தெரியுமா... ஏய் ஷண்மி



இப்படிக் கிண்டலாக பார்க்காதே. ஆள் நல்ல ஹேண்ட்சம். அதர் டிபார்ட்மெண்ட் கேர்ள்ஸ் எல்லாம் கூட அடிக்கடி இந்த பக்கம் விசிட் அடிக்கிறார்கள் என்றால் பார்த்துக் கொள்ளேன். நம் லாஸ்ட் பெஞ்ச் சுவாதி குரூப் கூட அடிக்கடி டவுட் கேட்கிறார்களென்றால் புரிந்து கொள்!" என்று ஷீத்தல் கூறவும் கிண்டலுடன் இடையிட்டாள் ஷண்மதி.

"இவர்கள் விசிட் அடிப்பதும், டவுட் கேட்பதும் இருக்கட்டும். அந்தப் பக்கம் ரியாக்ஷன் எப்படி?" என்ற அவளது கேள்வியிலேயே ரியாக்ஷன் எப்படி இருக்குமென்று தான் தெரியுமே என்ற தொனியிருந்தது.

இப்பொழுது சாம்பவி குறுக்கிட்டு, "போதும்டி உன் கிண்டல். நீ நினைப்பது போல் அவரில்லை தெரியுமா? டவுட் கேட்டால் கரெக்ட்டாகப் புரியும்படி க்ளியர் செய்கிறார். நன்றாக நடத்துகிறார். சிரித்துப் பேசுகிறார். பட் அதற்காக அவரிடம் நெருங்கி தேவையில்லாமல் பேசிவிட முடியாது. அவர் பார்வையிலேயே ஒரு தெளிவு, ப்யூர் இருக்கிறது தெரியுமா? எல்லா சாரையும் காக்கா பிடிக்கும் சுவாதி கும்பலாலே கூட அவரை நெருங்க முடியவில்லை தெரியுமா?" என்றாள் வேகமாக.

'அப்ப்...பா என்ன சப்போர்ட்' என உள்ளூர நினைத்தபடி கண்களில் சிறு ஆச்சரியத்துடன் அவளை நோக்கினாள் ஷண்மதி. பிறகு மற்றவர்களை நோக்க அவர்களும் பார்வையாலேயே சாம்பவியின் பேச்சை ஆமோதித்தனர்.

ப்ரியங்கா உற்சாகத்தோடு கைதட்டினாள்.

"பரவாயில்லையே! சுவாதி கும்பலாலேயே நெருங்க முடியவில்லையென்றால் சார் ரொம்ப ஸ்ட்ராங்தான் போல!" என்றாள் வேடிக்கையாக.

அதைக் கேட்ட ஷண்மதியின் விழிகளில் வழக்கமான குறும்பு பளிச்சிட்டது.

''அதென்ன சுவாதி கும்பலாலேயே கூட... அவர்களால் முடியாவிட்டால் யாராலும் முடியாதா...?'' என்றாள் கிண்டலுடன்.

முகத்தில் சிரிப்பு மலர, ''ஓஹோஹோ அப்படியா மேடம்? சரிதான்... உன்னால் முடியுமென்றால் ட்ரை பண்ணி பாரேன்'' என்று வாரினாள் ஷீத்தல்.

''டன்'' என்றாள் ஷண்மதி சுறுசுறுப்பாக.

''ஏய் போடி! உன்னால் முடியாது'' என்று சிரித்தாள் சாம்பவி.

ஷண்மதியும் விடாமல், ''ஏன் முடியாது பவி மேடம்? சுவாதி கும்பலால் முடியாவிட்டால் இந்த ஷண்மதியால் முடியாதா? முடித்துக் காட்டுகிறேன் பார்க்கிறாயா? ஆள் ஸ்ட்ராங்கென்றுதானே சொல்கிறீர்கள். குறித்துக் கொள்ளுங்கள். இந்த ஆண்டு படிப்பு முடிவதற்குள் என்னிடம் அவர் ப்ரபோஸ் பண்ணும்படி செய்கிறேன் பாருங்கள்'' என்றாள் வேடிக்கையாக.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''என்ன பந்தயம்?'' என்றாள் ப்ரியங்கா.

''ம்ம்... ஓகே! நான் தோற்றால் என்னுடைய இந்த பவழ மோதிரம்... யாருக்கு... ஏய் பவி நீதானே என்னால் முடியாதென்றாய்... உன்னிடம் என் மோதிரத்தை தந்து விடுகிறேன். நான் வெற்றி பெற்றால் உன் மோதிரம் எனக்கு'' என்றாள் ஷண்மதி.

''ஏய்! இதையா பெட் வைக்கிறாய்! இது உன் சென்டிமெண்ட் மோதிரம்டி. உன் அம்மாவினுடையது. இதை நீ கழற்றி நாங்கள் பார்த்ததில்லையே!''



''இனியும் கழற்றி நீங்கள் பார்க்கப் போவதில்லையே'' என்று அமர்த்தலாக ஷண்மதி கூறவும் கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்களுக்குச் சிரிப்பு வந்தது.

வராதே பின்னே! அவர்கள் செட்டில் யாராவது பேச்சு வாக்கில் 'அது முடியாது' என்று விட்டால் போதும். உடனே மற்றவர் வரிந்து கட்டிக் கொண்டு, 'அதென்ன முடியாதா? நான் முடித்துக் காட்டுகிறேன்' என வீர முழக்கமிடுவதும், பந்தயம் வைப்பதும்... சகஜம்தானே. இதில் வேடிக்கை என்னவென்றால் அடுத்த ஐந்தாம் நிமிடம் அந்த பந்தயம் காணாமல் போய்விடும். வெகு வீரமாக பெட் கட்டிக் கொள்வதுடன் சரி. பிறகு அதை கண்டு கொள்வதில்லை. எனவே ஷண்மதி மோதிரத்தைக் கழற்ற வேண்டிய அவசியமில்லைதான். ஆனால் அவள் அதையே படு அமர்த்தலாக, சவாலில் ஜெயித்து மோதிரத்தைக் காப்பாற்றப் போவதுபோல் கூறிய விதம் மற்றவர்களுக்குச் சிரிப்பை மூட்டியதில் வியப்பில்லை.

அதற்குள் பர்ஸ்ட் அவர் தொடங்குவதற்கான பெல் ஒலிக்கவே அவரவர் இடத்தில் சென்று அமர்ந்தனர்.

ஷண்மதி தன் ஐ.டி. கார்ட் ரோபை கழுத்தில் மாட்டியபடியே பக்கத்தில் அமர்ந்திருந்த சாம்பவியிடம்

''பவி! பர்ஸ்ட் அவர் என்ன?'' என விசாரித்தாள்.

''டேட்டா மைன்னிங் அண்ட் வேர் ஹவுஸிங்'' என சாம்பவி பதில் கூறுவதற்கும், பிரபு சார் உள்ளே நுழைவதற்கும் சரியாக இருந்தது.

எழுந்து நின்றவர்களை அமரும்படி சைகை செய்தவரிடம், ''சார் இட்ஸ் நாட் யுவர் அவர்'' என்று கனகாரியமாக நினைவு படுத்தினான் க்ளாஸ் ரெப்ரசென்டேட்டிவ் அசோக்.

''ஐ நோ மை பாய்! யு சிட்டவுன்'' என்றவர் ''நெக்ஸ்ட் அவர் என்னுடையதுதானே, அதை ஸ்ரீதர் சார்க்கு கொடுத்து விட்டேன். சோ... லிசன் டு மை க்ளாஸ் நவ்'' என்றபடியே வகுப்பை ஆரம்பித்தார்.

''போச்சுடா! மார்னிங் பர்ஸ்ட் அவர், இவரது அறுவையா?'' என மெல்லிய குரலில் சாம்பவி முனங்கவும்,

''ஷ்! க்ளாஸை கவனிடி!'' என அதை மெல்லிய தொனியிலேயே கண்டித்தாள் ஷண்மதி.

ஆனால் க்ளாஸ் கவனிக்க முடியாமல் அவளது கவனமும் சிதறித்தான் போனது செகண்ட் அவரில், ''குட் மார்னிங் ஸ்டுடண்ட்ஸ்'' என புன்முறுவலோடு உள்ளே நுழைந்தவனைக் கண்டு.

## 2



''சிட் டவுன், சிட் டவுன்'' என்றபடி நல்ல உயரமும், பளிச் முகமுமாக டேபிளின் முன் வந்து நின்றவன், தன் கையிலிருந்த பைலை சற்றே திரும்பி டேபிள் மீது வைப்பதையும், பின் கேஷ்வலாக திரும்பி கைகளை கட்டியபடி அந்த டேபிளின் மீதே இலேசாக சாய்ந்து நின்றபடி க்ளாஸை சுற்றி ஒரு தரம் நிதானமாக விழிகளைச் சுழற்றுவதையும் கண்ணகலப் பார்த்துக் கொண்டு சுற்றுப்புறம் மறந்து, உட்காராமல் நின்று கொண்டே இருந்த ஷண்மதியை சட்டெனக் கையைப் பிடித்திழுத்து அமர வைத்தாள் சாம்பவி.

''ஷண்மி வாட் ஹேப்பண்ட்? எல்லோரும் உட்கார்ந்து விட்டார்கள். நீ மட்டும் நின்றபடியே திகைத்துப்



போய் பார்த்துக் கொண்டிருக்கிறாய். நல்லவேளை சார் உன் பக்கம் திரும்பவில்லை'' என மெல்ல முணுமுணுத்தவள், ''அப்படி திகைத்து நின்றாயே, அவரை உனக்கு முன்பே தெரியுமா?'' என குறுகுறுப்புடன் வினவினாள்.

ஷண்மதி காதில் அவள் வார்த்தைகள் எதும் விழுந்ததாகத் தெரியவில்லை. இமைக்கவும் மறந்தவளாக அவனையே பார்த்தது பார்த்தபடி அமர்ந்திருந்தாள். சுற்றிச் சுழன்ற அக்கூரிய விழிகள் தன் மீது படிவதைக் கண்டவள் தன்னையும் மறந்து மீண்டும் எழுந்து நின்றாள் சிறு படபடப்புடன்.

அவன் விழிகளில் கேள்வியோடு 'என்ன'வென்பது போல் புருவங்களை உயர்த்தவும் சட்டென திகைத்தாள் ஷண்மதி.

'அடக்கடவுளே! இப்பொழுது நாம் என் எழுந்தோம். எழுந்து நின்றதற்கு என்ன காரணம் சொல்வது?' என உள்ளூர வேகவேகமாக யோசிக்கத் தொடங்கினாள்.

நல்லவேளையாக அசோக் எழுந்து, ''சார்! ஷி இஸ் ஷண்மதி. க்ளாஸ் டாப்பர். இரண்டு நாட்கள் லீவிற்கு பின் இன்றுதான் வந்திருக்கிறாள்'' என இன்ட்ரொடியூஸ் செய்யவும், ''ஓ'' என்றபடி மீண்டும் இவளைப் பார்த்தவன் அமரும்படி சைகை காட்டவும் இருவரும் அமர்ந்தனர்.

''ஷண்மி! என்னடி ஆயிற்று உனக்கு? பொசுக் பொசுக்கென்று எழுந்து நிற்கிறாய்'' என ப்ரியங்கா முதுகுப்புறமிருந்து மெல்லிய தொனியில் கேட்கவும்,

''நத்திங்'' என முணுமுணுத்தாள் ஷண்மதி. ஆனால் சாம்பவி ப்ரீயிடம், ''நோ! நோ! சம்திங் ராங் வித் ஹர்'' என்றாள் அதே மெல்லிய தொனியில்.

அதைக் கேட்ட ஷண்மதியின் இதழ்களில் தன்னை மீறி முறுவல் அரும்பியது.

உண்மைதான். 'என்னவாயிற்று எனக்கு?' என தன்னைத் தானே கேட்டுக் கொண்டாள். ஏனோ அவளுக்கு ஸ்ரீதரைப் பார்க்கும்பொழுது முதன் முறையாக பார்ப்பது போலவே தோன்றவில்லை. ஏதோ காலம் காலமாக அவனோடு பழகிய உணர்வுதான் உண்டாயிற்று. இதுவரை எந்த புதியவரிடமும் தோன்றாத ஓர் உணர்வு, ஆனால் அவனைக் கண்டதிலிருந்து ஏதோ நெடுங்காலம் பிரிந்திருந்து இன்று எதிர்பாராமல் சந்திப்பது போல் ஒரு மகிழ்ச்சி தோன்றுவது ஏனென்றுதான் அவளுக்குப் புரியவில்லை.

உள்ளுக்குள் இவ்வளவு யோசனை ஓடிய பொழுதிலும் அவளது விழிகள் அவனில்தான் பதிந்திருந்தன. டேபிளின் பின்புறம் சென்றவன் அட்டெண்டென்ஸ் பைலை பிரிப்பதையும், ஒவ்வொரு நம்பராக அழைத்தபடி குனிந்து பைலில் மார்க் பண்ணுவதையும் பார்த்தபடி அமர்ந்திருந்தாள். அவ்வப்பொழுது நிமிர்ந்த அவ்விழிகள்... அவ்விழிகளைப் பார்க்கப் பார்க்க... அதிலிருந்த ஏதோ ஒன்று அவளை அவன்பால் காந்தமாய் ஈர்ப்பது போல் தோன்றியது.

அவ்விழிகளில் தென்பட்ட தெளிவும் தீர்க்கமும், தூய்மையும்... அவனையே பார்த்துக் கொண்டிருந்தவளுக்கு தன் தாயாரின் நினைவு வரவும் சட்டென பிரம்மித்தாள்.

பத்தே நிமிடங்களுக்கு முன் சந்தித்தவன், புதியவன், அன்னியன். அவன் தன் தாயாரை நினைவூட்டுகின்றானே! இவனைப் பார்க்கப் பார்க்க அம்மாவின் நினைவு அதிகமாகின்றதே!

கடவுளே! என்னதிது? என உள்ளுக்குள் ஷண்மதி பலமாக தன்னைத் தானே கண்டித்துக் கொள்ளும்



பொழுதே அவள் கையில் யார்க்கும் தெரியாமல் நறுக்கென கிள்ளினாள் சாம்பவி.

திடுக்கிட்டுப் பார்த்தவளிடம், ''ப்ரசெண்ட் கூட சொல்லாமல்... என்னடி?'' என எச்சரிக்கும்பொழுதே, ''தெர்ட்டிடூ'' என நிமிர்ந்து பார்த்து சற்று அழுத்தமாக இரண்டாம் முறை அவன் அழைக்கவும், தன்னிலை உணர்ந்து சட்டென சமாளித்துக் கொண்டு, ''எஸ் சார்!'' என குரல் கொடுத்தாள் ஷண்மதி. அட்டெண்டென்ஸ் எடுத்து முடித்து கையெழுத்து போட்டபடி,

''ஹூ இஸ் அட்டெண்டென்ஸ் இன்சார்ஜ்?'' என வினவியவன் எழுந்து நின்ற ஷண்மதியைப் பார்த்து, ''நீங்களா? ஓகே! பிரபு சார் சைன் பண்ணவில்லை. அவரிடம் மறக்காமல் வாங்கி விடுங்கள். சிட் டவுன்'' என்றபடி மார்க்கரை கையில் எடுத்தான்.

தலையசைத்தபடி அமர்ந்த ஷண்மதிக்கு அவன் தன்னிடம் பேசிய சில வார்த்தைகளிலேயே உள்ள ஒரு குதூகலம் குமிழியிட்டு பொங்கியது. இதயத்தில் அழகிய மொட்டு மலர்ந்து வாடாத மலராய் மணம் பரப்பியது.

உற்சாகத்துடன் வகுப்பை கவனித்தவள், அவன் வகுப்பு முடிந்து சென்றதுமே, டீ ப்ரேக்கில் டேபிள் மீதிருந்த பைலை எடுத்துக் கொண்டு கர்ம சிரத்தையாக பிரபு சாரிடம் சைன் வாங்கிக் கொண்டு வந்தாள்.

உள்ளே நுழைந்தவளை அவளுக்காகவே காத்திருந்தது போல் தோழியர் கூட்டம் சுற்றி வளைத்தது.

''ஏய்! உண்மையை சொல்லு. என்னவாயிற்று உனக்கு?'' என்ற கோரஸ் கேள்வியும் பிறந்தது.

மலர்ந்த முகத்தோடு அவர்களை ஏறிட்டவள் மவுனமாகவே நிற்கவும், ''நீ இப்படி சைலண்ட்டாக இருப்பது கூட

ஆச்சரியம்தான். என்னதான்டி ஆனது உனக்கு?'' என மீண்டும் அதே கேள்வி எழுந்தது.

சற்றும் தயக்கமில்லாமல், ''ஒரு குட் நியூஸ் சொல்லட்டுமா?

ஐயம் இன் லவ். எஸ்! ஐ லவ் ஸ்ரீதர் சார்!'' என உற்சாகத்தோடு அறிவித்தாள்.

''என்ன?'' அதிர்ந்து விழித்தனர் மற்றவர்கள்.

சற்றே சுதாரித்துக் கொண்டு ''உனக்கு பைத்தியம் ஏதுமில்லையே?'' என சந்தேகத்தோடு சாம்பவி கேட்கவும் பதில் கூறாமல் சிரித்தாள் ஷண்மதி.

''பைத்தியம் பிடித்து விட்டது போல்தான் தெரிகிறது'' என்றாள் ப்ரியங்கா.

# 3



''ஐயோ! அம்மா!'' என்று இரு காதுகளையும் இறுக பொத்திக் கொண்டார் ஷண்முக பிரகாஷ்.

தன் போக்கில் சுவாரசியமாய் பேசிக் கொண்டிருந்த ஷண்மதி சட்டென பேச்சை நிறுத்தி, ''எ... என்ன டாட்?'' என பதறியபடி எழுந்தாள்.

''தெரியவில்லையேம்மா! காதில் ரத்தம் வருவது போல் ஓர் உணர்வு.''

அவசரமாக அருகில் வந்து அவரது கரங்களை விலக்கி செவிகளை உற்று நோக்கியவள், ''ஒன்றுமில்லையேப்பா... பெயின் ஏதாவது இருக்கிறதா? நம் டாக்டரிடம் போகலாமா?'' என பதறினாள்.



குறுஞ்சிரிப்புடன் மகளை நோக்கி, ''ரத்தம் வரவில்லையா சரிதான்! அப்படியென்றால் பயமில்லை. நீ உன் ப்ளேடை தொடங்கு'' என சாதுவாகக் கூறியவர் மகளின் முகம் போன போக்கைக் கண்டு சட்டென வாய்விட்டுச் சிரித்து விட்டார்.

''ச்சு! சுத்த மோசம் டாட் நீங்கள். நான் சற்று நோத்தில் எப்படி பதறி போனேன் தெரியுமா?'' என சிணுங்கிய ஷண்மதிக்கும் முயன்றும் கடைசியில் முறுவலை அடக்க முடியவில்லை.

இரவு உணவு முடிந்து இருவரும் சற்று நேரம் அமர்ந்து பேசிக் கொண்டிருக்கும் நேரம் அது.

மகளின் கன்னத்தை இலேசாகத் தட்டி, ''பின்னே என்னடா? முன்பெல்லாம் பக்கத்து பங்களா குட்டி பாப்பாவில் ஆரம்பித்து காலேஜ் கலாட்டா, ஷீத்தல் வீட்டு நாய் குட்டி, நம் தோட்டத்துப் பூக்கள் என்று எவ்வளவு சொல்வாய். ஆனால் இப்பொழுதெல்லாம்...'' என்ற தந்தையை இடைமறித்து,

''ஏன் இப்பொழுதும் அதையெல்லாம் சொல்லத்தானே டாட் செய்கிறேன். சற்று முன் கூட நம் தோட்டத்து பீச் கலர் ரோஸ் பற்றி சொன்னேனே!'' என ரோஷத்துடன் கேட்டாள் ஷண்மதி.

''சொன்னாய்தான். ஆனால் இந்த விஷயமெல்லாம் ஓர் இடைச்செருகல் மாதிரிதானே ஆகிவிட்டது உனக்கு. இந்த ஒரு மாதமாக ஸ்ரீதர் சார் அப்படி, ஸ்ரீதர் சார் இப்படி, என்று பெரும்பான்மையாக அவர் பற்றிதானே பேசுகிறாய்'' என சிரித்தவர், ''ஸாரி! ஸாரி! பேசிப்பேசி ப்ளேடு போடுகிறாய்'' என்று திருத்திக் கூறி மீண்டும் சிரிக்கவும் ஷண்மதியின் முகம் ரோஷத்தில் சிவந்தது.

"போங்களப்பா! இப்படி கிண்டல் செய்கிறீர்களே! இனி நான் உங்களிடம் ஸ்ரீதர் பற்றிப் பேசவே போவதில்லை."

புருவங்களை தூக்கினார் தந்தை.

"அப்படியென்றால் நீ மவுன விரதமென்று சொல். ஏனென்றால் உனக்குதான் அவரைத் தவிர இப்பொழுதெல்லாம் வேறு பேசவே தோன்றுவதில்லையே" என அப்பாவியாய் கூறவும்,

"அப்பா!" என முறைத்தாள் ஷண்மதி.

உடனே பயந்தவர் போல் பணிவாய் எழுந்து நின்று கை கட்டிய தந்தையின் பாவனையில் ஷண்மதிக்குச் சிரிப்பு வந்தது.

"போங்களப்பா! உங்களிடம் கோபப்படுவது போல நடிக்கக் கூட முடிவதில்லை. ஒரு முக பாவனையில் ஓரிரு வார்த்தைகளில் சிரிக்க வைத்து விடுகிறீர்கள்" என அலுத்துக் கொண்டவள்,

"அப்பா! ஸ்ரீதர் கூட இப்படித்தான் அப்பா. க்ளாஸின் நடுவே இப்படிதான் ஓரிரு வார்த்தை விளையாட்டாக கூறி எங்களைச் சிரிக்க வைத்து விடுவார். அந்த சிரிப்பிலேயே நாங்களும் ப்ரெஷ்ஷாகி விடுவோமா... அதைப் பயன்படுத்தி டாபிக்கை கண்டினியூ பண்ணி விடுவார். ஹெவி டாபிக்கை கூட ரொம்ப ஜாலியாக லைட்டாக ஹேண்டில் செய்வார். சாப்ட்வேர் பற்றிய ஃபுல் டீடெய்ல் பிங்கர் டிப்பில் வைத்திருக்கிறார் டாட். ரொம்ப ஜீனியஸ் அவர்" என அடுக்கிக் கொண்டே போனவள் சட்டென நினைவு வந்தவளாய் பேச்சை நிறுத்தி ஐயத்துடன் அப்பாவை பார்த்தாள்.

அவரோ வேண்டுமென்றே காதுகளில் விரலை வைத்து பார்த்துவிட்டு, "பிளட் வரவில்லையே ஸ்ட்ராங்



காதுதான்" என்று சிரித்துவிட்டு, "யாரோ என்னிடம் யாரைப் பற்றியோ பேசவே மாட்டேன் என்றார்களே. அது யார் ஷண்மதி?" என சீரியஸாகக் கேட்டுக் கிண்டலடித்தவர் தொடர்ந்து, "ஆனால் ஒன்று மட்டும் கன்பார்ம். ஸ்ரீதரை உனக்கு ரொம்பவும் பிடித்து விட்டது" என்று குறுகுறுப்புடன் மகளைப் பார்த்தார்.

"ஆமாம் டாட். ஸ்ரீதரை எனக்கு ரொம்பவும் பிடிக்கும்" என வெளிப்படையாகக் கூறியவள், "எனக்கு மட்டுமல்ல, காலேஜில் எல்லோர்க்கும்தான் பிடிக்கும். ஏன் அவரிடம் பேசினால் உங்களுக்குமே மிகவும் பிடித்து விடும்" என சகஜமாகக் கூறியவள் மணிக்கட்டை திருப்பிப் பார்த்துவிட்டு, "சரிப்பா! ரொம்ப நேரமாகி விட்டது. படுக்கப் போகலாமா? குட்நைட் டாட்!" என்றபடி எழுந்தாள்.

"சரிடா. குட்நைட்" என்றபடி கூடவே எழுந்த ஷண்முக பிரகாஷ், "ஷண்மதி சன்டேதானேயென்று தூங்கி விடாதேடா. நாளை சதாசிவம் வீட்டிற்குச் செல்ல வேண்டும். அவனது வெட்டிங் அனிவர்சரிக்கு கட்டாயம் வரவேண்டுமென்றிருக்கிறான். உன் அபிராமி ஆன்ட்டி உன்னை ஆவலோடு எதிர்பார்ப்பதாகக் கூறினாள்" என மகளுக்கு நினைவுபடுத்தினார்.

மிகப்பெரிய கோடீஸ்வரரான ஷண்முக பிரகாஷின் தொழில் பார்ட்னர்தான் சதாசிவம். சிறு வயதிலிருந்து நண்பரும் கூட. அதுவும் அவர் மனைவி அபிராமிக்கு தாயற்ற ஷண்மதியிடம் மிகுந்த பிரியமும் உண்டு. ஷண்மதிக்கும் அப்படியே.

எனவே, "மறப்பேனா! அப்பா! போன வாரமே கிப்ட் கூட வாங்கி வைத்து விட்டேனே. ஈவ்னிங் குணா வேறு கால் பண்ணி அழைத்தானே! வருவதாகக் கூறி விட்

டேன் டாட்!'' என்று புன்னகையோடு கூறியபடி மாடியேறினாள் ஷண்மதி.

மான்குட்டி போல் துள்ளி குதித்துக் கொண்டு படியேறி சென்ற மகளையே கண் மறையுமட்டும் புன்னகையோடு பார்த்திருந்தார் ஷண்முக பிரகாஷ்.

# 4



மறுநாள் காலை சதாசிவம் வீட்டிற்குச் சென்றவர்களுக்கு அங்கே ஏக வரவேற்பு.

பெண் குழந்தையில்லாத சதாசிவம், அபிராமிக்கு ஷண்மதி என்றால் மிகவும் உயிர். அவர்களது ஒரே மகன் குணாவை விட அவளுக்குதான் அவ்வீட்டில் செல்லமும், சலுகையும் அதிகம். குணாவும் அவளுக்கு நல்ல ப்ரெண்ட். படிப்பை முடித்துவிட்டு அவனும் தொழிலில் பங்கெடுத்துக் கொண்டான். அவனது தொழில் திறமை கண்டு ஷண்முக பிரகாஷிற்கு குணாவை மிகவும் பிடிக்கும். எனவே கலகலப்பான பேச்சின் நடுவே நேரம் வழுக்கிக் கொண்டு விரைந்தது.

மதிய விருந்திற்குப் பிறகு ஓய்வாக தோட்டத்தில் தனியே அமர்ந்திருந்தாள் ஷண்மதி. அவ்வழகிய தோட்டம் எப்பொழுதுமே அவள் ரசனைக்குரிய ஒன்று. அடர்ந்த பெரிய வேப்பமரத்தின் அடியில் சாய்ந்தபடி அத்தோட்டத்தை விழிகளால் ரசித்தபடி முறுவலுடன் அமர்ந்திருந்தாள்.

''ஹாலில் உன்னைக் காணவில்லையென்றதுமே நினைத்தேன். நீ இங்குதான் இருப்பாயென்று'' என்றபடியே அமர்ந்தான் குணா.



அவனை திரும்பிப் பார்த்தவளின் கண்களில் குறும்பு எட்டிப் பார்த்தது. ''உன் அறுவைக்கு பயந்துதானேடா நானே தப்பி இங்கு ஓடி வந்தேன். இங்கும் வந்து விட்டாயா? இம்ம்...'' என போலியாக பெருமூச்சு விடவும்,

அவனும் சளைக்காமல், ''அம்மா! தாயே! நாங்கள் ஒன்றும் உங்களை அறுக்க வரவில்லை. நீதான் அங்கிளிடம் ஸ்ரீதரைப் பற்றி பேசிப் பேசியே அறுக்கிறாயாமே. இப்பதான் கூறிக் கொண்டிருந்தார்'' என்று சிரிக்கவும், ஷண்மதிக்கு உள்ளூர இப்படி மானத்தை வாங்குகிறாரேயென்று தந்தை மீது இலேசாக கோபம் வந்தது.

அவள் முகத்தைக் கண்ட குணா வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''சோ... உனக்கும் அறுவை பட்டம் கிடைத்த விஷயம் கேள்விப்பட்டு மகிழ்ச்சியில் உம்மை வாழ்த்தவே யாம் இங்கு விரைந்தோடி வந்தோம் தோழியே!'' என வசனம் பேசவும் ஷண்மதிக்கு சிரிப்பு வந்து விட்டது.

''பொய்! பொய்! அண்ட மகா புளுகன் என்பது நீதான் குணா. எப்படி? எப்படி ஓடி வந்தாயா? அதுவும் விரைந்தோடி வந்தாயா? சரியான பொய்யன்டா நீ. நடந்துதானே வந்தாய்'' எனக் கேட்டு கன்னம் குழிய சிரிக்கவும் குணாவையும் அச்சிரிப்பு தொற்றிக் கொண்டது.

''வாயை பார்'' என கூட சேர்ந்து சிரித்தவன் ஷண்மதியை நேராக நோக்கி, ''இதெல்லாம் சரி ஷண்மி. உன் மேட்டர் எந்த அளவில் இருக்கிறது? ஸ்ரீதர் விஷயத்தில் ஏதேனும் முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறதா? அட்லீஸ்ட் ஸ்டூடண்ட் என்ற முறையிலேனும் உன்னிடம் சற்று சகஜமாகப் பேசுகிறாரா?'' என ஆவலுடன் கேட்டான்.

உதட்டை பிதுக்கினாள் ஷண்மதி.

''துளிக்கூட முன்னேற்றமில்லை குணா. எனக்கே எப்படி மூவ் பண்ணுவதென்று குழப்பமாக இருக்கிறது.

பொதுவாக வகுப்பில் நன்றாக நடத்துவார். இடையிடையே சகஜமாகப் பேசி ஜோக்கடித்தாலும் கூட அது நாங்கள் டாபிக்கை தொடர்ந்து சுறுசுறுப்பாக அப்சர்வ் செய்வதற்காகவே இருக்கும். மற்றபடி டிபார்ட்மெண்டில் நோட்ஸ், புக், போர்ஷன்ஸ் என்று நாங்கள் கேட்கப் போனாலும் தயக்கமில்லாமல் விளக்குவார். பட் ஏதோ ஒரு தூரத்தில் நிற்க வைப்பது போலவே தோன்றும். அதிலும் நானென்றால் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட் தெரியுமா?'' என்றாள் குறையோடு ஷண்மதி.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''ஒருவேளை உன் வால்தனம் தெரிந்ததால்கூட இருக்கலாம்'' என்றான் குணா.

''ஏய் போ குணா. அவர் வகுப்பில் நான் ரொம்ப சமர்த்தாகத்தான் இருப்பேன் தெரியுமா?''

அதை அவரல்லவா சொல்ல வேண்டுமென எண்ணிய மாத்திரத்தில் குணாவிற்கு முறுவல் அரும்பியது.

இவளாவது சமர்த்தமாக இருப்பதாவது என நினைத்தவனுக்கு அரும்பிய முறுவல் சிரிப்பாக மலர்ந்தது.

''ஏண்டா சிரிக்கிறாய்?''

''அது... அது ஒன்றுமில்லை! ஒருவேளை நீ அக்கல்லூரி சேர்மன் டாட்டர் என்பதால் அப்படி இருக்கிறாரோ என்னவோ?'' என்றான் குணா சமாதானமாக.

''ம்கூம்'' என தலையாட்டி மறுத்தாள் ஷண்மதி.

''கிடையவே கிடையாது குணா. ஒருநாள் அவர் பாடம் நடத்தும் பொழுது ஜன்னல் வழியே வெளியே பறந்த குருவியை வேடிக்கை பார்த்தேனென்று... ரொம்ப நேரம் கூட இல்லைடா அப்பொழுதுதான் சற்று திரும்பி பார்த்திருப்பேன். அதை நோட் பண்ணிய ஸ்ரீதர் என்னை எழுப்பி நிற்க வைத்து அன்றைக்கு நடத்திய பாடத்திலிருந்து கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னை ஒரு வழியாக்கி விட்டார். நல்லவேளை எப்படியோ சரியாகவே பதில் சொல்லி சமாளித்து விட்டேன்'' என பெருமூச்சு விட்டாள் ஷண்மதி.



''ஓஹோ! இப்படி குருவியை வேடிக்கை பார்ப்பதுதான் நீ அவரது வகுப்பில் சமர்த்தாக இருக்கும் அழகா?'' என கிண்டலடித்துச் சிரித்த குணா சட்டென சீரியஸாகி, ''உன்னிடம் சொல்ல வந்த விஷயத்தை விட்டு விட்டு ஏதேதோ பேசுகிறேனே'' என தலையைத் தட்டிக் கொண்டவன்,

''டிடெக்டிவ் ஏஜென்சியில் இருந்து ஸ்ரீதர் பற்றிய டிடெய்ல்ஸ் கிடைத்து விட்டது. நான் பயந்தது போல் மும்பையில் வேலை பார்த்து ஐந்து ஆண்டுகளாகட்டும், இங்கு வந்த பின்பாகட்டும் எந்தப் பெண்ணும் அவர் லைஃபில் இல்லை'' என்றான் நிம்மதியோடு.

ஸ்ரீதர் வேலைக்குச் சேர்ந்த சில நாட்களிலேயே, அவனுக்கு திருமணமாகவில்லையென ஷண்மதி கூறியிருந்தாலும் குணாவிற்கு உள்ளூர கவலை இருந்தது. திருமணமாகாவிட்டாலும் கூட அவன் வேறு யாரையாவது காதலித்துக் கொண்டிருக்கலாம் அல்லவா? இது புரியாமல் ஷண்மி பாட்டுக்கு விளையாட்டாக இருக்கிறாளேயென மிகவும் கவலைப்பட்டான்.

எனவேதான் அவனைப் பற்றி விசாரிக்க ஏற்பாடு செய்தான். ஆனால் ஷண்மதிக்கு அதில் அவ்வளவாக விருப்பமில்லை. குணாவின் கவலை பற்றியெல்லாம் அவள் சற்றும் அலட்டிக் கொள்ளவில்லை.

இப்பொழுதும் அவன் நீட்டிய பைலை கையில் கூட வாங்காமல், ''அந்த பைலை நீயே வைத்துக் கொள்

குணா. அதைப் பார்க்க வேண்டிய அவசியமே எனக்கில்லைடா. நான்தான் முன்பே சொன்னேனே குணா. அவரைப் பார்த்ததுமே எனக்கு, இது தெய்வம் ஏற்படுத்தித் தந்த சந்திப்பென்றுதான் தோன்றியது. ஸ்ரீதரை அப்பொழுதுதான் முதலில் பார்த்தது போலவே தோன்றவில்லை. வெகுகாலமாகப் பழகி பிரிந்த பின் மீண்டும் பார்த்தது போலவே உணர்ந்தேன். எனக்காகவே அவர் வந்திருப்பதுபோல் உணர்ந்தேன்'' என கனவில் பேசுவது போல் பேசியவள் சட்டென மவுனமானாள்.

பிறகு, ''குணா இன்னொரு விஷயம்'' என்றாள்.

''என்ன?''

''ஸ்ரீதர் மும்பையில் எங்கு வேலை பார்த்தார். என்ன செய்தார் போன்ற தகவலெதுவும் எனக்கு வேண்டாம். ஆனால் இப்பொழுது அவர் வீட்டிலிருக்கும் மெம்பர்ஸ், அவர்களது ரொட்டீன் போன்ற டீடெய்ல்ஸ் எனக்கு வேண்டுமே!'' எனக் கேட்கவும்,

''நோ ப்ராப்ளம் ஷண்மி. சீக்கிரமே கிடைக்கும்படி செய்கிறேன்'' என்றான் குணா ஈஸியாக.

கூடவே தொடர்ந்து, ''எல்லாம் சரிதான். ஆனால் ரிப்போர்ட் படித்ததும் எனக்கே ஒரே ஆச்சர்யம். அவர்களுக்கு சொந்தமாக பிஸினெஸ் இருக்கிறது. நம் அளவிற்கு இல்லையென்றாலும் அவர்களும் பெரிய பணக்கார குடும்பமே. அப்படியிருக்க தொழிலை கவனிக்காமல் இந்த லைனிற்கு ஏன் வந்தாரென்றுதான் தெரியவில்லை'' என யோசனையோடு இழுத்தான் குணா.

''அதுதான் சொன்னேனே குணா. ரியல் எஸ்டேட் பிஸினெஸில் அவருக்கு ஆர்வமில்லையாம். எம்டெக் முடித்ததும் மும்பையில் ஜாப். நம் கல்லூரிக்கு வேலைக்கு



வந்ததும் அவராக விருப்பப்பட்டு வந்ததுதானாம். டிபார்ட்மெண்டில் பாலா சாரிடம் சொல்லிக் கொண்டிருந்ததைக் கேட்டுக் கொண்டு வந்து ப்ரி சொன்னாள்'' என்றவள் தொடர்ந்து, ''நல்லவேளை நம் கல்லூரிக்கு வந்தார். இல்லாவிட்டால் அவரை நான் சந்தித்திருக்கவே முடிந்திருக்காதே!'' கடவுளுக்குதான் நன்றி சொல்ல வேண்டும் என்றாள் உற்சாகத்தோடு.

''சரிதான்! உனக்கு ரொம்பவும் முற்றிதான் போய் விட்டது'' எனச் சிரித்தான் குணா.

மெல்ல முறுவலித்த ஷண்மதி சட்டென மூண்ட சந்தேகத்தோடு, ''ஏய் குணா! நீ டிடெக்டிவ் ஏஜென்ஸியில் விசாரிக்க ஏற்பாடு செய்தது அப்பாவிற்குத் தெரியுமா?'' எனக் கவலையோடு கேட்டாள்.

அவளை ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தவன், ''ம்கூம்! இல்லையே ஷண்மி. நீ சொல்ல வேண்டாமென்ற பிறகு நான் எப்படிச் சொல்வேன்'' என்றான் அவன்.

தொடர்ந்து, ''ஆனால் அங்கிள்க்கு ஏன் தெரிய வேண்டாமென நினைக்கிறாய் ஷண்மி. இன்று அவர் அப்பா, அம்மாவிடம் பேசியதைக் கேட்டால் அவரும் யூகித்திருக்கிறார் என்றுதான் தோன்றுகிறது'' என்றான்.

''ம்கூம்! மறைக்க நினைக்கவில்லை குணா. ஆனால் கன்பார்ம்மாக சொல்ல மனம் வரவில்லை. இப்பொழுது நான் அதிக இம்பார்ட்டென்ஸ் தர வேண்டியது என் ஸ்டடீஸ்க்குதான் படிப்பை முடிக்காமல் அப்பாவிடம் இது பற்றிப் பேசுவதை நினைக்கக் கூட முடியாது. படிப்பை முடித்த பிறகு கோல்ட் மெடல் வாங்கிய பிறகுதான் அப்பாவிடம் நேராகப் பேசுதாக இருக்கிறேன்'' என்று தெளிவாகக் கூறியவள், ''அதற்குள் இந்த ஸ்ரீதரை சரி பண்ண முடிகிறதாவென பார்க்கிறேன்'' என்றாள்.

அவளைக் கூர்மையுடன் நோக்கி, ''சரி பண்ண முடியாவிட்டால்?'' என குணா வினவவும்,

அவனை தளராமல் நோக்கி, ''எனக்கு நம்பிக்கை இருக்கிறது குணா. அப்படி முடியாவிட்டாலும் கூட அப்பாவிடம் என் எதிர்காலம் ஸ்ரீதர்தான் என்று மனம் திறந்து கூறி விடுவேன். பிறகென்ன அவர் கரெக்ட்டாக ஹேண்டில் பண்ணி எங்கள் திருமணத்தை முடித்து விடுவார்'' என கவலையற்று கூறினாள் ஷண்மதி.

புன்னகையோடு அவள் உச்சியில் கை வைத்து அவள் தலையை இலேசாக ஆட்டியவன், ''சரி வா! உள்ளே போகலாம்'' என்று எழுந்தான்.

புன்சிரிப்போடு தானும் எழுந்தாள் ஷண்மதி.

# 5



''என்னவாயிற்று சின்னம்மா? காரை ஏன் நிறுத்துகிறீர்கள்?'' என கேட்டான் ரவி, ஷண்மதி காரை ஒதுக்கி நிறுத்தியதன் காரணம் புரியாமல்,

''இருடா வருகிறேன்!'' என்றபடி அவசரமாக இறங்கியவள் சற்று பின் தள்ளி நின்றிருந்த காரிடம் சென்றாள்.

''ஹலோ சார்! என்னவாயிற்று உங்கள் கார்க்கு?''

பானட்டை மூடி விட்டு நிமிர்ந்த ஸ்ரீதர் அவளைப் பார்த்தான். ''தெரியவில்லை. மெக்கானிக் ஷாப்பிற்கு கொண்டு போகவேண்டும் போலிருக்கிறது'' என்றான்.

அவனது கார்க்கு மனதினுள் நன்றி கூறியபடி, ''இப்ப எப்படி சார் போவீர்கள்? அப்புறம் காலேஜிற்கு மிகவும்



லேட்டாகி விடுமே!'' என்றவள் ரவியை அழைத்து, ''சார்! ரவியிடம் காரை விட்டுவிட்டுப் போகலாம். பக்கத்தில்தானே நம் வழக்கமான மெக்கானிக் ஷாப். ரவி! காரை சரி செய்து காலேஜில் விட்டு விட்டு சாரிடம் கீயை தந்துவிடு சரியா?'' என்றபடி ஸ்ரீதரிடம் திரும்பி,

''வாருங்கள் சார்! நான் ட்ராப் செய்கிறேன்'' என்று அழைத்தாள்.

''பரவாயில்லை. நீங்கள் போங்கள்'' என தயங்கினான் ஸ்ரீதர்.

''தயங்காமல் வாருங்கள் சார். காலேஜிற்கு லேட்டாகிறதே. வாருங்கள் சார்'' என ஷண்மதி விடாமல் வற்புறுத்தவும், மணிக்கட்டை திருப்பிப் பார்த்தவன் ''சரிதான்'' என கூட நடந்தான்.

''ஒரு நிமிடம் சார்'' என்றபடி திரும்பி ரவியிடம் சென்றவள், ''ரவி! நம் கார் கீயும் சாரிடமே தந்து விடுகிறேன். மறக்காமல் வாங்கிக் கொண்டு அதிலேயே திரும்பி விடு. சரியா?'' என்றபடி திரும்பி வந்தாள்.

காரை நோக்கி நடந்தவர்களை ரவியின் குரல் தடுத்தது.

''சார்! இஷ்ட தெய்வத்தை நன்றாக வேண்டிக் கொண்டு காரில் ஏறுங்கள்'' எனவும் ஷண்மதி திரும்பி,

''ஏய்! என்னிடம் நன்றாக உதைபடப் போகிறாய். இரு இரு, ஈவ்னிங் கலாவைப் பார்க்க வருகிறேன்'' என வழக்கம் போல் மிரட்டவும் ரவி சிரித்தான்.

காரை ஸ்டார்ட் செய்ததுமே ஷண்மதி உற்சாகத்தோடு பேச ஆரம்பித்தாள்.

''சார்! நம் காலேஜ் எப்படி? உங்களுக்கு பிடித்திருக்கிறதா?''

''ம்'' என்ற ஒற்றை எழுத்தில் பதில் தந்தபடி வெளியே பார்வையை செலுத்தினான் ஸ்ரீதர்.

ஆனால் அவளது தொடர்ந்த கலகல பேச்சு அவன் முகத்திலும் முறுவலை வரவழைத்தது.

அவன் புன்னகையைக் கண்டவளுக்கு நல்ல சமயத்தை விட மனமில்லை.

எனவே பாதையை கவனித்தவள் சட்டென அவன் புறம் திரும்பி, ''சார்! உங்களிடம் ஒன்று கேட்கலாமா?'' என்று வெகு பவ்யமாகக் கேட்டாள்.

அவளது பவ்யமான குரலைக் கேட்டவனுக்கு உள்ளூர சிரிப்பு மூண்டது. காட்டிக் கொள்ளாமல் 'இம்' என ஊக்கினான் அவன்.

ஸ்டியரிங் வீலை வளைத்தபடி, ''சார்! மும்பையில் உங்களுக்கு மாத சம்பளமே லட்சக் கணக்கிலாமே! அவ்வளவு பெரிய கன்சர்னில், பெரிய போஸ்டிங்கில் இருந்த நீங்கள் இந்த லைனிற்கு ஏன் சார் வந்தீர்கள்?'' என ஆவலை அடக்க மாட்டாமல் கேட்டாள்.

ஒரு கணம் பார்வையைத் திருப்பி அவளைப் பார்த்தான் அவன். பதில் வராது போகவும் பக்க வாட்டில் நோக்கினாள் ஷண்மதி.

''அப்...ப்பா! அடுத்தவர் விஷயம் அறிந்து கொள்வதில் எத்தனை ஆர்வம்'' என்றான் அவன் கிண்டலுடன் கூடிய குரலில்.

'அடுத்தவரா? அப்படி நினைத்தால்தானே' என மனதிற்குள் எண்ணியவள், ''சும்மா ஒரு க்யூரியாசிட்டிதான் சார். சொல்லுங்களேன். இந்த லைனில் உங்களுக்கு அவ்வளவு ஆர்வமா?'' என மீண்டும் கேட்கவும்,

வழக்கம்போல் ''ம்'' என்ற ஒற்றை பதிலே வரவும் 'சுத்த மோசம் எந்த வழியில் சம்பாஷணையை துவக்கினாலும் ஒரிரு வார்த்தைகளில் சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி வைத்து விடுகிறானே' என உள்ளூர பொருமினாள் ஷண்மதி.



ஆனாலும் விடாமல் ''சும்மா சொல்கிறீர்கள் சார். அப்படியென்றால் மேற்படிப்பு முடிந்ததுமே இந்த பீல்டுக்கு வந்திருப்பீர்களே சார்!'' என மீண்டும் பேச்சை ஆரம்பித்தாள்.

வியப்புடன் அவளை நோக்கியவன் மெல்லிய புன்னகையோடு, ''கேம்பஸ் வந்து விட்டது'' என்றான்.

சரியான கல்லுளி மங்கன் என உள்ளூர அர்ச்சித்தபடி காரை நிறுத்தினாள் ஷண்மதி.

''தேங்க்ஸ் ஃபார் யுவர் லிப்ட்'' என்றபடி கார் கதவை திறக்க போனவன் ஒரு கணம் நிதானித்து அவள் புறம் திரும்பி, ''கொஞ்சம் ஸ்லோவாக ஓட்டினாலும் நன்றாக ஓட்டுகிறாய். ஆனால் உன் ட்ரைவர் ஏன் அப்படிச் சொன்னான். அவன் சொன்னதைப் பார்த்தால் நீ காரை ஓவர் ஸ்பீடில் ஓட்டுவாயோயென பயந்தேன்'' எனவும் ஷண்மதியின் முகம் சிவந்தது.

அவள் இதுநாள் வரையில் இவ்வளவு ஸ்லோவாக ட்ரைவ் செய்ததே கிடையாது.

ரவிக்கு மட்டும் அவள் இன்று ட்ரைவ் செய்த ஸ்பீட் தெரிந்தால் மயக்கமே போட்டு விடுவான் என எண்ணியவளுக்கு சிரிப்பு வந்தது.

ஒன்றும் சொல்ல மாட்டாமல் சிரித்துச் சமாளித்தவள், காரை லாக் செய்து கீயை அவனிடமே தந்து, ''ரவியிடம் கொடுத்து விடுங்கள் சார்'' என்றபடி உற்சாக மிகுதியோடு வகுப்பறையை நோக்கி நடந்தாள்.

அவனுடன் பேசிக் கொண்டு காரில் வந்த அழகிய நிமிடங்களை எண்ணும்பொழுது அவள் மனம் ஆனந்தத்தில் துள்ளிக் குதித்தது.

மாலையில் கல்லூரி முடிந்து வந்த ஷண்மதி, 'முதலில் எழுந்திரு, ட்ரைவர் சீட் எனக்குதான்' என அடம்

பிடிக்காமல் முன்புறம் ஏறி அமரவும் ரவி வாயைப் பிளந்தான்.

''ஏண்டா இப்படி வாயை பிளக்கிறாய்? காரை ஓட்டும் ஐடியா இருக்கிறதா இல்லையா?'' என கிண்டல் குரலில் ஷண்மதி கேட்கவும் கப்பென்று வாயை மூடிக் கொண்டு காரை ஸ்டார்ட் செய்தான் ரவி.

சீட்டில் வசதியாக அமர்ந்து தலை சாய்த்து கண்களை மூடிய ஷண்மதியினுள் காலையில் இந்த சீட்டில்தானே ஸ்ரீதர் உட்கார்ந்து வந்தான்' என்ற எண்ணம் உள்ளே ஓடவும் குறும்புச் சிரிப்புடன் விழிகளைத் திறந்தாள்.

''ரவி! சார் காரை அவரிடம் ஒப்படைத்தாயே, என்ன சொன்னார்?'' என விசாரித்தாள்.

''தேங்க்ஸ் என்றார் சின்னம்மா. கார் ரிப்பேர்க்கு பணத்தைத் தந்தார்.''

திடுக்கிட்டுத் திரும்பினாள் ஷண்மதி.

''நீ ஒன்றும் வாங்கிவிடவில்லையே ரவி'' என அவசரமாகக் கேட்டாள்.

''நீங்கள்தான் காலையிலேயே பணம் வாங்கக் கூடாதென அவருக்குத் தெரியாமல் ஜாடை காட்டி பணமும் தந்து விட்டீர்களே. மீறி நான் வாங்குவேனா? ஆனால் அவர்தான் நான் மறுக்க மறுக்க பணத்தை என் பாக்கெட்டில் வைத்து விட்டார்.''

''என்ன ரவி நீ மறுத்திருக்கக் கூடாதா?''

''மறுக்காமல் இருப்பேனா சின்னம்மா. அவர் மிகவும் வற்புறுத்தி வைத்து விட்டார்'' என்றான் தயக்கத்தோடு ரவி.

ஒரு கையால் சட்டை பாக்கெட்டிலிருந்து பணத்தை எடுத்து அவன் அவளிடம் நீட்டவும்,



''வேண்டாம் ரவி. நீயே வைத்துக் கொள். அடுத்த வாரம் உன் குட்டி பையன் பர்த்டே வருகிறதே! ஏதாவது வாங்கிக் கொடு'' என்றபடி மீண்டும் சீட்டில் சாய்ந்து விழி மூடிய ஷண்மதிக்கு காலையில் ஸ்ரீதர் அவளை ஒருமையில் அழைத்தது நினைவு வரவும் அவள் ரோஜா இதழ்களில் அழகிய புன்னகை ஒன்று தவழ்ந்தது.

# 6



''திமிர்! அவ்வளவும் திமிர்!'' என வாய்க்குள்ளேயே திட்டிக் கொண்டிருந்த ஷண்மதியை வியப்புடன் நோக்கினாள் ப்ரியங்கா.

''ஏய், என்னவாயிற்று உனக்கு?'' என்ற கேள்வியும் அவளிடமிருந்து எழுந்தது.

பதிலே சொல்லாமல் ஷண்மதி, டெஸ்க்கின் மீதிருந்த டெக்ஸ்ட் புக்கில் கவனமாக இருப்பதையும் சற்று பொறுத்து மீண்டும் தனக்குள் முணுமுணுப்பதையும் கண்டவள், ''காலையிலேயே என்னடி வந்தது உனக்கு? யாருக்கு இவ்வளவு அன்பாய் ஆசையாய் அர்ச்சனை செய்கிறாய்? சொல்லிவிட்டு உன் திட்டை கண்டினியூ செய்யேன். வேண்டுமானால் நாங்களும் வந்து உன் லட்சார்ச்சனையில் பங்கு கொள்கிறோம்'' என கிண்டலடித்தாள்.

'களுக்'கென சாம்பவி சிரிக்கவும், இருவரையும் முறைத்தாள் ஷண்மதி.

ப்ரியங்காவோ சற்றும் அலட்டிக் கொள்ளாமல், ''ஹலோ மேடம்! மேட்டரை வாயால் சொல்லாமல் கண்களால்

முறைத்தால் எப்படி? உன் பார்வையைப் படித்தெல்லாம் எங்களால் விஷயத்தைப் புரிந்து கொள்ள முடியாது. அதற்கெல்லாம் வேறு ஒருவர் வருவார். ம்ம்... தேர்ட் அவர் வருவாரென்று நினைக்கிறேன். இப்பொழுது எனக்கு வாயாலேயே சொல்லுங்கள் மேடம்'' என்று கேட்கவும் பக்கென்று சிரித்து விட்டாள் சாம்பவி.

''போதும்டி! சிரிக்கின்ற சிரிப்பில் பல் சுளுக்கிக் கொள்ள போகிறது'' என எரிச்சலுடன் முணுமுணுத்தபடி டெக்ஸ்ட் புக்கின் பக்கத்தைப் புரட்டவும் ப்ரியங்கா பொறுமை இழந்தாள்.

''அடடடா! என்ன புக் இது? ம்ம்... டேட்டா மைன்னிங்கா நினைத்தேன். இதை அப்புறமாக புரட்டலாம். முதலில் விஷயத்தைச் சொல்லு. ஏன் இந்த மூட் அவுட்?''

''எல்லாம் உங்கள் அருமை ஸ்ரீதர் சாரால் தான்'' என்று எரிச்சல் குறையாமலேயே கூறினாள் ஷண்மதி.

புருவங்களை உயர்த்திய சாம்பவி, ''என்னது? எங்கள் ஸ்ரீதர் சாரா? அப்ப உங்களுக்கு... ம்ம் அதுவும் கரெக்ட் தான். எங்களுக்கு அவர் ஸ்ரீதர் சா...ர்தான். பட் உங்களுக்கு அவர் வெறும் ஸ்ரீதர் தானே!'' என குறும்புடன் கூறிச் சிரித்தாள்.

''மண்ணாங்கட்டி'' என்றவள், ''என்ன பவி, எல்லாம் தெரிந்தும் நீயே இப்படிக் கிண்டல் செய்யலாமா?'' என ஆற்றாமையோடு கேட்டாள்.

''எல்லாம் தெரிந்ததால்தானே கிண்டல் செய்கிறேன்'' என்று மீண்டும் கேலி செய்தாள் சாம்பவி.

''உதை வாங்கப் போகிறாய் பவி நீ'' என்றாள் ஷண்மதி. ப்ரியங்கா குறுக்கிட்டு, ''அப்புறமாக உதைத்துக்



கொள்ளலாம். முதலில், என்னதான் நடந்தது? அதைச் சொல்லித் தொலையேன்டி!'' என பொறுமையிழக்கவும் அவளிடம் திரும்பினாள் ஷண்மதி.

''இன்று காலையில் செமஸ்டர். எக்ஸாம் பீஸ் கட்டிட்டு திரும்பி வந்தோம் ப்ரி. நம் பவியும் அந்த சுவாதியும் சற்று முன்னால் போக அவர்களுக்கு சற்று முன்னால் அசோக் போனான்டி.

அந்த நேரம் எதிரில் ஸ்ரீதர் வருவதைக் கண்ட அசோக் குட் மார்னிங் சொல்லவும் ஸ்ரீதர் சிரித்தபடியே அவனுக்கு விஷ் பண்ணினார்டி.''

''சரி'' என கன்னத்தில் கை வைத்து கதை கேட்டாள் ப்ரியங்கா.

''அப்புறம் பவி விஷ் பண்ணினாள். கூடவே அந்த சுவாதியும் இருவருக்கும் என்னவொரு ப்ரெஷ்ஷாகவும், ப்ரிஸ்க்காகவும் விஷ் பண்ணினாள் தெரியுமா?'' என சொல்லிக் கொண்டே வந்த ஷண்மதியின் பேச்சில் குறுக்கிட்டாள் ப்ரியங்கா.

''ச்சு! என்ன ஷண்மி நீ? நாங்களெல்லாம் யார்? அவரோட ஸ்டூடண்ட்ஸ் தானே! எங்களுக்கு சின்னதாக அவர் சொல்கின்ற குட்மார்னிங்குக்கெல்லாம் பொறாமைப் படலாமா? நீ இவ்வளவு பொஸசிவ் கேரக்டரா என்ன?'' என்று சமாதானப்படுத்தவும்,

தலையில் அடித்துக் கொண்டாள் ஷண்மதி.

''என் ப்ரியமான முந்திரி கொட்டையே! முழுவதும் கேட்டு விட்டு அப்புறம் தீர்ப்பு வழங்கவா. முதலில் நடந்ததை முழுவதாக என்னைச் சொல்ல விடு!'' எனவும்,

ப்ரியங்கா அசடு வழிய, ''சரி! சரி! சொல்லுடி'' என்றாள்.

''இவர்கள் எல்லோருக்கும் சற்று பின் தள்ளி வந்து கொண்டிருந்த நான் விஷ் பண்ணிய பொழுது மட்டும், 'ஏதோ பெரிய சக்கரவர்த்தி, தன் கடைநிலை பணியாள் வணக்கம் வைத்தால் எப்படி தலையசைத்து விட்டுச் செல்வாரோ அதுபோல் என்னிடம் மட்டும் கெத்தாக தலையசைத்து விட்டுப் போகிறார்.''

அவள் புலம்பியதைக் கேட்டு சட்டெனச் சிரித்து விட்டாள் ப்ரியங்கா.

''ச்சு! இவ்வளவுதானா?'' எனக் கேட்டு மீண்டும் சிரிக்கவும்,

''சிரிக்காதேடி ப்ரி! எனக்கு வந்த ஆத்திரத்திற்கு அப்படியே...''

''அப்படியே...'' என சுவாரசியமாகக் கேட்டாள் ப்ரியங்கா.

சாம்பவி குறுக்கிட்டு, ''அப்படியே... என்ன அப்படியே... மேடம் அப்படியே லெப்ட் திரும்பி ஸ்டெப்ஸ் ஏறி இப்படி க்ளாஸில் உட்கார்ந்து லட்சார்ச்சனை செய்து பொழுதை கழிக்கிறார்கள்'' என உதடு பிதுக்கிச் சிரிக்கவும்,

''அதுதானே! நம் ஷண்மிக்கு என்றுதான் கோபம் வந்திருக்கிறது, இன்று வருவதற்கு'' என்று ப்ரியங்காவும் சிரித்தாள்.

''ரொம்பவும் சிரிக்காதீர்கள்டி. அன்று ஜஸ்ட் ப்யூ செகண்ட்ஸ் குருவியை வேடிக்கை பார்த்தேனென்று எப்படி கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னை ஒரு வழியாக்கினார். இன்று ஸ்ரீதர் வரட்டும். கவனித்துக் கொள்கிறேன்'' எனப் பொருமினாள் ஷண்மதி.

தேர்ட் அவர் அவன் வந்த பொழுதும் விரைப்பாகவே தான் இருந்தாள். வழக்கம் போல் அவன் அட்டெண்டென்ஸ் எடுக்க, அவன் பக்கம் செல்ல முயன்ற கண்களை பிடிவாதமாகக் கட்டுப்படுத்தியபடி டெஸ்க்கின் மீதிருந்த தன் கரங்களில் பார்வையை பதித்தபடி அமர்ந்திருந்தாள்.



மார்க்கரை எடுத்தபடி போர்ட் பக்கம் திரும்பிய ஸ்ரீதருக்கு, ஷண்மதி கோபமாக அமர்ந்திருப்பதையும், அதன் காரணமான காலை சம்பவத்தையும் நினைத்து உள்ளூர சிரிப்பு மூண்டாலும் காட்டிக் கொள்ளாமல் நடத்தத் துவங்கினான்.

பாடம் நடத்த ஆரம்பித்தவுடன் அவள் கோபத்தையெல்லாம் மூட்டை கட்டி தூர வைத்து விட்டு க்ளாஸை கவனமாய் கவனிப்பதையும், அவன் போர்ட் பக்கம் திரும்பும் சமயங்களிலெல்லாம் அவ்வப்பொழுது மற்றவர்களிடம் திரும்பி ஏதாவது பேசிக் கொண்டும் சிரித்துக் கொண்டும் வம்பு செய்பவள், இன்று தன் குறும்புத் தனத்தை வெளிக்காட்டாமல், அக்கம் பக்கம் திரும்பாமல் வெகு மும்முரமாக நோட்ஸ் எடுப்பதைக் கண்டவன் அடுத்து வரப் போவதை அறிந்தாலும் காட்டிக் கொள்ளாமல்,

''ஓகே ஸ்டூடண்ட்ஸ்! மைன்னிங் மல்டிமீடியா டேட்டா பேஸ் ஓவர். தென் வி டிஸ்கஸ் அபௌட்...'' எனும்பொழுதே ஷண்மதி எழுந்தாள்.

''வாட்ஸ் யுவர் டவுட் ஷண்மதி?''

''சார்! ஐ காண்ட் அண்டர்ஸ்டாண்ட் த மல்டி டைமென்
ஷனல் அனாலிசிஸ் ஆஃப் மல்ட்டிமீடியா டேட்டாபேஸ்.''
''இட்ஸ் சிம்பிள் ஷண்மதி!'' என்றபடி அவன் அவ
ளுக்கு புரியும்படி எக்ஸ்ப்ளைன் பண்ணவும்,
ஹவ் இஸ் பாஸிபிள்
''ஸாரி சார்! ஐயம் நாட் க்ளியர்!
சார்?'' என்று மீண்டும் மடக்கி மடக்கி கேள்விகள்

கேட்கவும் தோழியர் ஒருவரையொருவர் பார்த்துப் புன்னகைத்துக் கொண்டனர்.

''நன்றாகப் புரிந்தும் புரியாத மாதிரி கேள்வி கேட்ப தென்பது இதுதான்டி பவி. பாரேன் எவ்வளவு டீப்பாக டாபிக்கை அனலைஸ் பண்ணி கேள்வி கேட்கிறாள்'' என சாம்பவியின் காதைக் கடித்தாள் ஷீத்தல்.

''ஸ்ரீதர் சாரும் சளைக்காமல் எவ்வளவு கிளியராக எக்ஸ்ப்ளைன் செய்கிறார் பாரேன். டாபிக்கை இவ்வளவு டீப்பாக இருவரும் டிஸ்கஸ் பண்ணுவதும் சுவாரசியமாகத் தான் இருக்கிறது'' என்று அதே மெல்லிய தொனியில் ஷீத்த லிடம் கூற இருவருமே புன்னகைத்துக் கொண்டனர்.

கிட்டத்தட்ட பதினைந்து நிமிடங்களுக்கும் மேலான பிறகு தான் அவனை விட்டாள் ஷண்மதி.

''ஏய் ஷண்மி! இதுபோல் ஒரு நாள், ஒரே ஒரு நாள் நம் பிரபு சாரிடம் இப்படிக் கேள்வி மேல் கேள்வி கேட் டால் போதும். மனுஷன் அம்பேல். க்ளாஸை விட்டென்ன... காலேஜை விட்டே ஓடிடுவார். நாமும் தப்பித்து நிம்மதி யாக இருப்போம்'' என மற்றவர் அறியாமல் கிசுகிசுத்து சிரித்தாள் சாம்பவி.

மணிக்கட்டை திருப்பிப் பார்த்தான் ஸ்ரீதர். 'இனி எங்கே நெக்ஸ்ட் டாபிக் நடத்துவது? நாளைதான்' என எண்ணியபடி மார்க்கரை மூடி வைத்தவன், வகுப்பறை வாயிலில், ''வெல்டன் மிஸ்டர் ஸ்ரீதர்!'' என்ற பாராட்டு குரல் கேட்கவும் வியப்புடன் திரும்பினான்.

அங்கே சேர்மேன், காலேஜ் செக்ரெட்டரி, பிரின்சி பால் மற்றும் தங்கள் எச்.ஓ.டி. நிற்பதைக் கண்ட மாண வ மாணவிகள் பணிவுடன் எழுந்து நிற்கவும் வாயிலில் நின்றிருந்தவர்கள் உள்ளே நுழைந்தனர்.



''வெரிகுட் ஸ்ரீதர்! ரொம்ப இன்ட்ரெஸ்ட்டா க்ளாஸ் எடுக்கிறீர்கள். இருபது நிமிடங்களாக வெளியே தான் நின்றோம். பத்து நிமிடங்கள்தான் உங்கள் க்ளாஸ்க்கு ஒதுக்கியிருந்தேன். பட்... உங்கள் க்ளாஸ் முடியும் வரை எங்களால் நகர முடியவில்லை'' என மனமாரப் பாராட் டியபடி அவன் கையைப் பற்றிக் குலுக்கினார் ஷண்முக பிரகாஷ்.

''தேங்க்யூ சார்'' என சிரித்த ஸ்ரீதர், ''இட்ஸ் மை ட்யூட்டி சார்'' என்றான் சாதாரணமாக.

சாம்பவி வியப்புடன், தன் பக்கத்திலிருந்த ஷண்மதி யிடம், ''ஷண்மி! என்னடி இது ஆச்சரியம்? எப்பவும் பிரின்சிபாலும், செக்ரெட்டரியும்தானே வருவார்கள். சேர் மேன் வருவது அபூர்வமாயிற்றே. அப்படியே வந்தாலும் எதுவுமே பேசாமல் சைலண்ட்டா அப்சர்வ் பண்ணி விட்டு போய் விடுவார். இப்பொழுது என்னவென்றால் அங்கிள் உள்ளேயே வந்து இப்படிப் பாராட்டுகிறார்?'' என கேட்டாள் மிகவும் மெல்லிய குரலில்.

அதே வியப்புடனே, ''அதுதான் எனக்கும் தெரிய வில்லை'' என முணுமுணுத்தாள் ஷண்மதி.

அதற்குள் தன் தந்தை, ''பட், திஸ் கேர்ள் எப்பவும் இப்படிதான் டவுட் கேட்பாளா? தினமும் இப்படி கேட் டால் உங்களுக்கு அலாட் பண்ணிய டோட்டல் அவர்ஸ்க் குள் போர்ஷன்ஸ் முடிக்க டைம் பத்தாதே!'' என குறும் புடன் கேட்டு தன்னை நோக்கி கண் சிமிட்டுவதையும்,

''நோ ப்ராப்ளம் சார்! ஸ்பெஷல் க்ளாஸ் வைத்து சமாளித்து விடலாம்'' என்றபடி ஸ்ரீதர் தன்னை நோக்கி கிண்டலுடன் சிரிப்பதையும் கண்ட ஷண்மதிக்கு இலே சாக கோபம் வந்தது.

ஆனால் அதையும் மீறி அவர்கள் இருவரும் கை குலுக்கிச் சிரித்தபடி இணைந்து நின்ற காட்சி. அவளின் மனதில் அழகிய சித்திரமாய் பதிந்தது.

# 7



''எக்ஸ்க்யூஸ் அஸ் சார்!''

ஸ்ரீதருடன் அமர்ந்து பேசிக் கொண்டிருந்த எச்.ஓ.டி. மகேஷ்வரன் நிமிர்ந்து பார்த்தார்.

ஷண்மதியையும், சாம்பவியையும் கண்டவர் புன்சிரிப்புடன் தலையசைத்தார்.

''வெரிகுட்! நீங்கள் ப்ரசெண்ட் செய்த பேப்பர்க்கு பர்ஸ்ட் ப்ரைஸாமே. நிறைய காலேஜஸ் கலந்து கொண்ட இந்த காம்படிஷனில் நீங்கள் வின் பண்ணியது நம் காலேஜிற்கு பெருமை. வெரிகுட்! வெரிகுட்!'' என உற்சாகமாக பாராட்டியவாறே அவர்கள் நீட்டிய சர்ட்டிபிகேட்ஸை வாங்கி பார்த்துவிட்டு ஸ்ரீதரிடம் தந்தார்.

அவனும் வாங்கிப் பார்த்துவிட்டு முறுவலுடன், ''வெல்டன்! கீப் இட் அப்'' என்றபடி நீட்டிய சர்ட்டிபிகேட்ஸை வாங்கியபடி ''தேங்க்யூ சார்!'' எனச் சிரித்தனர் இருவரும்.

''சொன்னபடி செய்துவிட்டீர்கள்'' என மகேஷ்வரன் பாராட்டவும்,

சாம்பவி, ''பட் இதில் என் பங்கு குறைவுதான் சார். டைட்டில் சூஸ் பண்ணியதிலிருந்து, பவர் பாயிண்ட் பிரசண்டேஷனுக்கான ஸ்லைட்ஸ் பிரிப்பேர் பண்ணியது வரை இவள்தான் சார். மோஸ்ட் ஆஃப் த க்கொரீஸ் இவள்தான் ஆன்சர் செய்தாள்'' என்றாள்.



''நோ சார்! பவி இல்லாமல் வின் பண்ணியிருக்கவே முடியாது சார். ஹை பீவரையும் பொருட்படுத்தாமல் வந்து, ரொம்பவும் அருமையாக ப்ரசெண்ட் செய்தாள் சார்'' என பவியைப் பாராட்டினாள் ஷண்மதி.

ஸ்ரீதரிடம் திரும்பிய எச்.ஓ.டி. ''யூ நோ ஸ்ரீதர், இந்த காம்படிஷனில் பார்ட்டிசிபேட் பண்ண கிளம்பும் பொழுதே ஷண்மதி, 'பர்ஸ்ட் ப்ரைஸ் வின் பண்ணிட்டுதான் திரும்புவோம்' என கூறிவிட்டுதான் கிளம்பினாள். எப்பவுமே ஷண்மதி இப்படித்தான். சொன்னால் அதில் ஜெயிக்கும் வரை ஓயமாட்டாள். சாம்பவியும் க்ளவர் கேர்ள். இருவரும் சொன்னதை செய்து காட்டி விட்டார்கள்'' என்றார் பெருமையோடு.

''போதும் சார்!'' என சிரித்தாள் ஷண்மதி.

''நீங்கள் எங்களை அதிலும் என்னைப் பாராட்டியதைக் கேட்டு சார் முகம் கசப்பாக கஷாயம் குடித்தது போல் மாறி விட்டது பாருங்கள்.''

தலையசைத்து சிரித்தார் மகேஷ்வரன். ''ம்கூம்! அவரை ஏன் வம்புக்கு இழுக்கிறாய் ஷண்மதி? நீங்கள் வின் பண்ணிய நியூஸ் கேட்டு என்னைவிட அதிக சந்தோஷப்பட்டது ஸ்ரீதர்தான்'' என்றார்.

முயன்று முறுவலித்து விட்டு, ''எக்ஸ்க்யூஸ் மீ சார். எனக்கு லைப்ரரியில் கொஞ்சம் வேலையிருக்கிறது'' என்றபடி பேப்பர் கட்டோடு எழுந்து சென்றான் ஸ்ரீதர்.

பேப்பர் கட்டைப் பார்த்ததும் நினைவு வந்தவளாக,

''சார்! இன்டெர்னல் மார்க்ஸ்கான சைக்ளிக் டெஸ்ட் அன்றுதானே காம்படிஷன். முதல் நாளும் ஓ.டி. பர்மிட் செய்தீர்கள்'' என நினைவுபடுத்தினாள் சாம்பவி.

''நோ ப்ராப்ளம். நான் முன்பு சொன்னபடியே ரீடெஸ்ட் எழுதி விடுங்கள். இரண்டு சப்ஜெக்ட்ஸ்தானே!''

''எஸ் சார். சி.பி.டி.யும், டேட்டா மைன்னிங்கும்.''

''ஓகே! பாலாவும் ஸ்ரீதரும்தானே. ஏற்கனவே அவர்களிடம் நான் கூறி விட்டேன். எப்பொழுது எழுத வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுங்கள்'' என்றார் அவர்.

''ஓகே சார்! தேங்க்யூ சார்!'' என்றபடி வெளியே வந்த ஷண்மதிக்கு, 'எச்.ஓ.டி. இரண்டு வார்த்தை பாராட்டினால் முகம் எப்படி மாறுகிறது' என ஸ்ரீதரை நினைத்து மனம் பொருமியது.

அதே மனநிலையில், ''இதோ பார் பவி, நான் பாலா சாரைப் பார்த்துவிட்டு வருகிறேன். டேட்டா மைன்னிங் சாரை நீயே பார்த்துக் கேட்டுவிடு'' என காட்டமாகக் கூறிவிட்டுச் சென்ற ஷண்மதியை, 'டேட்டா மைன்னிங் சாரா? என்னவாயிற்று இவளுக்கு. அதிசயமாகக் கோபமெல்லாம் வருகிறது' என வியப்புடன் நோக்கினாள் சாம்பவி.

ஆனால் அதை அடியோடு மறந்து மறுநாள் சி.பி.டி. டெஸ்ட் எழுத லேப்பிற்குச் சென்றபொழுது, ''என்ன பவி இது? பாலா சார் ஆப்டர்நூன் லாஸ்ட் டூ அவர்ஸ் டெஸ்ட் எழுத வருமாறு கூறிவிட்டாரே. லாஸ்ட் அவர் ஸ்ரீதர் அவர். நல்ல க்ளாஸை மிஸ் பண்ணப் போகிறோம்'' என ஷண்மதி புலம்பவும் சிரித்தாள் சாம்பவி.

''சிரிக்காதே பவி. நீயே சொல்லேன். அவர் மெத்தடாலஜி எவ்வளவு நைஸ். பேசாமல் அந்த அறுவை ஜெயஸ்ரீ அவரில் டெஸ்ட் எழுதியிருக்கலாம். பாலா சார்தான் ஒத்துக் கொள்ளவில்லை'' எனப் புலம்பியவள் க்வஸ்டின் பேப்பரை கையில் வாங்கியதும் சகலத்தையும் மறந்து அதில் மூழ்கி விட்டதைக் கண்டு தனக்குள் புன்னகைத்தவளாய் தானும் டெஸ்ட்டில் ஆழ்ந்தாள்.

டெஸ்ட் முடிந்து பேப்பரை கொடுத்துவிட்டு வந்தவள் மீண்டும் புலம்பத் தயாராகவும் சாம்பவி, ''ஏய் முதுகிலேயே நாலு போடுவேன். ஒழுங்கா வாடி'' என மிரட்டி இழுத்துக் கொண்டு சென்றாள்.



வீட்டிற்குக் கிளம்பும்பொழுது, ''பவி! ஸ்ரீதர் கரெக்ஷன் செய்த டெஸ்ட் பேப்பர்தான் தந்தாராம். ஒன்றும் நடத்தவில்லையாம்'' என குழந்தையாய் குதூகலப்பட்டவளிடம்,

''கடவுளே! ஏன்டி இப்படி இருக்கிறாய்? ஒழுங்காக கிளம்புடி. நாளைக்கு டெஸ்ட்க்கு ப்ரிப்பேர் பண்ணுகின்ற வழியைப் பாருடி'' என சிரித்தபடி வழியனுப்பி வைத்தாள் சாம்பவி.

மறுநாள் ப்ரீயாக இருந்த லேப்பிற்கு டெஸ்ட் எழுதச் சென்றிருந்தபொழுது, க்வஸ்டின் பேப்பரை தந்துவிட்டு க்ளாஸ் இல்லாததால் ஸ்ரீதரும் அங்குதான் அமர்ந்து அடுத்த நாள் வகுப்பிற்கான நோட்ஸ் எடுத்துக் கொண்டிருந்தான்.

சுற்றுப்புறம் மறந்து படிப்பிலே ஆழ்ந்தவர்களாய் இருவரும் டெஸ்ட் எழுதிக் கொண்டிருக்கும் பொழுது குப்பென்று மூக்கை துளைத்த செண்ட் ஸ்மெல் ஷண்மதியின் முகத்தை சுளிக்க வைத்தது. தலையுயர்த்தி பார்த்த பொழுது அவள் எண்ணியது போல் ஜெயஸ்ரீ மேம்தான்.

'எப்பவுமே இது ஏன் ஸ்ரீதரை தேடித்தேடி வந்து பேசுகிறது' என உள்ளுக்குள் சலித்துக் கொண்டாள்.

''ஹலோ சார்! க்ளாஸ் இல்லையா உங்களுக்கு?'' என உற்சாகமாக ஜெயஸ்ரீ கேட்கவும் ஷண்மதிக்கு எரிச்சல் வந்தது.

'பார்த்தாலே தெரியவில்லையா? க்ளாஸ் இருந்தால் இங்கு எப்படி அமர்ந்திருப்பாராம்' என உள்ளூர பொருமிய ஷண்மதிக்கு.

''இந்த அவர் செகண்ட் இயர் ஐடிக்கு போக வேண்டும். சரோஜினி மேம் போர்ஷன் முடிக்கவில்லையென்று

என், அவரை கேட்டார்கள். கொடுத்து விட்டேன்'' என முகத்தில் முறுவலோடு ஸ்ரீதர் பதில் தரவும்,

'முகத்தில் புன்னகையை பார்' என்று ஷண்மதிக்கு எரிச்சல் மேலும் அதிகரித்தது.

'எப்படியோ போங்கள்' என்பதுபோல மீண்டும் குனிந்து எழுத ஆரம்பித்தவளுக்கு பேனா மக்கர் செய்யவும் இப்பொழுது தன் மீதே எரிச்சல் வந்தது.

அவளிடம் இப்பொழுது வேறு பேனாவுமில்லை. கையோடு எடுத்து வந்திருந்த எக்ஸ்ட்ரா பேனாவையும், 'அச்சோ! ஷண்மி என் பென்னை மறந்து க்ளாஸிலேயே வைத்து விட்டு வந்துவிட்டேன்டி. இனி மூன்று மாடி ஏற வேண்டும். ப்ளீஸ்டி உன் பென்னை தா!' என சாம்பவி கேட்கவும் கொடுத்து விட்டாள்.

வேறு வழியில்லை என்றபடி எழுந்து, ''சார்!'' என்று அவன் முன் போய் நிற்கவும்,

''அதற்குள் முடித்து விட்டாயா? என்னம்மா சரியாகப் படிக்கவில்லையா?'' என வேண்டுமென்றே புருவம் உயர்த்தி அவன் அதிகப்படியாய் ஆச்சரியம் காட்டி அக்கறையாய் விசாரிக்கவும் உள்ளூர பல்லைக் கடித்தாள் ஷண்மதி.

'வாய்ப்பு கிடைத்ததென்று கிண்டல் செய்கிறான். இருக்கட்டும். முதலில் டெஸ்ட்டை நல்லபடியாக முடிக்கும் வழியைப் பார்ப்போம்' என தனக்குள்ளேயே அறிவுறுத்திக் கொண்டாள்.

''சார்! பேனா கொடுங்கள் சார்!''

''என்னது?''

''...........''

''வேர் இஸ் யுவர் பென் ஷண்மதி?''

பார்வையைத் தாழ்த்தி டேபிளைப் பார்த்தபடி, ''அது எழுதவில்லை சார்!'' என சின்னக் குரலில் முணுமுணுக்கவும் ஸ்ரீதருக்குச் சிரிப்பு வந்து விட்டது.



அதைக்கண்ட ஜெயஸ்ரீ குறுக்கிட்டு, ''என்ன ஷண்மதி இவ்வளவு கேர்லெஸ்சாக இருக்கலாமா? ஒன்றுக்கு இரண்டு பென் வைத்துக் கொள்ள வேண்டாமா? இதுவே செமஸ்டர் எக்ஸாமென்றால் என்ன செய்வது?'' என இலேசாக கண்டிப்பு காட்டி அறிவுரை வேறு வழங்கவும்.

''ம்... எக்ஸ்டர்னலிடமே கேட்டு வாங்கிக் கொள்வேன். ஆனால் ஒன்று, அவர்கள் இப்படிப் பேசி டைமை வேஸ்ட் செய்யாமல் உடனே பென் தந்து உதவுவார்கள்'' என்றாள் ஷண்மதி துடுக்காக.

'இவள் தன்னிடம் இப்படிப் பேச மாட்டாளே, இன்று என்னவாயிற்று' என்பது போல சற்று வியப்புடன் அவளை பார்த்த ஜெயஸ்ரீ ஏதோ மறுத்துப் பேச வாயைத் திறக்கவும், அதைக் கவனித்த ஸ்ரீதர் அவள் மேலே பேச இடம் தராமல் தன் ஷர்ட் பாக்கெட்டிலிருந்த பார்க்கர் பென்னை ஷண்மதியிடம் நீட்டி, ''நீ போ ஷண்மதி'' எனவும்,

''தேங்க்யூ சார்'' என முறுவலோடு அகன்றாள் அவள்.

பிறகு முழு மூச்சாக டெஸ்ட் எழுதி முடித்து விட்டு மீண்டும் ஒரு முறை எழுதியதை சரி பார்த்துக் கொண்டிருக்கையில் கலீரென சிரிப்பு சத்தம் கேட்டு மீண்டும் நிமிர்ந்தாள்.

அங்கே புக்கை மூடி வைத்தபடி ஸ்ரீதர் ஏதோ கூற ஜெயஸ்ரீ சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டவளுக்கு சுருசுருவென்று ஏறியது.

பேசிக் கொண்டே திரும்பிய ஸ்ரீதரின் பார்வையில் அவள் ஜெயஸ்ரீயின் முதுகை மகா எரிச்சலோடு முறைப்பது பட்டது.

தான் கவனித்து விட்டதை அறிந்து அவள் பார்வையை பேப்பரில் பதிப்பதைக் கண்டவன் கண்களில் கிண்டல் பரவ, ஜெயஸ்ரீ பக்கம் திரும்பி, ''இந்த ரெட் கலர் சாரி

உங்களுக்கு ரொம்ப நன்றாகயிருக்கிறது'' என கட்டியிருந்த சாரி கலர் பற்றி கமெண்ட் கொடுக்கவும் ஷண்மதிக்கு பற்றிக் கொண்டு வந்தது.

''ஓஹ்! தேங்க்யூ சார். உங்களுக்கும் இந்த கலர்தான் பிடிக்குமா? ஐயம் ஆல்சோ லைக் திஸ் கலர்'' என ஜெயஸ்ரீ வழிவதைக் கண்ட ஷண்மதிக்கு, ஆளை அடிப்பது போல் இருக்கும். இந்த டேஞ்சர் லைட் கலர் நன்றாகயிருக்கிறதாமா? என தலையில் அடித்துக் கொள்ளலாம் போல் இருந்தது.

ஸ்ரீதர் மட்டும் அந்நேரம் அவளைப் பார்த்துக் கொண்டிருக்கா விட்டால் அடித்துக் கொண்டுமிருப்பாள்.

மணிக்கட்டை திருப்பிப் பார்த்தாள். இன்னும் பத்து நிமிடம் இருந்தது. பேப்பரைத் தந்துவிட்டுக் கிளம்பலாமாவென யோசித்தபடி சற்று எட்ட அமர்ந்திருந்த சாம்பவியை நோக்கினாள்.

'முடித்து விட்டாயா?' என ஜாடை காட்டிக் கேட்கவும் 'பைவ் மினிட்ஸ்' என விரல் காட்டிவிட்டு, 'வெயிட் பண்ணுடி' என சைகை காட்டிவிட்டு சாம்பவி குனிந்து எழுதவும், 'சரிதான்' என்றபடி கையிலிருந்த பேனாவை உருட்டியபடி அமர்ந்திருந்தவளை மீண்டும் ஒலித்த சிரிப்புச் சத்தம் நிமிரச் செய்தது.

சேரில் ரிலாக்ஸாக சாய்ந்து அமர்ந்தபடி, ஸ்ரீதர் வாய் விட்டுச் சிரிப்பதை வியப்புடன் கவனித்தாள் ஷண்மதி.

இந்த மாதிரி சிரிக்கும் பொழுது அவன் முகம் மின்னுகின்ற அழகை பெரும் பிரமிப்புடன் பார்த்திருந்தாள். இதே போல் என்றாவது அவளிடம் அவன் சிரித்துப் பேசுவானா? 'ம்ம்... ஏன் மாட்டான். பேசுவான், கண்டிப்பாகப் பேசுவான். உள்ளுணர்வு பொய் சொல்லாது. அது கூறு



வது எப்பவும் சரியாகத்தான் இருக்கும். ஒரு நாள் அவளிடமும் அவன் சிரித்துப் பேசுவான்' என நம்பிக்கையோடு எண்ணி முறுவலித்தவள் தன் கையிலிருந்த அவன் பேனாவைப் பார்த்தாள்.

எழுதியது போக மீதியிருந்த ஒன்றரை ஷீட்களில் ஒரு ஹாஃப் ஷீட்டை எடுத்து கடகடவென மனதில் தோன்றியதை எழுதியவள், மீண்டுமொரு முறை எழுதியதை படித்துவிட்டு புன்னகையுடன் அந்த ஷீட்டை க்வஸ்டின் பேப்பரோடு சேர்த்து தனியாக வைத்தாள், க்ளாஸிற்கு எடுத்துச் செல்ல.

அதற்குள் சாம்பவியும் முடித்துவிட இருவரும் பேப்பரை எடுத்துக்கொண்டு, பின் செய்வதற்கு ஸ்டேபிலர் பின்னை அது இருக்கும் வெள்ளை ட்ரேயில் தேடினால் அதை காணோம்.

அவர்கள் தேடுவதைக் கவனித்த ஸ்ரீதர், ''ஷண்மதி! பிரபு சார் எடுத்துக் கொண்டு போனார். திரும்ப வைக்க மறந்து விட்டார் போல. அவர் டேபிளில் இருக்கும் பார்'' எனவும் ஷண்மதி டிபார்ட்மெண்ட்டிற்கு சென்று பின்னை எடுத்துக் கொண்டு வரவும் ஐந்து நிமிட டீ ப்ரேக் முடிந்து தேர்ட் அவர் ஆரம்பிக்கவும் சரியாக இருந்தது.

அவசர அவசரமாக பின் செய்து பேப்பரை கொடுத்துவிட்டு வேகவேகமாக மாடியேறி வகுப்பறைக்கு வந்த பொழுது கலைவாணி மேம் ஏற்கனவே வந்திருந்தார்.

அசடு வழிய பர்மிஷன் கேட்டுவிட்டு தன் இடத்தில் வந்து அமர்ந்தவளுக்கு 'அப்பாடா' என்றிருந்தது.

சற்றுப் பொறுத்து, மேம் போர்ட் பக்கம் திரும்பிய நேரத்தில், சாம்பவி இவளிடம் திரும்பி, ''ஷண்மி! இந்தாப்பா உன் பேனா... ஏ...ய்.. என்ன தேடுகிறாய்?'' என வியப்புடன் கேட்டாள்.

பரபரப்புடன் பேப்பர்ஸை எடுத்துப் பார்த்துக் கொண்டிருந்த ஷண்மதி, ''ஒரு பேப்பர் பவி! அதைக் காணோம்'' என்றாள்.

''என்ன பேப்பர்?''

பதில் சொல்லாமல் கீழே விழுந்திருக்கிறதாவென அவள் சற்றே குனிந்து அடியில் பார்த்து தேடவும் மேம் பார்த்து விட்டார்.

''ஷண்மதி! வாட்ஸ் கோயிங் ஆன் தேர்?'' என கண்டிக்கவும்,

கடவுளே! நன்றாக மாட்டிக் கொண்டோம் என உள்ளூர எண்ணமோட, ''ஸாரி மேம்! பென் கீழே விழுந்து விட்டது... அதான்'' என சமாளித்தாள் ஷண்மதி.

''என்ன பேப்பர்டி அது? அப்படியென்ன இருக்கிறது அதில்?'' என கிசுகிசுத்தாள் சாம்பவி.

''அது... பிறகு சொல்கிறேன். இங்கு இல்லையென்றால் லேப்பில்தான் மிஸ் செய்திருப்பேன். முதலில் வா போய் பார்த்துவிட்டு வரலாம்.''

''ஆர் யூ ஜோக்கிங்? மேம் விட மாட்டார்கள்.''

சட்டென எழுந்து நின்ற ஷண்மதியிடம், ''வாட் டு யூ வான்ட்?'' என கலைவாணி மேம் வினவவும், அவளோ, ''மேம்! பவிக்கு வாமிட் வருவது போல் இருக்கிறதாம்'' என அப்பாவியாய் முகத்தை வைத்து கவலை குரலில் கூறினாள்.

அவர் உடனே அனுமதி தரவும் பவியை இழுத்துக் கொண்டு கீழே வந்தாள்.

''யூ இடியட், நீ பாட்டுக்கு ஈஸியாக கூறி விட்டாய். எனக்குச் சிரிப்பு வந்து விட்டது. சிரிப்பை அடக்குவதற்குள்... சரி... சரி... இப்பொழுதாவது சொல், அந்த பேப்பரில் அப்படி என்னதான் இருக்கிறது.''



''கவிதை!''

''வாட்?''

''ஸ்ரீதரை நினைத்து மனதில் தோன்றியதை எழுதியிருந்தேன். அந்த பேப்பர்தான் காணோம்'' என முணுமுணுத்தாள் ஷண்மதி.

சிரித்து விட்டாள் சாம்பவி.

''அடிப்பாவி, அந்த அளவுக்கு முன்னேறி விட்டாயா'' என கேலி செய்தவள் ஷண்மதி கையைப் பிசைவதைக் கண்டு,

''அவர் பெயரை யூஸ் பண்ணி எழுதிவிட்டாயா?'' என விசாரித்தாள்.

''ம்கூம்.''

''பிறகென்ன விடுடி. உன் தமிழ் கையெழுத்து யாருக்கும் தெரியாது'' என்றாள் ஈஸியாக.

ஆனால் ஷண்மதி சமாதானமாகவில்லை. ''நீயும் நானும் டெஸ்ட் எழுதும்பொழுது வேறு யாரும் அங்கில்லை. எனவே இப்பொழுது அந்த பேப்பர் யார் கையிலேனும் கிடைத்தால் நீயோ அல்லது நானோதான் எழுதியிருக்க வேண்டுமென்று சட்டென யூகித்து விடலாம்'' என்றாள்.

''அடக் கடவுளே! என்னையும் சேர்த்தே வம்பில் மாட்டி வைத்திருக்கிறாயா?'' என சிரித்தாள்.

லேப்பிற்குள் நுழைந்த சமயம் நல்லவேளை வேறு யாரும் அங்கில்லை. லேப் அசிஸ்டெண்ட் மட்டும்தான் இருந்தார்.

சாம்பவி அவரிடம், ''டெஸ்ட் எழுதியபொழுது என்னோட க்வஸ்டின் பேப்பர் மிஸ் பண்ணிட்டேன். கீழே எங்காவது விழுந்திருக்கும். பார்த்து எடுத்துக் கொண்டு போய் விடுகிறோம்'' என்றபடி உள்ளே சென்று தேடியும் அந்த பார்ட்டிகுலர் பேப்பர் கிடைக்கவே இல்லை.

சட்டென சாம்பவி பொறி தட்டியவளாய், "டெஸ்ட் பேப்பரோடு அதையும் பின் செய்து கொடுத்து விட்டாயா?" என சந்தேகம் எழுப்பவும்,

மறுப்பாகத் தலையசைத்து, "ம்கூம்! அப்படி ஆகி விடக் கூடாதென்றுதானே அந்த ஷீட்டை க்வஸ்டின் பேப்பரோடு சேர்த்து கையில் தனியாக வைத்திருந்தேன்" என சொல்லிக் கொண்டே வந்தவள் சட்டென விழிகள் விரிய, "மைகாட்! பின் எடுக்கப் போகும்பொழுது டேபிளில் வைத்துவிட்டுப் போனேன். திரும்பி வந்து பின் செய்யும்பொழுது சேர்த்து விட்டேன் போல!" என்றாள் திகைப்புடன்.

அவளது திகைத்த முகம் கண்டு சட்டெனச் சிரித்தாள் சாம்பவி.

"வெரிகுட்! அது யாரிடம் சேர வேண்டுமோ அவரிடம் சேர்ந்து விட்டதென்று சொல்! உன் பேப்பரை கரெக்ஷன் செய்யும் பொழுது அக்கவிதையை சார் பார்த்தால்..." என குறும்புடன் இழுத்தவள் மீண்டும் சிரித்தாள்.

"சிரிக்காதே பவி! எனக்குப் பயமாக இருக்கிறது" என்றாள் ஷண்மதி.

"பயமா? உனக்கா? நீ செய்து வைத்திருக்கும் வம்பை நினைத்தால்..." என மேலும் சிரித்தாள் சாம்பவி.

ஆனால் வகுப்பிற்கு வந்த பிறகும் அவள் சற்று டென்ஷனிலேயே இருப்பதைக் கண்ட சாம்பவி மனம் பொறுக்காதவளாய், "விடு ஷண்மி! ஆன்சர் ஷீட்டோடு போயிருக்குமோ என்பதும் நம் யூகம்தானே. அப்படிதானென்று நிச்சயமில்லையே" என்றாள் தேறுதலாக.

ஆனால் சற்று நேரத்திலேயே அட்டெண்டர் வந்து, "எக்ஸ்க்யூஸ் மீ மேம், ஷண்மதியை ஸ்ரீதர் சார் உடனே



டிபார்ட்மெண்ட்டிற்கு வந்து தன்னைப் பார்க்க சொன்னார்" எனவும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்ட தோழிகள் இருவருக்கும் அப்பேப்பர் எங்கென்பது நிச்சயமாகி விட்டது.

# 8



"நான் இதை உன்னிடம் கொஞ்சம் கூட எதிர்பார்க்கவில்லை. உன் மனதில் எவ்வளவு தைரியமிருந்தால் இப்படி ஒரு கவிதையை எழுதி ஆன்சர் ஷீட்டோடு பின் செய்து என்னிடமே தருவாய்" என அவளை வாங்கு வாங்கென்று வாங்கிய ஸ்ரீதரை அமைதியாய் பார்த்தாள் ஷண்மதி.

தடதடக்கும் இதயத்தோடு டிபார்ட்மெண்ட்டிற்கு வந்தவளுக்கு இப்பொழுது பயம் சற்று குறைந்திருந்தது.

அவள் உள்ளூர பயந்தது போல் எல்லோர்க்கும் தெரியும்படி டிபார்ட்மெண்ட்டில் வைத்து அவளைத் திட்டவில்லை. நல்லவேளை தனியாகத்தான் அழைத்து வந்து டோஸ் கொடுக்கிறான். அந்தளவில் தப்பித்தாள்.

"வேண்டுமென்று உங்களிடம் தரவில்லை சார். தனி ஷீட்டில்தான் எழுதியிருந்தேன். தவறுதலாக பின் செய்யப்பட்டு விட்டது" என தலையைக் கவிழ்ந்தபடி முணுமுணுத்தாள் ஷண்மதி.

ஆனால் அவனோ கோபம் குறையாமல், "இதை என்னை நம்பச் சொல்கிறாயா? சேர்மேன் மகளென்றால் நீ என்ன ஆட்டம் வேண்டுமானாலும் போடுவாயா?

உன்னை யாரும் கேள்வியே கேட்க மாட்டார்களென்று நினைத்தாயா?'' என சுடச்சுடக் கேட்டான்.

இப்பொழுது அவள் தலை குனிந்திருக்கவில்லை, மாறாக கம்பீரமாக நிமிர்ந்து, திடமான குரலில், ''சார்! மூன்றரை வருடங்களாக இந்த காலேஜில் எல்லோரையும் போல் ஒரு சாதாரண ஸ்டூடண்ட் ஷண்மதியாகத்தான் நான் படிக்கிறேன். என்னையும் எல்லோரும் அப்படித்தான் நடத்துகிறார்கள். சேர்மேன் டாட்டர் என்ற சலுகையில் நான் என்றுமே எந்தச் செயலுமே செய்ததில்லை. அதை என் அப்பாவுமே ஊக்குவிக்க மாட்டார்'' என்று கூறினாள் குரலில் அழுத்தத்துடன்.

''பின்னே எந்த தைரியத்தில் இந்தக் கவிதையை எழுதினாயாம்?'' என எரிச்சலுடன் கேட்டவனை நிதானமாக ஏறிட்டாள் அவள்.

பின் அதே நிதானமான குரலிலேயே, ''கல்லூரி மாணவி கவிதை எழுதக் கூடாதென்று சட்டம் இருக்கிறதா என்ன? எழுதியிருந்த ஷீட் தவறுதலாக டெஸ்ட் பேப்பரோடு பின் செய்யப்பட்டு விட்டது. அவ்வளவுதான் என் குற்றம். மற்றபடி உங்களுக்காகத்தான் எழுதினேனென்று என்ன நிச்சயம்?'' என கேட்கவும்,

''நிச்சயம்தான்'' என்று ஏளனத்துடன் உதட்டைப் பிதுக்கினான் அவன்.

''இந்தக் கதையை நம்புமளவிற்கு நீ நினைப்பது போல் நானொன்றும் அடிமுட்டாளில்லை தாயே!'' என்ற கிண்டலுடன் கூறியபடி தன் கையிலிருந்த அவளது பேப்பரில் கண்களை ஓட்டினான்.

**உன் கேள்விக்கான**
**விடையை**
**நீ கைப்பிடித்து**



**எழுதிய**
**பேனாவை**
**நான் கைப்பிடித்து**
**எழுதும் இப்பொழுது...**
**என்னுள்**
**ஒரு கேள்வி**
**நீ...**
**என் கைப்பிடிப்பது**
**எப்பொழுது...?**

என எழுதியிருந்ததை மீண்டும் படித்தவன், அதிகரித்த கோபத்தோடு நிமிர்ந்து, ''இந்த ஷீட் சைக்ளிக் டெஸ்ட்க்கு யூஸ் செய்யும் பிரத்யேக ஷீட். இதில் நீ டெஸ்ட் எழுதும் முன் நான் போட்ட சைன் டேட்டுடன் இருக்கிறது. சோ... நீ இன்றுதான் இதை எழுதினாய் என்பதும் உறுதியாகிறது. ஜெயஸ்ரீ மேம் இருக்கும்பொழுதுதான் நீ என்னிடம் பேனா வாங்கினாய். அதை அவர்கள் பிரின்சிபாலிடம் சொன்னால் மீதி விஷயத்தை... அதுதான்... இக்கவிதை எனக்கு எழுதியதுதானென்பதை நீ பயன்படுத்திய வார்த்தை வரிகளே நிரூபித்து விடுமே!'' என ஏளனத்துடன் கூடிய குரலில் அவன் அழுத்தம் திருத்தமாகக் கேட்கவும் தலை குனிந்தாள் ஷண்மதி.

''காரண காரியத்தோடு ஷார்ப்பாக விஷயத்தை அலசுவதை பார். பேசாமல் வக்கீல் தொழிலுக்குப் போயிருந்தால் நிறைய கேசாவது கிடைக்கும்'' என அவள் எரிச்சலுடன் முணுமுணுத்தது. நல்லவேளையாக அவன் செவிகளில் விழவில்லை.

''உனக்குள்ளேயே பேசிக் கொண்டால் என்ன அர்த்தம்? எனக்கு வரும் கோபத்திற்கு உன்னை பிரின்சிபாலிடம் கொண்டு போய் நிறுத்த வேண்டும் போல் வருகிறது

ம்ம்... இங்கே பார், சின்னப் பெண்ணாயிற்றே என்று வெறும் வார்னிங்கோடு விட்டு விடுகிறேன். பட், இதை எழுதியதற்காக நீ என்னிடம் மன்னிப்பு கேட்டேயாக வேண்டும்'' என்றான் அவன் கறாராக.

அப்பாடா என்றிருந்தது அவளுக்கு. பிரின்சிபால் வரை விஷயத்தைக் கொண்டு சென்றாலும் அவளால் அங்கிளை சமாளித்து விட முடியும். ஏன் அப்பாவிடம் கூட உண்மையைக் கூற முடியும். தோழனாக பழகும் தந்தை கண்டிப்பாகப் புரிந்து கொள்வார். இந்தக் கவிதையைக் கூட அவரிடம் காட்டி நன்றாகயிருக்கிறதாவென கேட்கும் தைரியம் அவளுக்கு உண்டு.

ஆனால் டிபார்ட்மெண்ட்டில் எல்லோருக்கும் தெரிந்துவிடுமே என்றுதான் தயங்கினாள். அதுவும் அந்த ஜெயஸ்ரீ ஒன்றே போதும். அதர் டிபார்ட்மெண்ட்டிலும் பற்ற வைப்பதற்கு என உள்ளூர சற்று கவலைப்பட்டவளுக்கு அவன் பேச்சைக் கேட்டதும் அப்பாடாவென்றுதான் இருந்தது. அதாவது முன் பகுதி பேச்சை கேட்டு மட்டும்.

''என்ன சொல்கிறாய்?'' என கண்டிப்புடன் எழுந்தது அவன் குரல்.

''கண்டிப்பாகக் கேட்கிறேன் சார். என் கவனக் குறைவால் உங்கள் பார்வையில் படும்படி விட்ட தவறுக்காக மன்னிப்புக் கேட்கிறேன். பட் அதை எழுதியதற்காக மன்னிப்பு கேட்க முடியாது என்றாள் அவள் துணிச்சலுடன்.

கண்களில் கூர்மையுடன், ''அப்படியென்றால், ?'' என்று கேட்டான் அவன் குரலில் அழுத்தத்துடன்.

உள்ளே இதயம் படபடப்பதைக் காட்டிக் கொள்ளாமல் வெளியே தைரியமாக காட்டிக் கொண்டு, ஒரு பெரிய மூச்சை இழுத்து விட்டவள் அவனை நேராகப் பார்த்து,



''எழுதியதற்காக என்னால் மன்னிப்பு கேட்க முடியாது சார். என் மனதில் இருப்பதைத்தானே எழுதினேன்'' என்று தெளிவாகக் கூறி விட்டாள் அவள்.

தைரியமாக போட்டு உடைத்து விட்டாளே தவிர, உள்ளுக்குள் இதயம் வேகமாக அடித்துக் கொள்வதையும், கை, கால் வெடவெடப்பதையும் உணர்ந்தவள் விழிகளை மூடி தன் தாயாரின் முகத்தை மனக்கண்ணில் கொண்டு வந்தாள். மனம் சற்று தைரியம் பெறவும் விழி திறந்து அவனை அண்ணாந்து பார்த்தாள்.

கூடவே இத்தனை நாட்களாய் இதயத்தை சுற்றியிருந்த இறுக்கம் அகன்றது போல் உணர்ந்தாள்.

எப்படியோ அவனிடம் தன் மனதை சொல்லியாயிற்று எனும்பொழுதே, மனம் இலேசாகி விட்டதையும் உணர்ந்தாள். இனி என்ன சொல்கிறானோ சொல்லட்டும் என்ற ரீதியில் விழியுயர்த்தி அவனைப் பார்த்தபடி அமைதியாய் நின்றாள்.

பொங்கிய கோபத்தில் முகம் சிவக்க, ''இந்தப் பேச்சுக்காகவும் நீ என்னிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் ஷண்மதி'' என்று எச்சரித்தான் அவன்.

முகத்தில் மறுப்பை வெளிப்படையாகக் காட்டியபடி ''பேப்பரை பின் செய்ததற்காக மட்டும்தான் என்னால் ஸாரி சொல்ல முடியும்'' என்றாள் தீர்மானமாக.

''அப்படியென்றால் இதை பிரின்சிபாலிடம் கொண்டு போவதைத் தவிர எனக்கு வேறு வழியில்லை'' என்றான் அவன்.

''நான் ரெடி!'' என்றாள் அவளும் பிடிவாதமாக.

''அவ்வளவும் திமிர்'' என்று எரிச்சலுடன் அவளை முறைத்தான் அவன்.

சட்டென அவள் குரல் தணிய, ''ஆனால் நீங்கள் பிரின்சிபாலிடம் போக மாட்டீர்களென்று எனக்கு நிச்சயமாகத் தெரியும் சார். டிபார்ட்மெண்ட்டில் யாருக்கும் தெரியக் கூடாதென்று தனியாக கூப்பிட்டு கண்டிப்பவர் நீங்கள். இதை பலர் ம்கூம் சிலர் அறியக்கூட விட மாட்டீர்கள் என்று தெரியும் சார்'' என்றாள் மிருதுவான குரலில்.

''அந்த நிச்சயத்தில்தான் மன்னிப்புக் கேட்க முடியாதென தைரியமாகக் கூறுகிறாயா?''

''கண்டிப்பாக இல்லை சார். என் மனதில் இருப்பதைத் தான் சொல்லி விட்டேனே!''

கோபத்தில் பொறுமையிழந்த மூச்சுடன், ''அந்த பேச்சை விடு'' என்று எரிந்து விழுந்தான் அவன்.

''நான் உன் குரு ஸ்தானத்தில் இருப்பவன். நீ என் மாணவி என்பதை மறக்காதே!''

''மறக்கவில்லை சார். ஆனால் அதற்காக...'' எனும் பொழுதே.

''கெட் லாஸ்ட்'' என்றான் அவன் கோபத்துடன்.

முகத்தில் அடித்தாற்போன்ற அப்பேச்சில் அவள் ஆச்சரியம்தான் பட்டாள். அவன் கோபத்துடன் மன்னிப்பு கேட்க வேண்டுமென்று கட்டாயப்படுத்தி தான் மறுத்து பிரச்சனை பெரிதாகாமல் இருக்க வேண்டுமே என கவலைப்பட்டவளுக்கு இப்பொழுது நிம்மதியேற்பட்டது.

''தேங்க் யூ சார்'' என புன்சிரிப்போடு கூறியபடி திரும்பினாள் அவள்.

''இதையும் எடுத்துக் கொண்டு போய் தொலை'' என திருத்திய டெஸ்ட் பேப்பரை டேபிள் மீது போட்டான் அவன்.

முகம் இளக ஒரு கணம் அப்படியே நின்றாள் ஷண்மதி. பிறகு பேப்பரை எடுத்துக் கொண்டு திரும்பியவள்



சற்று நின்று, ''சார்! தோல்வி எனக்குப் பழக்கமில்லாத ஒன்று. கண்டிப்பாக நான் ஜெயித்தே தீருவேன்'' எனக் குறும்புடன் கூறியவள் அவன் முகம் கோபத்தில் சிவந்து ஜொலிக்கவும் அதற்கு மேல நிற்காமல் ஓடி விட்டாள்.

# 9



அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஸ்ரீதர் அவளைச் சுத்தமாக கண்டு கொள்வதேயில்லை. க்ளாஸ் எடுக்கும் சமயங்களிலும் அப்படியே. பாட சம்பந்தமாக ஏதாவது கேட்டால் மட்டும் ஓர் அன்னிய குரலில் பதில் வரும். அவ்வளவே.

கேண்டீனில் அமர்ந்து ப்ரெஷ் ஜூஸை சுவைத்தபடியே, ஷண்மதியைப் பார்த்து, ''இன்னும் பத்து நாட்களில் ஸ்டடி லீவ், தென் எக்ஸாம்ஸ், அதன் பின் புராஜெக்ட் வொர்க், டைமே இல்லையே, ஷண்மி. நீ என்னதான் செய்யப் போகிறாய்? ஸ்ரீதர் வேறு உன்னை சுத்தமாய் அவாய்ட் செய்கிறார். நீயானால் நாளுக்கு நாள் டீப்பாகிக் கொண்டே போகிறாய். என்ன செய்யப் போகிறாய்?'' என நிஜமான கவலையோடு கேட்டாள் ப்ரியங்கா.

ஆனால் ஷண்மதிக்கு நம்பிக்கை குறையவில்லை. சொல்லப் போனால் அவன் மீது மரியாதையும் நேசமும் அதிகமாயிற்று என்றே சொல்லலாம். அன்று அவன் கோபத்தை நினைக்கையில், கவிதை எழுதியதற்காக மன்னிப்பு கேட்க மாட்டேனென வீம்பாக நிற்கும் தன்னை எச்.ஓ.டி. முன்னோ பிரின்சிபாலின் முன்னோ

கொண்டு போய் நிறுத்தத்தான் போகிறானென்றே எண்ணினாள். கோபத்தில் குதித்துக் கொண்டு நின்றவன் தன்னை சும்மா விட்டதும் அவளுக்கு ஆச்சரியம்தான். கூடவே எந்த எவிடென்சும் எனக்கு வேண்டாமென்பது போல ஆதாரமான அந்த பேப்பரையும் தன்னிடமே கொடுத்ததை நினைக்கையில் அவன் மீது மதிப்பு மேலும் கூடியது.

அவன் நினைத்திருந்தால் அவளைக் கண்டிப்பது போலவே விஷயத்தை வெளிப்படுத்தி சேர்மேன் பெண்ணே என் மீது க்ரேஸாக இருக்கிறாளென விளம்பரம் தேடிக் கொண்டிருக்கலாம். ஆனால் யாருக்கும் தெரியாமல் அவளைக் கண்டித்தவன், அப்பேப்பரையும் அவளிடமே அளித்து விட்டதையும் நினைத்தவளுக்கு அவனை நினைத்து பெருமிதமே உண்டாயிற்று. வாழ்ந்தால் இவனோடு அல்லவா வாழ வேண்டும் என்று எண்ணும்பொழுதே அவள் உள்ளம் உருகி விடும்.

அன்று நடந்ததையெல்லாம் தன் தந்தையிடம் வழக்கம் போல் மறைக்காமல் கூறியபொழுது அவரும் அதை முழு மனதோடு ஆதரித்தார்.

''கண்டிப்பாம்மா! அவரை சந்தித்ததிலிருந்து எனக்கே அவரை மிகவும் பிடித்திருக்கிறது. அன்று அவருடன் ஒரு பைவ் மினிட்ஸ் ஜஸ்ட் பொதுவாக பேசிக் கொண்டிருந்தேன். வெரி நைஸ் மேன்'' என்றார்.

அவர் அப்படிச் சொல்லவும் ஷண்மதியின் முகம் பூவாய் மலர்ந்தது.

''ஷண்மி! உன் படிப்பு மட்டும் முடியட்டும். பிறகு நானே அவரிடம் பேசுகிறேன் சரியா?'' என தந்தை கூறவும் ஷண்மதி முகம் மேலும் மலர்ந்து விகசித்தது.



''ஓகேப்பா... நானும் இப்ப மோஸ்ட் இம்பார்ட்டன்ஸ் தருவது என் ஸ்டடீஸ்க்குதான் டாட். கண்டிப்பாக பர்ஸ்ட் ப்ளேஸ் வருவதோடு இதுவரை யாரும் எடுக்காத அளவு அதிக பர்செண்ட்டேஜ் ஸ்கோர் செய்வேன் டாட்'' என்றாள் ஷண்மதி உறுதியோடு.

புன்னகையோடு மகள் கன்னத்தைத் தட்டியபடி எழுந்து சென்றார் தந்தை.

இப்பொழுது அதெல்லாம் நினைவு வர தனக்குள் புன்னகைத்த ஷண்மதி, ப்ரியங்கா தன் தோளைத் தட்டவும் சுயநிலைக்கு வந்தாள்.

''என்னடி? நாங்கள் எவ்வளவு கவலையோடு கேட்கிறோம். நீ என்னடாவென்றால் பதிலே கூறாமல் உனக்குள்ளேயே சிரித்துக் கொண்டிருக்கிறாய்'' என்று ஆற்றாமையோடு கேட்கவும் சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''ஸாரிடி ப்ரீ'' என சமாதானம் செய்தாள் ஷண்மதி.

''அது இருக்கட்டும்ப்பா! ஸ்ரீதர் சார் உன்னை சுத்தமாக அவாய்ட் செய்கிறாரேயென்றுதான் எல்லோர்க்கும் கவலையாக இருக்கிறது'' என்றாள் ப்ரியங்கா.

''கவலைப்பட தேவையில்லைடி'' என்றாள் ஷண்மதி ஈஸியாக.

''எந்த நிச்சயத்தில் இப்படிச் சொல்கிறாய் ஷண்மி?'' என சாம்பவி அக்கறையோடு கேட்கவும் பதிலேதும் சொல்லாமல் முறுவலித்தாள் ஷண்மதி.

போனவாரத்தில் ஒரு நாள்... வகுப்பில் அவன் நோட்ஸ் டிக்டேட் செய்யச் செய்ய எல்லோரும் குனிந்து எழுதிக் கொண்டிருந்தனர். ஒரே சீராக ஒலித்துக் கொண்டிருந்த அவனது குரலை வழக்கம்போல் உள்ளூர ரசித்தபடி எழுதிக் கொண்டிருந்த ஷண்மதி சட்டென பிறந்த குறும்

புடன் பேனாவை மூடி வைத்து விட்டு இடது கையை டெஸ்க்கிலும் வலது கையை கன்னத்திலும் வைத்தபடி அவனையே விழிகளில் நேசம் பெருகி வழியப் பார்த்துக் கொண்டிருந்தாள்.

டிக்டேட் செய்துக் கொண்டேயிருந்தவன் எதேச்சை யாக இவளது விழிகளை சந்தித்துவிட, பார்வையை விலக்கிக் கொள்ள மாட்டாமல் பார்த்தது பார்த்தபடியே அப்படியே திகைத்து நின்று விட்டான்.

நல்லவேளை! குனிந்து எழுதிக் கொண்டிருந்தவர்கள் மவுனம் உணர்ந்து நிமிர்வதற்குள் தலையை குலுக்கித் தன்னை சுதாரித்தபடி டிக்டேட் செய்யத் துவங்கி விட்டான். ஷண்மதிக்கோ உள்ளம் சிறகடித்துப் பறந்தது.

அதிலிருந்து ஷண்மதிக்கு நம்பிக்கை அதிகமாயிற்று. சரி... எங்கே போய்விடப் போகிறான். நான் உன் குரு ஸ்தானத்தில் இருப்பவன், நீ என் மாணவி என்றானே. படிப்பு முடியட்டும், பிறகு பேசிக் கொள்ளலாமென நம்பிக்கையோடு திட்டமிட்டாள் ஷண்மதி.

சட்டென தோளில் பலமான அடி விழவும் திடுக் கிட்டு கலைந்தாள் ஷண்மதி.

''அடிக்கடி இப்படிக் காணாமல் போனால் என்ன அர்த்தம்? எங்கள் கவலை புரியவில்லையா உனக்கு? ஸ்ரீதர் சார் விஷயமாக நீயும் ஒரு முயற்சியும் எடுக்கக் காணோம். அவரும் உன் பக்கம் திரும்புவதில்லை. மேற்கொண்டு நீ என்ன செய்யப் போகிறாய் ஷண்மி?'' என கேட்ட ஷீத்தலைப் பார்த்து ஸ்டைலாக தோளைக் குலுக்கினாள் ஷண்மதி.

''டோண்ட் வொர்ரி மை ப்ரெண்ட்ஸ். இனி இவரிடம் பேசி பிரயோஜனமில்லை. நான் வேறு ஒரு ப்ளான் வைத்திருக்கிறேன்'' என்றாள் மர்ம குரலில்.



''என்னடி அது?''

''சஸ்பென்ஸ்'' எனச் சிரித்தாள் ஷண்மதி.

''பெரிய சஸ்பென்ஸ். சொல்லுடி'' என அவர்கள் வற்புறுத்தியும் அவள் சொல்லவில்லை. சக்ஸஸ் ஆன பிறகுதான் சொல்வேன்'' என்று விட்டாள்.

பே பண்ண அவள் பர்சைத் திறந்தபொழுது தெரிந்த பேனாவைப் பார்த்த ஷீத்தல், ''இது சாரிடம் சுட்ட பேனா தானே?'' என்று கேட்க, ''ம்'' என சிரித்தாள் ஷண்மதி.

அன்றைய சம்பவம் நடந்த மறுநாள் பளிச்சென்ற புன்னகையோடு அவன் முன் ஒரு புது பார்க்கர் பென் னோடு போய் நின்றாள் ஷண்மதி.

''ஸாரி சார். உங்களது பேனா மிஸ்ஸாகி விட்டது சார். ஐயம் ரியலி ஸாரி சார். இதோ அச்சு அசலாய் உங்கள் பென் போலவே புது பென் சார்'' என வெகு பவ்வியமாய் நீட்டவும்,

அதை வாங்காமல் அவளை நேராகப் பார்த்தவன் ''பொய்'' என்றான் நிதானமாக.

''ஐயோ! நிஜம் சார்!''

''அந்த பென் என் அம்மா ப்ரசெண்ட் செய்த பென். எனக்கு ரொம்பவும் செண்ட்டிமெண்ட் பென் அது. ஒழுங்காக தந்து விடு.''

''சார்! என்னிடமிருந்தால் தந்துவிட மாட்டேனா?'' என்றவள் பக்கத்திலிருந்த ஜெயஸ்ரீயிடம் திரும்பி, ''மேம்! நீங்கள் சொல்லுங்கள் மேடம். யாராவது பழைய பென்னை வைத்துக் கொண்டே புது பென் வாங்குவார் களா? நீங்களே சொல்லுங்கள் காணடித்தது தப்புதான் நான் தான் ஸாரி கேட்கிறேனே!'' என தணிவாகக் கூறினாள்.

''ஸாரி சொன்னால் சரியாகி விடுமா? ச்சே! கொஞ்சம் கூடப் பொறுப்பில்லாமல்...'' என ஸ்ரீதர் திட்டவும் ஷண்மதி மீண்டும் ஜெயஸ்ரீயிடம் திரும்பினாள்.

''மேம்! நீங்கள் சொன்னால் சார் கேட்பார்கள். எனக்காக கொஞ்சம் எடுத்துச் சொல்லுங்கள் மேம்'' என ஐஸ் வைக்கவும் உச்சி குளிர்ந்த ஜெயஸ்ரீயும், ''தெரியாமல் மிஸ் செய்து விட்டாள் சார். ரொம்பவும் வருத்தப்படுகிறாள். பரிகாரமாக புது பென் வேறு வாங்கிக் கொண்டு வந்திருக்கிறாள். வாங்கிக் கொள்ளுங்க சார்!'' எனவும்,

அவளை வைத்துக் கொண்டு ஷண்மதியிடம் வேறு எதுவும் பேச முடியாதவனாக அப்பென்னை வாங்கிக் கொண்டான் ஸ்ரீதர்.

அன்றைய நினைவில் இன்றும் முறுவல் அரும்ப மீண்டும் பேனாவைப் பார்த்தாள் ஷண்மதி.

## 10



'கடவுளே! நீதானப்பா எல்லாவற்றையும் நல்லபடியாக நடத்தித் தரவேண்டும்' என்று மிகுந்த பக்தி சிரத்தையோடு வேண்டியபடி பிரசாதத்தை நெற்றியில் இட்டுக் கொண்டாள் ஷண்மதி.

சொல்லப் போனால் எக்ஸாம் சமயங்களில் கூட அவள் இவ்வளவு டென்ஷனோடு கடவுளிடம் சரண் புகுந்ததில்லை.

சற்று ஓரமாக ஒதுங்கி அமர்ந்தபடி மணிக்கட்டைப் பார்த்தவள் செல்லை எடுத்துக் கால் செய்தாள்.



''ராகவ்! எங்கே இருக்கிறாய் நீ? நான் வந்து அரை மணி நேரத்திற்கும் மேலாகி விட்டது. உன்னை கரெக்டா ஒன்பதிற்கெல்லாம் இங்கே இருக்க வேண்டுமென்று சொன்னேனா இல்லையா...'' என படபடக்கவும் அந்தப் புறம் ராகவ் அலுத்துக் கொண்டான்.

''என்னப்பா நீ? இந்த ப்ரைடே கவர்ன்மென்ட் ஹாலிடேவாயிற்றே... நிம்மதியாக தூங்கலாமென்றால் விடுகிறாயா நீ?... சரி... சரி திட்டாதே ஷண்மி. வந்து கொண்டேயிருக்கிறேன். இன்னும் பத்து நிமிடங்களில் நான் அங்கு இருப்பேன்'' எனவும் சற்று சமாதானப்பட்டு செல்லை ஆஃப் செய்தாள் ஷண்மதி.

சொன்னபடி பத்து நிமிடங்களில் வந்தானா என்றால் அதுவுமில்லை. மேலும் ஐந்து நிமிடங்கள் கழிய பொறுமையிழந்தவளாக மீண்டும் கால் செய்தாள் ஷண்மதி.

''மடையா! எவ்வளவு நேரம்? எங்கே இருக்கிறாய்? என்னது கோவிலுக்கு வெளியே வா? உள்ளே வருவதற்கென்ன?''

அவனோ ரொம்பவும் கூலாக, ''ஷண்மி! இங்கே ஒரு கிரீன் சுடியைப் பார்த்தேன். ரொம்ப அழகாகயிருந்ததா? அதான்... டைம்பாஸ்...'' என இழுக்கவும் பல்லைக் கடித்தாள் ஷண்மதி.

''ராகவ்! என்னிடம் அடி வாங்கப் போகிறாய். நீ வருவதற்குள் அவர்கள் கிளம்பி விடுவார்கள் போலிருக்கிறது. போயும் போயும் உன்னை நம்பி இந்த வேலையை உன்னிடம் ஒப்படைத்தேன் பார். என்னை சொல்ல வேண்டும்'' என கோபத்தில் தொடங்கி புலம்பலில் முடிக்கவும்,

''டோண்ட் வொர்ரி ஷண்மி! சும்மா உன்னைச் சீண்டினேன். நான் மேலேதான் வந்து கொண்டிருக்கிறேன்'' என்றான் அவன் சமாதானமாக.

''சீக்கிரம் வா'' என்றவள் திடீரென்று மூண்ட சந்தேகத்துடன், ''ஏய் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்கிறதுதானே'' என வினவினாள்.

உடனே ராகவ் ரோஷத்துடன், ''என்னப்பா நீ? என்னை ரொம்பதான் மட்டம் தட்டுகிறாயே! நேற்று முழுக்கப் படித்துப் படித்துச் சொல்லியிருக்கிறாய் மறக்குமா? நேராக மேலே வந்து சுவாமி தரிசனம் செய்துவிட்டு சமர்த்தாக வீட்டிற்கு சென்றுவிட வேண்டும் அவ்வளவு தானே! ஆனால் ஷண்மி, சர்க்கரைப் பொங்கல், சுண்டல் ஏதாவது தந்தால் வாங்கி சாப்பிடலாமா கூடாதாவென நீ சொல்லவே இல்லையே, சாப்பிட்டு விட்டே போகலாமா ஷண்மி?'' என்று ஆர்வமாகக் கேட்டவன்,

''யூ... யூ... உன்னை'' என ஷண்மதி பல்லைக் கடிக்கவும் சிரித்தான்.

''சிரிக்காதேடா. ஐயம் வெரி சீரியஸ், நோட் செய்து கொள். லேவண்டர் கலர் மைசூர் சில்க். கையிலே ப்ளாக் பர்ஸ். அவர்தான் ஸ்ரீதரோட அம்மா. நீ ஆளை மாற்றி வம்பு பண்ணி விடாதே! பின்னாலேயே நானும் வந்து கொண்டிருப்பேன். சரி... சரி... அவர்கள் கிளம்பி விட்டார்கள். நான் வைத்து விடுகிறேன்!'' என்று செல்லை ஹேண்ட் பேகினுள் போட்டவள் சாதுவாக தானும் கீழே இறங்கினாள்.

அவர்களது திட்டப்படியே வேகவேகமாக ஏறி வந்த ராகவ், அப்பெண்மணி சற்றும் எதிர்பாராத வேளையில் சட்டென இடித்து விடவும் அவர் தடுமாறி விழப் போனார்.

இதற்காகவே காத்திருந்த ஷண்மதி கை தேர்ந்த கிரிக்கெட் வீரனைப் போல் சற்றுத் தாவி அப்பெண்மணியை தாங்கிக் கொண்டாள். அப்பொழுதும் இலேசாக தடுமாறியவரை ஆதரவாய் பிடித்தபடி,



''யூ இடியட்! பார்த்து வருவதற்கென்ன? கண் என்ன முதுகிலா இருக்கிறது. ஸ்டுப்பிட் பெல்லோ'' என தாண்டிக் கொண்டு மேலேறிக் கொண்டிருந்த தன் நண்பனை சண்டைக்கு இழுக்கவும் வியப்புடன் திரும்பினான் அவன்.

இடித்து விட்டு கடகடவென்று யாரும் கேள்வி கேட்கும் முன் எஸ்கேப் ஆகிவிட வேண்டுமென்பது தானே ப்ளான். இப்பொழுது இவளென்ன சண்டைக்கு வருகிறாளே. இது ப்ளானில் இல்லாத பகுதியாகவா அல்லவா இருக்கிறது.

''ஏய்... என்ன பார்வை? இப்படிதான் இடிப்பதா? நான் மட்டும் பிடிக்கவில்லையென்றால் இவர் இந்நேரம் படிகளில் உருண்டிருப்பார் தெரியுமா?''

'அடப்பாவி! என்ன ரியலாக சீன் போடுகிறாள்' என்றெண்ணிய ராகவ், தானும் நடிப்பில் சளைத்தவனில்லையென காட்டிவிட வேண்டியதுதானென்று முடிவு கட்டிக் கொண்டு, ஸ்ரீதரின் தாயாரின் பக்கம் திரும்பி ''ஸாரி ஆன்ட்டி! தெரியாமல் இடித்து விட்டேன். அவசரமாக மேலே போக வேண்டியிருந்தது அதுதான்'' என்று வெகு பவ்வியமான குரலில் விளக்கமளித்தான்.

''நீ அவசரமாக மேலே போக வேண்டுமென்பதற்காக இவர்களை மேலே அனுப்பப் பார்த்தாயே! ச்சே! உன்னைப் போன்ற ஆட்களையெல்லாம் ஈவ்டீசிங்கில் பிடித்து உள்ளே போட வேண்டும்'' என்றாள் ஷண்மதி விடாமல்.

ஈவ்டீசிங்கா? என்னதான் நடிப்பென்றாலும் இது ரொம்ப ஓவர்தான் என சிரிப்போடு எண்ணிய ராகவ்வும்

சளைக்காமல், ''வாட்? ஈவ்டீசிங்கில் பிடித்து உள்ளே போடுவாயா? இது உனக்கே கொஞ்சம் ஓவராக இல்லை அவர்கள் என் அம்மா மாதிரி. அவர்களிடம் ஸாரியும் கேட்டு விட்டேன். நீ என்னவோ உன்னை இடித்தது போல் கத்துகிறாய். ஒரு வேளை உன்னை இடிக்காமல் இவர்கள் மீது மோதி விட்டேனென்ற பொறாமையில் தான் என்னைச் சண்டைக்கு இழுக்கிறாயோ என்னவோ?'' என கிண்டல் செய்யவும்,

''அப்படி நடந்திருந்தால் என் வாய் பேசாது கைதான் பேசியிருக்கும்'' என்ற ஷண்மதி ஸ்ரீதரின் தாயாரிடம் திரும்பி, ''ஆன்ட்டி! உங்களுக்கு காலில் அடியேதும் படவில்லையே'' என கவலையோடு விசாரிக்கவும்,

'ஒரு வழியாக ஆளை விட்டாளே சாமி' என்கிற ரீதியில் ராகவ் நழுவி விட்டான்.

பதிலாக அவளைப் பார்த்து முறுவலித்தார் அவர்.

''ம்கூம். நீதான் உடனேயே என்னைப் பிடித்து விட்டாயேம்மா. எதிர்பாராமல் நிகழ்ந்ததில் சற்று அதிர்ச்சி அவ்வளவுதான்'' என்றவர் ''ரொம்ப நன்றிம்மா'' என முறைப்படி நன்றியும் தெரிவித்தார்.

''இதிலென்ன ஆன்ட்டி இருக்கிறது? சிறு உதவி தானே, வாருங்கள் ஆன்ட்டி கீழே போவோம்'' என புன் முறுவலோடு கூறியவள் கீழே வந்ததும், ''வீட்டிற்கு எப்படி ஆன்ட்டி செல்வீர்கள்?'' என விசாரித்தாள்.

''வீடு மிக மிக அருகில்தானேம்மா. நடந்தே சென்று விடுவேன். என்னைப் பற்றிக் கவலைப்படாமல் நீ கிளம்பும்மா'' என்றார் அவர்.

இந்த விஷயம் ஏற்கனவே அவள் அறிந்ததுதான். வீட்டிற்கு மிக அருகாமையிலுள்ள இந்தக் கோவிலுக்கு



ஒவ்வொரு வெள்ளிக் கிழமையும் தவறாமல் அவர் வருவாரென்பதும், காரை அவாய்ட் செய்துவிட்டு நடந்தேதான் வருவாரென்பதும் அவளுக்குத் தெரிந்த விஷயம்தான்.

எனவே, ''ஆன்ட்டி! வாருங்கள் நானே உங்களை ட்ராப் செய்துவிட்டுப் போகிறேன்'' என அழைத்தாள்.

''பரவாயில்லைம்மா. உனக்கேன் வீண் சிரமம். வீடு மிகவும் அருகில்தான், எனக்கும் ஒன்றுமில்லை. நான் நடந்தே சென்று விடுவேன்.''

''எனக்கென்ன ஆன்ட்டி சிரமம்? வீடும் அருகிலெனும் பொழுது எனக்கு பெட்ரோலும் அதிகமாகாது. வாருங்கள் நானே ட்ராப் செய்கிறேன். அது மட்டுமல்ல ஆன்ட்டி... இவ்வளவு அழகான ஆன்ட்டியை இனிமேல் தனியாக அனுப்பாதீர்களென்று உங்கள் ஹஸ்பெண்டிடம் ஓர் இலவச ஆலோசனையும் வழங்கி விட்டுத்தான் போவேனாக்கும்'' என அவள் விளையாட்டாய் கூறவும் அவளது பேச்சில் சட்டென தேவகி சிரித்தார்.

சிரித்து விட்டு அவளை ஆசையோடு நோக்கி,

''உன் பெயர் என்னம்மா?'' என்று விசாரித்தார்.

''ஷண்மதி'' என சிறு முறுவலோடு கூறினாள் அவள்.

''அழகான பெயர்'' என்றவர் ''உன்னைப் போலவே'' என்று சேர்த்து கூறினார்.

அதன் பிறகு அவர்களிடையே மிகவும் சரளமாக உரையாடல் நடந்தது.

சில நிமிடங்கள்தான் அக்கார் பயணம் என்றாலும்கூட ஷண்மதியின் கலகலப் பேச்சினால் அங்கு அடிக்கடி சிரிப்பொலி ஒலித்த வண்ணம் இருந்தது.

தன்னை இறக்கிவிட்டு விடை பெற்றவளை பிரியவே மனமில்லை தேவகிக்கு. அவளுடன் இன்னும் சற்று

நேரம் கழிக்க வேண்டும்போலெழுந்த ஆவலை உணர்ந்து உள்ளூர ஆச்சரியப்பட்டவராய், ''என்னம்மா நீ? இவ்வளவு தூரம் உதவி செய்துவிட்டு வீட்டிற்குக் கூட வராமல் செல்கிறாயே! வந்துதான் ஆக வேண்டும். அங்கிளை நீ சந்திக்க வேண்டாமா? வாவா'' என்றபடி தன் அபார்ட்மெண்ட்டிற்கு அழைத்துச் சென்றார்.

மூன்றாவது தளத்தில் மிகப் பெரியதாக சகல வித மான வசதிகளுடன் அந்த லக்சூரி ப்ளாட் அமைந்திருந்தது.

தன் கணவர், மூத்த மகன் கிரிதர், அவன் மனைவி உதயா என எல்லோர்க்கும் ஷண்மதியை அறிமுகப் படுத்தி அவள் செய்த உதவியையும் தேவகி எடுத்துரைக்க, அடுத்த கணமே அவளுக்கு அங்கே ஏக உபசரிப்பும், மரியாதையும் தடபுடல் பட்டன.

''ரொம்ப தேங்க்ஸ் மிஸ். ஷண்மதி. நீங்கள் மட்டும் சமயத்தில் அம்மாவை விழுந்து விடாமல் பிடித்திருக்கா விட்டால்... படிகளில் அம்மா... மைகாட்... உங்கள் உதவிக்கு மிக்க நன்றி மிஸ். ஷண்மதி'' என கிரிதர் மனமார நன்றி கூறியபொழுது உள்ளூர ஷண்மதிக்கு மனம் மிகவும் குன்றியது.

மனதிற்குள் அவர்கள் அனைவரிடமும் மன்னிப்பு கேட்டபடி, ''ப்ளீஸ்! இது ரொம்ப சின்ன விஷயம். இதை பெரிதுபடுத்தாதீர்கள்'' என்றாள் குரலில் மன்றாடலுடன். அதற்குள் உதயா கொண்டு வந்து தந்த பானத்தை வாங்கிக் கொண்டாள். அனைவருமே அவளிடம் மிகவும் சகஜமாக உரையாடவும் ஷண்மதிக்கு அவர்கள் புதியவர் களென்ற தடை மறைந்தது.

''மாமா! அடுத்த வாரத்திலிருந்து அத்தையோடு கோவிலுக்கு நீங்களும் சென்று வாருங்கள். இனிமேல் அவர்களைத் தனியாக அனுப்ப வேண்டாம்'' என்றாள் உதயா.

''ம்ம்... போகலாம்.. பட் அப்புறம் அழகான பெண் களெல்லாம் என் மேலே வந்து மோதுவார்கள். அதான் என்ன செய்வதென்று யோசிக்கிறேன்'' என்றார் வாசு தேவன் ரொம்பப் பிகுவாக.

''ஆஹாஹா! இப்படியெல்லாம் கூட பகற்கனவு இருக்கிறதா உங்களுக்கு? கவலையே படாதீர்கள் அப்பா. பகற்கனவு பலிக்கவே பலிக்காது. அப்படியே தப்பித் தவறி கனவு பலித்து பார்வை தெரியாமல் யாராவது மோதி விட்டால் கூட கீழே விழாமல் அம்மா உங்களைக் காப்பாற்றி விடுவார்கள்'' என கிரிதர் வாரினான்.

''கீழே விழுவது கிடக்கட்டும். என் மீது மோதும் பெண் களோடு உன் அம்மா பொறாமையில் வெந்து கருகி சண்டைக்குப் போய் விடுவாளோவென்ற பயத்தில் அல்லவா நான் தயங்குவது'' என விடாமல் வாசுதேவன் கூறவும் கேட்டுக் கொண்டிருந்த ஷண்மதிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''நோட் திஸ் பாயிண்ட் ஆன்ட்டி. இனி அங்கிளை தனியே எங்கும் அனுப்பி விடாதீர்கள்'' என்றாள் போட்டுக் கொடுப்பதுபோல.

வந்து அரைமணி நேரத்திற்குள் அனைவரும் அவளை ஒருமையில் அழைக்குமளவிற்கு பழகி விட்டாள் ஷண்மதி. பேச்சும் சிரிப்புமாக அந்த சூழ்நிலையில் உற்சாகம் நிரம்பியிருந்தது.

ஏதோ வேலையாக தன்னறையிலிருந்து அப்பொழுது தான் வெளியே வந்த ஸ்ரீதர் அங்கே ஷண்மதியைக் கண்டு நம்ப முடியாமல் திகைத்தான்.

தன் வீட்டு ஹாலில் தன் வீட்டு உறவினர்களோடு அமர்ந்து வெகு சகஜமாக பேசிச் சிரித்துக் கொண்டிருக்கும் அவளை அங்கு அவன் சுத்தமாய் எதிர்பார்க்கவில்லை.

புதியவர்களிடம் எளிதில் ஒட்ட மறுக்கும் தன் அண்ணன் மகன் வினேஷ் அவள் மடியில் சுகமாய் அமர்ந்திருப்பது அவனது திகைப்பை அதிகப்படுத்தியது.

அதற்குள் அவனைக் கண்டு விட்ட தேவகி, "ஸ்ரீதர் இந்த பெண்..." என அறிமுகப்படுத்த தொடங்குவதைக் கூட கவனிக்காமல்,

"ஷண்மதி! நீ எங்கே இங்கே?" என திகைப்புடன் வினவினான்.

ஷண்மதியும், "சார்! நீங்கள் இங்கு... அப்படியென்றால் இது உங்கள் வீடா சார்?" என முகத்தில் மிகவும் ஆச்சரியம் காட்டி வினவினாள்.

கேட்டு முடித்ததுமே, 'ஆச்சரியத்தை ரொம்பவும் அதிகப்படியாக முகத்தில் காட்டி விட்டோமோ?' என்று சிறு கவலை வேறு முளைக்கவும், 'கண்டு பிடித்து விட்டானோ' என்று அவன் முகத்தை அண்ணாந்து பார்த்தாள்.

அவனோ தன் தாயார் அவளைப் பற்றிக் கூறுவதை கவனமாய் கேட்டுக் கொண்டிருந்தான். பிறகு, "கீ...ழே விழாமல் காப்பாற்றி... வீட்டிலும் கொண்டு வந்துவிட்டாளா?" என நிறுத்தி நிதானமாகக் கேட்டபடி அவளை நேராகப் பார்க்கவும் உதட்டைக் கடித்தாள் ஷண்மதி.

'கண்டு கொண்டு விட்டான். அவள் வேண்டுமென்றே செய்த நாடகத்தைப் புரிந்து கொண்டு விட்டான்.

"அதுமட்டுமில்லை கண்ணா! வந்து மோதியவனை கேள்வி மேல் கேள்வி கேட்டாள் தெரியுமா?" என



பெருமையாக தேவகி கூறவும், தோளைக் குலுக்கினான் அவன்.

"அதுதான் கை வந்த கலையாயிற்றே! கேள்வி மேல கேள்வி கேட்டதை சொன்னேன். வகுப்பிலும் அப்படித் தான் அம்மா!" என்றான் அவன் வெகு கிண்டலாக.

வாசுதேவன் குறுக்கிட்டு, "அப்படியானால் இவள் உன் மாணவியாடா? வெரிகுட்! வெரிகுட்! அதனால் தான் இவ்வளவு நேரமும் கலகலப்பாக பேசிக் கொண்டிருந்தவள் உன்னைக் கண்டதும் சைலண்ட்டாகி விட்டாளா?" என்றபடி ஷண்மதியிடம் திரும்பி, "என்னம்மா என் மகன் வகுப்பில் எப்படி? ரொம்பவும் மிரட்டுவானா?" என விசாரிக்கவும்,

சிரிப்பை அடக்கிக் கொண்டு, "ஆமாம் அங்கிள்! அதிலும் எனக்கு மட்டும் ஸ்பெஷல் டோஸ் நிறைய விழும்." என்றாள் ஷண்மதி பரிதாபமான குரலில்.

"அதான் இவனைப் பார்த்ததும் பேச்சு நின்று போயிற்றா? இதோ பாரும்மா இந்த வீட்டில் இருக்கும்பொழுது நீ சற்றுமுன் போலவே சகஜமாகவே இருக்கலாம். இவனுக்கெல்லாம் பயப்பட வேண்டாம்" என்றார் தேவகி சமாதானமாக.

"இம்... சரி ஆன்ட்டி" என மண்டையைப் பெரிதாக ஆட்டினாள் ஷண்மதி.

"இப்பொழுது புரிகிறது. அம்மாவிற்கு ஏன் உன்னை இவ்வளவு பிடித்திருக்கிறதென்று. அம்மா எது சொன்னாலும் அப்பா தவறாமல் மண்டையாட்டுவது போலவே ஆட்டுகிறாயே" என கிண்டலடித்துச் சிரித்த அண்ணனை வியப்புடன் நோக்கினான் ஸ்ரீதர்.

'வந்த கொஞ்ச நேரத்திற்குள் அண்ணனே அவளை ஒருமையில் அழைக்குமளவிற்கு ஆகி விட்டாளே' என வியப்பு எழுந்தது அவனிடத்தில்.

''உன் அம்மாவிற்கு மட்டும்தானா... உதயாவிற்கு கூட தான் அவளைப் பிடித்திருக்கிறது. உன்னைப் போலவே தலையாட்டுவதால்'' என வாசுதேவன் கிரிதரை வாரவும்,

''போதும்ப்பா! நம் மானத்தை நாமே வாங்கிக் கொள்ள வேண்டாம்'' என கவலையாய் கிரிதர் கூறவும் மீண்டும் அங்கே சிரிப்பலை எழுந்தது.

கலகலவென கன்னம் குழிய அவள் சிரிப்பதைக் கண்ட உதயா,

''உன் சிரிப்பு பார்த்துக் கொண்டே இருக்கலாம் போல அவ்வளவு அழகாக இருக்கிறது ஷண்மதி!'' என பாராட்டியவள் தொடர்ந்து, ''ஷண்மதி'' என அவள் பெயரை மீண்டும் உச்சரித்துப் பார்த்து விட்டு, ''உன் பெயரும் ரொம்ப அழகு'' என்று உரைத்தாள்.

புன் முறுவலோடு, ''நான் பிறக்கும் முன்பே பெண் குழந்தையென்றால் இந்த பெயர்தான் வைக்க வேண்டுமென்று என் அம்மா சூட்டிய பெயர் இது. அப்பாவின் முதல் இரண்டெழுத்தையும் அம்மாவின் கடைசி இரண்டெழுத்தையும் இணைத்து இந்த பெயரை நான் பிறக்கும் முன்பே முடிவு செய்து விட்டார்களாம். அதனாலேயே அப்பா என்னை முழு பெயர் சொல்லியே அழைப்பார். மற்றவர்களுக்கு ஷண்மி'' என்றாள் இயல்பாக.

''அப்படியென்றால் உன் பெற்றோர் ஒருவர் மீது மற்றவர் மிகுந்த அன்பு கொண்டவர்கள் என்று சொல்'' என்றாள் உதயா.

''இம்! உண்மைதான். இருவரும் ரொம்ப ஒற்றுமையாய் பாசமும், பிரியமுமாகத்தான் வாழ்ந்தார்களாம். என் அத்தை சொல்வார்கள். அதிலும் என் அம்மாவிற்கு



எப்பவும் சிரித்த முகம்தானாம்'' என்றாள் ஷண்மதி மிருதுவாகி விட்ட குரலில்.

திடுக்கிட்டு போய் அவளை திரும்பிப் பார்த்தான் ஸ்ரீதர். மற்றவர்களும் திகைப்புடன் நோக்கி, ''அத்தை சொல்வார்கள் என்றால்... ஷண்மதி உன் அம்மா... உனக்கு...'' என தடுமாறவும் அவளோ தடுமாறாமல், ''நான் பிறந்த அன்றே என் அம்மாவை இழந்து விட்டேன் ஆன்ட்டி'' என்றவள் மற்றவர்கள். முகங்களைப் பார்த்துவிட்டு, ''அச்சச்சோ... நீங்கள் இப்படி வருத்தப்படுவீர்களென்றால் நான் சொல்லியிருக்கவே மாட்டேன். என்ன அங்கிள் நீங்கள் கூடவா...'' என்றாள் தேறுதலாக.

அவளருகில் அமர்ந்திருந்த தேவகி அவள் கரத்தைப் பற்றியபடி, ''ஐயம் ஸாரி ஷண்மி!'' என்றார் வருத்தத்துடன்.

''தேவையில்லாத வருத்தம் ஆன்ட்டி! உங்களுக்குத் தெரியுமா? இதுவரை அம்மாவின் இழப்பை எண்ணி நான் மறுகியதே கிடையாது. ஒரு கணம் கூட அம்மா இல்லையே என வருத்தப்பட்டதே கிடையாது. என் அப்பா என்னை வருத்தப்பட விட்டதுமில்லை'' என்றவள் தந்தை நினைவில் முகம் கனிய, ''அந்தளவிற்கு தந்தைக்கு தந்தையாய், தாயுக்கு தாயாய் எனக்கு அம்மா இல்லாத குறையே தெரியாமல் வளர்த்தார் ஆன்ட்டி. இன்று வரையில் அம்மா இல்லையேயென நான் வருந்தியதே கிடையாது. எனக்கு எல்லாமே என் அப்பாதான். என் கைட், என் வெல் விஷர்... ஏன் என் மிகச் சிறந்த நண்பனும் என் அப்பாதான். என் அம்மாவையும் நான் அவர் உருவிலே காணும் பொழுது அம்மா இல்லாத குறை எனக்கு எப்படித் தோன்றும்? இப்பவும் ஏதாவது வெற்றி, குட் நியூஸ் என்றால் என் அம்மா படத்தின் முன் நின்று

மனதோடு அதைப் பற்றி அம்மாவோடு பேசுவோம். அதே சமயம் நானும் அப்பாவுமாக எங்கள் பொழுது கலகலப்பாக மகிழ்ச்சியும் சிரிப்புமாகக் கழியும் பொழுது அம்மா இதை மிஸ் பண்ணி விட்டார்களே என்றுதான் தோன்றுமே தவிர அம்மாவின் இழப்பை உணர்ந்து நான் வருத்தப்பட்டதேயில்லை. அதற்கு என் தந்தை விட்டதுமில்லை''யென குரலில் பெருமையும் பிரியமும் வழிய ஷண்மதி கூறவும்,

வாசுதேவன், ''எனக்கு உன் தந்தையை நேரில் பார்த்துப் பாராட்ட வேண்டும்போல் இருக்கிறது ஷண்மி. அம்மா இல்லையென்று வருத்தப்பட்டதே இல்லையென்றாயே. அந்த ஒரு வாக்கியத்தின் பின்னே உன்னை வளர்க்க உன் தந்தை எவ்வளவு சிரத்தை எடுத்துக் கொண்டிருக்க வேண்டுமென்று தெரிகிறது. ஒரு அப்பாவாக தன் மகளிடம் இப்படி ஒரு பாராட்டு வாங்குவதென்பது ஒன்றும் சுலபமான விஷயமில்லை. ஒரு அப்பாவாக அவர் ஜெயித்து விட்டார்'' என்றார் உள்ளார்ந்த குரலில்.

''உண்மைதான் அங்கிள்! என் அப்பா ரொம்ப ரொம்ப கிரேட்! எல்லோர்க்கும் அவரவர் அப்பா உயர்வுதான் என்றாலும், என் அப்பா தனிதான் அங்கிள்'' எனப் பெருமையோடு கூறியவள், ''இப்படி ஓர் அப்பா கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்றாள் மென்மையான குரலில்.

''உன்னைப் போல் புத்திசாலித்தனமும் துறுதுறுப்புமாக ஒரு பெண் கிடைக்க உன் தந்தையும் கொடுத்து வைத்திருக்கத்தான் வேண்டும். எங்களுக்குமே பெண் குழந்தை இல்லையே என்று குறை இருந்தது. உதி வந்த பிறகுதான் அந்தக் குறையே தீர்ந்தது'' என்று கூறியவர் தொடர்ந்து, ''ஒன்றுக்கு இரண்டு தடியன்களைப் பெற்று வளர்த்தே காலம் ஓடிவிட்டது'' என வெகு சோகமாகக் கூற அவரது முயற்சி பலித்தாற்போல சிரித்தாள் ஷண்மதி.



''போதாததற்கு இப்ப ஒரு குட்டி வாண்டு பயல் வேற!'' என வினேஷ் கன்னத்தைக் கிள்ளி சிரித்தான் ஸ்ரீதர்.

''நா குத்தி வாண்டு பய இல்ல'' என்றான் வினேஷ் மழலையில்.

சிரித்தபடி, ''குட்டி வாண்டு பயல் இல்லாமல் நீ வேறு என்னடா?'' என்று தன் மடியிலிருந்த அண்ணன் மகனை விசாரித்தான் ஸ்ரீதர்.

''பெய்ய்ய்ய வாண்டு பய'' என அவன் வெகு பெருமையாய் கூறி ஸ்ரீதரின் கழுத்தைக் கட்டிக் கொள்ள எல்லோர்க்கும் சிரிப்பு மூண்டது.

சிரிப்பினூடே, ''ஹவ் ஸ்வீட்!'' என்றாள் ஷண்மதி ஆசையாக.

ஸ்ரீதர் மடியிலிருந்து இறங்கி ஓடி வந்து ஷண்மதியின் காலை கட்டிக் கொண்டு, ''ஷம்மி எனக்கு?'' என வினேஷ் கேட்கவும் மற்றவர் நமட்டுச் சிரிப்புச் சிரிக்க,

''என்ன கண்ணா?'' எனப் புரியாமல் கேட்டாள் ஷண்மதி.

''ஹை ச்சுவீட்டுன்னு சொன்னியே ஷம்மி'' என பொடியன் வெகு விபரமாக நினைவு படுத்தவும் விஷயம் புரிந்த ஷண்மதி அவனை ஆசையோடு கைகளில் தூக்கிக் கொண்டாள்.

''ம்கூம் பெயர் சொல்லக் கூடாது கண்ணா. வாங்க, போங்களென்று மரியாதையாகத்தான் பேச வேண்டும்'' என உதயா இதமாய் திருத்த ஷண்மதி தடுத்தாள்.

''தடுக்க வேண்டாம். இவன் இப்படி அழைப்பதே எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது'' என்றாள் ஷண்மதி புன்னகையோடு.

வீட்டில் சின்னம்மாயென்ற வேலையாட்கள் அழைப்பிற்கும் வெளியில் பிஸினெஸ் மேக்னெட் ஷண்முக

பிரகாஷ் டாட்டர் என்கின்ற மரியாதை அழைப்பிற்கும் பெருமளவு பழக்கப்பட்டவனுக்கு, இந்த இரண்டரை வயது குட்டி வாண்டு தன்னை உரிமையாய் பெயர் சொல்லி, ஒருமையில் அழைப்பது மிகவும் இதமாகவும் உற்சாகமாகவும் இருந்தது.

''ஷம்மி! ஹை ச்சுவீட்டுன்னு சொன்னியே, எங்கே காட்டு?'' என விணேஷ் மீண்டும் காரியத்தில் கண்ணாக நினைவுப்படுத்தவும்,

''அது ஹை ஸ்வீட் இல்லை கண்ணா. ஹவ் ஸ்வீட். அப்படியென்றால் எங்கள் விணேஷ் எவ்வளவு ஸ்வீட் பாய் என்று பாராட்டுவதாக அர்த்தம்'' என அவனுக்கு புரியும்படி விளக்கினாள் ஷண்மதி.

''நானா ச்சுவீட்டு?''

''ஆமாம்டா கண்ணா. நீதான் ஸ்வீட். ரொம்ப அழகான ஸ்வீட்'' என சிரித்தபடி அவன் கன்னத்தில் முத்தமிட்டாள் ஷண்மதி.

அவளது கழுத்தை தன் பிஞ்சு கைகளால் கட்டிக் கொண்டு, ''ஹை! அம்மா, அப்பா விணேஷ்தான் ச்சுவீட்டாம் பாட்டி! நான்தான் ச்சுவீட்டாம், தாத்தா, சித்துப்பா, நான் ரொம்ப ச்சுவீட்டு பாயாம்'' என குதூகலித்தான் விணேஷ்.

அவனை முகத்தில் சிரிப்பு வழிய பார்த்திருந்த ஷண்மதிக்கு உள்ளூர, 'இவனுக்கு இப்பொழுது தர தன்னிடம் சாக்லெட் கூட இல்லையேயென மிகவும் வருத்தமாக இருந்தது. இவனுக்கு பிடித்த ஸ்வீட்டை கேட்டு, கடைக்குப் போய் வாங்கிக் கொடுத்து விட்டுதான் வீட்டிற்குச் செல்ல வேண்டு'மென உள்ளூர ஓடிய யோசனையை உதயாவின் குரல் கலைத்தது.

''சரியான இனிப்பு பைத்தியம் ஷண்மதி. எவ்வளவு தின்றாலும் ஐயாவிற்கு திருப்தியே வராது. தப்பித் தவறி



யாராவது ஸ்வீட், சாக்லெட் என்றால் போதும். பெரியவருக்கு குஷி பிய்த்துக் கொண்டு வந்து விடும். உடனே அவர்களோடு ப்ரெண்டாகி விடுவார்'' என்ற உதயா தொடர்ந்து, ''ஆனால் ,வந்தவுடனே உன்னிடம் அவன் ஒட்டிக் கொண்டது ஆச்சர்யம்தான்'' என்றாள் சிரித்தவாறு.

ஆசையோடு குழந்தையின் கன்னத்தில் முத்தட்ட ஷண்மதி, 'அடடா! இப்பொழுது என்ன செய்வது? பெரியவரை ஏமாற்றி விட்டால் பிறகு ப்ரெண்ட்ஷிப்பை கட் செய்து விடுவாரே! என்ன செய்யலாம்' என்றபடி உள்ளூர யோசித்தாள்.

சந்திப்பு மிகவும் தற்செயலாக தோன்ற வேண்டுமென்ற அடிப்படையில் போட்ட திட்டமாதலால் விணேஷிற்கு ஏதும் வாங்காமல் வெறுங்கையோடு வந்ததும் அவள் தான். ஆனால் இப்பொழுதும் அவன் ஆசையாகக் கேட்டதும் உடனே அவனுக்கு ஏதாவது தர வேண்டுமென அவள் மனம் பரபரத்தது.

அப்பொழுது விணேஷ் அறியாமல் அவள் கையில் சாக்லெட் பாரை திணித்தான் ஸ்ரீதர். அதை சற்றும் எதிர்பார்க்காததால் ஷண்மதி வியப்பும் நன்றியுமாக அவனை நோக்கினாள்.

அவள் உள்ளம் புரிந்தாற்போன்ற அவனது அச்சிறு செய்கையில் அவள் உள்ளத்தில் சந்தோஷம் ஊற்றாய் பொங்கியது.

உதயாவும் தேவகியும் அவளைக் கவனிப்பது போல் தோன்றவே சட்டென தன்னை சுதாரித்துக் கொண்டு விணேஷிடம் சாக்லெட் பாரை நீட்டிய ஷண்மதியின் விழிகளில் சுவர் கடிகாரம் பட திகைத்துப் போனாள். மணி மதியம் ஒன்றாகப் போகிறதா? இவ்வளவு நேரம்

எப்படி ஓடியது? நம்ப முடியாமல் அனிச்சை செயலாய் கைக்கடிகாரத்தைப் பார்த்தவள், ''மைகாட்! இவ்வளவு நேரமாகி விட்டதே! நான் கிளம்ப வேண்டும் ஆன்ட்டி'' என்றபடி விளேஷை இறக்கிவிட்டு விட்டு கைப்பையை எடுக்கவும் தேவகி தடுத்தார்.

''லஞ்ச் ரெடியாகி விட்டது ஷண்மதி. இருந்து சாப்பிட்டு விட்டுதான் போக வேண்டும்'' என்றார் பிரியமுடன். அவருக்கு அவளை மிகவும் பிடித்து விட்டது.

மற்றவர்களும் சேர்ந்து மிகவும் வற்புறுத்தவும் ஒரேயடியாக மறுக்க முடியாமல் அதே நேரம் ஒத்துக் கொள்ளவும் முடியாமல் தயங்கினாள் ஷண்மதி.

புதியவள் தானேயென்று எண்ணாமல், நெடுநாள் பழகிய நபரைப் போல் தன்னை நடத்துவதைக் கண்ட அவள் உள்ளம் கனிந்தது. ஆனாலும் தந்தையின் நினைவில்,

''அப்பா! எனக்காக சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பார்'' என்றாள் அவள் மறுக்கும் தொனியில்.

அவ்வளவு நேரமும் அதிகம் பேசாமல் கைகட்டியபடி அமர்ந்திருந்த ஸ்ரீதர், ''சாப்பிட்டு விட்டு செல்லலாமே ஷண்மதி. அப்பாவிற்கு கால்செய்து சொல்லி விடேன்'' என்றான் தணிவாக.

ஸ்ரீதரா பேசுகிறான். இவ்வளவு தணிந்த குரலில்... அதுவும் தன்னிடம்... ஆச்சரியமாக இருந்தது அவளுக்கு.

அவளது விழிகளில் வியப்பைக் கண்டவன், அவளுக்கு மட்டும் கேட்கும்படி, ''விருந்தோம்புதல், தமிழர் பண்பாடு'' என்றான் அமர்த்தலாக.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு செல்லை எடுத்தாள் ஷண்மதி. விஷயத்தைக் கூறியதும், ஷண்முக பிரகாஷ், ''வெரிகுட் ப்ளான் சக்ஸஸாகி விட்டதென்று சொல். நீ இருந்து சாப்பிட்டு விட்டே வாடா. இங்கே



குணா, சதா, அபிராமி வந்திருக்கிறார்கள். சோ... எனக்கு பொழுது ஓடிவிடும். நீ லஞ்ச் முடித்து விட்டே வா'' என்றார் அவர் உற்சாகத்தோடு.

''சரி டாட்'' என சிரித்தபடி செல்லை ஆப் செய்து விட்டுத் திரும்பினாள்.

சாப்பிடச் செல்லும்பொழுது ஸ்ரீதரிடம் சரியான சமயத்தில் சாக்லெட் தந்து உதவியதற்கு நன்றி தெரிவித்தாள் அவள்.

''அப்பொழுது அவனிடம் தர என்னிடம் ஒன்றுமில்லையே என தடுமாறிக் கொண்டிருந்தேன். சமயத்தில் தந்தீர்களே! தேங்க் யூ சோ மச்!'' என்றாள் அவள் குரலில் உற்சாகத்தோடு.

அவளை ஒரு பார்வை பார்த்தவன், ''வினு ஏமாந்து விடக் கூடாதேயென்று அவனுக்காக நான் தந்ததற்கு நீ நன்றி சொல்ல வேண்டிய அவசியமேயில்லை'' என படு அமர்த்தலாகக் கூறிவிட்டு முன்னே செல்லவும் அவன் முதுகை முறைத்தாள் ஷண்மதி.

''சரியான கல்லுளி மங்கன்'' என முணுமுணுத்தவள் அவன் நின்று ''என்ன''வென்று கேட்கவும் ''ஒன்றுமில்லை'' என்றாள் எரிச்சலோடு.

அவளது எரிச்சலை சற்றும் கண்டு கொள்ளாமல், ''பிறகேன் நின்று விட்டாய். வா சாப்பிடப் போகலாம். டைனிங் ஹால் அந்தப் பக்கம்'' என அழைத்தவன் ''எனக்கு ஒரு டவுட்'' என்றான் சீரியஸான குரலில்.

''என்ன?'' என்று கேட்டாள் அவள் சந்தேகத்தோடு.

''என் வீட்டிற்குள் நுழைவதற்கு நீ போட்ட ப்ளான் உன் அப்பாவிற்கு தெரியுமா தெரியாதா?'' என சர்வ சாதாரணமாக அவன் விசாரிக்கவும் ஷண்மதிக்கு முகம் சிவந்தது.

அவள் நினைத்தது சரிதான். கண்டு பிடித்துதான் விட்டான். தன்னை சற்று சமாளித்துக் கொண்டு, ''என்னது? ப்ளானா?'' என எதும் தெரியாதது போல கேட்டபடி நிமிர்ந்து அவன் முகத்தை சந்தித்தவளுக்கு மீண்டும் முகம் சிவந்தது.

சற்று நேரம் அவள் திணறுவதை வேடிக்கை பார்த்தவன்,

''சரி வா போகலாம். அங்கே எல்லோரும் நமக்காகக் காத்திருக்கிறார்கள்'' என்றபடி நகர்ந்தான்.

சாப்பிட்டு விட்டுக் கிளம்பும் சமயம் சுவரில் பெரிதாக மாட்டியிருந்த பெயிண்டிங் கண்களை கவர அருகில் சென்று பார்த்தாள்.

கண்களை மட்டுமல்லாமல் கருத்தையும் கவர்ந்தது அவ்வருமையான ஓவியம்.

அழகிய நீலநிற வானம் பின்னணியாக அமைய, கீழே ஒரு பெரிய வாவி. அவ்வாவியைச் சுற்றிலும் அழகிய மலர் செடிகள். கூடவே ஓர் அடர்ந்த மரம். அம்மரத்தில் மந்தகாச புன்னகையோடு சாய்ந்திருந்தாள் ஓர் அரசகுமாரி. அவளது பூங்கரத்தில் ஒரு நீலோத்பல மலர். மறுகரத்தால் அதை வருடியபடி சாய்ந்திருந்தாள் அவ் வழகிய அரசகுமாரி. இதில் ஷண்மதியை கவர்ந்ததென்ன வென்றால், அந்த ஓவியத்தில் எல்லாமே இளநீல நிறம். வாவி நீர், வானம், மலர், அவ்வரச குமாரியின் உடை, அவ ளது அழகிய மேனியில் முத்தும், நீலமுமாக படர்ந் திருந்த அணிகள் என எல்லாமே மனதை இதமாய் வருடும் அழகிய இளநீல நிறம். ஆனால் வெவ்வேறு ரேஷ்யோ வில் கலக்கப்பட்ட நிறக்கலவை. பிரம்மித்தாள் ஷண்மதி.

பார்க்கப் பார்க்க மனதை பரவசமாய் வருடி இனிமை யான அமைதியை மனதில் தோற்றுவித்தது அவ்வழகிய ஓவியம்.



''வாவ்! அமேஸிங்'' என இதழ்கள் முணுமுணுக்க,

''அதிலும் எல்லாமே லைட் ப்ளு காம்பினேஷன் பட் டிப்ரெண்ட் ரேஷ்யோஸ்... பியூட்டிபுல்'' என்றாள் கனவில் பேசுவதுபோல்.

சற்று பொறுத்து அருகில் நின்றிருந்த தேவகியிடம் திரும்பி,

''ஆன்ட்டி! சூப்பர்ப் ஆன்ட்டி! சொல்ல வார்த்தை களே இல்லை. ரொம்பவும் அழகு!'' என்றாள் ரசனையில் இதயம் உருக.

மீண்டும் ஓவியத்தில் தீராத ஆவலும், தணியாத ரசனையுமாக விழிகளை பதித்து ''வொண்டர்புல்'' என்றவள் ''ஆன்ட்டி! இந்த லைட்ப்ளு என் அம்மாவிற்கு பிடித்த கலர்'' என்றாள் முறுவலோடு.

புன்னகைத்தார் தேவகி. ''ஸ்ரீதருக்கும் இந்த கலர்தான் பிடித்த கலர்'' எனவும் வியப்பும் மகிழ்ச்சியுமாக அவனைப் பார்த்தாள் ஷண்மதி.

தேவகி தொடர்ந்து, ''இந்த கலருக்கும் கலர் காம்பினே ஷனுக்காகவே ஆறரை லட்சம் கொடுத்து இவ் ஓவி யத்தை வாங்கி வந்தான். இதில் ஒரு மேஜிக் இருக்கிறது ஷண்மதி. சற்று நேரம் பார்த்துக் கொண்டிருந்தாலே மனம் இலேசாவதை நாங்களே உணர்ந்திருக்கிறோம்'' என சிரித்தார் தேவகி.

''உண்மைதான் ஆன்ட்டி'' என தானும் ஆமோதித் தவள் சட்டென பிறந்த குறும்புடன், ''நம்ப முடியவில் லையே'' என்றாள் சாதுவாக.

''எதை?'' என மற்றவர்கள் வினவவும்,

கண்களில் சிரிப்புடன் ஸ்ரீதரை நோக்கியவள், ''சார்க்கு இந்த கலர்தான் பிடிக்கும் என்பதைத்தான்! சார்க்கு

நல்லா அடிக்கிற சிகப்புதானே பிடிக்கும்'' என்றாள் குறும்பு கொப்பளித்த குரலில்.

''போச்சுடா!'' என ஸ்ரீதர் முணுமுணுத்தான்.

குழப்பத்துடன், ''கிடையாதே! பார்த்தாலே 'அபாய அறிவிப்பு போல என்னதிது!' என முகத்தை சுளிப்பானே'' என்றார் தேவகி.

உற்சாகத்தோடு, ''இப்பொழுது அவருக்கு பிடித்த கலரே அதானே ஆன்ட்டி'' என்றவள் ஸ்ரீதரின் திணறலை உள்ளூர ரசித்தபடி, ''ஜெயஸ்ரீ மேம் கட்டிக் கொண்டு வந்த டேஞ்சர் லைட்டை எப்படி பாராட்டினார் தெரியுமா?'' என்றாள் தேன்குரலில்.

''அது யாரது ஜெயஸ்ரீ?'' என கோரஸ் கிளம்பவும்,

''சார் கூட வேலை பார்க்கிறார்கள்'' என்று அறிவித்தாள் அவள்.

சட்டென பிறந்த குறுகுறுப்புடன், ''டேய் ஸ்ரீதர்! என்னடா விஷயம்?'' கிரிதர் தம்பியை விசாரித்தான்.

''அட நீ வேறு அண்ணா! அவள்தான் உளறுகிறாள் என்றால்...''

''நானா உளறுகிறேன்... பாராட்டினீர்களா இல்லையா? அதைச் சொல்லுங்கள். பிடிக்காத கலரை ஏன் பாராட்ட வேண்டும்?'' என அவனை வம்புக்கிழுத்தாள் ஷண்மதி.

''அதானே!'' என ஒத்து ஊதிய உதயாவிடம், ''என்னண்ணி நீங்கள்? நன்றாகயிருக்கிறதா என்று கேட்டால் மரியாதைக்கு ஆமாமென்று சொல்வதில்லையா? அவ்வளவுதான் விஷயம்'' என்றான் ஸ்ரீதர் ஷண்மதியை முறைத்தபடி.

சிரிப்பு பொங்க, ''நம்பாதீர்கள்'' என மீண்டும் கிளப்பி விட்டாள் ஷண்மதி வேண்டுமென்றே.

மீண்டும் ஆவலும் குறுகுறுப்புமாக திரும்பியவர்களிடம்,



''அவள் சொல்வதையெல்லாம் பெரிதாக எடுத்துக் கொண்டு... அப்படியெல்லாம் கிடையவே கிடையாது. அவர்களுக்கு அடுத்த மாதம் திருமணம்'' என தெளிவுபடுத்தவும்.

''ச்சே! சப்பென்று ஆகி விட்டதே'' என்றாள் உதயா.

ஷண்மதியோ, ''கவலையே படாதீர்கள். மறுபடியும் டிபார்ட்மெண்ட்டில் சார் யார் புடவையையாவது பாராட்டாமல் போய் விடுவாரா என்ன? அப்படி பாராட்டினால் உடனே உங்களிடம் ஓடி வந்து சொல்லி விடுகிறேன்'' என ரொம்ப அக்கறையாய் கூறவும், மற்றவர்களுக்குச் சிரிப்பு மூண்டது.

''சரியான வம்புக்காரியாய் இருப்பாய் போல'' என மீண்டும் சிரித்தார் வாசுதேவன். ''இப்பொழுது புரிகிறது. இவன் ஏன் உன்னிடம் ஸ்ட்ரிக்ட்டா இருக்கிறான் என்று! சரியான வாலுப்பெண்'' என்றார் தொடர்ந்து நகைத்தபடி.

ஷண்மதி, தன்னை சுட்டு விடுவது போல் முறைத்த ஸ்ரீதரை கண்கள் மின்ன பார்த்திருந்தாள். 'அன்று ஓவராக ஜெயஸ்ரீ மேமை பாராட்டியபொழுது எனக்கும் இப்படிதானே இருந்திருக்கும்' என்பதுபோல் அவனை விழிகளில் குறும்புடன் பார்க்கவும், தன்னையும் மீறி அவன் முகத்திலும் புன்னகை படர்ந்தது.

## 11



காலேஜ் கேண்டீன்.

''சரிடி! ஸ்ரீதர் சார் புராணத்தை விடு. அவரது வீட்டில் மற்றவர்கள் எப்படி?'' என ஆவலாக விசாரித்தாள் ப்ரியங்கா.

கையிலிருந்த ஃபோர்க்கை ப்ளேட்டில் போட்டு விட்டு உற்சாகமாக நிமிர்ந்தாள் ஷண்மதி.

''வெரி நைஸ். நானே எதிர்பார்க்கவில்லை என்னிடம் இவ்வளவு அன்பாக பழகுவார்களென்று. ரொம்பவும் கலகலப்பான பேமிலி. ஸ்ரீதரோட அம்மா என்னை சாப்பிட்டு விட்டுதான் போக வேண்டும் என்று கூறி விட்டார்கள். பிறகும் கூட, 'அடிக்கடி வீட்டிற்கு வர வேண்டு'மென்று சொல்லிதான் விடை கொடுத்தார்கள். எனக்கு அவர்கள் எல்லோரையுமே ரொம்பப் பிடித்து விட்டது'' என மூச்சு விடாமல் கூறினாள் ஷண்மதி.

''ஷண்மி, ப்ளான் பண்ணி வீட்டிற்குள் நுழைந்து விட்டாய். வெரிகுட். ப்ளான் சக்சஸ் ஆகி விட்டதே. எங்களுக்கு எப்பொழுது ட்ரீட் தரப் போகிறாய்?'' என விளையாட்டாய் ஷீத்தல் கேட்டாள்.

ஷண்மதி ரொம்பவும் குஷி மூடில் இருந்தாள். ஸ்ரீதரின் வீட்டில் அவளுக்குக் கிடைத்த வரவேற்பு உற்சாகத்தைத் தந்தது. எனவே, ''இந்த சன்டே எல்லோர்க்கும் சோழா வில் ட்ரீட் ஓகேவா?'' என்று வினவவும் ''ஓகே'' என கோரஸ் கிளம்பியது.

அவர்கள் டேபிளிற்குப் பின்னால் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு தன் குரூப்போடு நின்றிருந்த சுவாதி, ''என்ன ஷண்மி உன் சந்தோஷத்தை எங்களோடவும் ஷேர் செய்துக்கக் கூடாதா? எங்களுக்கு ட்ரீட் கிடையாதா?'' என கேட்கவும் மெல்ல புன்னகைத்தாள் ஷண்மதி.

''அதற்கென்ன? உங்களுக்கும் ட்ரீட் கொடுத்து விட்டால் ஆயிற்று. நீங்களும் கண்டிப்பாக வரவேண்டும்'' என அழைத்தாள் ஷண்மதி.

''நிஜமாகத்தான் அழைக்கிறாயா?'' என சுவாதி சந்தேகத்தோடு வினவ,



''யா! ஷ்யூர்!'' என்றாள் ஷண்மதி.

''ஓகே'' என்றபடி அந்த கும்பல் நகர்ந்ததும் ஷண்மதியை முறைத்தாள் சாம்பவி.

''ஏன் அவர்களை இன்வைட் செய்தாய்?'' என கண்டிக்கவும் புன் சிரிப்போடு, ''இதில் என்னடி இருக்கிறது? மூன்றரை வருடங்களாக பழகி விட்டோம். இன்னும் சில மாதங்கள்தானே, விடுடி'' என்றாள் சமாதானமாக.

ஷீத்தல் குறுக்கிட்டு, ''போடி! அவளைப் பற்றி உனக்குத் தெரியாது. அன்று என்னிடமே வந்து, 'ஸ்ரீதர் சாரென்றால் ஆள் ஹேண்ட்சமாக இருக்கிறாரென்று எல்லா கேர்ள்ஸ்க்குமே ஒரு க்ரேஸ்தான். ஏன் எங்களுக்குக் கூடத்தான் சாரைப் பிடிக்கும். அப்படியிருக்க இவள் மட்டும் என்ன தனி? ட்ரூ லவ்வர் மாதிரி சீன் போடுகிறாள். இவள் சீன் புரிந்துதான் ஸ்ரீதர் சார் இவளைச் சுத்தமாகக் கண்டு கொள்ளாமல் அவாய்ட் செய்கிறார்' என்று எங்களிடமே மட்டம் தட்டிப் பேசுகிறாள் ஷண்மி. அவளைப் போய் நீ ட்ரீட்டுக்கு இன்வைட் செய்கிறாயே'' என்றாள் எரிச்சலுடன்.

ஷண்மதியோ, ''சரி விடுடி! அவளுக்குத் தெரிந்தது அவ்வளவுதான்'' என்றாள் சர்வ சாதாரணமாக.

சமாதானமடையாமல், ''இதைப் போய் இவ்வளவு ஈஸியாக எடுத்துக் கொள்கிறாயே... உனக்குக் கோபமே வராதாடி'' என ஷீத்தல் அலுத்துக் கொள்ளவும்.

சாம்பவி, ''இவளுக்கு என்று கோபம் வந்திருக்கிறது. இன்று வருவதற்கு'' என்றவள் தொடர்ந்து, ''ஆனால் ஷண்மி, அன்று அவள் பேசியபொழுது எனக்கு வந்த ஆத்திரத்திற்கு...'' என பல்லைக் கடிக்கவும்,

''என்னடி ஏதாவது சண்டை போட்டு விட்டாயா?'' என கவலையுடன் விசாரித்தாள் ஷண்மதி.

''பின்னே என்னடி? அவள் அப்படிப் பேசியதும் எனக்கும் பவிக்கும் கோபம் வந்து விட்டது. பவி அவளை வாங்கு வாங்கென்று வாங்கி விட்டாள். 'ஷண்மியை பற்றி உனக்கென்னடி தெரியும். ஆள் ஹேண்ட்சமா இருந்தால் மயங்குபவள் அவளில்லை. அதை முதலில் புரிந்து கொள். அவள் ஸ்டேட்டஸ்க்கு அவள் பழகுகின்ற சொசைட்டியில் எவ்வளவு ஹேண்ட்சம் கைஸ் அவளது ப்ரெண்ட்ஷிப் கிடைக்காதா? ஜஸ்ட் ஒரு டின்னர் அவள்கூட அமர்ந்து சாப்பிடமாட்டோமாவென்று ஆவல் கொண்டு அவள் பின்னால் அலைவார்கள் தெரியுமா? அவளைப் பற்றி உனக்கென்ன தெரியுமென்று பேச வருகிறாய். ஸ்ரீதர் சார் ஒதுங்குகிறாரென்றால், டிபார்ட் மெண்ட் பெயர், அவளோட பெயர் கெட்டுவிடக் கூடா தென்றுதான் புரிந்து கொள்'' என்று சுவாதியை விளாசித் தள்ளி விட்டாள்'' என்றாள் ஷீத்தல் திருப்தியோடு.

''அவளுக்கெல்லாம் எக்ஸ்ப்ளைன் பண்ணி நம் டைமை, எனர்ஜியை ஏன்டி வேஸ்ட் செய்ய வேண்டும்'' என்றாள் ஷண்மதி.

ஆனால் ஞாயிற்றுக்கிழமை பார்ட்டியில் அவளுக்கே சுவாதியின் செயலில் சற்று எரிச்சல் வந்தது உண்மைதான். சொல்லப் போனால் அன்றைய பார்ட்டி ரொம்ப ஜாலி யாகத்தான் இருந்தது. எல்லோரும் சேர்ந்து அரட்டை யடித்து சிரித்தபடி ரொம்பவும் என்ஜாய் செய்தனர்.

ஆனால் அவர்கள் கிளம்பும் நேரம்தானா ஸ்ரீதர் தன் நண்பன் ஒருவனுடன் வரவேண்டும்? அவனை முதலில் பார்த்தவள் நீபாதான்.

''ஏய் அங்கே பார்! ஸ்ரீதர் சார்'' என சுவாதி காதில் முணுமுணுக்கவும் அவளும் கவனித்தாள்.



அவனுடன் அமர்ந்திருந்த நண்பன் தங்கள் கூட்டத் தைப் பார்ப்பதையும், பிறகு குறிப்பாக ஷண்மதியை ரசனையுடன் பார்த்து ஸ்ரீதரிடம் ஏதோ கிசுகிசுப்பதையும் கண்ட சுவாதிக்கு எரிச்சல் பெருகியது.

அப்பொழுதுதான் அவர்களைக் கவனித்த ஸ்ரீதர்,

''ஏய்! ஜொள்ளு விடாதே. ஷி இஸ் மை ஸ்டூடண்ட்'' என தன் நண்பனை அடக்குவது அவனது தெளிவான உதட்டசைவில் சுவாதிக்கு நன்கு புரிந்தது.

சுவாதியின் பார்வையைத் தொடர்ந்த ப்ரியங்கா ஸ்ரீதரைக் கண்டதும் ஷண்மதியை இடித்து, ''அங்கே பாருடி யாரென்று?'' எனச் சிரிக்கவும், அப்பொழுதுதான் அவனை கவனித்த ஷண்மதிக்கு முகம் பளிச்சென மலர்ந்தது.

பில்லுக்கான பணத்தையும், டிப்ஸையும் வைத்து விட்டு எழுந்த ஷண்மதியிடம், ''என்னடி ஒரு ஹலோ சொல்லி விட்டுப் போகலாமா?'' என சாம்பவி கிசுகிசுத் தாள்.

சுவாதி, நீபா, மோனல் மூவருமே, ''வாங்கடி! சாரிடம் இரண்டு வார்த்தை பேசிவிட்டுப் போகலாம்'' என அவனை நோக்கிச் செல்லவே இவர்களும் தொடர்ந்தனர்.

''ஹலோ சார்!'' என மோனல் சிரிக்க பதிலுக்கு முறு வலித்தான் அவனும்.

''எல்லோரும் ஒரே குருப்பாக வந்திருக்கிறீர்கள்'' என புன்னகையுடன் வினவவும்.

''எஸ் சார்! ஷண்மதியோட ட்ரீட்'' என சிரித்தான் நீபா.

சற்றே திடுக்கிட்டு அவள்புறம் திரும்பினாள் ஷண்மதி.

சுவாதியும் தொடர்ந்து, ''உங்கள் வீட்டிற்கு வந்தாளாமே. லஞ்ச் சாப்பிட்டு விட்டுத்தான் போக வேண்டுமென

ரொம்ப வற்புறுத்தலாமே, இன்னொரு தரம் வரவேண்டு மென்று உங்கள் பேரண்ட் வற்புறுத்தினார்களாம், அதைக் கொண்டாடத்தானே இந்த ட்ரீட்டே'' என வேண்டு மென்றே அவள் போட்டு உடைக்கவும் ஷண்மதியைப் பார்த்த ஸ்ரீதரின் விழிகளில் உஷ்ணம் ஏறியது.

சுடச்சுட கோபத்தோடு அவன் தன்னை முறைப்பதை கண்ட ஷண்மதிக்கு, உள்ளூர சுவாதியின் மீது, 'இவ்வளவு விளக்கமாக இதை இவனிடம் ஒப்பிக்க வேண்டுமா?' என எரிச்சல் வந்தது.

நீபா வேறு, ''ஏன் எங்களையெல்லாம் அழைக்க மாட்டீர்களா சார்? ஷண்மதி மட்டும்தான் ஸ்பெஷலா?'' என்று கேட்கவும் ஷீத்தல் பல்லைக் கடித்தாள்.

''நான் அழைக்கவேயில்லை நீபா. அவள் வந்ததும் தற்செயலாக நடந்ததுதான்'' என்று கூறினாலும் அவன் முகத்தில் மின்னிய கோபத்தைக் கண்டு ஷண்மதிக்கு மனம் வாடியதும். அது முகத்திலும் எதிரொலிக்க ப்ரியங்கா விற்கு மனம் பொறுக்கவில்லை.

''ஏய் சுவாதி, நீபா, சார் அழைத்ததாக ஷண்மி உங்களிடம் எப்பொழுது சொன்னாள்'' என கேட்டவள் ஸ்ரீதரிடம் திரும்பி ''சார்! தற்செயலாக உங்கள் வீட்டிற்கு வர நேர்ந்ததை ஷண்மி சாதாரணமாக கூறிக் கொண் டாள். அவ்வளவுதான். சுவாதி சும்மா உங்களை சீண்டு கிறாள். ஓகே சார்! நாங்கள் கிளம்புகிறோம். என்ஜாய் யுவர் டின்னர் சார்'' என்றபடி எல்லோரையும் இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள்.

வெளியே வந்ததுமே, ''ஏன்டி அவரிடம் இதையெல் லாம் சொல்கிறாய்?'' என பாய்ந்த சாம்பவியைக் கண்டு அலட்சியமாக கையை விரித்தாள் சுவாதி.



''ஹேய் டோண்ட் டேக் சீரியஸ். நான் ப்ரீ சொன்னது போல சும்மாதான் சொன்னேன். ஜஸ்ட் ஃபர் பன் யா'' என ஸ்டைலாக தோளைக் குலுக்கிவிட்டு, ''ஓகே! நாங் கள் கிளம்புகிறோம். தேங்க் ஃபர் யுவர் ட்ரீட் ஷண்மி! பை ப்ரெண்ட்ஸ்! சீ யு இன் காலேஜ்'' என்றபடி நீபா, மோனலோடு தன் காரில் பறந்தாள்.

அவள் போவதை வெறுப்புடன் பார்த்துவிட்டு, ''பாம் புக்கு பால் வார்த்தால் இப்படிதான்'' என்றாள் ஷீத்தல்.

''இவளை கூப்பிட்டதே தப்பு.''

''ரொம்ப ஓவராகப் போகிறாள் ஷண்மி. செய்வதை யெல்லாம் செய்து விட்டு எவ்வளவு கூலாகக் கிளம்பி விட்டாள் பார்த்தாயா?'' என ப்ரியங்கா பொரியவும் ஷண்மதிக்கு சற்று முன் இருந்த வாட்டம் மாறி தனக்காக தன் ப்ரெண்ட்ஸ் சுவாதி மீது கோபப்படுவது இதமாக இருந்தது.

எனவே முகத்தில் புன்னகையோடு அவர்களை நோக் கவும், ''சிரிக்காதேடி'' என எரிந்து விழுந்தாள் சாம்பவி.

மேலும் தொடர்ந்து, ''சார் உன்னை முறைத்ததைக் கண்டு அவள் முகத்தில் என்னவொரு திருப்தி புன்னகை தெரியுமா? சரியான சாடிஸ்ட்'' என்றாள் எரிச்சலுடன்.

''எனக்கு வரும் கோபத்திற்கு அவளை...'' என ஷீத்தல் பொருமவும்,

விழி விரித்து அவளைக் குறும்புடன் நோக்கிய ஷண்மதி, ''என்ன செய்யலாம்?... ம்... ஆள் வைத்து அடித்து விடலாமா?'' என சீரியஸாகக் கேட்கவும்,

''வெரி குட் ஐடியா'' என ஆவலோடு ஆமோதித்து விட்டு, ''நாமும் நம் எச்.ஓ.டி.யிடம், ''சார்! ஷி இஸ் இன் கிரிட்டிகல் கண்டிஷன்' என கண்ணைக் கசக்கி ஓ.டி.

வாங்கிக் கொண்டு கூலாக ஹாஸ்பிட்டலுக்கு ப்ரூட் ஸோடு போய் அவளை துக்கம் விசாரித்து விட்டு வரலாம்'' என குறும்போடு கற்பனையில் கோட்டை கட்டினாள் ஷீத்தல்.

''ச்சேச்சே... ப்ரூட்ஸ் எல்லாம் அந்த மூஞ்சிக்கு ஓவர். அதனால் வெறுங்கையோடு போவோம். கேட்டால் அவளிடம் 'ஸாரிடி! ப்ரூட்ஸ் வாங்கலாமென்று தான் நினைத்தோம். ப்ராக்சர் ஆகி கட்டுக்குள் இருக்கின்ற கையை வைத்துக் கொண்டு எப்படி கட் பண்ணி சாப் பிடுவாய் என்ற கவலையினால்தான் வாங்கவில்லை' யென சமாளித்து விடலாம்'' என்று சாம்பவி கூறவும் எல்லோர்க்கும் சிரிப்பு வந்து விட்டது.

சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''போடி மண்டு. அவளது அம்மா ப்ரூட்ஸை நறுக்கி ஊட்டிவிட மாட்டார்களாக் கும்'' என ஷீத்தல் கிண்டலாகக் கேட்கவும்,

சாம்பவி வேண்டுமென்றே, ''ஓ... அப்படியொன்று இருக்கிறதோ... வேண்டுமானால் அவர்களையும் ஆள் வைத்து...'' என இழுக்கவும் மீண்டும் குபீரெனச் சிரிப்புக் கிளம்பியது.

ப்ரியங்கா, ''ஒரு முக்கியமான விஷயம்டி. அவளைப் பார்க்க ஹாஸ்பிட்டலுக்குப் போகும் பொழுது நாமெல் லாம் புன்னகை நிறைந்த முகத்தோடு அவளை விசாரிக்க வேண்டும்'' எனவும் ''ஆமாம்'' என மற்ற இருவரும் உற்சாகத்தோடு ஆமோதித்தனர்.

''உங்களுக்கெல்லாம் இருக்கும் நல்லெண்ணத் திற்கு முதலில் உங்களைத்தான் ஆள் வைத்து அடிக்க வேண்டும்'' என்று சிரிப்பு அடங்காமலே கூறினாள் ஷண்மதி.



# 12



படித்துக் கொண்டிருந்த டெக்ஸ்ட் புக்கை மூடி வைத்து விட்டு கண்களை இலேசாக தேய்த்து விட்டுக் கொண்டாள் ஷண்மதி.

மணியைப் பார்த்தாள். காலை ஆறரை. தொடர்ந்து இரண்டரை மணி நேரங்களாக படித்ததினாலோ என் னவோ மீண்டும் சூடாக ஒரு காபி குடித்தால் தேவலாம் போல இருந்தது.

இன்டர்காமை எடுத்தவள் கிச்சனில் இருந்த முத்துச் செல்வியிடம், ''முத்து! சூடாக ஒரு கப் காபி கொடுத் தனுப்பு'' என்று விட்டு ஜன்னல் கர்ட்டனை ஒதுக்கி கீழே பார்த்தாள்.

அங்கிருந்து பார்த்தால் வீட்டின் பின்புறமிருந்த பெரிய அழகிய பூந்தோட்டமும் நடுவில் இருந்த பெரிய ஸ்விம் மிங் ஃபூலுமாக வ்யூ அழகாகத் தெரியும்.

பார்த்துப் பார்த்து அவளால் உருவாக்கப்பட்ட தோட்டம். அதிலும் வலப்புறமிருந்த ரோஜா தோட்டம் அவளுக்கு மிகவும் பிரியமானது. அங்கு இல்லாத ரோஜா வகையே இல்லையெனலாம் போல் பல்வேறு நிறங்களில் மலர்ந்து காற்றில் ஆடிய அப்பூக்களைக் கண்டு மனம் ப்ரெஷ் ஷாகி புத்துணர்ச்சி பெருகுவதை உணர்ந்தாள்.

நடுவில் இருந்த ஸ்விம்மிங்ஃபூலை கண்டவளுக்கு ஸ்விம் பண்ணி எவ்வளவு நாளாகி விட்டது. ஸ்டடி லீவ் விட்ட நாளாக ஸ்விம் பண்ணவேயில்லை என்ற

எண்ணமே மேலோங்கியது. அதுவும் அவளது ப்ரெண்ட்ஸ் வந்தார்களென்றால் பாதி நேரம் நீச்சல் குளத்தில்தான் கழியுமென எண்ணும் பொழுதே அவளது ரோஜா இதழ்களில் புன்னகை பூத்தது.

இப்பெரிய தோட்டத்தையும் தாண்டி பின்னாலிருக்கும் அந்த சின்ன கேட்டைத் திறந்து சென்றால் மா, பலா, கொய்யா, வேம்பு என மரங்களடர்ந்த பகுதி.

சீரான இடைவெளியில் உயர்ந்து அடர்ந்து வளர்ந்திருந்த எண்ணற்ற மரங்கள். உள்ளே நுழைந்ததுமே சட்டென ஒரு குளிர்ச்சியையும், இதத்தையும் வனத்திற்குள் நுழைந்து விட்ட பிரமையையும் ஏற்படுத்தும் இடம். நடுவில் ஒரு க்யூட் லிட்டில் ஹவுஸ் கூட உண்டு. அதன் வாசலை பவழமல்லி மரத்திலிருந்து உதிர்ந்த பவழமல்லி மலர்கள் அங்கரித்திருக்கும்.

தனக்கு மிகவும் பிடித்த புத்தகங்களோடு அங்கு சென்று விட்டால் ஷண்மதிக்கு உலகம் மறந்து விடும். சில சமயம் பவழமல்லி மரத்தடியில் தன் ஐபாட் சகிதம் கண் மூடி அமர்ந்து விடுவாள். நேரம் போவதறியாமல் மனம் அச்சூழலிலும் இசையிலும் லயித்து விடும்.

கமகமத்த டிகாக்ஷன் காபியின் நறுமணம் அவள் எண்ணங்களை மீண்டும் நிகழ்காலத்திற்கு இழுத்து வந்தது.

திரும்பிப் பார்த்தவள், ''டாட்! இதென்ன நீங்கள் காபி எடுத்து வருகிறீர்கள்'' என வினவினாள்.

''சோ வாட்?'' என சிரித்தபடி அவளிடம் ஒரு கப்பை தந்து விட்டு தானும் ஒரு கப்புடன் அமர்ந்தார் ஷண்முக பிரகாஷ்.

''என்னம்மா? கண்ணிலேயே படுவதில்லை. எக்ஸாம்ஸ்க்கான ப்ரிபேரேஷன்ஸ் ரொம்ப மும்முரமாக போய்க் கொண்டிருக்கிறது போல.''



''எஸ் டாட். நீங்கள் வேண்டுமானால் பாருங்களேன், என் சீனியர்ஸ் எல்லாம் எடுக்காத அளவிற்கு ஹை பர்செண்ட்டேஜ் எடுத்துக் காட்டுகிறேன்.''

''அதிலென்னடா சந்தேகம். நீதான் சொன்னதைச் செய்து முடிப்பவளாயிற்றே'' எனச் சிரித்தார் ஷண்முக பிரகாஷ்.

மேலும் ஐந்து நிமிடங்கள் பேசிக் கொண்டிருந்து விட்டு அவர் செல்லவும், தந்தையுடன் பேசிச் சிரித்த சில நிமிடங்களிலேயே மனம் முழுவதும் உற்சாகம் நிரம்ப, மீண்டும் தன் பாடப் புத்தகத்தினுள் மூழ்கினாள் ஷண்மதி.

அதே உற்சாகத்துடனே இரவு பகல் பார்க்காமல் படித்துத் தேர்வுகளையும் எழுதி முடித்து மதியம் வீட்டிற்கு வந்தவள் லஞ்ச் முடித்ததும், 'அப்பாடா'வென்று படுக்கையில் விழுந்து விட்டாள்.

இரவு தந்தை எழுப்பவும் அரை குறையாக விழித்தவள், தூக்கக் கலக்கத்தோடவே அவர் ஸ்பூனில் தந்த உணவை விழுங்கிவிட்டு, வாயைக் கொப்பளித்து விட்டு மீண்டும் அயர்ந்து உறங்கி விட்டாள்.

மறுநாள் காலை, ''எழுந்திருடி. மணி என்னவாகிறது பார்'' என தன்னை உலுக்கி எழுப்பிய சாம்பவியின் குரலில் தான் தூக்கம் கலைந்தாள்.

''ம்ம்...'' எனப் புரண்டு படுத்தவளை விடாமல் சாம்பவி எழுப்பவும்தான் இமை பிரித்துப் பார்த்தாள்.

கூடவே ஷீத்தலும், ப்ரியங்காவும் வந்திருப்பதைக் கண்டு, ''என்னதிது இவ்வளவு இயர்லி மார்னிங் விசிட்?'' என வியப்புடன் கேட்டபடி தூக்க கலக்கமும் புன்னகையுமாக எழுந்து அமர்ந்தாள்.

''இயர்லி மார்னிங்கா? மணி ஒன்பதுடி'' எனவும்,

''ஓ! எக்ஸாம் டென்ஷன் தீர நன்றாகத் தூங்கி விட்டேன் போல'' எனச் சோம்பல் முறித்தபடி கீழே இறங்கி செப்பலை போட்டவள்,

''இதெல்லாம் ரொம்ப அநியாயம்டி ஷண்மி! எங்களுக்கு டென்ஷனை ஏத்திவிட்டு நீ டென்ஷன் தீர ஹாயாக தூங்குகிறாயே!'' என ப்ரியங்கா குறை படவும் ஆச்சரியத்துடன் நின்று அவளைத் திரும்பிப் பார்த்தாள்.

''அட! உங்களுக்கென்ன என்னால் டென்ஷன்?''

''பேசாதேடி! நேற்று மதியம் நாங்கள் விசாரிக்க விசாரிக்க மர்மச் சிரிப்போடு கிளம்பி வந்து விட்டாய். எங்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. அதான் வந்து விட்டோம்'' என்றாள் ஷீத்தல்.

சட்டென அடக்க மாட்டாமல் சிரித்து விட்டாள் ஷண்மதி.

''அடப்பாவிகளா! அதற்காகவா காலையிலேயே விஜயம்?'' எனக் கேட்டு மீண்டும் சிரித்தவளை மூவரும் முறைக்கவும், வெகு சிரமப்பட்டு சிரிப்பை அடக்கிக் கொண்டாள்.

அவள் பெட்லேயே ஹாயாக அமர்ந்த ப்ரியங்கா ''ஓவரா சிரித்தால் உதை படுவாய். போய் முதலில் ப்ரெஷ் பண்ணிக் கொண்டு வா'' என மிரட்டவும் சிரித்தபடி பாத்ரூம் பக்கம் திரும்பிய ஷண்மதி சட்டென நினைவு வந்தவளாக, ''உங்களுக்கு குடிப்பதற்கு ஏதாவது...'' எனும் பொழுதே ப்ரியங்கா குறுக்கிட்டு,

''அதெல்லாம் பக்காவாக கிச்சனில் முத்துவிடம் ஆர்டர் கொடுத்து விட்டுதான் மேலே வந்தோம். உனக்கும் சேர்த்தே சொல்லியாயிற்று. சோ... சீக்கிரம் வாருங்கள் மேடம்'' என்று கண்டிப்பான குரலில் கூறவும் சிரித்தபடியே நகர்ந்தாள் ஷண்மதி.



டவலால் முகத்தை ஒற்றியபடியே திரும்பி வந்தவளைக் கண்டு மூவரும் கேலியாகச் சிரிக்கவும் ஒன்றும் புரியாமல், ''என்னடி?'' என்று கேட்டாள்.

பதிலே சொல்லாமல் மீண்டும் பக்கவாட்டில் திரும்பி சுவரைப் பார்த்து அவர்கள் சிரிக்கவும் விஷயம் புரிந்து ஷண்மதியின் முகம் இலேசாகச் சிவந்தது.

அதைக் கண்டு அவர்கள் மேலும் சிரிக்கவும், முத்துச் செல்வி கதவைத் தட்டவும் சரியாக இருந்தது.

''முத்து! உள்ளே வா! நாங்கள் இங்கே... உள்ளே... பெட்ரூமில் இருக்கிறோம்'' என்று ஷண்மதி குரல் தரவும் முன்னறையைத் தாண்டி கையில் ட்ரேயுடன் உள்ளே வந்தாள் முத்துச் செல்வி.

ஆளுக்கொரு கப்பை எடுத்துக் கொள்ளவும், சாம்பவி குறும்புடன் முத்துச் செல்வியிடம், ''என்ன முத்து உன் சின்னம்மா இவ்...வளவு பெரிதாக ஒரு பையன் போட்டோவை சுவரில் மாட்டி வைத்திருக்கிறாள். நீ ஒன்றும் கேட்கவில்லையா?'' என அவள் வாயைக் கிண்டினாள்.

புன்சிரிப்போடு அமர்ந்திருந்த ஷண்மதியைப் பார்த்த முத்துச் செல்வி, ''கேட்டு என்ன பிரயோஜனம்? பதில் வந்தால் தானே! இதே சிரிப்புதான்'' என உச்சுக் கொட்டினாள்.

''உடனே நீயும் அத்தோடு விட்டுவிட்டாயாக்கும். ம்கூம்... முத்து நம்ப முடியவில்லையே'' என அவளை வம்புக்கிழுத்தாள் ஷீத்தல்.

''அட! இவ்வளவு பெரியதா மாட்டியிருக்கிற படத்தை பார்த்தே விஷயம் புரிந்து போச்சே! அப்புறம் எதற்குக் கேட்டுகிட்டு'' என்றவள் தொடர்ந்து குரலைத் தணிந்து, ''உங்களுக்குத் தெரியுமா? சின்னம்மா ரூம் க்ளீன் பண்ணுகின்ற யாரையும் படத்தை தொடக்கூட விடாமல்

தினமும் தானேதான் இந்த படத்தைத் துடைக்கிறார்கள்'' என்று கூறி விஷமமாகச் சிரிக்கவும் ஷண்மதிக்கு முகம் ரோஜாவாகச் சிவந்தது.

''நீ அங்கிளிடம் போட்டுக் கொடுக்க வேண்டியது தானே'' என கனகாரியமாக பிரியங்கா யோசனை கூற வும் முத்துச் செல்வியும் கண்களை உருட்டினாள்.

''அதெல்லாம் நைஸாக ஐயா காதிலே போட்டோம். அவர் கொஞ்சமும் அலட்டிக்காமல், 'அந்த போட்டோவை பெரிது படுத்த சொல்லி என்னிடம் தானே சொன்னாள். நான்தான் பெரிது படுத்தி கொடுத்தேன்' என்கிறார். நல்ல அப்பா! நல்ல பொண்ணு!'' என்று கூறவும் அங்கே மீண்டும் சிரிப்பலை எழுந்தது.

''உனக்குக் கிடைத்திருக்கின்ற அப்பாவை நினைத் தால் பொறாமையாக இருக்கிறது'' என்று கூறி ஆனால் பொறாமையே இல்லாமல் சிரித்த தன் தோழியரை கனி வுடன் பார்த்திருந்தாள் ஷண்மதி.

நால்வருமே பள்ளியிலிருந்து தோழிகள் என்பதாலும் பல ஆண்டுகளாக போகவர பழக்கம் என்பதாலும் முத்து அவர்களிடம் சகஜமாக பழகுவாள். அதுவும் தன் சின்னம் மாவிற்கு தோழியர் பலரிருந்தாலும் அந்த வீட்டினுள் நுழைந்து யாரிடமும் அனுமதி கேட்காமல் சின்னம்மாவைப் பார்க்கும் அதிகாரம் அவர்கள் மூவருக்கும் மட்டுமே யுண்டு என்பதாலும், தங்களது சின்னம்மாவின் அன்பிற்கு மிகவும் பாத்திரமானவர்கள் என்பதாலும் முத்துவிற்கு மட்டுமல்லாமல் அங்கு பணிபுரியும் மற்றவர்களுக்கும் அம்மூவரிடமும் பிரியம் உண்டு.

காலி கப்புகளோடு கிளம்பிய முத்துச் செல்வி, ''சின்னய் யாவை நேரிலே காட்டுங்கம்மா என்றால் காதிலேயே



போட்டுக் கொள்வதில்லை. எங்களெல்லோருக்கும் அவரை நேரில் பார்க்க ஆசையாக இருக்கிறது'' என்று கூறவும்,

''கவலைப்படாதே முத்து! சீக்கிரமே கண்ணில் காட்டி விடுவாளென்றுதான் நினைக்கிறேன்'' என்றாள் ஷீத்தல்.

அவளைக் கிண்டலுடன் நோக்கி, ''போதும்டி ஷீத்தல்! முக்காலமும் உணர்ந்த முனிவர் போல அருள்வாக்கு வழங்காதே!'' என்றாள் ஷண்மதி.

ப்ரியங்கா சற்றும் அலட்டிக் கொள்ளாமல், ''அதெல் லாம் சீக்கிரமே உங்கள் சின்னய்யா நேரில் தரிசனம் தருவார். எங்களுக்கு நம்பிக்கை இருக்கிறது. அதுவும் நேற்று மதியத்திலிருந்து எங்கள் நம்பிக்கை அதிகமாகி விட்டது'' என்று நிச்சயமாக கூறியவள் முத்துச்செல்வி அகன்றதும்,

''ஷண்மி! இப்ப சொல்லுடி'' என்றாள் ஆர்வமாக.

வேண்டுமென்றே, ''எதை சொல்லச் சொல்கிறாய்?'' என புரியாததுபோல் புருவத்தைச் சுருக்கினாள் ஷண்மதி.

''தெரியாதது போல் கேட்காதே... உதை வாங்குவாய். நேற்று மதியம் எக்ஸாம் முடிந்ததும் க்வஸ்டின் பேப்பர் பற்றி பேசிக் கொண்டிருக்கும்பொழுது ஸ்ரீதர் சாரைப் பார்த்ததும் வேகமாய் ஓடிப்போய் பேசினாயே... அவரும் புன்னகையோடு ஏதோ சொன்னாரே! அதைத்தான் கேட் கிறோம். நேற்றிலிருந்து சஸ்பென்ஸ் தாங்க முடியவில்லை. ஈவ்னிங் போன் செய்தால் நீ ரெஸ்ட் எடுக்கிறாயென்றே பதில். இனியும் சஸ்பென்ஸ் தாங்க முடியாது. உண் மையை சொல்'' என்றாள் சாம்பவி பொறுமையை இழுத்துப் பிடித்த குரலில்.

நேற்றைய சம்பவத்தை நினைத்தபொழுது ஷண்மதி யின் கண்களில் குறும்பு மின்னியது.

காய்ச்சலினால் இரண்டு நாட்கள் லீவ் எடுத்திருந்த ஸ்ரீதர் நேற்றுதான் காலேஜிற்கு வந்திருந்தான். தற்செயலாக அந்த விஷயத்தை காலையில் கேள்விப்பட்ட ஷண்மதிக்கு மனம் உறுத்திக் கொண்டேயிருந்தது. மதியம் அவனைப் பார்த்ததுமே அவனிடம் விரைந்தவள் கவலையுடன் அவனை நலம் விசாரித்தாள். அவனும், 'யா! நவ் ஐ யம் பர்பெக்ட்லி ஆல்ரைட்' என முறுவலித்துவிட்டு சென்றான். ஷண்மதியிடம் இதுவரை அவன் சிரித்துப் பேசிப் பார்த்திராத தோழிகள் மூவரும் ஆச்சரியத்துடன் வாயைப் பிளக்கவும் அதைக் கண்ட ஷண்மதிக்குச் சிரிப்பு வந்து விட்டது.

''என்ன மேட்டர்டி? உன்னிடம் ஸ்மைலோடு பேசி விட்டுச் செல்கிறாரே. என்ன சொன்னார்டி?'' என சுவாரசியமும், ஆர்வமுமாகக் கேட்கவும் ஷண்மதிக்கு வழக்கமான குறும்புத்தனம் வாலை நீட்ட, ''அதெல்லாம் பர்சனல் மேட்டர். உங்களிடம் சொல்ல மாட்டேனே'' எனவும் மூவருக்கும் சுவாரசியம் அதிகமாகி விட்டது.

எவ்வளவோ கேட்டும், தோழியரின் ஆவலை உள்ளூர ரசித்தபடி, ''ஸாரிப்பா! சீக்ரெட் மேட்டர்'' என பிகு பண்ணியபடி வீட்டிற்குக் கிளம்பி வந்து விட்டாள்.

ஒரு சாதாரண ஸ்மைலிலேயே தனக்கும் அவனுக்கும் ரிலேஷன்ஷிப்பில் பெரிய முன்னேற்றம் ஏற்பட்டு விட்டதுபோல் அகமகிழும் தோழிகளைக் கண்டவளுக்கு மீண்டும் சிரிப்பு வந்து விட்டது.

அவளது சிரிப்பைக் கண்டு பொறுமையிழந்தாள் ப்ரியங்கா.

''சொல்லிவிட்டு சிரியேன்டி.''

''ம்கூம் ப்ரி! இவள் சொல்லப் போவதாகத் தெரியவில்லை. தவுசண்ட் ருப்பீஸ் பெட்!'' என்றாள் ஷீத்தல்.



சாம்பவி பதிலுக்கு, ''எல்லாம் சொல்வாள். டு தவுசண்ட் ருப்பீஸ் பெட்!'' என்றாள்.

தலையில் அடித்துக் கொண்டாள் ப்ரியங்கா.

''நீங்கள் சற்று சும்மா இருங்களேன்டி! ஏய் ஷண்மி... சொல்லுடி! என் செல்லம்தானே... ப்ளீஸ் சொல்லுடி'' என்று நயந்த குரலில் கேட்கவும் ஷண்மதிக்கு மேலும் சிரிப்பு பீறிட்டது.

விழிகளில் குறும்பு மின்ன, ''ரொம்பவும் கேட்கிறீர்கள். அதனால் சொல்கிறேன்'' என பீடிகையிட்டவள்,

'''சார்! உங்களுக்கு உடம்பு நன்றாகி விட்டதா' வென்று கேட்டேன். அதற்கு பதிலுக்கு 'நன்றாகி விட்டதாக' கூறி ஸ்மைல் செய்தார்'' என்று கூறி மூவரின் முகத்தைப் பார்த்தவளுக்கு மீண்டும் அடக்க மாட்டாமல் சிரிப்பு வந்துவிட வயிற்றை பிடித்துக் கொண்டு விழுந்து விழுந்து சிரித்தாள்.

''யூ... யூ... உன்னை'' என்றபடி ஆளுக்கொரு பில்லோவினாலேயே இரண்டு மொத்து மொத்தினர் மூவரும்.

பதிலுக்கு இன்னொரு பில்லோவை தனக்குக் கேடயமாக பயன்படுத்தியபடி, ''ஸாரிடி! போதும். விட்டுவிடுங்கள்'' என்று சிரித்தபடி பெட்டில் சரிந்தாள் ஷண்மதி.

''ச்சே!'' என பில்லோவை அவள் மீதே போட்டு விட்டு அவர்களும் பெட் மீது அமர்ந்தனர்.

''ரொம்பதான்டி கொழுப்பு உனக்கு. இதற்குதான் நேற்று பர்சனல் மேட்டர். சீக்ரெட் என்றெல்லாம் பில்டப் செய்தாயா?'' என சாம்பவி பொரியவும் மீண்டும் பில்லோவை தூக்கினாள் ப்ரியங்கா.

''ஏய் ஸ்டாப்! ஸ்டாப்! போதும்டி அடித்தது. சரண்டர், விட்டு விடுங்கள்'' என்ற ஷண்மதி மீண்டும் சிரித்தாள்.

அவனது சிரிப்பை கண்டு அவர்களுக்கும் புன்னகை அரும்பியது.

''ஆமாம், பண்ணுகின்ற வம்பெல்லாம் பண்ணி விட்டு இப்படிச் சிரித்தே சமாளித்து விடு'' என கடிந்து கொண்ட சாம்பவி மேலும் தொடர்ந்து, ''ஷண்மி! ஸ்ரீதர் சார் உன்னை ரொம்பவும் அவாய்ட் செய்கிறாரேயென்று ரொம்பவும் கவலையாக இருந்தது. நேற்று உன் பில்டப்பை பார்த்துக் கொஞ்சம் நம்பிக்கை வந்தது. இப்பொழுது அந்த நம்பிக்கையும் புஸ்சென்றாகி விட்டது'' என்றாள் அலுப்புடன்.

மனம் கனிய அவர்களை நோக்கிப் புன்னகைத்தாள் ஷண்மதி.

''டோண்ட் வொர்ரி மை டியர் ப்ரெண்ட்ஸ்! எனக்கு நம்பிக்கை இருக்கிறது. ஸ்ரீதர் நிச்சயம் மாறுவார்'' என்றாள் குரலில் உறுதியோடு.

## 13



ஷண்மதியின் பேச்சில், உண்மையான அந்த தோழிகளுக்கு முழுமையான சமாதானம் ஏற்படவில்லை. ஸ்ரீதர் பாராமுகமாக நடந்து கொண்ட முறையினால் அவர்களுக்கு ஷண்மதியை நினைத்து உள்ளூர கவலை உண்டாகவே செய்தது. அந்தளவிற்கு அவன் அவளை சட்டை செய்வதேயில்லை. ஷண்மதியும் தேவையில்லாமல் தேடிப்போய் பேசுவதுமில்லை.

அவர்களிடையே பேச்சு வார்த்தையே கிட்டத்தட்ட நின்று விட்ட சூழ்நிலை. அதனால்தான் நேற்று அவள்



போய் பேசியதும், பதிலுக்கு அவன் புன்னகைத்ததுமான அச்சிறு விஷயமே அவர்களுக்கு ஆச்சரியத்தையும் நம்பிக்கையையும் உண்டு பண்ணியது.

ஆனால் அவர்கள் நினைத்தது போல் எதுவுமில்லையென ஷண்மதியின் வாயிலாக அறிந்தபொழுது மீண்டும் அவர்களுக்கு கவலையேற்பட்டது.

ஆனால் ஷண்மதியின் தந்தை மகள் மீது உயிரையே வைத்திருப்பவர். தந்தையாக மட்டுமல்லாமல் தோழனுமாக பழகுபவர் மகளது நியாயமான விருப்பத்தை நிறைவேற்ற சற்றும் தயங்காதவர். எனவே அவர் தலையிட்டால் ஷண்மதியின் விருப்பம் கண்டிப்பாக நிறைவேறும் என்ற நம்பிக்கையில் அவர்களும் ஆறுதலுற்றனர். ஆனால் தன்னைப் பற்றி தன் தோழிகள் கவலைப்பட்ட அளவிற்குக் கூட ஷண்மதி கவலைப்படவில்லை.

அவளுக்கு நம்பிக்கை இருந்தது. ஸ்ரீதரின் குடும்பத்தார் அவளிடம் காட்டிய எல்லையற்ற அன்பு அவளது நம்பிக்கையை அதிகரிக்கவே செய்தது.

எனவே ஸ்ரீதர் கண்டு கொள்ளா விட்டாலும் கூட அதைப் பொருட்படுத்தாமல் தேவகி மீண்டும் போனில் அழைத்த அழைப்பை ஏற்று அவன் வீட்டிற்குச் சென்று அவர்களோடு நல்லுறவை பலப்படுத்திக் கொண்டாள்.

அவள் செல்லும்பொழுதெல்லாம் அவளுக்குப் பிடித்ததாய் சமைத்து பாசமாக பரிமாறும் தேவகியின் கனிவில் அவளுக்கு மனம் நெகிழும். தேவகியும், வாசுதேவனும் காட்டிய அக்கறையுடன் கூடிய அன்பும், கிரிதரும், உதயாவும் காட்டிய நட்புடன் கூடிய அன்பும் அவளையும் அவர்கள்பால் அன்பால் ஈர்த்தது.

ஆனால் தான் வருவது ஸ்ரீதருக்கு சற்றும் பிடிக்கவில்லையென்பதும் அவளுக்கு புரிந்துதான் இருந்தது.

அவள் வந்தாலே சட்டையை மாட்டிக் கொண்டு அவன் வெளியே கிளம்புவதையும் உள்ளூர வருத்தத்துடன் அவள் கவனித்துக் கொண்டுதான் இருந்தாள். இன்னும் நான்கைந்து மாதங்கள். படிப்பு முடியட்டும், நின்று நிதானமாக நேரடியாக பேசி விடலாமென்றெண்ணி அவன் போக்கிலேயே விட்டு விட்டாள் அவளும்.

ஷண்மதியின் சந்தேகமும் சரிதான். அவள் வருவது தனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை என்பதை தன் குடும்பத்தாரிடம் ஸ்ரீதர் தெளிவாகத் தெரிவித்து விட்டான். ஆனால் அதை காதில் வாங்கிக் கொள்ளத்தான் ஆளில்லை.

அன்றும் அப்படிதான். மாலை வெளியே போயிருந்த உதயாவும் தேவகியும் ஷாப்பிங் முடித்துத் திரும்பி வந்தனர். இரவு உணவு முடிந்ததும் குடும்பத்தினர் அனைவரும் சற்று நேரம் அரட்டையடிப்பது வழக்கம்.

அப்பொழுது ஈவ்னிங் ஷாப்பிங்கில் ஸ்ரீதருக்கு வாங்கி வந்திருந்த குர்த்தாவை மகனிடம் தந்தார் தேவகி.

மிகவும் இதமான லைட் ஆரஞ்சு வண்ண குர்த்தா. அதில் சற்று டார்க் ஆரஞ்சில் வெர்ட்டிகல் லைன்ஸ் ப்ளஸ் கழுத்துப் பட்டியிலும் நுட்பமான டிசைன் என மிக அழகாய் இருந்தது.

''வாவ்! ரொம்பவும் அருமையாக இருக்கிறது அம்மா. ஆனால் நீங்கள் பொதுவாக இந்த நிறத்தில் எடுக்க மாட்டீர்களே!'' என பேச்சுவாக்கில் கூறியபடியே மீண்டும் அதை மடித்தான் அவன்.

''இப்பவும் நான் அந்தக் கலரை செலக்ட் செய்யவில்லைடா ஸ்ரீதர்!'' என்ற தாயாரை வியப்புடன் பார்த்தான் அவன்.

''பின்னே? அண்ணி நீங்களா?''



குறும்புடன் உதட்டைப் பிதுக்கினாள் உதயா. ''எனக்கே கிரி அல்லது அத்தைதான் செலக்ட் செய்வார்கள். இது... ஷண்மதியின் செலக்ஷன்'' என்றாள் குரலிலும் குறும்பு கொப்பளிக்க.

''வாட்?''

தேவகி குறுக்கிட்டு, ''ஆமாடா! அவளைப் பார்த்தே கிட்டதட்ட ஒரு மாதமாகி விட்டதே. ஸ்டடிலீவ் விட்டதிலிருந்துதான் அவள் வரவேயில்லையே. இப்ப எக்ஸாம்ஸ் முடிந்துதான் ஒரு வாரமாகி விட்டதே! அதான் அழைத்தேன். மூவரும் சேர்ந்துதான் ஷாப்பிங் போனோம்!'' என்றார் சகஜமான குரலில்.

''ஆமாம் ஸ்ரீதர்! அவள் வழக்கமாக தன் அப்பாவிற்கு வாங்கும் கடைக்கு அழைத்துச் சென்றாள். ப்ரைஸ் எக்கசக்கமாக இருந்தாலும் கலெக்ஷன்ஸ் எல்லாமே ரொம்ப சூப்பர். அதிலும் உனக்கு இந்த கலர் நன்றாகயிருக்குமென்று அவள்தான் ஆசையாக செலக்ட் செய்தாள்'' என தன் மருமகள் கூறுவதை கேட்ட மகனின் முகத்தில் கோப ஜ்வாலை தோன்றுவதையும், அதை தன் அண்ணியிடம் காட்ட மனமின்றி மகன் தன்புறம் திரும்புவதையும் கண்ட தேவகி,

''ரொம்ப நேரமாகி விட்டதே. தூக்கம் வேறு வந்து விட்டது. குட் நைட்'' என நமட்டுச் சிரிப்புடன் நழுவி விடவும் சபையும் கலைந்தது.

கோபத்தில் பல்லைக் கடித்தான் ஸ்ரீதர்.

'இருக்கட்டும். இதை விடப் போவதில்லை. நாளை அம்மாவிடம் பேசியேயாக வேண்டும். அவளோடு பழக்கத்தை நிறுத்துங்கள் என்றால் சேர்ந்து கொண்டு ஷாப்பிங் போகிறார்களாமா? நாளைக்கே, 'ஸ்ரீதர் சார்க்கு

நான்தான் குர்த்தா செலக்ட் செய்து தந்தேனென்று' ப்ரெண்ட்ஸ்க்கு பைவ் ஸ்டார் ஹோட்டலில் பார்ட்டி வைப்பாள். தன் ஸ்டூடண்ட்ஸ் தன்னைப் பற்றி என்ன நினைப்பார்கள்' என்று எண்ணிய மாத்திரத்தில் அவனுக்கு மேலும் கோபம் பெருகியது.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையென்பதால் வீட்டில் இருந்தவன் சுமார் பதினொன்றரை மணியளவில் வசமாய் மாட்டிய அம்மாவைப் பிடித்து அமர வைத்துப் பேசவும் செய்தான்.

அப்பொழுதும் ''கிச்சனில் வேலையிருக்கிறது கண்ணா!'' என நழுவப் பார்த்த அம்மாவிடம்,

''பரவாயில்லை உட்காருங்கள் அம்மா! சமையலுக்கென்றே ஒன்றுக்கு இரண்டு சமையல்காரர்கள் இருக்கிறார்கள். அண்ணியும் இப்பொழுது கிச்சனில்தான் இருக்கிறார்கள். நீங்கள் உட்காருங்கள். உங்களிடம் நான் பேசியே தீர வேண்டும்'' என்றான் அழுத்தமான குரலில்.

மகன் விடமாட்டான் என்றுணர்ந்து அமர்ந்த அன்னையிடம் ஷண்மதியுடன் பழகுவதை நிறுத்துமாறு பொறுமையை இழுத்துப் பிடித்துக் கொண்டு கூறினான்.

''என்ன ஸ்ரீதர் நீ? இப்படி கூறுகிறாயே. பாவம், தாயில்லாத பெண். என்னிடம் எப்படி ஒட்டிக் கொண்டு விட்டாள் தெரியுமா? நான் பக்கத்தில் இருந்து பரிமாற எப்படி ரசித்து ருசித்துச் சாப்பிடுவாள் தெரியுமா? அவளது அம்மா இருந்திருந்தால் அவளுக்கு இப்படித்தானே பரிமாறி சாப்பிடச் செய்திருப்பார்கள்'' என்றவர் மகன் எதுவும் பேசாமல் மவுனமாய் இருக்கவும் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொண்டு,

''அது மட்டுமல்ல கண்ணா! எவ்வளவு பாசமாகப் பழகுகிறாள். அவளை எப்படிம்மா ஒதுக்குவது? கலகல



பேச்சும், குறும்புச் சிரிப்புமாக அவள் வந்தாலே நம் வீடு பளிச்சென்று லைட் போட்டாற்போல பிரகாசமாகி விடுகிறது.

நம் உதியும் அவளும் ரொம்ப திக் ப்ரெண்ட்ஸ் ஆகி விட்டார்களே! அவ்வளவு ஏன் உன் அப்பாவை எடுத்துக் கொள். அவர் கூட, 'இன்று ஷண்மி வருகிறாள்' என்று சொன்னால் போதும். வேலைகளை முடித்துக் கொண்டு அவள் வரும் நேரம் வீட்டில் ஆஜராகி விடுகிறாரே. விக்னேஷ் குட்டிகூட அவளைக் கண்டதும் குஷியாகி விடுகிறானே! அவள் வருவதில் உனக்கென்ன ஆட்சேபணை?'' என நயந்த குரலில் கேட்கவும் ஸ்ரீதர் பொறுமையிழந்தான்.

''அம்மா! ப்ளீஸ்! புரிந்து கொள்ளுங்கள். அம்மா இல்லாத பெண்ணென்று ரொம்பவும் உருகாதீர்கள். அந்தக் குறையை தான் அறிந்ததேயில்லையென்று அவளே சொன்னதை மறந்து விட்டீர்களா? அதுவும் சேர்மேன் சார் வீட்டின் பட்டத்து இளவரசி அவள். நம் வீட்டிற்கு ஓட்டிக் கொண்டு வருகிறாளே பென்ஸ், அதைத்தவிர அவளுக்கு மட்டுமே இன்னும் நான்கு கார்கள்... பெண் விளம்பரத்தை ரசித்துப் பார்த்தாள் என்ற ஒரே காரணத்திற்காகவே அவளது அப்பா வாங்கி நிறுத்தியிருக்கிறார். அதனால், 'பாவம்! தாயற்ற பெண், பழகுகிறேன்' என்ற டயலாக்கை நிறுத்தி விடுங்கள். கூடவே அவள் நமது வீட்டிற்கு வருவதையும்தான். ஏற்கனவே பார்ஸ்ட் டைம் இங்கு வந்ததற்கே அவள் பண்ணிய அலம்பலில் மற்ற என் ஸ்டூடண்ட்ஸ் என்னிடமே கேட்கிறார்கள். 'என்ன சார்? எங்களை வீட்டிற்கு அழைக்க மாட்டீர்களா? அவள் தான் ஸ்பெஷலா' என்று கேட்கிறார்கள். நான் என்ன சொல்லட்டும்? நாளைக்கே போய், 'சார்க்கு டிரெஸ் செலக்ட் செய்தேன்' என்று பீற்றுவாள்.

மற்ற மாணவ மாணவிகள் என்னைப் பற்றி என்ன நினைப் பார்கள்? அம்மா! அவள் இங்கு வருவது, பழகுவது, எது வுமே எனக்குச் சுத்தமாகப் பிடிக்கவில்லை. டிபார்ட் மெண்ட்டில் என் பெயர் என்னவாகும்? கூடவே அவளது பெயரும் என்னவாகும்? யோசியுங்கள், அதுமட்டுமல்ல... ஷண்மதி, என் மாணவி என்கிற எல்லைக்குள் மட்டும் தான் இருந்தாக வேண்டும். என் ஸ்டூடண்ட்ஸ் அதைத் தாண்டி வருவதை என்னால் அனுமதிக்க முடியாது'' என அழுத்தமான குரலில் தெள்ளத் தெளிவாகக் கூறி முடித்தான் ஸ்ரீதர்.

தாயார் தனக்குள் யோசித்தபடி மவுனமாக அமர்ந்திருக் கவும் அவன் முகம் இளகி மிருதுவாயிற்று. ''என்னம்மா? இனிமேலாவது பார்த்து நடந்து கொள்வீர்கள் தானே!'' என்று அவன் தன்மையாகக் கேட்கவும் பலமாகத் தலை யசைத்தார் தேவகி.

''அப்பாடா! தேங்க் யூ அம்மா'' என்றான் அவன் நிம் மதியோடு.

அந்த நேரம் பார்த்து கிச்சனிலிருந்து வந்த உதயா, ''அத்தை! ப்ரைட் ரைஸ் மட்டும்தான் பாக்கி. அது மட்டும் நீங்களே வந்து செய்வதாகக் கூறினீர்களே. மற்ற ஐட்டமெல்லாம் முடித்தாயிற்று. ஸ்வீட்டுக்கு குலோப் ஜாமூன் நானே செய்து விட்டேன். மைசூர்பாகு ஈவ்னிங் செய்துக் கொள்ளலாம் அல்லவா?'' என உற்சாகத்தோடு கேட்டபடி வரவும் சந்தேகத்தோடு தாயாரை நோக்கி னான் ஸ்ரீதர்.

''யாரம்மா வருகிறார்கள்?'' கண்டிப்புடன் எழுந்தது அவன் குரல்.

''அது வந்து கண்ணா... அது...'' என தேவகி மென்று விழுங்கவும்,



அதுவரை குறுக்கே எதுவும் பேசாமல் தாய், மகனின் உரையாடலை கவனித்துக் கொண்டிருந்த வாசுதேவன், ''ஷண்மிதான்டா வருகிறாள்'' என நமட்டுச் சிரிப்புடன் கூறவும்,

செய்வதறியாத கோபத்தோடு தாயிடம் திரும்பினான் ஸ்ரீதர். ''என்னம்மா நீங்கள்? நான் படித்துப் படித்துச் சொல்லிய பிறகும்...'' என மீண்டும் ஆரம்பிக்கவும் தேவகி மகனை சமாதானப்படுத்தினார்.

''இனிமேல் நான் கூப்பிடவில்லை சரியா? சரியாகத் தூங்காமல், சாப்பிடாமல் படித்ததில் சற்று இளைத்து போனது போல் தோன்றியது. அதனால்தான் அவளுக்குப் பிடித்ததாக சமைத்துத் தரலாமேயென்று லஞ்சிற்கு அழைத்தேன். ஒரு வாரமாக அழைத்தும் அவளுக்கும் நேரம் கிடைக்கவில்லை. இன்றுதான் வருவதாகச் சொன் னாள்'' என்று கூறிக் கொண்டிருந்தவர், எரிச்சலோடு கார் கீயை எடுத்துக் கொண்டு அவன் ஷூவை மாட்டவும்,

''ஏ...ய் என்னடா? சாப்பிட்டு விட்டுப் போகலாம். ஸ்ரீதர்...'' என தடுக்கவும், குனிந்து ஷூ லேஸை நாட் போட்டுவிட்டு கோபத்தோடு நிமிர்ந்தான் அவன்.

''நான் ஆகாஷ் வீட்டிற்குப் போகிறேன். அங்கேயே சாப் பிட்டுக் கொள்கிறேன். நீங்கள் அருமையாய் சமைத் ததை... வருவாளே ஒருத்தி, அவளுக்கு ஆசையாய் படையுங்கள். முடிந்தால் வாயில் ஊட்டி வேண்டு மானாலும் விடுங்கள்'' என்று எரிச்சலுடன் மொழிந்தவன் நிற்காமல் கிளம்பி விட்டான்.

''என்ன வாசு இவன்? ஞாயிற்றுக்கிழமை வீட்டில் இருப்பானேயென்று இவனுக்கு பிடித்ததும்தானே சமைத்து வைத்திருக்கிறேன். சாப்பிடாமல் என்னிடமே

கோபித்துக் கொண்டு போகிறானே'' என தேவகி வருந்தவும் வாசுதேவன் சிரித்தார்.

''அவனைப் பற்றி தெரியாதா உனக்கு? சரியான அம்மா பைத்தியம். உன்மேல் கோபம் நிலைக்கவே நிலைக்காது. சாயங்காலம் உன் சாப்பாட்டிற்கு நாக்கை தூக்கிக் கொண்டு வருவான் பார். முதலிலேயே செல்லோவில் அவனுக்கு எடுத்து வைத்து விடு'' என்று கூறவும் தேவகிக்கும் முறுவல் அரும்பியது.

''அந்த தைரியத்தில்தானே இப்படி நடையை கட்டு கிறான்'' என்று சிரித்த தேவகி, ''ஆனால் இவனுக்கு ஏன்தான் ஷண்மதியென்றாலே பிடிக்கமாட்டேனென் கிறதோ?'' என்றார் அலுப்புடன்.

''அதை விடு. எனக்கொரு சந்தேகம்?''

''என்ன வாசு?''

''ஷண்மதிக்கு இவனென்றால் ரொம்பவும் பிடிக் கிறதோ என்ற சந்தேகம்தான்'' என்று கூறிட வாசுதேவன் நகைக்க,

''இதிலென்ன சந்தேகம்? முதல் தடவை அவள் இங்கு வந்த பொழுதே தெளிவான விஷயம்தானே'' என்ற தேவகி தொடர்ந்து, ''ஒரு வாரமாக அழைத்தும் இன்று சன்டே, ஸ்ரீதர் வீட்டிலிருப்பான் என்றுதான் இன் றைக்கு வருவதாக ஒப்புக் கொண்டாள்'' என்றுரைத்து அவரும் இணைந்து நகைத்தார்.

வாசல்புறம் ஏதோ அசைவு உணர்ந்து திரும்பிய இருவருக்கும் சிரிப்பு அதிகமாகியது.

ஏனெனில் முகத்தில் மாட்டிக் கொண்ட உணர்வுடன் ஷண்மதி நின்றிருந்தாள்.



# 14



ஷெண்மதியின் திகைத்த தோற்றம் கண்டு மேலும் பெருகிய சிரிப்பை சிரமப்பட்டு அடக்கிக் கொண்டு, ''வாம்மா! ஏன் அங்கேயே நின்று விட்டாய்? உள்ளே வா!'' என இருவரும் அழைத்தனர்.

தந்தையிடம் இத்தனை ஆண்டுகளாக பெற்ற பயிற்சியின் பலனாக சட்டென்று தன் திகைப்பினை மறைத்துக் கொண்டு, முகபாவனையை தன் கட்டுக்குள் கொண்டு வந்தவளாக வழக்கமான முறுவலோடு உள்ளே வந்தாள் ஷண்மதி.

''ஹை! ஷம்மி'' என ஓடிவந்த வினோஷை ஆவலோடு தூக்கிக் கொண்டு அவனிடம் கொண்டு வந்திருந்த பெரிய சாக்லெட் பாக்ஸை நீட்டினாள்.

அதற்குள் அங்கு வந்த உதயாவும், கிரிதரும் அவளை உற்சாகத்தோடு வரவேற்கவும் சூழலில் கலகலப்பும் கூடியது.

நொடியில் தன் திகைப்பினை மறைத்துக் கொண்டு சகஜமாக உரையாடும் ஷண்மதியை உள்ளூரப் பாராட்டுத லுடன் நோக்கினர் வாசுதேவனும், தேவகியும்.

அன்றைய மதிய உணவை மிகவும் ரசித்துச் சாப்பிட்ட ஷண்மதி, ''ஆன்ட்டி! வரவர உங்கள் சாப்பாட்டிற்கு அடிக்ட் ஆகிவிடுவேன் போலிருக்கிறது. நான் மட்டு மல்ல அப்பாவும் கூட, போனமுறை அப்பாவிற்கு பிடிக்குமென்று சொன்னேன் என்பதற்காக மைசூர்பாகு

செய்து தந்தீர்களே! ரொம்பவும் டேஸ்ட்டாக இருக்கிற தென்று கூறி அப்பாவே காலி செய்து விட்டார். அது மட்டுமல்ல ஆன்ட்டி! இதைச் சாப்பிட்ட பிறகு வெளியில் செய்யும் டேஸ்ட் பிடிக்கவில்லை என்கிறார். எங்கள் குக் செய்வதும் பிடிக்கவில்லையாம். உங்கள் டேஸ்ட்தான் பிடித்திருக்கிறதாம்'' என்று கூறிச் சிரித்தவள், ''ஆன்ட்டி! எனக்கும் கற்றுத் தாருங்களேன். நானே செய்து அப்பாவை அசத்தி விடுகிறேன்'' என ஆர்வத்தோடு கேட்கவும் தேவகி புன்னகைத்தார்.

''ஓ! ஷ்யூர்டா! ரொம்ப சிம்பிள் கூட. ஈவ்னிங் உனக்கு கொடுத்தனுப்ப செய்யலாமென்றிருந்தேன். அப்பொழுதே கற்றுக் கொள்ளேன்'' என்றார்.

சொன்னது போலவே சுமார் நான்கு மணியளவில் அவருடன் கூடவே கிச்சனிற்குச் சென்று ஆசையாக கற்றுக் கொண்டாள் ஷண்மதி.

வேலையாட்கள் ஒதுங்கிக் கொண்டு விட, மூவர் மட்டுமாக கிச்சனில் கலகலப்பும் சிரிப்பும் நிறைந்தோடி யது. ரொம்பவும் ஈஸியாக கற்றுக் கொண்டு விட்டாள் ஷண்மதி. தேவகி சொல்லச் சொல்ல தானே செய்ததில் அவளுக்கு ஏக குஷி.

''ஆன்ட்டி! அடுத்த முறை, முழுவதும் நானே தனி யாகச் செய்து அப்பாவிடம் நீட்டினால், 'நீயே செய்ததா?' என்று எப்படி அசந்து போகப் போகிறார் தெரியுமா?'' என கற்பனையில் கண்டு ரசித்தபடி கிளுகிளுத்து சிரித்தாள் ஷண்மதி.

''ஆச்சரியத்தில் அசந்து போனால் சரிதான். சுத்திய லால் உடைத்து உடைத்து தூளாக்கிச் சாப்பிட்ட அசதி யில் அசந்து போகாமல் இருந்தால் சரி!'' என உதயா வாரவும்,



''உங்கள் அனுபவம் பேசுகிறதா?'' என பதிலுக்கு ஷண்மதியும் வார கிச்சன் கலகலத்தது.

''ஹையோ! ஷண்மி! பர்ஸ்ட் டைம் அப்படிதான் நடந்தது. மாமா, கிரி, ஸ்ரீதர் மூவரும் கடிக்க முடியாமல் பட்ட கஷ்டத்தை இப்பொழுது நினைத்தாலும்...'' என்று இழுத்து உதயா மேலும் சிரிக்கவும் மற்றவர்களையும் அச்சிரிப்பு தொற்றிக் கொண்டது.

சற்று சிரிப்பு அடங்கியதும் தேவகி, ''பார்ப்போம் உன் அப்பாவிற்கு என்ன மாதிரி அனுபவம் நேரப் போகிற தென்று?'' என பாவமாய் கூறவும்,

''ரொம்பவும் பயமுறுத்துகிறீர்களே! அடுத்த முறை செய்வதை முதலில் குருதட்சணையாய் ஆன்ட்டியிடமே கொடுத்துச் சாப்பிடச் செய்து ரியாக்ஷன் பார்த்த பிறகு தான் அப்பா கண்ணிலேயே காட்டுவதாய் முடிவு செய்து விட்டேன்'' என மிரட்டலாய் கூறினாள் ஷண்மதி.

''அடக் கடவுளே! இவ்வளவு பயங்...கரமான குருதட் சணை தருவாய் என்று தெரிந்திருந்தால் நான் உனக்கு கற்றுத் தந்திருக்கவே மாட்டேனே!'' என மயக்கம் வந்து தள்ளாடுவதுபோல் தேவகி நடிக்கவும் பார்த்துக் கொண் டிருந்த உதிக்கும், ஷண்மிக்கும் சிரிப்பு பீறிட்டது.

சிரித்தபடியே, உதயா ''ஷண்மி! அத்தை ஸ்வீட் செய்வதில் ரொம்ப எக்ஸ்பர்ட். அதுவும் பிஸ்தா கேக் செய்வார்கள் பார். வெரி டேஸ்ட். ஸ்ரீதருக்கு ரொம்பவும் பிடித்த ஸ்வீட்டும் கூட'' என்றாள்.

தன்னை மீறி, ''அப்படியா? ஆன்ட்டி எனக்கு அதை யும் கற்றுத் தாருங்களேன். நானே செய்து ஸ்ரீ...'' என ஆர்வத்தோடு சொல்லிக் கொண்டே வந்தவள் சொல்வ தறிந்து முகம் சட்டென சிவக்க நாக்கைக் கடித்து வார்த் தையை நிறுத்தினாள்.

''ஹை! மாட்டிக் கொண்டாயா?'' என்று குதித்தாள் உதயா. ''அத்தை! அவள் சொன்னதை கேட்டீர்கள் அல்லவா...? ஏய் ஷண்மி அதென்ன பாதியிலேயே வார்த்தைகளை விழுங்கி விட்டாய். சொல்ல வந்ததை முழுவதுமாகச் சொல்லு. என்ன சொல்ல வந்தாய்? நீயே சொல்லு ஸ்ரீ... அப்புறமென்ன... ம்... சொல்லு'' என்று உதயா செய்த ஆர்ப்பாட்டத்தில் ஷண்மதியின் முகம் மேலும் சிவந்தது.

''ஐயம் சோ ஹேப்பி ஷண்மி! உன்னை எங்கள் எல்லோர்க்கும் எவ்வளவு பிடித்திருக்கிறது தெரியுமா?'' என ஆசையாய் கூறியபடி ஸ்வீட்டை அவள் வாயில் திணித்தாள் உதயா.

தேவகியும் மலர்ந்த முகத்தோடு ஷண்மதியின் கரங்களைப் பற்றிக் கொண்டு, ''முதல் நாளே எனக்கு கிட்டத்தட்ட புரிந்து போயிற்று. உன்னை மிகவும் பிடித்துப் போயிற்று. அதனால் தான் உன் வரவை தடுக்க ஸ்ரீதர் முயன்ற பொழுதும் பிடிவாதமாக உன்னிடம் நாங்கள் பழகினோம். ஆனால் ஷண்மி உன் அப்பா...'' என குரலில் சிறு கவலையுடன் கேட்கவும் ஆதரவாக புன்னகைத்தாள் ஷண்மதி.

தந்தையின் நினைவில் முகம் கனிய, ''என் அப்பாவிற்கு பிடிக்காத எதையும் நான் நிச்சயமாகச் செய்யவே மாட்டேன் ஆன்ட்டி. அதைப்போல் அவரிடம் எதையும் நான் மறைத்ததும் இல்லை'' என்றாள் ஷண்மதி மிருதுவான குரலில்.

''அப்படியென்றால் பிரச்சனையில்லை என்று சொல்லு'' என்று குதூகலித்த உதயாவை சிறு கவலையுடன் நோக்கினாள் ஷண்மதி.



''ஆனால் ஸ்ரீதர்... அவர் என்னைக் கண்டாலே கடுகடுவென்கிறாரே! நான் இருக்கும் இடத்தில் நிற்கக் கூடப் பிடிக்காதவராக நடந்து கொள்கிறாரே!'' என முகம் வாடினாள்.

தேவகியின் முகமும் ஒரு கணம் வாடியது. அதன் காரணம் உணர்ந்தாற்போல் உதயாவின் முகத்திலும் இலேசான வாட்டம் தெரிந்தாலும் உடனே தன்னை தேற்றிக் கொண்டவளாக,

''என்ன ஷண்மி நீ? நாங்களெல்லோரும் உனக்கு ஃபுல் சப்போர்ட்டாக இருக்கும்பொழுது என்ன கவலை உனக்கு? நீ நிம்மதியாக படிப்பை முடி. ஸ்ரீதரை சம்மதிக்க வைப்பது எங்களின் பொறுப்பு!'' என்று தேறுதலாகக் கூறவும் தேவகியும் அதை ஆமோதித்தார்.

நிம்மதியோடு ''தேங்க் யூ ஆன்ட்டி!'' என்ற ஷண்மதியிடம், ''ம்கூம்! ஆன்ட்டி இல்லை, அத்தை'' என இதமாக திருத்தினார் தேவகி.

மெல்ல கிச்சனுக்குள் தலையை நீட்டினான் கிரிதர்.

''செய்த ஸ்வீட்டையெல்லாம் எங்கள் கண்ணிலேயே காட்டாமல் நீங்களே அபேஸ் செய்கிறீர்களா?'' என கிண்டலடிக்கவும் ஸ்வீட்டோடு அனைவரும் ஹாலுக்கு வந்தனர்.

ஷண்மதி முறையாக சங்கீதம் பயின்றவள் என தெரிய வந்ததிலிருந்து, அவள் எப்பொழுது வீட்டிற்கு வந்தாலும், இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டிருந்த வாசுதேவன் அவளை ஒரு பாட்டாவது பாட வைத்து கேட்பார்.

இன்றும் அதே போல் பாடச் சொல்லவும் பிகு பண்ணாமல் உடனே ஒத்துக் கொண்டாள் ஷண்மதி. காபி ராகத்தின் 'என்ன தவம் செய்தனை' பாடலை அவள்

உருகிப் பாட கேட்டுக் கொண்டிருந்த மற்றவர்களும் உருகினர்.

''அற்புதம்! அற்புதம்! பகவான் உனக்கு தேனாட்டம் குரலைத் தந்திருக்கிறார். நீ உருகிப் பாடிக் கேட்கும் பொழுது எனக்கு என்னென்னமோ நினைவு வருகிறது. என் சிறு வயதில் என் அம்மா இந்தப் பாடலை அழகாய் பாடியதெல்லாம் நினைவிற்கு வருகிறது'' என நெகிழ்ந் தார் வாசுதேவன்.

''ஷண்மி! 'அலைபாயுதே கண்ணா' பாடேன்'' என கிரியும் உதியும் ஆசையாய் கேட்கவும்,

''ஓ! ஷ்யூர்!'' என்றபடி கானடா ராகத்தில் அப்பாடலை அவள் பாடி முடித்ததும் 'ஹேய்'வென கைதட்டி பாராட் டினர் நால்வரும்.

''தேவகி! இவள் வீட்டிற்கு கிளம்பும் முன் மறக்காமல் திருஷ்டி சுற்றிப் போட்டு அனுப்பு. நம் கண்ணே இன்று பட்டிருக்கும்'' என்றார் வாசுதேவன்.

''கண்டிப்பாக'' என ஆமோதித்தார் அவரும்.

''ரொம்ப நன்றாகப் பாடுகிறாய் ஷண்மி'' என பாராட் டிய கிரிதர் அவளிடம், ''ஷண்மி! எங்களுக்குப் பிடித்த பாடலைப் பாடியது போதும். உனக்கு மிகவும் பிடித்த பாடலென்று ஏதாவதொன்று இருக்குமே! அதைப் பாடேன்'' என்று ஆவலோடு கேட்டான்.

''ம்...'' என யோசித்த ஷண்மதி. ''என் அப்பாவிற்கு பழைய சினி சாங்கொன்று ரொம்பவும் பிடிக்கும். அதனா லேயே எனக்கும் பிடித்த பாடலாகி விட்டது. அதைப் பாடுகிறேன்'' எனவும் மற்றவர்கள் ஆவலோடு கேட்கத் தயாரானார்கள்.

**''மன்னவன் வந்தானடி - தோழி**
**மஞ்சத்திலே இருந்து நெஞ்சத்திலே அமர்ந்த**
**மன்னவன் வந்தானடி...''**



என்ற பாடலைப் பாவத்தோடு சுருதி சுத்தத்தோடு பாடத் துவங்கவும், மற்றவர்களும் சுற்றுப்புறம் மறந்து, அவளது குரலினிமையில், பாடலினிமையில் கருத்தை பசி கொடுத்தவர்களாய் அமர்ந்திருந்தனர்.

பாடி முடித்ததும் கைத்தட்டல் பறந்தது. வாசு தேவனும், தேவகியும் வெகுவாய் பாராட்ட, ''வெரிகுட் ஷண்மி!'' என கையைப் பிடித்துக் குலுக்கினான் கிரிதர்.

''ஹைய்யோ! ஷண்மி! எவ்வளவு அருமையாய் பாடு கிறாய்'' என அவள் கன்னத்தில் முத்தமிட்டாள் உதயா.

தாயைப் பின்பற்றி வினேஷ் தானும், ''அருமையா பாடுறே ஷம்மி'' என முத்தமிடவும் ''தேங்க் யூ கண்ணா'' எனச் சிரித்தபடி அவனை தன் மடியில் அமர்த்திக் கொண் டாள் ஷண்மதி.

பிறகு மற்றவர்களை முகம் மலரப் பார்த்து, ''அப்பா விற்கு ரொம்பப் பிடித்த பாடல் இது. அம்மா அடிக்கடி இதைத்தான் பாடுவார்களாம். அதனாலேயே அப்பாவிற்கும் உயிராயிற்று இந்த பாடல். என்னையும் அடிக்கடி பாடச் சொல்லி கண் மூடி ரசித்துக் கேட்டார். அப்பாவிற்கு பிடித்த பாடலென்ற காரணத்தினாலேயே எனக்கும் விருப்பமான பாடலாகி விட்டது'' என்று உற்சாகத்தோடு கூறினாள் ஷண்மதி.

''அப்பா என்றால் உனக்கு ரொம்பவும் உயிரென்று இதிலிருந்தே தெரிகிறதே!'' என உணர்ந்து சொன்னான் கிரிதர்.

அவளைப் பார்த்தபடி வாசுதேவன், ''ஷண்மதி வீட்டுக்கு பக்கத்து பங்களாவை ராபர்ட் விற்கப் போகிறாராம். அட்வான்ஸ் கொடுத்து விடலாமா?'' என தேவகி, கிரி, உதயாவைப் பார்த்துக் கேட்கவும், இதயத்தில் சிலீரென்ற பரவசத்தை உணர்ந்தாள் ஷண்மதி.

''இந்த அப்பா பைத்தியம் நம் வீட்டிற்கு வர வேண்டுமானால் நாம் அந்த வீட்டிற்கு அட்வான்ஸ் கொடுத்துதானே தீர வேண்டும்'' என தேவகி சிரிக்க, கிரியும் உதியும் அதை ஆமோதிக்க அளவிட முடியாத ஆனந்தத்தில் நெஞ்சம் உருகிப் போனாள் ஷண்மதி.

தான் வாய்விட்டு கேட்காமலேயே தனக்காக யோசித்து ஏற்பாடு செய்யும் அவர்களின் அன்பிலே வாயடைத்துப் போனாள். எவ்வளவு அருமையான குடும்பம், எவ்வளவு அருமையான குடும்பத்தினர் என எண்ணி சிலிர்த்துப் போனாள் ஷண்மதி.

நன்றி கூறி பேச வாயெடுத்தவள், பேச முடியாதவளாய் தலையசைத்தாள். அவளது எல்லையில்லாத சந்தோஷத்தை ரசித்தபடி, ''நீ ஒன்றும் பேச வேண்டாம், இப்பொழுது பாடிய பாடலை இன்னொரு முறை பாடேன்'' என தேவகி ஆவலாய் கேட்கவும், மற்றவர்களும் ''இன்னும் ஒரு முறை'' என்று கேட்கவும், ''ஓகே!'' என்று சிரித்தாள் ஷண்மதி.

மீண்டும், ''மன்னவன் வந்தானடி தோழி'' என தன்னுள் ஆழ்ந்து பாடத் துவங்கியவள் அந்நேரம் பார்த்து ஸ்ரீதர் உள்ளே நுழைவதைக் கண்டு சட்டென பாடலை நிறுத்தினாள்.

''ஹே!'' என்று உதியும் கிரியும் கை தட்டிச் சிரிக்கவும், 'என்ன' என்பதுபோல் பார்த்தான் அவன்.

''இல்லை ஸ்ரீதர், மன்னவன் வந்தானடி என்று ஷண்மி பாடவும் நீ உள்ளே நுழையவும் சரியாக இருந்ததா... அதான்...'' எனக் குறும்புடன் இழுத்த உதயா சிரித்தாள்.

உள்ளே நுழைந்த அவனது காதிலும் விழத்தான் செய்தது. இப்பொழுது அண்ணியின் கிண்டலில் அவனுக்குக் கோபம் வந்தது.



எதுவும் சொல்லாமல் ஷண்மதியை முறைத்தான் ஸ்ரீதர்.

''உதி சொன்னதற்கு அவளை ஏன்டா முறைக்கிறாய்?'' என்று கிரி ஷண்மதிக்காகப் பரிந்து வந்தான்.

முகத்தை சாதுவாக வைத்துக் கொண்டு, ''அதற்காக என்னை முறைக்காதே ஸ்ரீதர். நான் சும்மா ஃபன்க்கு சொன்னேன்'' என உதி அப்பாவி போலக் கூறவும் அவள் பாவனையில் கிரி சிரித்தான்.

உங்களிருவரையும் பிறகு கவனித்துக் கொள்கிறேன் என்பது போல் சுடச்சுடப் பார்த்த ஸ்ரீதர், ''அம்மா! சூடாக ஒரு கப் காபி'' என்றபடி தன்னறைக்குச் சென்றான்.

தேவகியோடு சேர்ந்து ஷண்மதியும் எழுந்தாள்.

''அத்தை! நான் காபி போடுகிறேன் அத்தை!'' எனக் கேட்டுக் கொண்டு மைக்ரோவேவ் அவனில் பாலை சூடு செய்து, சுகர் எவ்வளவென்று கேட்டுக் கொண்டு காபியை கவனமாகக் கலந்து கப்பில் ஊற்றி தேவகியிடம் நீட்டினாள்.

''நீயே கொண்டு போய் கொடேன் ஷண்மி.''

''வேற வம்பே வேண்டாம் அத்தை. சார் வரும் பொழுதே பயங்கர மூட் அவுட். இதில் நான் வேறு கொண்டு போய் தந்தேனென்றால் இந்த காபியை விட அவர் சூடாகிக் கொதிப்பார்'' என்று அவள் கூறிய விதத்தில் தேவகிக்குச் சிரிப்பு வந்தது.

ஸ்ரீதர் வரும் முன்பே சமர்த்தாகப் போய் அமர்ந்து கொண்டாள் அவள். உடை மாற்றி முகம் கழுவி ப்ரெஷ்ஷாக வந்தமர்ந்தவன், அவளைப் பார்த்துவிட்டு சுவர் கடிகாரத்தையும் குறிப்பாக பார்த்து, 'நீ இன்னும் இடத்தைக் காலி செய்யவில்லையா?' என்பதுபோல்

கிண்டலாக மீண்டும் அவளிடம் பார்வையைச் செலுத்தினான்.

கிளம்பும் உத்தேசம் இப்பொழுது இல்லை எனச் சொல்லாமல் சொல்வது போல் ஷண்மதி சோபாவில் நன்றாக சாய்ந்து அமர்வதை கண்டும் காணாதவனாக தாய் தந்த காபியை வாங்கி அருந்தினான்.

இரண்டு மிடறு விழுங்கியதுமே, ''என்னம்மா நீங்கள்? நான் உங்களைத்தானே காபி கேட்டேன். உங்களால் முடியவில்லையென்றால் குக் எங்கே போனார்கள்? காபி போடத் தெரியாத கத்துக் குட்டியையெல்லாம் ஏன் காபி கலக்க விடுகிறீர்கள்?'' எனக் கேட்டபடி ஷண் மதியைப் பார்த்தான் அவன்.

அவள் வாய்க்குள்ளேயே ஏதோ திட்டிக் கொள்வதை கவனித்தவன், ''இனி இந்த விஷப் பரீட்சையெல்லாம் செய்யாதீர்கள் அம்மா'' என்றபடி மீண்டும் ஒரு மிடறு விழுங்கினான்.

''எப்படிடா கண்டு பிடித்தாய்?'' என வாசுதேவன் புன்னகையோடு விசாரிக்கவும்,

''வெரி சிம்பிள்! அம்மா, அண்ணி இவர்கள் காபி நல்ல டேஸ்ட்டாக இருக்கும். குக் போட்டாலும் அப்படி தான். அப்படியிருக்க இந்த எமகஷாயத்தைக் குடித்ததுமே தெரிந்து விடாதா?'' என்றான் அவன் வெகு கிண்டலாக.

ரோஷத்தில் முகம் சிவக்க, ''பாருங்களேன். என் காபியை எமகஷாயம் என்பதை'' என தேவகியிடம் முறையிட்டாள் ஷண்மதி.

அவரும், ''ஏய்! ரொம்பதான் அவளை மட்டம் தட்டாதேடா. நான் சொன்ன அளவில்தான் சுகர், டிகாக்ஷன் எல்லாம் கலந்தாள். அதனால் நீ சொல்லும் அளவிற்கு அது ஒன்றும் மோசமாக இருக்காது.'' என்றார்.



அவனை முறைத்துவிட்டு, ''பிடிக்கவில்லையென்றால் ஏன் குடிக்க வேண்டும். வைத்து விட வேண்டியது தானே.'' என மீண்டும் தேவகியிடமே கேட்டாள் ஷண்மதி.

அவர் புன்னகைக்க, ''தலைவலி அம்மா. அதன் வலி தாங்காமல்தான் இந்த எமகஷாயத்தைக் கூட காபி என்று கற்பனை செய்து கொண்டு கண்ணை மூடிக் கொண்டு உள்ளே தள்ளுகிறேன்'' என அலட்டிக் கொள்ளாமல் சொன்னான் அவன்.

முகம் ரோஷத்தில் சிவக்க, ''அவ்வளவு தலைவலியென்றால் இதை வைத்துவிட்டு வேறு கலந்து வரச் சொல்லி குடித்துக் கொள்ள வேண்டியதுதானே'' எனக் கேட்டாள் ஷண்மதி.

மீண்டும் ஒரு வாய் அருந்தியவன், ''சொல்...லலாம்... ஆனால் மறுபடியும் நீயே கலந்து அம்மாவிடம் கொடுத் தனுப்பினால் என்ன செய்வது என்கின்ற பயம்தான். அந்த எமகஷாயத்தை வேறு மீண்டும் ஆரம்பத்தி லிருந்து விழுங்க நேர்ந்து விடுமே. நான் அப்...புறமாய் நீ கிளம்பியதுமே மீண்டும் ஒரு நல்ல காபி குடித்துக் கொள்கிறேன்'' என அப்பாவியாய் விவரிக்கவும் ஷண்மதி மீண்டும் வாய்க்குள்ளேயே திட்டிக் கொண்டாள்.

அதையும் கவனித்து, ''சொல்வதை தைரியமாக காதில் விழும்படி சொல்ல வேண்டும்'' என வம்பிழுத்தான் அவன்.

குறும்புப் பார்வையுடன் இருவரின் சண்டையை வேடிக்கைப் பார்த்த உதயா, ''ஷண்மி! நீ படிப்பில் எப்படி? ரொம்பவும் சுமாரா?'' என வேண்டுமென்றே கேட்டாள்.

வியப்புடன் அவளை நோக்கியவள் அவள் குறும்புப் பார்வையை சந்தித்ததும் விஷயம் விளங்கியவளாய்,

''டாப்பரை பார்த்து இப்படி கேட்டு விட்டீர்கள்! கோல்ட் மெடலோடு வந்து உங்கள் கேள்விக்கான பதிலை சொல்கிறேன்'' என்று ரோஷம்போலக் கூறினாள் ஷண்மதி.

''ம்ம்... அப்படியென்றால் டிபார்ட்மெண்ட்டில் ஸ்டாப்கிட்டேயெல்லாம் மரியாதையாகத்தானே நடந்து கொள்வாய்?'' என சந்தேகம் போல உதயா வினவவும்,

''டிபார்ட்மெண்ட்டில் எனக்கு எவ்...வளவு நல்ல பெயர் தெரியுமா?'' என மீண்டும் பீற்றுவதுபோல கூறினாள் ஷண்மதி.

எதற்காக இந்தப் பேச்சு நடக்கிறதென்பது புரிந்த ஸ்ரீதர் காபியை அருந்தியபடி வேடிக்கை பார்த்தான்.

''நன்றாகப் படிக்கின்ற பெண். டிபார்ட்மெண்ட்டில் நல்ல பெயரென்றால் மற்ற ஸ்டாப்பிடம் நல்ல பெயரெடுத்திருக்கிறாய் என்றுதானே அர்த்தம். பிறகு ஸ்ரீதர் மட்டும் ஏன் உன்னிடம் இவ்வளவு கண்டிப்பு காட்ட வேண்டும்?'' என உதயா வினவவும்,

''ம்ம் நல்ல கேள்விதான். என்னைக் கண்டாலே சார்க்கு பாகற்காய் கஷாயம் சாப்பிட்டதுபோல் முகம் மாறி விடுகிறது. இவ்வளவு ஏன்? எல்லோர்க்கும் சிரித்த முகமாய் பதிலுக்கு குட்மார்னிங் சொல்பவர் நான் விஷ் பண்ணினால் மட்டும் தலையை ரொம்ப கெத்தாக அசைச்சுட்டுப் போவார்'' என நிஜமாகவே புலம்பிய ஷண்மதி, ஸ்ரீதரின் சிரிப்பு சத்தம் கேட்டு அவன்புறம் திரும்பினாள்.

வாயில் காபியோடு சிரித்ததால் புரைக்கேற, ''ஸாரி'' என்றபடி கப்பை டீபாயில் வைத்துவிட்டு நிமிர்ந்தவன் மீண்டும் சிரிக்கவும் மற்றவர்கள் புரியாமல் நோக்கினர்.

மீண்டும் ''ஸாரி'' என்றவன், ''இது வேறு விஷயம். இன்று ஆகாஷோட தங்கை ஒரு ஜோக் சொன்னாளா...



அதை நினைத்தேன். சட்டெனச் சிரிப்பு வந்து விட்டது'' என்றபடி டீபாயிலிருந்த மேகஸினை எடுத்துப் பிரித்தான்.

'அதாவது உங்கள் பேச்சுக்கும் எனக்கும் சம்பந்தமில்லை எனச் சொல்லாமல் சொல்கிறானாக்கும். யாரோ ஓர் ஆகாஷோட தங்கை சொன்ன ஜோக்கிற்கு ஐயாவிற்கு நினைத்து நினைத்துச் சிரிப்பு வருகிறதாமா?' என உள்ளுக்குள் பொருமினாள் ஷண்மதி.

மீண்டும் விட்ட இடத்திலேயே தொடர்ந்தாள் உதயா. ''உன்னிடம் இவ்வளவு கண்டிப்பாக இருக்க என்ன காரணம் ஷண்மி?'' என கேட்கவும்,

'நான் எழுதிய கவிதைதான் காரணம் என்று உண்மையைச் சொன்னால் எப்படியிருக்கும்?' என எண்ணிய மாத்திரத்தில் ஷண்மதியின் கரு விழிகள் அடக்கப்பட்ட சிரிப்பில் பளபளத்தன.

''அதை சாரிடம் தானே கேட்க வேண்டும்'' என்று அவனை மாட்டி வைத்தாள்.

''அதுவும் சரிதான்! ஸ்ரீதர் நீதான் சொல்லேன்'' என தேவகியும் கேட்கவும் மேகஸினிலிருந்து பார்வையை உயர்த்தியவன், ''அது வந்து... காரணம் என்னவென்றால்...'' என இழுத்து நிதானமாக ஆரம்பிக்கவும் ஷண்மதி ஆவலுடன் நோக்க, மற்றவர்கள், ''என்ன காரணம்? சொல்லேன்?'' என ஊக்குவதையும் ஆற அமர வேடிக்கை பார்த்து விட்டு, பின் நிதானமான குரலிலேயே, ''இவ்வளவு நேரமும் அவள் சொன்னதையெல்லாம் கதாகாலட்சேபம் கேட்பதுபோல் கேட்டுக் கொண்டிருந்தீர்கள் அல்லவா? இதை மட்டும் என்னை ஏன் கேட்கிறீர்கள்? அதையும் உங்கள் ஷண்மதியிடமே கேளுங்கள். அவளுக்கே ரீசன் என்னவென்று நன்றாகத் தெரியும்'' என அமர்த்த

லாகக் கூறி மீண்டும் கையிலிருந்த மேகஸினில் பார்வையை பதிக்கவும் சொத்தென்றாகியது மற்றவர்களுக்கு.

இனி அவனிடமிருந்து எதுவும் பெயராது என்றுணர்ந்ததால், ''நீயே சொல் ஷண்மி'' என்றாள் உதயா.

ஷண்மதியும், ''என்ன சார் கேட்கிறார்களே. உண்மையைச் சொல்லி விடவா?'' என சவால் போல் கேட்கவும்,

''தாராளமாகச் சொல்லேன்'' என்றான் அவனும் சளைக்காமல்.

''அப்புறம் என் மீது 'ஏன் சொன்னாய்' என்று கோபப் படக்கூடாது.'' என்று அவனிடம் எச்சரித்தவள் மற்றவர்களிடம் திரும்பி, ''மொத்தம் இரண்டு காரணங்கள். முதலாவது காரணம், அவரை விட நான் ரொம்பவும் பிர்லியண்ட் என்பதுதான்'' என குறும்புடன் அறிவிக்கவும் தன்னையும் மீறி ஸ்ரீதரின் முகத்தில் முறுவல் அரும்பியது.

மற்றவர்களும் புன்னகைக்க, ''பார்த்தீர்களா... நம்ப மாட்டேனென்கிறீர்களே! நான் சொல்வது உண்மை. பெரிய கன்சர்னில் வேலை பார்த்த நமக்கே தெரியாத இன்பர்மேஷன்ஸ்செல்லாம் ஜஸ்ட் காலேஜில் படிக்கும் இவளுக்கு இவ்வளவு தெரிந்திருக்கிறதே என்பதுதான் முதல் காரணம்'' என்று சிரிக்காமல் கூற வேண்டுமென்றே அவனை வம்புக்கிழுத்தாள் ஷண்மதி.

கூடவே இதை தன் க்ளாஸ் மேட் எல்லோரும் கேட்டால் எப்படிப் பொங்கியெழுந்து தன்னிடம் சண்டைக்கு வருவார்கள் என்று தோன்றவும் அவள் அதரங்களில் ரகசியப் புன்னகை ஒன்று தோன்றி மலர்ந்தது.

ஸ்ரீதர் தன் கட்டுப்பாட்டையும் மீறி அரும்பிய முறுவலுடன், ''டவுட் கேட்டுக் கொண்டு புக்கைத் தூக்கிக்



கொண்டு வருவாயே... அப்பொழுது இதை நினைவு படுத்துகிறேன்'' என்றான்.

''அது... அது வந்து... ஆங் தன்னை மீறிய புத்திசாலியென்கின்ற எரிச்சலில் என் இன்டொர்னல் மார்க்ஸில் கை வைத்துவிடக் கூடாதல்லவா? அதற்குத்தான் உங்களிடமே பாடத்தில் சந்தேகம் கேட்பது போல் கேட்டால், தன்னை விட இவளுக்கு விஷய ஞானம் குறைவு தான் என்று சமாதானமாகி விடுவீர்களே! அதற்குதான் டவுட் கேட்பது'' என ஷண்மதி விடாமல் சமாளிக்கவும்.

தன்னையும் மீறிச் சிரித்தவாறு, ''அப்பா... என்ன வாய்'' என்றான் ஸ்ரீதர்.

அதைக் கண்ட ஷண்மதிக்கு, ஸ்ரீதர் தன்னிடம் சிரித்துப் பேசி விட்டானே என்று உள்ளம் துள்ளியது.

''ஒரு சந்தேகம்'' என்றான் கிரிதர் பணிவாக.

''என்ன?'' என்று ஷண்மதி கேட்கவும்.

''இரண்டாவது காரணத்தையாவது உள்ளது உள்ளபடி உண்மையாகச் சொல்வாயா?'' என அதே பணிவான குரலிலேயே கிரிதர் கேட்கவும் மற்றவர்களோடு சேர்ந்து ஷண்மதிக்கும் சிரிப்பு வந்தது.

அடக்கிக் கொண்டு, ''முதல் காரணமே உண்மை தானே!'' என்றாள் விடாமல்.

''நீ இரண்டாவது காரணத்தைச் சொல்லேன்.''

''ம்ம்... சொல்கிறேன். சரியாக சொல்வதென்றால் முக்கியமான காரணமே அதுதான்'' என பீடிகையிட்டாள் அவள்.

உதயா எக்கச்சக்க ஆவலுடன், ''சீக்கிரம் சொல்லேன் ஷண்மி'' என அவசரப்படுத்தவும்,

''இம்ம்...'' எனப் பெரியதாக ஒரு சோக மூச்சை வெளியிட்டவள், ''எல்லாம் நான் பேப்பர் பிரசெண்ட்

டேஷனில் பார்ட்டிசிபேட் பண்ண போனதால் வந்த வினை'' என்றாள் குரலிலும் சோகத்தோடு.

வாசுதேவனே இப்பொழுது குறுக்கிட்டு, ''என்? என்னவாயிற்று?'' என விசாரித்தார்.

''அதனால்தானே இன்டெர்னல் மார்க்ஸ்கான சைக்ளிக் டெஸ்ட், அதுவும் சாரோட சப்ஜெக்ட்டில் ரீடெஸ்ட் எழுதும்படியாயிற்று அதில்தானே வம்பே ஆரம்பித்தது. சார்க்கு என்மேல் கோபமும் அதிகமாகி விட்டது'' என்று அவள் அலுப்புடன் கூறவும் திடுக்கிட்டுப் போய் அவளைப் பார்த்தான் ஸ்ரீதர்.

''ரீ டெஸ்ட் எழுதும்பொழுது...'' என அவள் தொடங்கவும் 'மைகாட்! இவள் பாட்டிற்கு கவிதையைப் பற்றி உளறி விட்டால் அவ்வளவுதான். வேறு வினையே வேண்டாம்' என்று எண்ணியவன்,

''ஷண்மதி! நேரமாகி விட்டது பார்! நீ வீட்டிற்கு கிளம்ப வேண்டாமா?'' என குரலில் கண்டிப்புடன் கேட்கவும்,

வாசுதேவன் குறுக்கிட்டு, ''நீ ஏன்டா அவளைத் தடுக்கிறாய்? ஷண்மி நீ சொல்லும்மா'' என்றார் அவளிடம்.

''சரி அங்கிள்'' என பலமாய் தலையாட்டியவள் ஸ்ரீதரை விழிகளில் குறும்பு மிளிரப் பார்த்துவிட்டு, ''சார் சப்ஜெக்ட்டில் ரீடெஸ்ட் எழுதும்பொழுது என் பென் எழுதவில்லையென்று அவரது பென்னை வாங்கி எழுதினேன்...'' என இழுக்கவும்.

''ம்... சொல்லேன். பிறகு?'' என ஊக்கினாள் உதயா.

ஸ்ரீதரின் முகத்தில் டென்ஷன் ஏறுவதை ரசித்தபடி, ''தெரியாத்தனமாக அவரது பென்னை காணடித்து விட்டேன். அதில் சார்க்கு மகா கோபம். 'என் அம்மா பரிசளித்த பார்க்கர் பென். பொறுப்பில்லாமல் காணடித்து விட்டாயே'



என்று அன்றிலிருந்து என் மேல் ஏக கோபம்'' என்று கூறி அவன் நிம்மதி பெருமூச்சு விடுவதைக் குறும்புடன் கவனித்து வெகுவாய் ரசித்தாள் ஷண்மதி.

''அடப்பாவி! நான் ஆசையாக பரிசளித்த பேனா காணாமல் போய் விட்டதா? இதை இன்று வரையும் என்னிடம் மூச்சு விடவே இல்லையே! ஏன் ஸ்ரீதர்'' என தேவகி போர்க்கொடி தூக்கவும்,

''சொன்னால் வருத்தப்படுவீர்களோ என்றுதான் சொல்லவில்லை அம்மா'' என சமாதானப்படுத்தினான் ஸ்ரீதர்.

யோசனையில் புருவம் நெரிய, ''ஆனால் நீதான் அதே பென் வைத்திருக்கிறாயேடா. காணாமல் போன பென் திரும்ப கிடைத்து விட்டதா?'' என தேவகி கேட்கவும்,

உற்சாகத்தோடு இடையிட்ட ஷண்மதி, ''இப்பொழுது வைத்திருப்பது நான் பரிசளித்த பேனா.'' என அறிவித்தாள் வேண்டுமென்றே.

''என்னது? உன் பரிசா?'' என ஏக காலத்தில் நான்கு குரல்கள் ஒலிக்கவும் ஷண்மதியை முறைத்தான் ஸ்ரீதர்.

''ஆமாம்! என் பரிசேதான். என்னால்தானே காணாமல் போனதென்று நானே வேறொரு பேனா வாங்கித் தந்தேன். இப்பொழுது சார் வைத்திருப்பது உங்கள் பரிசல்ல, என் பரிசாக்கும்'' என்று கூறி ஸ்ரீதரின் கோபத்தைக் கிளறி விட்டு வேடிக்கைப் பார்த்தாள் ஷண்மதி.

'என் காபியை எமகஷாயம் என்றபொழுது எனக்கும் இப்படிதான் சாரே இருந்தது' என வேடிக்கையாக உள்ளூர நினைத்தவள் திருப்தியோடு கைப்பையை எடுத்துக் கொண்டு எழுந்தவள், ''நேரமாகி விட்டதே நான் கிளம்புகிறேன் சார்'' என அவனிடம் விடை பெற்றவள் சட்

டெனக் குரலைத் தணித்து அவனுக்கு மட்டும் கேட்கும் படி, ''வந்த வேலை தான் முடிந்து விட்டதே! போட்டுக் கொடுத்ததைத்தான் சொல்கிறேன்'' என்று சாதுவாக மொழிந்து விட்டு,

''பை உதி அக்கா! பிறகு பார்ப்போம்'' என்று கூறினாள்.

''என்னது? அக்காவா?'' என்ற ஸ்ரீதர்,

''என்ன அண்ணி இது புதுப்பழக்கம்?'' என உதயா விடம் கண்டிப்பு காட்டி விசாரித்தான்.

முகத்தை அப்பாவியாய் வைத்துக் கொண்டு,

''அது வந்து ஸ்ரீதர், 'உங்களைப் போல் ஓர் அக்கா எனக்கில்லையே' என்று ஷண்மதி கூறினாளா? எனக்கு மனம் பொறுக்கவில்லை. அதான் 'என்னையே அக்கா வாக நினைத்துக் கொள் என்று விட்டேன்'' என கையை விரிக்கவும்,

''அதானே! இதில் என்னடா இருக்கிறது? அவர்களுக் குள் எப்படியோ போகட்டுமே'' என்று கிரிதரும் ஒத்து ஊதினான்.

எல்லோரும் சேர்ந்து கொண்டு தனக்கெதிராகச் செயல் படுவது புரிந்தது ஸ்ரீதருக்கு. இது எதில் போய் முடியக் கூடும் என ஊகித்தவனுக்கு கோபம் பெருகியது. இதற் கெல்லாம் காரணமான ஷண்மதியை பொசுக்கி விடுவது போல் முறைத்தான் ஸ்ரீதர்.

''ஒரு நிமிடம் இருடா ஷண்மி'' என்றபடி உள்ளி லிருந்து கையில் மிளகாய் உப்புடன் வந்த தேவகி, ''எவ் வளவு இனிமையாய் பாடினாய்? இப்படி உட்கார்'' எனவும் ஸ்ரீதர் ஏதாவது கிண்டலாகச் சொல்வானோ எனத் தயங் கியபடி அவனைப் பார்த்தாள் ஷண்மதி.

ஆனால், ''அதுதான் அம்மா சொல்கிறார்களே! உட் காருவதற்கென்ன?'' என்று எரிச்சல் மறையாத குரலி



லேயே அவன் கூறவும் தன்னை மீறி முகம் இளக அமர்ந் தாள் அவள்.

திருஷ்டி சுற்றிய தேவகியையும், ''இப்பொழுது எழுந் திருக்கலாம்'' என்று புன்னகைத்த வாசுதேவனையும் மனம் நெகிழ நோக்கினாள் ஷண்மதி.

அச்சிறு செய்கை தன் மீது அவர்களுக்கிருந்த அன் பையும் அக்கறையையும் உணர்த்த, ''தேங்க் யூ அத்தை'' என்றாள் உள்ளம் நெகிழ.

''அத்தையா?'' என்று கேட்ட ஸ்ரீதர் திகைப்பும், கண் டனமுமாகத் தாயை நோக்கினான்.

நமட்டுச் சிரிப்புடன், ''கோபப்படாதே ஸ்ரீதர்! அவளது தூரத்துச் சொந்தத்தில் ஓர் அத்தை அச்சு அசலாய் என் னைப் போலவே இருப்பார்களாம். என்னைப் பார்த்தாலே அவர் ஞாபகம் வருவதாக ஷண்மி சொல்லவும், 'சரி என் னையும் எப்படியே கூப்பிட்டுக் கொள்' என்று விட் டேன்'' என்று தேவகி சமாளிக்கவும் வந்த சிரிப்பை அடக்கியபடி வேறு புறம் பார்த்தாள் ஷண்மதி.

''ஓஹோ...!'' என்றான் ஸ்ரீதர் வெற்றுக் குரலில்.

அந்த ஒற்றை வார்த்தையிலேயே தன் தாயின் பேச்சில் ஓர் எழுத்தைக் கூட அவன் நம்பவில்லை என் றுணர்ந்த ஷண்மதி இனி நின்றால் வம்பு என்றெண்ணி, ''பை வினு கண்ணா! பை அங்கிள்!'' என்றபடி நழுவப் பார்த்தாள்.

ஆனால் வாசுதேவனோ, ''ஷண்மி! என்னை மட்டும் அங்கிள் என்கிறாயே! நன்றாக யோசித்துப் பாரேன், உன் தூ...ரத்து சொந்தத்தில் என் ஜாடையில் உனக்கு மாமா யாருமில்லையா'' என வெகு சோகமாகக் கேட்கவும், விழி கள் பளிச்சிட, ''ஏன் இல்லை உங்களைப் போலவே ஒரு

மாமா நெருங்கிய சொந்தத்திலேயே இருக்கிறார். உங்களைப் பார்த்தால் அவரைப் பார்க்க வேண்டாம். அவரைப் பார்த்தால் உங்களைப் பார்க்க வேண்டாம். அவ்வளவு ஜாடை ஒற்றுமை! சரி மாமா! நான் கிளம்புகிறேன்'' என்று குறும்புக் குரலில் விடைபெற்றுச் சிரித்தவள் ஸ்ரீதர் உஷ்ணத்துடன் முறைத்த முறைப்பை கண்டு கப்பென்று சிரிப்படங்க, உதி நீட்டிய மைசூர்பாகு பாக்ஸை பெற்றுக் கொண்டு நைஸாக நழுவி விட்டாள்.

# 15



''ஆனாலும் இதை நான் சுத்தமாய் எதிர்பார்க்கவே இல்லை'' என்ற ப்ரியங்காவை வியப்புடன் நோக்கினாள் ஷண்மதி.

''எதை எதிர்பார்க்கவில்லை?''

''உன் புராஜெக்ட் கைட் பாலாசார் என்பதைத்தான்'' என்றாள் ப்ரியங்கா.

சாம்பவியும் தொடர்ந்து, ''ஷண்மி! நீ ஸ்ரீதர் சாரை கைட் பண்ண முடியுமாவென்று கேட்டுப் பார்த்திருக்கலாம்டி. நல்ல கோல்டன் ஆபர்சூனிட்டியை மிஸ் பண்ணி விட்டாய்'' என்றாள் குரலில் குறையோடு.

லஞ்ச் டைம் என்பதால் வகுப்பே கிட்டத்தட்ட காலியாக இருந்தது.

லேப் டாப்பை மூடி வைத்துவிட்டு, டெஸ்க்கில் கைகளை ஊன்றி அவர்களை முகத்தில் நகை இலங்க நோக்கினாள் ஷண்மதி.



''இப்படிப் பார்த்தால் என்னடி அர்த்தம்?''

''படிப்பு எனக்கு மிகவும் முக்கியமென்று அர்த்தம்'' என பளிச்சென்று பதில் கூறிய ஷண்மதி, ''என் ப்ரியமான காயே! நான் எடுத்துக் கொண்டிருக்கும் புராஜெக்ட் வேஃப் கான்செப்ட்டை அடிப்படையாகக் கொண்டது. இந்த புராஜெக்ட்டிற்கு பாலாசார் கைடென்ஸ் தான் கரெக்ட்டென்று எச்.ஓ.டி.யே சொல்லி விட்டார்.

பிறகென்ன... படிப்பு விஷயத்தில் அதற்குரிய இம்பார்ட்டென்ஸ் எந்தவிதத்திலும் குறைய நான் விடமாட்டேன். உண்மையிலேயே இந்த புராஜெக்ட்டில் எங்கள் டீமிற்கு பாலா சாரின் கைடென்ஸ் ரொம்பவும் வேல்யூபிளாக இருக்கிறது'' என்று நிம்மதியோடு அறிவித்தாள் ஷண்மதி.

கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த சுவாதி வேண்டுமென்றே ஷண்மதியிடம், ''ஒருவேளை ஸ்ரீதர் சாரிடம் கேட்டு அவர் மறுத்து விட்டாரோ என்னவோ?'' என்றாள் கிண்டலாக.

அவளை அமைதியாக நோக்கினாள் ஷண்மதி.

''இவ்வளவு நாள் ஸ்ரீதரிடம் படித்தும் உனக்கு அவரைப் பற்றிப் புரியவில்லையே சுவாதி. என் புராஜெக்ட்டிற்கு அவரது கைடென்ஸ் தேவையாயிருந்து, அவரை கைட் பண்ண சொல்லி கேட்டிருந்தால் கண்டிப்பாக ஒத்துக் கொண்டிருப்பார். படிப்பு விஷயத்தில் தன் சொந்த விருப்பு வெறுப்புகளை நுழைப்பவர் அவரில்லை. தெரிந்து கொள்!'' என்று குரலில் அழுத்தத்துடன் கூறினாள் ஷண்மதி.

ஷீத்தல் குறுக்கிட்டு, ''அவள் கிடக்கிறாள் விடு ஷண்மி. அவள் கேரக்டர் அவ்வளவுதான். ஒதுக்கித் தள்ளு. நீ நேற்றே லைப்ரரிக்கு போக வேண்டுமென்றாயே. வா போகலாம்

எனவும் சுவாதியை திரும்பியும் பாராமல் நால்வரும் சென்றனர்.

பின்னர் வந்த நாட்கள் மின்னல் விரைவில் மறைந்து போக, புராஜெக்ட்டிற்கான வைவா நெருங்கிக் கொண்டிருந்தது.

அன்று ஷண்மதி கொண்டு வந்து காட்டிய டாக்குமெண்டேஷனின் புரூப்பை சரி பார்த்த பாலா, அதில் கரெக்ஷன்ஸ் சொல்லச் சொல்ல பேப்பரில் குறித்துக் கொண்டாள் ஷண்மதி.

டாகுமெண்டேஷனை மூடி அவளிடம் நீட்டிய பாலா, ''ஓகே ஷண்மதி! இந்த கரெக்ஷன்ஸ் சரி செய்து கொண்டு வந்து காட்டுங்கள். பிறகு டீம் மெம்பர்ஸ் எல்லோர்க்கும் சேர்த்து மெயின் காப்பிஸ் ரெடி செய்யலாம்'' என்றவன்,

தொடர்ந்து, ''பட்... நாளை நான் லீவ். நாளன்னிக்குத்தான் வருவேன்...'' என யோசனையுடன் நிறுத்தினான்.

''சார்! நாளன்னிக்குத்தானே எல்லோரையும் டாகுமெண்டேஷனை சப்மிட் பண்ணச் சொல்லியிருக்கிறார் எச்.ஓ.டி. அன்றே அவரும் சைன் பண்ணுகிறாரே! நாளைக்கே புரூப் பார்த்து விட்டு மெயின் காப்பிஸ் ரெடி பண்ணியாக வேண்டுமே'' என்றாள் கவலையோடு.

''நத்திங் டு வொர்ரி ஷண்மதி. நான் சொன்னேனென்று சொல்லி ஸ்ரீதரிடம் காட்டி வெரிபை பண்ணிக் கொள்ளுங்கள். ஜஸ்ட் அலைன்மெண்ட் கரெக்ஷன்ஸ்தானே. அவன் பார்த்து கொடுத்து விடுவான்.

''சார்! அதை நீங்களே அவரிடம் இன்று சொல்லி விடுங்கள் சார். நாளைக்கு ஸ்ரீதர் சார். அவரோட பேட்ச்சுக்கு கரெக்ஷன்ஸ் பார்த்து சைன் பண்ண வேண்டும். நாங்கள் போய் கேட்டு 'பிஸி' என்றுவிட போகிறார்.''



''நோ ப்ராப்ளம். நானே சொல்லி விடுகிறேன்'' என்றபடி எழுந்தவன் ஸ்ரீதரின் கேபினுக்குச் சென்று விஷயத்தைச் சொல்லவும் ''ஓ.எஸ்!'' என்று புன்னகையோடு ஒப்புக் கொண்டான் அவன்.

''இப்ப திருப்தியா?'' என ஷண்மதியிடம் சிரித்த பாலா, ''புராஜெக்ட்டில் எந்த டவுட்டென்றாலும் எப்பொழுது வேண்டுமானாலும் கால் பண்ணலாம் ஷண்மதி'' எனவும்.

''தேங்க் யூ சார்'' என்றாள் ஷண்மதி.

மறுநாள், லேப்பிற்கு அவனை தேடிச் சென்றவள், தன் பேட்ச் ஸ்டூடண்ட்ஸ் சுற்றி நிற்க கம்ப்யூட்டர் முன்பு அமர்ந்து அவன் சீரியஸ் டிஸ்கஷனில் இருப்பினும் பார்த்து தொந்தரவு செய்யாமல் திரும்ப முற்பட்டாள்.

அதற்குள் அவளைக் கண்டு விட்டவன், ''ஷண்மதி உள்ளே வா! ஒரு டென் மினிட்ஸ் வெயிட் பண்ணு. இதை முடித்துக் கொடுத்து விட்டு வந்து விடுகிறேன்'' எனவும் ''சரிதான்'' என்றபடி அமரப் போனவளை அசோக்கும், ராகவ்வும் அழைத்தனர்.

''ஏய் ஷண்மி! வந்து எங்கள் புராஜெக்ட்டை பார். எவ்வளவு சூப்பராக வந்திருக்கிறதென்று'' என பீற்றவும் தானும் போய் நின்று பார்த்தவள் ''பரவாயில்லையே'' எனப் பாராட்டினாள். ராகவ் ரொம்பப் பெருமையாய் ஷர்ட் காலரை தூக்கி விடவும் ''எவ்வளவு பணம் கொடுத்துடா இதை வாங்கினீர்கள்?'' என அமர்ந்திருந்த ஸ்ரீதரின் காதில் விழாதபடி மெல்லிய குரலில் குறும்பும் கிண்டலுமாகக் கேட்கவும் அவள் தலையில் குட்டினான் அவன்.

''நாங்கள் ஏன் வாங்கப் போகிறோம். எங்கள் கைட் சூப்பராக்கும். நாங்களே சொந்தமாக செய்தோமாக்கும்'' என்று பெருமை போலக் கூறினான் அவன்.

''ஐஸ்! ஐஸ்! சார் ராகவ் உங்களுக்கு ஓவரா ஐஸ் வைக்கிறான்'' என்றாள் ஷண்மதி வேடிக்கையாக.

''சார்! இவள்தான் புராஜெக்டிற்கு எவ்வளவு பணம் கொடுத்தீர்கள் என்று கேட்டாள்'' என போட்டுக் கொடுத்தான் அசோக்.

புன்னகையோடு, ''அவளது டீம் புராஜெக்ட் போல் நினைத்துக் கேட்டிருப்பாள் பாவம். பெரிய மனது செய்து விட்டு விடுவோம்'' என்றான் ஸ்ரீதர்.

''ஆமாம். அதனால் விடுகிறோம். பிழைத்துப் போ பெண்ணே!'' என ராகவ் சிரித்தான்.

ஷண்மதியும் விடாமல், ''எங்கள் புராஜெக்ட் போல் நினைத்துக் கேட்டேனா? ஐயோ பாவம். அப்படி நினைக்காததால்தானே கேட்டதே!'' என்று கூறிச் சிரித்தாள்.

அவள் சிரிக்கவும் அதே டீமைச் சேர்ந்த சுவாதிக்கு எரிச்சல் வந்தது காட்டிக் கொள்ளாமல் மானிட்டரில் பார்வையை பதித்தாள் அவள்.

அதைக் கவனித்த ஷண்மதிக்கு மேலும் சிரிப்பு வந்தது.

புன்னகை முகத்தோடவே, ''ஓகே ஸ்டூடண்ட்ஸ். எல்லாம் பர்ப்பெக்ட்டாக இருக்கிறது. சுவாதியோட டென் ட்ரைவர் என்னிடமே இருக்கட்டும். மாலை வாங்கிக் கொள்ளுங்கள்'' என்றபடி எழுந்தான் அவன்.

சளசளத்தபடி அவர்கள் செல்லவும் தன் கேபினுக்கு வந்தவன் சேரில் அமர்ந்தபடி ''உன் டாகுமெண்டேஷனைக் கொடு'' என்று கை நீட்டினான்.

அதை அவன் வேகமாக பார்வையிட்டுக் கொண்டிருக்கும்பொழுதே சுவாதி அனுமதி கேட்டுக் கொண்டு உள்ளே நுழைந்தாள்.



''சார்! எல்லா காப்பியும் ரெடி. உங்கள் சிக்னேச்சர் மட்டும்தான் பாக்கி'' என்றாள்.

''டேபிளில் வைத்துவிட்டு போங்கள் சுவாதி. சைன் பண்ணி வைக்கிறேன். ஓர் அரை மணி நேரம் கழித்து வந்து எடுத்துக் கொள்ளுங்கள்'' எனவும் ''சரி சார்'' என்றபடி டேபிளில் வைத்துவிட்டு அவள் அகலவும் சட்டென்று ஷண்மதி முகம் பளிச்சிட்டது.

அதை கவனித்தவன் என்னவென்பதுபோல் கேள்வியாய் ஏறிடவும், ''நத்திங் சார்'' என்று தலையசைத்தாள் அவள்.

பக்கங்களில் வேகமாகப் பார்வையை ஓட்டியவனை உள்ளூர குறுகுறுப்புடன் நோக்கினாள் அவள்.

எல்லா மாணவர்களையும் வாங்க, போங்க என்றழைப்பது அவனுக்கு மட்டுமல்லாமல் அந்த டிபார்ட்மெண்ட்டில் எல்லா லெக்சர்களுக்கும் வழக்கம் தான். ஆனால் தன்னை மட்டும் அவன் வா, போ என ஒருமையில் அழைப்பதை எண்ணும்பொழுது மனதினுள் ஓர் உற்சாகம் தோன்றுவதை அவளால் தடுக்க இயலவில்லை.

கூடவே மூளையும், 'ரொம்ப சந்தோஷப்படாதே. உன்னைப் போல அவனிடம் டோஸ் வாங்கியதும் வேறு யாருமில்லை. அடிக்கடி திட்டிய பழக்கத்தில்கூட அவன் ஒருமையில் அழைத்திருக்கலாம்' என்று கரெக்ட்டாக தன் வேலையைச் செய்யவும் 'நம் மூளையே நம்மைக் கலாய்க்கிறதே' என எண்ணிய மாத்திரத்தில் ஷண்மதிக்குச் சிரிப்பு வந்து விட்டது. கூடவே 'ஆனால்.. பர்ஸ்ட் டைம் லிப்ட் தரும் பொழுதே அவன் ஒருமையில்தானே அழைத்தான்' என தனக்குள்ளே கூறிக் கொண்டாள். உடனே 'ஆமாம். அப்பொழுதுதான் சிறு பிள்ளைத்தனமாக குருவியை வேடிக்கைப் பார்த்து அவனிடம்

மாட்டிக் கொண்டாமே' என மூளை மறுபடியும் எச்சரிக்க தனக்குள் புன்னகைத்துக் கொண்டாள் ஷண்மதி.

''ஹார்ட்வேர் ரெக்யூர்மெண்ட்ஸில் ஹார்ட்டிஸ்க் ஃபார்ட்டி ஜி.பி.தானே... கேபி என்று தப்பாக பிரிண்ட் டாகி இருக்கிறது பார்'' என்றபடி நிமிர்ந்தவன் ''ஷண்மதி'' என அழுத்தம் தந்து அழைக்கவும் திடுக்கிட்டுக் கலைந்தாள் அவள்.

''ஸா... ஸாரி சார்! என்ன சொன்னீர்கள்?''

''ம்... பிஸிக்கல் ப்ரெசெண்ட் பட் மெண்ட்டலி ஆப்சென்ட்'' என்று அவளைக் கிண்டலாகக் கேட்டவன் அவள் சற்று கெஞ்சுவதுபோல் நோக்கவும், ''கரெக்ஷன் இது மட்டும்தான். வேறு ஒன்றுமில்லை'' என்று டாகுமெண்டேஷனை அவளிடம் நீட்டவும் வாங்கிக் கொண்டு, ''தேங்க் யூ சார்'' என்று பளிச் புன்னகையோடு சென்றாள் அவள்.

வெளியே அவளுக்காக காத்திருந்த ப்ரெண்ட்ஸ், ''முகத்தைப் பார்த்தால் பெரிய அளவில் டோஸ் ஒன்றும் கிடைக்கவில்லை போல'' என்று கேலியாகக் கேட்டுச் சிரிக்கவும்,

''கொழுப்புடி உங்களுக்கு'' என்றபடி அவளும் இணைந்து நகைத்தாள்.

## 16



**மரத்தடியில் தனியே அமர்ந்திருந்தாள் ஷண்மதி. தன்னுடைய கல்லூரியில், மாணவியென்ற நிலையில் அவளது நாட்கள் அன்றுடன் முடிவடையப் போகின்றன.**



மனம் இனம் புரியாத பாரத்தில் சோர்வுற, முகம் வாடி அமர்ந்திருந்தாள் அவள்.

''ஏய் ஷண்மி! உன்னை எங்கேயெல்லாம் தேடுவது? அங்கு போட்டோஸ்க்கு நிற்காமல் இங்கு வந்து அமர்ந்திருக்கிறாயே'' என கடிந்து கொண்டே வந்த அவளது வகுப்பு தோழியர் அவளருகில் அமர்ந்தனர்.

அவளது வாடியிருந்த முகம் கண்டு, ''ஏய் ஷண்மி! வாட் இஸ் திஸ்? நாம் யாரும் பிரியப் போவதில்லை. நம் செட் எல்லோரும் எப்பவும் டச்சில்தான் இருக்கப் போகிறோம். அப்புறமென்ன... வா! வா! நம் க்ளாஸ் முழுவதும் அங்கே வெய்ட் செய்கிறார்கள்'' என இழுத்துக் கொண்டு கிளம்பினர்.

தன்னைச் சுதாரித்துக் கொண்டவளாக அனைவரிடமும் சிரித்துப் பேசிக் கொண்டிருந்தாலும் அவளது உள் மனதின் போராட்டம் அவளது உயிர் தோழிகளான மூவருக்கும் நன்கு புரிந்தது.

இனி ஸ்ரீதரை தினமும் சந்திக்கும் வாய்ப்பையும் அல்லவா ஷண்மதி இழக்கப் போகிறாள். அதை நினைத்து அவளது இதயம் வேதனையில் வாடுவதை அவர்களால் உணர முடிகின்றது. ஆனால் அவளது அன்பின் எதிரொலி ஸ்ரீதரிடம் காணப்படவேயில்லை, என்பது தானே கசப்பான உண்மை. அதை எண்ணி மனதினுள் ஷண்மி படும் தவிப்பும் அவர்களுக்கு புரிய, 'ச்சே! இவ்வளவு பணம் கொட்டிக் கிடந்தும் அதற்குரிய திமிரோ, தலைகனமோ சற்றும் இல்லாமல் கோபமென்பதே தெரியாத, பிறர் மனதை வருத்திக்கூட பேசியறியாத அவர்களது அருமை ஷண்மி வேதனைப்படும்படி ஆகிவிட்டதே' என அவர்களுக்கும் வருத்தமாக இருந்தது.

பிரியாவிடை பெற்றுக் கொண்டு மற்றவர்கள் கிளம்பிச் செல்லவும் கூட்டம் கலையலாயிற்று.

ஆறுதலாக அவளைச் சுற்றி நின்றிருந்த மூவரும் மௌனமாகவே அவளது கரத்தைப் பற்றியபடி நின்றிருந்தனர்.

நீடித்த மௌனத்தையும் சகிக்க மாட்டாமல், ''ஷண்மி! எப்பவும் தைரியமும், நம்பிக்கையுமாக இருப்பாயே, இப்பொழுது என்னவாயிற்று உனக்கு?'' என சாம்பவி வினவவும் சற்று நேரம் பதிலே பேசவில்லை ஷண்மதி.

பிறகு மெல்ல பெருமூச்சு விட்டு, ''தெரியவில்லையே பவி! ஆனால் ஒன்று மட்டும் தெரிகிறது. இந்த வேதனையை என்னால் தடுக்க முடியவில்லை என்பது மட்டும் தெரிகிறது'' என்றாள்.

''சரி! இப்பொழுது என்ன செய்யப் போகிறாய் ஷண்மி?''

இதற்கும் உடனடியாக அவள் பதிலளிக்கவில்லை. புருவம் சுளிக்க ஏதோ தீவிர யோசனையில் ஆழ்ந்தவள் பிறகு நிதானமான குரலில் அறிவித்தாள்.

''இன்றே ஸ்ரீதரிடம் பேசப் போகிறேன்.''

''இன்றேவா?''

''ஆமாம். இன்றேதான். இந்த டென்ஷனில் இருந்து விடுபட்டே தீர வேண்டுமானால் எனக்கு வேறு வழியில்லை. ஸ்ரீதர் நாளை பேப்பர் பிரசெண்ட்டேஷனுக்காக சிங்கப்பூர் செல்கிறார். திரும்பி வர ஒரு வாரமாகும். எனவே எதுவானாலும் சரி, அவர் மனதில் என்னதான் இருக்கிறதென்று கேட்டு விடுவதே மேல்'' என்றாள் அவள் உறுதியோடு.

காலேஜ் என்ட்ரென்ஸை தாண்டி பஸ் ஸ்டாண்டிலிருந்து சற்று தள்ளி தன் கார் மீது சாய்ந்தவாறு நின்றிருந்த ஷண்மதி ஸ்ரீதரின் கார் வருவதைக் கண்டு,



காரினுள் அமர்ந்திருந்த தோழிகளிடம் தலையசைத்து விட்டு சட்டென சாலையின் அருகே வந்து கையாட்டி அவனது காரை நிறுத்தினாள் ஷண்மதி.

காரை நிறுத்திய ஸ்ரீதரிடம், ''சார்! ப்ளீஸ்! உங்களிடம் சற்று பேச வேண்டும்'' என்றாள் தணிவாக.

புருவம் சுளித்து மறுத்துப் பேச வாயெடுத்தவனிடம், ''சார்! ப்ளீஸ்! ரொம்பவும் முக்கியமாகப் பேச வேண்டும். அதற்காகவே இவ்வளவு நேரமாக இங்கு காத்திருக்கிறேன்'' என்று கூறவும் சற்று சரிந்து அவள் புற கார்க் கதவைத் திறந்து விட்டான் அவன்.

அவள் ஏறி அமர்ந்ததும் மீண்டும் காரை ஓட்டியபடி, ''என்ன விஷயம் சொல்?'' என்றான் அவன் சுருக்கமாக.

ஒரு நீண்ட மூச்சை உள்ளிழுத்து வெளியிட்டவள், ''சார்! நான் சொல்வதைக் கோபப்படாமல் காது கொடுத்து கேட்டுவிட்டு, நன்றாக யோசித்துவிட்டு பதில் சொல்லுங்கள். முன்பு ஒரு முறை இதைப் பற்றி நான் பேசிய பொழுது, 'என் மாணவியான நீ இப்படிப் பேசுவது சரியில்லை' என்றீர்கள். அது சரியென்ற காரணத்தினாலேயே இன்றுவரை நானும் அதைப்பற்றி பேச்செடுக்கவில்லை. ஆனால் இன்று நான் உங்களிடம் படித்துக் கொண்டிருக்கும் மாணவியல்ல. உங்களிடம் படித்த மாணவிதான். சோ... இனி டிபார்ட்மெண்ட்டிற்கோ, நம் பெயருக்கோ எந்த கெட்ட பெயரும் ஏற்படாது. எனவே அன்றைய என் கேள்வியையே இப்பொழுதும் உங்கள் முன் வைக்கிறேன். நீங்கள் ஏன் எனக்கு ஒரு நல்ல பதிலைச் சொல்லக் கூடாது?'' என்று தெளிவாக, நிதானமாகக் கேட்டு விட்டு அவன் முகத்தை ஆவலோடு நோக்கினாள் அவள்.

சில நிமிடங்களில் காரில் நிசப்தமே ஆட்சி புரிந்தது. பொங்கி வந்த கோபத்தை அடக்கிக் கட்டுக்குள் கொண்டு வந்தான் ஸ்ரீதர்.

''இதற்கான பதில் இவ்வளவு நாட்களில் உனக்கு என்றோ புரிந்திருக்க வேண்டுமே! புரியவில்லையென்றா சொல்கிறாய்?'' என்று வெகு கிண்டலாக ஒலித்த அவனது குரலைக் கேட்டு, ''ஸ்ரீதர்'' என திகைத்தாள் ஷண்மதி.

சற்று நேரம் அவன் ஒன்றும் பேசவில்லை. மீண்டும் பேசத் தொடங்கியபொழுது அவனது குரலில் அடக்கிய ஆத்திரமே தென்பட்டது.

''போதும்! திட்டமிட்டு என் வீட்டினுள் நுழைந்து என் குடும்பத்தினர் அனைவரையும் நீ வசப்படுத்தியிருக்கலாம். அவர்களும் உன்னைத் தூக்கி வைத்துக் கொண்டு ஆடலாம். பட்... என்னிடம் இதெல்லாம் எடுபடாது. அப்பொழுதே... நீ வருவதைத் தடுக்க அவர்களிடம் எவ்வளவோ எடுத்துச் சொன்னேன். உன் நடிப்பில் ஏமாந்து என் பேச்சை அவர்கள் காது கொடுத்துக்கூட கேட்கவில்லை. ஆனால் உன் நடிப்பில் ஏமாறும் ஏமாளி நானல்ல'' என்றான் அவன் மிகக் கடுமையான குரலில்.

திகைப்பு அதிகமாகியது ஷண்மதிக்கு. அவளறிந்த வரையில் ஸ்ரீதருக்கு சிரித்த முகம். மற்ற மாணவர்களிடம் அவன் கண்டிக்கும் பொழுது கூட கோபப்பட்டுப் பார்த்ததில்லை. அதனாலேயே மாணவர் மத்தியில் அவனுக்கு செல்வாக்கு அதிகம். அதே சமயம் அவனுக்கு கோபம் வராதென்று எண்ணி எச்செயலையும் செய்து விடவும் முடியாது. அவனது முகம் சற்று மாறினாலே தவறு செய்தவர் தன் தவறுக்காக வருந்தி மீண்டும் அத்தவறை செய்யாமல் இருப்பதை ஷண்மதி பலமுறை



கவனித்திருக்கிறாள். கவனித்து உள்ளூர அவனைப் பாராட்டியிருக்கிறாள். அவள் மட்டும்தான் பலமுறை அவனிடம் திட்டு வாங்கியிருக்கிறாள். ஆனால் அப்பொழுது கூட அவளது தலையில் குட்டு வைப்பது போல்தான் வார்த்தை பிரயோகம் இருக்குமே தவிர இவ்வளவு கடுமையான வார்த்தைகளையோ, இவ்வளவு அதிகமான கோபத்தையோ அவனிடம் கூட அவன் காட்டியதேயில்லையே.

குழப்பத்துடன் அவனைப் பார்த்தபடி, ''நடிக்கிறேனா? என்ன உளறுகிறீர்கள்?'' என்று புரியாமல் கேட்டாள் ஷண்மதி.

அதிகரித்த கோபத்தோடு தன் பி.எம்.டபிள்யூவை ஓரமாக ஒதுக்கி நிறுத்தினான் ஸ்ரீதர்.

சற்று திரும்பி அமர்ந்து அவளை நேராக நோக்கிய அவனது விழிகள் சினத்தில் பளபளத்தன.

''நடிக்கவில்லையா? எங்கே உன் மனசாட்சியை தொட்டுச் சொல், நீ நடிக்கவில்லையென்று!''

அவளுக்கும் இலேசாகக் கோபம் வருவது போல் இருந்தது.

''நான் ஏன் நடிக்க வேண்டும்?'' என்று அன்றுவரை யாரிடமும் பேசி அறியாத ஏளனத் தொனியில் கேட்டாள் அவள்.

அவளை விட ஏளனக் குரலில் அவன் பதில் சொன்னான்.

''இதோ இதற்காக!'' என அவன் சுட்டிக் காட்டிய இடத்தில் பார்வையை பதித்தவள் மீண்டும் திகைத்துப் போனாள்.

ஏனெனில் அவனது வலது கை சுட்டு விரல் அவளது இடது கை மோதிர விரலை சுட்டிக் காட்டியது.

# 17



அவனை குழப்பமும் திகைப்புமாக ஏறிட்டவள், ''இன்னமும் எனக்குப் புரியவில்லை'' என்று விஷயம் விளங்காதவளாக வினவவும் அவன் முகம் கோபத்தில் சிவந்தது.

''ஆனால் எனக்கு நன்றாகப் புரிகிறது பெண்ணே! இன்னமும் விஷயம் புரியாதவளாய் நீ ஏன் நடிக்கிறாய் என்பதும் எனக்கு நன்றாகவே புரிகிறது. என்னிடமே, 'தோல்வி எனக்குப் பழக்கமில்லாத ஒன்று' என்றவள் தானே. இப்பொழுது முதன் முதலாக தோல்வியை எதிர்கொள்ளப் போகும் பயம். எப்படியாவது தோல்வியைத் தவிர்க்கும் முயற்சியாக இன்னமும் நடிப்பை விடாமல் புரியாதது போல் பாவனை செய்து என்னை ஏமாற்றப் பார்க்கிறாய். அப்படித்தானே! ஆனால் இன்று உன் தோல்வி நிச்சயம். காலேஜ் முடிவதற்குள் என்னை உன்னிடம் ப்ரபோஸ் பண்ண வைக்கிறேனென்று வீரமாக நீ போட்ட பந்தயத்தில் பரிதாபமாக தோற்கப் போகிறாய் என்றுமே கழற்றாத உன் அருமை பொக்கிஷமான தாயாரின் மோதிரத்தையும் இழக்கப் போகிறாய்'' என வெகு கிண்டலாகக் கூறி அவள் தலையில் குண்டைப் போட்டான் அவன்.

இவன் என்ன சொல்கிறான் என மீண்டும் குழம்பினாள் ஷண்மதி. அவளுக்கு சுத்தமாய் நினைவில்லை., இவனை ப்ரபோஸ் பண்ண வைப்பதாய் பந்தயம்



போட்டோமா... என குழப்பத்துடன் யோசித்தவள் சட்டென்று ஹைவோல்டேஜ் மின்சாரம் பாய்ந்தது போல் அதிர்ந்து போனாள்.

கடவுளே! அவனைப் பார்த்த முதல் நாள் விளையாட்டாய் அவள் பேசிய பேச்சு.

பேசிய மறுகணமே மறந்து போன பந்தயம். விளையாட்டாய் பேசியது இப்படி வினையாக வந்து முடியுமென அவள் சத்தியமாக எதிர்பார்க்கவில்லை.

அதற்கு மேல் சிந்திக்க இயலாதவளாக இடிந்து போய் அமர்ந்திருந்தாள் அவள்.

அவளைப் பார்த்துக் கொண்டிருந்தவன், ''எனக்கு விஷயம் வெட்ட வெளிச்சமாகி விட்டதேயென்ற அதிர்ச்சியா அல்லது வாழ்வில் முதன் முறையாகத் தோல்வியை சந்திக்கப் போவதால் இப்படி இடிந்து போய் விட்டாயா?'' என்று ஏளனமாகக் கேட்டான்.

எதிர்பாராத அதிர்ச்சியில் நிலைகுலைந்து போயிருந்தவள் அவனது ஏளனக் குரலில் உசுப்பப்பட்டு சுய நிலைக்கு வந்தாள்.

''உங்களுக்கு எப்படித் தெரியும்?'' என மெல்லிய குரலில் பிரயாசையோடு வினவினாள்.

அன்றைய பேச்சை அவனே கேட்டிருக்க வேண்டும். ஆனால் அது எப்படிச் சாத்தியமாகக் கூடும். அவனே செகண்ட் அவர்தான் வந்தான். அல்லது தங்கள் குரூப்பைத் தவிரவும் அப்பொழுது அங்கிருந்த வேறு யாரோ க்ளாஸ் மேட் சொல்லியிருக்க வேண்டும். ஆனால் அதற்கும் சாத்தியக் கூறுகள் ரொம்பவும் குறைவு.

''அது உனக்கு அவசியமில்லாதது'' பளிச்சென வந்தது அவன் பதில்.

அதற்குள் தன்னை ஓரளவு சுதாரித்துக் கொண்டவள், ''ஸ்ரீதர்! நான் சொல்வதை நம்புங்கள். நாங்கள் சும்மா விளையாட்டுக்குத்தான் அப்படி பேசி...'' முடிக்கும் முன் ஆத்திரத்துடன் இடையிட்டான் அவன்.

''விளையாட்டாக... எதில் விளையாட்டு என்றில்லையா? அறிமுகமே இல்லாத ஒருவனை உங்கள் விளையாட்டுக்காக அவன் பின்னால் சுற்றி அவனை காதலிப்பது போல் ஏய்த்து, அவனை உங்கள் பின்னால் அலைய வைப்பது உங்களுக்கு வேடிக்கையா? ச்சேச்சே! எனக்கு அருவெறுப்பாக இருக்கிறது. ஷண்மதி உண்மையைச் சொல்! மனதிலே விருப்பமேயில்லாமல் வெறும் வாய்மொழியில் என்னைக் காதலிப்பதாகக் கூற உனக்கு வெட்கமாக இல்லை. அதிகமான அழகு, அறிவு, பணம் இதெல்லாம் இருந்து விட்டால் இப்படித்தான் விளையாட்டாய் ஒருவர் பின் சுற்றி கடைசியில் அவனையே விளையாட்டுப் பொருளாக்குவாயா? எந்தளவிற்கு சென்றாய். கவிதை எழுதுவது, ட்ராமா செய்து என் வீட்டிற்குள்ளேயே நுழைவது... ஜெயிக்க வேண்டுமென்பதற்காக நீ எந்தளவிற்கும் சென்றாய்'' என அவன் படபடக்க,

''போதும்! நிறுத்துங்கள்'' என சீறினாள் ஷண்மதி. அவனை முறைத்தவன், ''உள்ளதை சொன்னால் உடம்பு எரிகிறதோ'' என்றபடி காரை ஸ்டார்ட் செய்தான் ஸ்ரீதர்.

அவளது காரருகே தன் காரை நிறுத்தியவன், ''போய் உன் பந்தய பட்டாளத்திடம் சொல்லு. வாழ்வில் முதன் முறையாக நீ தோற்றுவிட்ட செய்தியைச் சொல்லு'' என்றபடி காரை மின்னலென ஓட்டிக் கொண்டு சென்று விட்டான்.

சிலையாக நின்றிருந்தாள் ஷண்மதி.



## 18



இரவு உணவை மறுத்துவிட்டு தன்னறைக்கு வந்து சேர்ந்தாள் ஷண்மதி.

பிஸினெஸ் பார்ட்டி என்பதால் அப்பா வீடு திரும்ப நேரமாகும். இல்லையென்றால் அவள் முகத்தைப் பார்த்ததுமே பதறிப் போயிருப்பார்.

சோர்வுடன் கட்டிலில் அமர்ந்தாள் ஷண்மதி. உள்ளமோ புயல் வந்த கடலாய் கொந்தளித்துக் கொண்டிருந்தது.

ஸ்ரீதரின் பாராமுகத்திற்கு இப்படி ஒரு காரணமிருக்கும் என்பதை அவள் கனவில்கூடக் கருதவில்லையே.

வேடிக்கையாய் பேசிய பேச்சினால் இப்படியொரு விபரீதம் நேருமென அறியாது பேசி விட்டாளே!

ஆனால் கல்லூரியில் இப்படி விளையாட்டாய் பேசுவது சகஜம்தானே. அவனும் கல்லூரியில் படித்தவன் தானே. அவளது பேச்சை இவ்வளவு சீரியஸாக எடுத்துக் கொள்ள வேண்டுமா?

சீரியஸாக எடுத்துக் கொண்டது மட்டுமின்றி அவளை மிகவும் மட்டமான பெண்ணாக நினைத்து விட்டானே!

அதைத்தான் அவளால் தாங்க முடியவில்லை. யாரை தன் மனதில் மிக உயர்வாக மதித்திருந்தாளோ... அவனது பார்வையில் அவள் மிகவும் கீழான பெண்ணாக கருதப் பட்டு விட்டாளே!

ஆனால் ஸ்ரீதரால் எப்படி முடிந்தது? தன்னை இவ்வளவு கேவலமாக... மனதில் திரைப்போட்டு வாயளவில் போலியாக ஒருவன் மீது காதலை தெரிவிக்கும் கீழான பெண்ணாக தன்னை எப்படி நினைக்க முடிந்தது? கிட்டத்தட்ட ஒரு வருடம் அவனிடம் படித்தவள் தானே. அவளது இயல்பு அவனுக்கு புரியாமல் போனது ஏன்?

முதல் கோணல் முற்றும் கோணல் என்பது போல் ஆரம்பத்தில் எண்ணிய தவறான அபிப்ராயமே கடைசி வரை நிலைத்து விட்டதே.

உண்மையான நேசத்தோடு செய்யப்பட்ட செயல்கள் யாவுமே அவனது கண்ணோட்டத்தில், கேவலம் பந்தயத்தில் ஜெயிக்க அவளாடும் நாடகமாக அல்லவா பட்டிருக்கிறது.

தனது கவிதையை படித்தபொழுதும் தன் மனதை தெரிவித்த பொழுதும்... அவன் தன்னைப் பற்றி என்ன எண்ணியிருப்பான். பெட்டில் வின் பண்ண இந்தளவிற்கு இறங்குகிறாளே என்றுதானே எண்ணியிருப்பான் என்பதை நினைக்கும் பொழுது அவளுக்கு அவமானத்தில் உயிரே போவது போல் இருந்தது.

தான் உயிராய் நேசித்தவன், தன்னை கீழாக கருதும்படி ஆகி விட்டதேயென எண்ணியவளுக்கு அதற்கு மேல் தன்னை கட்டுப்படுத்திக் கொள்ள முடியவில்லை.

நினைவறிந்த நாளாய் அழுதே அறியாத அவள் வேதனை தாங்க முடியாமல் தலையணையில் முகம் புதைத்து குமுறிக் குமுறி அழுதாள்.



# 19



காலிங்பெல் சத்தம் கேட்டு கதவைத் திறந்த தேவகி அவ்வளவு காலையில் அங்கு ஷண்மதியை சற்றும் எதிர்பார்க்காமல் திகைத்துப் போனவரென்றால் அதைவிட திகைப்பை அளித்தது அவளது கோலம்.

ஏதோ வேலையாய் ஹாலுக்கு வந்த உதயாவும் தன் பங்குக்கு திகைத்து நின்றாள்.

''ஸ்ரீதர் எங்கே?'' ஷண்மதியின் குரலில் இருந்த ஏதோவொன்று அவர்களை மேலும் திகைப்படையச் செய்தது.

சமாளித்துக் கொண்ட தேவகி, ''அவனது அறையில் இருக்கிறான்ம்மா. ஏர் போர்ட்டிற்கு கிளம்பிக் கொண்...'' மேலே அவரது பேச்சைக் கேட்க அவள் அங்கு நின்றாள் தானே.

பெயருக்கு கதவைத் தட்டிவிட்டு உள்ளே நுழைந்தாள் ஷண்மதி.

கட்டிலின் மீதிருந்த சூட்கேஸை குனிந்து அழுத்தி மூடிக் கொண்டிருந்த ஸ்ரீதர் அசைவுணர்ந்து, ''அண்ணி! எனக்கு...'' என்றபடி நிமிர்ந்தவன் சட்டென திடுக்கிட்டுப் போனான்.

கலங்கிச் சிவந்த விழிகளும், கலைந்த கூந்தலும், கசங்கிய உடையுமாய் அவளைத் தன்னறையில் அவன் சத்தியமாய் எதிர்பார்க்கவில்லை.

சில வினாடிகள் அவனையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் சட்டென குரலில் தாங்காத தவிப்புடன்,

''எப்படி ஸ்ரீதர்? எப்படி முடிந்தது உங்களால்? என்னை இவ்வளவு மட்டமாக நினைக்க எப்படி முடிந்தது உங்களால்? என்னைப் பார்த்தால் அவ்வளவு கேவலமாகவா தோன்றுகிறது? பந்தயத்திற்காக ஒருவன் பின் சுற்றும் பெண்ணாகவா தெரிகிறேன். கேவலம் ப்ரெண்ட்ஸிடம் போட்ட சவாலுக்காக பொய்யாக ஒருவன் பின் சுற்றும் பெண்ணா நான்? சத்தியமாக இல்லை ஸ்ரீதர்! என் அப்பா என்னை அப்படி வளர்க்கவில்லை. அஃப்கோர்ஸ் நான் தோல்வியைச் சந்தித்தவள் இல்லைதான். தோல்வியை ஒப்புக் கொள்ள மறுக்கிறவள்தான். ஆனால் ஜெயிப்பதற்காக, ஒழுக்கத்தையும், உண்மையையும் உதறி வெற்றியை வாங்குபவள் நான் அல்ல. அப்படி பெறும் வெற்றியை விட தோல்வியை நேர்மையாகவும், கவுரவமாகவும் ஏற்றுக் கொள்ளும்படி வளர்க்கப்பட்டவள் நான்.

நான் ஒற்றுக் கொள்கிறேன். அன்று அப்படி பேசினேன் தான். நம்மால் முடியாதப்பா என்று ஒருவர் கூறினால், 'உன்னால் முடியாதென்று சொல், என்னால் முடியும்' என விளையாட்டாய் பந்தயம் கட்டுவோமே தவிர அடுத்த நொடியே எங்களது குரூப்பில் அப்பந்தயம் காணாமல் போய் விடும். பிறகு நான் ஜெயித்தேன், நீ தோற்றாய் என்கின்ற பேச்சே எங்களிடம் எழாது. அது போல அன்று விளையாட்டாய் போட்ட பந்தயம்தான். சத்தியமாகச் சொல்கிறேன் ஸ்ரீதர். நேற்று நீங்களாக நினைவு படுத்தும் வரை அப்பந்தயம் பற்றிய ஞாபகமே எனக்கில்லை.



வேடிக்கையாக பேசிய அன்றைய பேச்சை இன்றும் தவறென நான் நினைக்கவில்லை. எங்கள் ப்ரெண்ட்ஸுக்குள் கள்ளமில்லாமல் பேசிய பேச்சுதான் அது. ஆனால் அது உங்களை காயப்படுத்தியிருக்கும் பட்சத்தில், அது தவறான பேச்சுதான் என்று நீங்கள் குற்றம் சாட்டினால் நான் அதை ஏற்றுக் கொள்கிறேன்'' என்றவள் குரல் உடைய,

''ஆனால் ஸ்ரீதர்... அன்று நான் அப்படிப் பேசிய பொழுது எனக்கு என் ஸ்ரீதரை தெரியாது. பார்த்த உடனே என் மனதில் நீக்கமற நிறையப் போகின்ற அந்த ஸ்ரீதரை எனக்குத் தெரியாது. பேசிய கணத்தில் அந்த ஸ்ரீதர் யாரோ... பத்தோடு பதினொன்று அவ்வளவுதான். ஆனால் உங்களை சந்தித்த பிறகு...'' என நிறுத்தியவளுக்கு கண் முன் அந்த முதல் சந்திப்பு படமாய் விரிய, தொண்டையில் அடைத்த அழுகையை விழுங்கிக் கொண்டு,

''உங்களை பார்த்த பொழுது. முதல் முறையாக பார்ப்பது போலவே தோன்றவில்லை ஸ்ரீதர். ஏற்கனவே யுகம் யுகமாய் பார்த்துப் பழகியது போன்ற ஒரு நூதன உணர்வுதான் தோன்றியது. அதுமட்டுமல்ல ஸ்ரீதர், நேரில் பார்த்தேயிராத என் அம்மாவின் நினைவுதான் உங்களைப் பார்க்கப் பார்க்கத் தோன்றியது. அம்மாவிடம் கிடைக்கக் கூடிய அன்பு, அக்கறை, பாதுகாப்பு அத்தனையும் உங்களிடமிருந்து கிடைக்கப்போவது போல் ரொம்பவும் தோன்றியது. அந்த கணம் முதல் நான் உங்கள் மீது வைத்தது உண்மையான நேசம் மட்டுமே'' என்றவளுக்கு மீண்டும் விழிகளில் கண்ணீர் பொங்கி பார்வையை மறைத்தது.

பொங்கிய கண்ணீர் கன்னத்தை நனைக்க, ''ஆனால் ஒரு வருடம் உங்களிடம் படித்த உங்கள் மாணவியை புரிந்து கொள்ளவில்லையே ஸ்ரீதர் நீங்கள். எவ்வளவு சீப்பாக நினைத்து விட்டீர்கள்?

உங்களுக்கு தெரியுமா ஸ்ரீதர்? இதுவரை நினைவு தெரிந்த நாள் முதலாய் நான் அழுததேயில்லை. என் அப்பா என்னை எதற்குமே அழவிட்டதேயில்லை. ஆனால் நீங்கள் எனக்கு தோல்வியை மட்டும் அறிமுகப்படுத்த வில்லை. அழுகையையும் அறிமுகப்படுத்தி விட்டீர்கள்.

உண்மையில் நான் தோற்றுதான் போனேன் ஸ்ரீதர். என் அன்பின் எதிரொலி உங்களிடம் தெரியும் என் றெண்ணிய நான் தோற்றுதான் விட்டேன். உங்களிடம் தோற்று விட்டேன். படுபயங்கரமாக தோற்று போனேன்'' என அழுகையும் தவிப்புமாக உரைத்தவள் சட்டென கண்களை இறுக மூடி தன்னை சுதாரித்தாள்.

தன் முகத்தை அழுந்த துடைத்து விட்டு, விழிகளில் கோபக் கனல் சுடர்விட்டு தகிக்க நிமிர்ந்தவள்,

''எந்த மோதிரத்தை இழக்கக் கூடாதென்பதற்காக நான் நடித்ததாக நினைத்தீர்களோ, அந்த மோதிரத்தை என் காதல் தோல்வியின் அடையாளமாக நீங்களே வைத்துக் கொள்ளுங்கள்'' என்றவள் கண்ணிமைக்கும் நேரத்தில் அப்பவழ மோதிரத்தை உருவி அருகிலிருந்த மேஜை மீது போட்டாள்.

கோபத்தில் சிவந்து ஜொலித்த முகத்தோடு அவனை நோக்கி, ''உங்கள் மீதான என் காதல் உண்மையானது என்று உணர்ந்து நீங்களாக என்னை தேடிவரும்வரை நானாக வந்து உங்கள் முகத்தில் விழிக்கவே மாட்டேன். குட்பை!'' என்றபடி விடுவிடுவென அறையை விட்டு



வெளியே வந்தவள் மற்ற யாரையும் நின்று கூடப் பார்க்காமல் வேகத்தோடு வெளியேறி விட்டாள்.

# 20



டிவிடி ப்ளேயரில் வீணையின் இன்னிசை இதமாய் வழிந்து செவிகளை நிரப்ப, தலையணையில் முகம் புதைத்து படுத்திருந்தாள் ஷண்மதி.

ஸ்ரீதரின் வீட்டிலிருந்து திரும்பி வந்து ஒன்றரை மணி நேரமாகியும் அவள் அப்படியேதான் படுத்திருக்கிறாள்.

கீழே அப்பா அவளுக்காக சாப்பிடாமல் காத்துக் கொண் டிருப்பார். எழுந்து போக வேண்டுமென மூளை வலி யுறுத்தியும் அசையக் கூட திராணியற்றவளாய் அப் படியே படுத்திருந்தாள் அவள்.

திடீரென தோளில் இதமான கரமொன்று படியவும் திடுக்கிட்டு திரும்பி பார்த்தவள் சட்டென்று எழுந்து அமர்ந்தாள்.

''நீங்கள் எப்பொழுது வந்தீர்கள்?'' என கேட்டபடி படுக்கையில் கிடந்த ரிமோட்டை எடுத்து ப்ளேயரை ஆஃப் செய்தாள் ஷண்மதி.

அவளருகில் அமர்ந்தபடி, ''இப்பொழுதுதான் வந்தோம்'' என்றனர் அம்மூன்று தோழியரும்.

தன் வருத்தத்தை நொடியில் முகத்திலிருந்து மறைத்த படி, ''குடிக்க ஏதாவது ஸாப்ட் டிரிங்க்ஸ்.. அல்லது டிபன் சாப்பிடுகிறீர்களா?'' என்று கேட்டபடி இன்டர்காமை நோக்கி கையை நீட்டவும் ஷீத்தல் அவளை தடுத்தாள்.

''ஒன்றும் வேண்டாம் ஷண்மி!'' என்றாள் மெல்லிய குரலில்.

ஷண்மதி, ''அப்பா, காத்துக் கொண்டிருப்பார். நான் போய் அவருக்கு பரிமாறி விட்டு ஆபீஸிற்கும் அனுப்பி விட்டு வருகிறேன். உங்களுக்கு குடிக்கவும் ஏதாவது அனுப்புகிறேன். கொஞ்சம் வெயிட் பண்ணுங்கப்பா'' என்றபடி எழவும்,

''நாங்களும் வருகிறோம். அங்கிளிடம் பேசி நாளாகி விட்டது'' என அவர்களும் கீழே வந்தனர்.

''அப்பா! நான் பிறகு இவர்களோடு சேர்ந்து சாப்பிட்டு கொள்கிறேன் சரியா?'' என்றபடி அவருக்கு பரிமாறினாள் ஷண்மதி.

ஆனால் அவரோ, ''எல்லோருமே உட்காருங்கள். சேர்ந்து சாப்பிடலாம்'' எனவும், ''சரிதான்! நீங்களும் உட்காருங் களடி!'' என்று அவர்களுக்கும் ப்ளேட் வைத்துவிட்டு தானும் அமர்ந்தாள்.

அவர்கள் சகஜமாக ஷண்முகபிரகாஷ் கூட உரை யாட, தனக்குள்ளேயே யோசித்தபடி பெயருக்கு சாப் பிட்டுவிட்டு நிமிர்ந்த ஷண்மதி தந்தையின் பார்வை சிந்தனையுடன் தன் மீது படிவதை உணர்ந்தாள். கூடவே மோதிரமில்லாத தனது கரமும் அவரது கூரிய பார்வையி லிருந்து தப்பவில்லை என்பதையும் உணர்ந்தவள் ஒன்றும் சொல்லமாட்டாமல் எழுந்தாள்.

ஆனால் ஷண்முக பிரகாஷ் எதையும் கேட்கவில்லை. மாறாக மற்ற பெண்களிடம் அவர்கள் கேம்பஸ் இன்டர் வியூவில் ப்ளேஸான கம்பெனி பற்றியும், ஷண்மதி தான் ப்ளேஸான கம்பெனிக்கு வேலைக்கு போகாமல், தன்னுடன் பிஸினெஸில் ஈடுபட போவதாக கூறியது



பற்றியும் சகஜமாக பேசிக் கொண்டிருந்தார். ஆனால் கிளம்பும்முன் காரருகில் வந்து நின்ற செல்ல மகளின் தலையை மிருதுவாக வருடி, ''எந்த பிரச்சனையும் தீர்க்க முடியாதது இல்லைடா. உனக்கு பக்க பலமாக அப்பா இருக்கிறேனென்பது நினைவிருக்கும் தானே!'' என மிருதுவாக கூறி கன்னத்தை தட்டி விட்டு கிளம்பவும் கண்கள் கலங்கின ஷண்மதிக்கு.

சமாளித்து கொண்டு உள்ளே வந்தவளிடம், ''ஷண்மி! உன்னிடம் சற்று தனியாக பேச வேண்டுமே!'' என்றாள் பிரியங்கா.

ஒரு கணம் யோசித்த ஷண்மதி, ''சரி வாருங்கள்.. தோட் டத்திற்கு பின்னாலிருக்கும் மாமர கொல்லைக்கு போக லாம்'' என்றுவிட்டு கிச்சனுக்கு சென்று முத்துச் செல்வி யிடம் மதியம் அப்பாவிற்கு அனுப்ப வேண்டிய மெனுவை சொல்லிவிட்டு கிளம்பினாள்.

சின்ன கேட்டை திறந்துக் கொண்டு மரங்கள் நிறைந்த பகுதிக்குள் பிரவேசித்தவர்கள் அடர்ந்து விரிந்திருந்த அம்மரத்தடியில் அமைதியாக அமர்ந்தனர்.

சிறிது நேர மவுனத்திற்கு பின் ப்ரியங்கா கேட்டாள், ''ஷண்மி! நேற்று என்னதான் நடந்தது. ஸ்ரீதர் சாரிடம் பேசினாயே. அவர் என்னதான் சொன்னார்?'' என்று சற்று பதற்றத்துடனேயே கேட்டாள்.

நேற்று ஸ்ரீதர் அவளை இறக்கிவிட்டு சென்றதையும், ஷண்மி திக்பிரம்மித்து நின்றதையும் காரினுள் இருந்து கண்டவர்களுக்கு, ஒருவேளை ஸ்ரீதர் 'நோ' சொல்லி விட்டானோ என்கிற பயம் எழுந்தாலும் ஷண்மதி இருந்த நிலையில் மேற்கொண்டு அவளிடம் எதுவும் கேட்க வில்லை. கேட்டிருந்தாலும் நேற்று அவளிருந்த நிலையில்

பதில் வந்திருக்காதென்பதும் அவர்களுக்குப் புரிந்தே யிருந்தது.

மனம் தாங்காமல் காலையில் அவளைத் தேடி வந்து விசாரித்தனர். அவளது முகத்தைக் கண்டதுமே ஏதோ நடக்கக் கூடாதது நடந்திருக்கிறதென்பது அவர்களுக்குப் புரிந்தது.

சாம்பவி அவளது கையை பற்றியபடி, ''சொல் ஷண்மி! உன் முகத்தை பார்த்தாலே ஒன்றும் சரியில்லையென்று புரிகிறது. என்னதான் நடந்தது?'' என பரிவுடன் வினவவும் அதற்கு மேல் தாங்க மாட்டாமல் எல்லாவற்றையும் கொட்டித் தீர்த்தாள் ஷண்மதி.

ஆனால் நேர்மாறாக கேட்டு முடித்ததும் அவர்களின் முகத்தில் சற்று நிம்மதி நிலவியது.

சாம்பவி சட்டென்று, ''ப்பூ! இவ்வளவுதானாடி? அவர் ஒரேயடியாக மறுத்துவிட்டாரோவென்று கலங்கி போய் விட்டோம்'' என்றாள் நிம்மதி குரலிலும் தெரிய.

ஷண்மதி அவளை வருத்தமும் ஆற்றாமையுமாக நோக்கினாள். ''என்னடி பவி இவ்வளவு ஈஸியாக சொல்கிறாய். கேட்டதிலிருந்து நான் எவ்வளவு வேதனையில் தவிக்கிறேன் தெரியுமா? எனது உண்மையான நேசம் அவரது பார்வையில் நாடகமாக அல்லவா பட்டிருக்கிறது'' என்றாள் தாங்கமாட்டாதவளாக.

''அதற்காக நீயும் வருந்தி, மோதிரத்தையும் கழற்றி வீசி விட்டாயாக்கும். இதுவரை கோபப்படாதவளுக்கு கோபம் கொந்தளித்து கொண்டு வந்து விட்டது. சரிடி. லீவ் இட். பட் இதை நீ இன்னொரு ஆங்கிளில் பாரேன்'' என்றாள் ஷீத்தல் சமாதானமாக.

ப்ரியங்காவும் தொடர்ந்து, ''ஆமாம்டி! இதுவரை நாங்களே உள்ளுக்குள், ஸ்ரீதர் சாருக்கு நம் ஷண்மதியை



உண்மையாகவே பிடிக்கவில்லையே எனக் குழப்பமடைந்திருக்கிறோம். பலமுறை இவ்வளவு ஸ்வீட் ஏஞ்சலை எப்படி பிடிக்காமல் போனதென்று ஆச்சரியப்பட்டிருக்கிறோம். ஆனால் இப்பொழுது தெளிவாகி விட்டதே'' எனவும் ஷண்மதி குறுக்கிட்டாள்.

''என்னை ரொம்பவும் சீப்பாக நினைத்திருக்கிறார் என்பதுதான் தெளிவாகியிருக்கிறது'' என்றாள் சற்றே கோபக் குரலில்.

சாம்பவியோ, ''ஏய்.. ஈஸிப்பா ஈ.ஸி. அவரது ஆங்கிளிலிருந்து யோசித்துபாரேன். டிபார்ட்மெண்ட்டிற்கு நியூவாக வந்தவர், சந்தர்ப்பவசத்தால் உன் பேச்சு தெரிய வந்த பட்சத்தில் அவர்தான் என்ன செய்ய முடியும்? அதற்கேற்றாற் போல உன் நடவடிக்கை அமையவும், நீ நடிக்கிறாயோவென்று நினைத்திருக்கிறார். இதில் யார் மீதும் தவறில்லை. நம் வேண்டாத பேச்சு அவர் காதில் விழுந்தது தான் தவறு'' என்று குற்றத்தை சூழ்நிலையின் மீது சுமத்தினாள்.

''சரி! ஆரம்பத்தில் அப்படி நினைத்திருந்தாலும் போகப்போக என்னைப் பற்றி புரிந்து கொண்டிருக்க வேண்டாமா? கடைசிவரை என்னைப் பற்றிய அவரது அபிப்ராயம் மாறவேயில்லையே.''

''அதை அவரிடமே நேரில் போய் கேட்டோம்.''

''என்னடி? என் மனநிலை புரியாமல் ரொம்பவும் அவருக்கு சப்போர்ட் செய்கிறீர்கள்.''

''பைத்தியம்'' என்றாள் சாம்பவி பரிவுடன்.

''நன்றாக யோசித்து பார் ஷண்மி. உன்னை பிடிக்காமல் வெறுத்து ஒதுக்கவில்லையென்பது தெளிவாக தெரிந்து போய் விட்டதே. அதுவே நல்ல விஷயம்

தானே. ஒரு தவறான கருத்தினால் உன்னிடமிருந்து விலகியிருக்கிறார். இன்று நீ பேசியதிலிருந்து உண்மை புரிந்திருக்கும். நிச்சயம் உன்னை தேடி வருவார்.''

ப்ரியங்காவும், ''ஆமாம் ஷண்மி! தவறான எண்ணம் மாறும்பொழுது அந்த எண்ணத்தின் அடிப்படையில் எழுந்த வெறுப்பும் மாறித்தானே ஆக வேண்டும்'' என்றாள் தெளிவாக.

சற்றே யோசித்த ஷண்மதியின் முகம் ஒரேடியாக இல்லையென்றாலும் ஓரளவிற்குத் தெளிந்தது. ஆனாலும் உதட்டை பிதுக்கி, ''என் பேச்சொன்றும் அவரிடம் எந்த மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. 'நீ சொல்வதை சொல், அதை நான் நம்பப் போவதில்லை' என்பது போல் ஒரு வார்த்தை கூடப் பேசாமல் அப்படியே நின்றார். எனக்கும் கோபம். 'நீங்களாக தேடி வரும்வரை உங்கள் முகத்தில் விழிக்க மாட்டேன்' என்று சொல்லிவிட்டு வந்து விட்டேன். அதற்கும் அவர் பெரிதாக ஏதும் அலட்டிக் கொள்ள வில்லை. விட்டது தொல்லை என்று நிம்மதியடைந் திருப்பார்'' என்றாள் ஷண்மதி நம்பிக்கையற்று.

''நாம் பாஸிடிவ்வாக நினைப்போமே! நாங்கள் எதற்கு இருக்கிறோம். அவர் இந்தியா வந்ததும் அவரிடம் பேசி தெளிவுபடுத்தி விடுகிறோம்'' என பலவாறாக பேசி அவளை தேற்றி விட்டு கிளம்பினர்.

அவர்களிடம் பேசிய பிறகு ஷண்மதிக்கு சற்று தெளிவு ஏற்பட்டிருந்தது. ஸ்ரீதர் மனம் மாறுவான். பொறுத்திருந்து பார்ப்போமென்ற முடிவுடன் குளித்துவிட்டு வந்து ப்ளேயரில் இதமான இசையை வழிய விட்டு கையில் ஒரு புத்தகத்துடன் சோபாவில் சாய்ந்தாள். இன்டர்காம் ஒலித்தது. அவர்கள் வீட்டு மேனேஜர் சங்கர்தான்.



''மேடம்! ஓர் அம்மா உங்களைப் பார்க்க வேண்டு மென்று வந்திருக்கிறார்கள். உங்கள் பர்சனல் விசிட்டிங் கார்டுடன் வந்ததால் செக்யூரிட்டியும் தடை செய்ய வில்லை. என்ன செய்யட்டும்'' என பணிவான குரலில் வினவினான்.

உச்சு கொட்டினாள் ஷண்மதி. யாரையும் சந்திக்கும் மூடில் நானில்லை. அவர்கள் பெயரை கேட்டு குறித்துக் கொண்டு ஏதாவது சொல்லி அனுப்பி விடுங்கள்.''

''பெயர் கேட்டுவிட்டேன், தேவகியென்று சொன் னார்கள்'' என்ற பதிலைக் கேட்டு சட்டென வியப்படைந் தாள் ஷண்மதி.

''சங்கர்! அவர்களை உடனே மேலே அனுப்புங்கள். பத்து நிமிடங்கள் சென்று அவர்களுக்கு குடிப்பதற்கு பைன் ஆப்பிள் ஜூஸ் அனுப்புவதற்கும் ஏற்பாடு செய்துவிடுங்கள்'' என்றபடி பரபரப்புடன் எழுந்தாள்.

மாடியேறிக் கொண்டிருந்த தேவகியை பாதியிலேயே எதிர்கொண்டு, புன்முறுவலோடு ''வாருங்கள் அத்தை'' என்று கைப்பிடித்து அவரை தன்னறைக்கு அழைத்து சென்றாள்.

''உட்காருங்கள் அத்தை!''

''நல்லவேளை! நீ ஏற்கனவே விசிட்டிங் கார்ட் கொடுத் திருந்தாய் ஷண்மி. இல்லையென்றால் உள்ளே நுழை யவே முடியாது போல'' என்றார் தேவகி வியப்புடன்.

இதமாக முறுவலித்தாள் ஷண்மதி.

''முதன் முறையாக வருகிறீர்கள் அல்லவா? அதான் கெடுபிடி சற்று அதிகம் பண்ணிவிட்டார்கள் போல. நான் சொல்லி வைக்கிறேன். மறுமுறை வரும்பொழுது உங்களுக்குத் தொந்தரவு இல்லாதபடி பார்த்துக் கொள் கிறேன்'' என்றாள் தணிவாக.

''நோ ப்ராப்ளம் ஷண்மிம்மா. உன் விசிட்டிங் கார்ட் தான் மந்திரக்கோலை போல வேலை செய்ததே!'' என்று கூறினார் தேவகி.

அரண்மனை போன்ற வீடும், பக்காவான பாதுகாப்பு ஏற்பாடுகளும் ஏதோ கோட்டைக்குள் நுழைந்து விட்ட பிரம்மிப்பை ஏற்படுத்தியது அவருக்கு. தங்களை விட வும் பெரிய கோடீஸ்வரி அவளென்று ஸ்ரீதர் சுட்டிக் காட்டிய பொழுது, அதை அவர் பெரிதாக பொருட் படுத்தவில்லை. என்ன பெரிய பணம்? நம்மை விட சற்று அதிகம் அவ்வளவுதானே என சாதாரணமாக இருந்துவிட்டாள். அவர்களுக்கே சொந்தமாக இரண்டு பங்களாக்கள் இருந்தன. ஆனால் ஆரம்பத்திலிருந்து மிக வசதியாகவும், ராசியாகவுமிருந்த அபார்ட்மெண்ட்டை விட்டு அகல மனமில்லாமல் இரண்டு பங்களாவையும் வாடகைக்கு விட்டிருந்தனர். ஆனால் இன்று ஷண்மதி யின் மிக பிரமாண்டமான பங்களாவை பார்த்தவருக்கு அவ ளது செல்வவளம் மலைப்பையே தந்தது. ஒவ்வொரு மூலையிலும் பணத்தின் செழிப்பு மிக அதிகமாகவே தென்பட்டது. அதிலும் ஷண்மதியின் அறைக்குள் நுழைந்தவர் பிரம்மித்துதான் போனார். இந்திரலோகத் திற்குள்ளேயே நுழைந்து விட்டோமோ என்ற பிரம் மிப்பை ஏற்படுத்திய அவ்வறையின அலங்காரத்திலும் அழகிலும் திகைத்து தான் போனார். அவ்வறையிலிருந்த ஒவ்வொரு பொருளும் எங்களின் ஆரம்ப விலையே சிலபல லட்சங்கள் என கண்ணை சிமிட்டின. நல்ல வேளை அவர் பெட்ரூமிற்குள் செல்லவில்லை. அதனுள் பக்கவாட்டில் இருந்த ஸ்டடி ரூமும், டிரஸ்ஸிங் ரூமும் பல லட்சங்களை தின்றுவிட்டு பளபளப்பவை. 'இவ்... வளவு பெரிய கோடீஸ்வரியா ஷண்மதி? அதை துளியும்



பேச்சிலோ, செயலிலோ காட்டிக் கொள்ளாமல் எவ் வளவு இனிமையாக தங்கள் குடும்பத்தில் ஒட்டிக் கொண்டாள் என்பதை எண்ணியவர் பிரம்மிப்பு கலந்த வருத்தத்துடன், ''ஷண்மதி! நீ இவ்வளவு பெரிய கோடீஸ்வரி என்று முன்பே தெரிந்திருந்தால், ஸ்ரீதர் விஷயத்தில் நான் உனக்கு நம்பிக்கை கொடுத்தே பேசியிருக்க மாட்டேன்'' என்றார்.

மறுப்பாக தலையசைத்தாள் ஷண்மதி. தலையசை வால் அறையை சுற்றிகாட்டி, விழிகள் இலேசாக கலங்க, முகம் மென்மையுற, ''என் ஸ்ரீதரை விட இதையெல் லாம் நான் பெரிதாக எண்ணுவேனென்றா நினைத்தீர்கள் அத்தை! நானோ என் தந்தையோ என்றுமே அப்படி நினைத்ததில்லையே'' என மிகவும் மிருதுவான குரலில் கூறவும் தேவகி வாயடைத்துப் போனார்.

சற்று தன்னைச் சமாளித்துக் கொண்டு, ''காலையில் என்ன நடந்தது ஷண்மதி? எங்களிடம் கூட நின்று பேசாமல் சென்றுவிட்டாயே'' என்று குரலில் வருத்தம் மிக வினவினார்.

முகம் வாட்டமுற, ''அப்பொழுது நான் யாரிடமும் பேசும் மனநிலையில் இல்லை அத்தை. ஸ்ரீதரிடம் நீங்கள் கேட்கவில்லையா அத்தை?'' என மெல்லிய குரலில் விசாரித்தாள் ஷண்மதி.

''எங்கேம்மா? நீ போனதும் அவனும் ஏர்போர்ட்டிற்கு கிளம்பிச் சென்று விட்டானே. அப்பவும் விடாமல் நிறுத்திக் கேட்டேன். இனி என் முகத்தில் தானாக விழிக்கமாட் டாளாம்'' என்று கூறி சிரித்தபடியே கிளம்பி விட்டான். எனக்குதான் மனம் ஆறவில்லை. காலையில் நீ வந்து நின்ற கோலமே கண்ணில் நிற்கவும் மனம் பொறுக் காமல் கிளம்பி வந்தேன்'' என்றார் வருத்தம் இழை யோடிய குரலில்.

உதடு கடித்து வேதனையை அடக்கினாள் ஷண்மதி. நம்பிக்கை பற்றி பேசிய தோழிகளின் அறியாமையை நினைத்து கசப்பான முறுவலொன்று அவள் இதழ்களில் அரும்பியது. அவள் நினைத்தது போலவே 'விட்டது தொல்லை' என்று கிளம்பிவிட்டான். எவ்வளவு தவிப்புடனும் வேதனையுடனும் பேசிவிட்டு வந்தாள். தன் வேதனை அவனை சற்றும் பாதிக்கவில்லையெனும் பொழுது அவளது இதயத்தை யாரோ இறுக்கி கசக்குவது போன்ற வலியை உணர்ந்தாள் ஷண்மதி.

அந்த வலியை தாங்கமாட்டாதவளாய், ''ஏன் அத்தை? ஏன் ஸ்ரீதருக்கு என்னை பிடிக்கவேயில்லை. நீங்கள் மாமா, கிரி, உதி, வினு எல்லோருமே என்னிடம் எதிர்பார்ப்பில்லாத அன்பை செலுத்தி உங்களுள் ஒருத்தியாக ஏற்றுக் கொண்டீர்களே! உங்களனைவரின் மனதிலும் இடம் கிடைத்த எனக்கு அவர் மனதில் மட்டும் இடம் மறுக்கப்படுகிறதே!'' என்று வேதனையோடு உரைத்தாள்.

ஒருகணம் மவுனமாக இருந்த தேவகி, ''அவன் கண்டிப்பாக மாறுவான் என்று நம்பினேன் ஷண்மிம்மா. ஆனால் அவன் மாறவேயில்லை. என் நம்பிக்கை அவநம்பிக்கையாய் மாறிப் போனதே!'' என கலங்கியவர், ''மனதில் இடம் மறுக்கப்படுகிறது என்றாயே... அதன் காரணம் அவன் மனதில் ஏற்கனவே வேறொருத்தி நீக்கமற நிறைந்து நிலைத்தும் விட்டாள்'' எனப் போட்டு உடைத்தார் அவர்.

வாளி நிறைய கொதிக்கும் நீரை யாரோ தன் மேல் வேகமாக ஊற்றியதை போன்ற வலியில் துடித்து அதிர்ந்து போனாள் ஷண்மதி.



# 21



நேற்றிலிருந்து பட்ட தவிப்பையெல்லாம் ஒன்றுமில்லாமல் ஆக்கிவிட்டது தேவகியின் சொற்கள்.

இது எப்படி சாத்தியம்? என திகைத்தவளுக்கு மும்பையிலும் சரி, இங்கும் சரி அவனுக்கு எந்த காதலியும் கிடையாதென்று தெளிவாய் கூறிய குணாவின் குரலே மீண்டும் மீண்டும் செவிகளில் எதிரொலிக்க ஒன்றும் புரியாமல் கண்களை இருட்டிக் கொண்டு வந்தது ஷண்மதிக்கு.

''அத்தை.. இது எ.. எப்படி.. உங்களுக்கு.. இதெல்லாம் உண்மையா.. ஸ்ரீதருக்கு..'' உதடு துடிக்க நிறுத்தினாள்.

முன்பே முத்து கொண்டு வைத்து விட்டு சென்ற பழச்சாறை எடுத்து ஷண்மதியிடம் நீட்டினார் தேவகி.

''முதலில் இதை குடிம்மா.''

மறுக்காமல் வாங்கி கடகடவென குடித்தவள் கண்களை மூடியபடி சோபாவில் சரிந்து விட்டாள். அதிர்ச்சி என்றால் பேரதிர்ச்சியாக அல்லவா இருக்கிறது.

''என்னால் நம்பவே முடியவில்லையே.. அவர் மும்பையில் இருந்த பொழுதும் சரி.. பிறகும் சரி.. அப்படி யாரும் இருந்ததாக தெரியவில்லையே'' என திகைப்பு மாறாமலே வினவியவளுக்கு, 'ஒருவேளை அதற்கும் முன்னால்..!' என்ற சந்தேகம் எழ உள்ளூர மனதை ஏதோ பிசைவது போல் உணர்ந்தாள்.

வருத்தமான முறுவலுடன், ''அவன் கல்லூரியில் படிக்கும் பொழுதே அவனது ஜூனியர் 'ஷ்ரத்தி' என்ற பெண்ணை விரும்பினான். வீட்டிற்கு கூட அழைத்து வந்திருக்கிறான். அழகென்றால் பேரழகு அவள். அவளைப் பற்றி பேசும்பொழுதே அவன் முகமெல்லாம் மலர்ந்துவிடும். குறுகுறுப்புடன் விசாரித்த பொழுது தன் விருப்பத்தை வெளிப்படையாக தெரிவித்தான். எங்கள் வீட்டின் செல்லப் பிள்ளை அவன். கிரிக்கும் அவனென்றால் உயிர். சந்தோஷமாக சம்மதித்தோம். அவளுக்கென்றால் பார்த்துப் பார்த்து செய்வான். ஆனால் என்ன நடந்ததென்றே தெரியவில்லை. திடீரென்று அவளைப் பற்றி பேச்சேயில்லை. கேட்டாலும் பதில் சொல்வதில்லை. அவளைப் பற்றி பேசவே கூடாதென்று கண்டிஷன் வேறு. படிப்பை முடிந்த கையோடு மும்பைக்கு சென்றுவிட்டான். இந்தப் பக்கம் தலை வைத்தே படுப்பதில்லை. நழுவிக் கொண்டேயிருந்த அவனது ப்ரெண்ட் ஆகாஷை பிடித்து நிறுத்தி சற்று துருவி விசாரிக்கவும், 'அவனுக்கும் ஷ்ரத்திக்கும் மிஸ் அண்டர்ஸ்டாண்டிங். பிரிந்து விட்டார்கள். அந்த பெண்ணும் மீதமிருந்த ஒரு வருட படிப்பை முடித்துவிட்டு வெளிநாடு சென்று விட்டதாக கூறினான். அவனைப் பிரிந்திருக்க மனமில்லாமல் கடைசி இரண்டாண்டுகளாக வருந்தி வருந்தி நாங்கள் அழைக்கவும் மனமிறங்கி வந்தான். மெண்டல் ஸ்ட்ரெஸ் அதிகமுள்ள பீல்ட். கொஞ்ச நாள் இளைஞர்களோடு பழகும் வாய்ப்பாக கல்லூரிக்கு வேலைக்கு போகிறேன் என்றான். அவன் விருப்பமென்று விட்டோம். அவன் மனமும் மெல்ல மாறுமென்று நினைத்தோம். பிறகுதான் நீ வந்தாய். என் நம்பிக்கையும் அதிகமானது. அவன் மனம் மாறும். நீ மாற்றி விடுவாய் என நிச்சயமாய் நம்பினோம்'' என வேதனையோடு நிறுத்தினார் அவர்.



ஷண்மதி வெகுநேரம் எதுவுமே பேசவில்லை. தவிப்புடன் கண்மூடி நெற்றிப்பொட்டை அழுத்தி விட்டவள் மீண்டும் நிமிர்ந்து, ''ஆனால் அத்தை.. ஒத்து வரவில்லையென்று அவர்களே பிரிந்த பிறகு இப்பொழுது என்ன பிரச்சனை? முடிந்து விட்ட காதல் முடிந்தது தானே! அவரே தூக்கிப் போட்ட விஷயத்தை நாம் ஏன் பொருட்படுத்த வேண்டும்? அவர் மனம் இனியாவது மாறாதாவென்று நாம் பொறுமையாக இருந்து பார்ப்போமே!'' என தீவிரமான குரலில் வினவியவள் தேவகியின் முகம் பார்த்து, ''என்ன அத்தை?'' என்று புரியாமல் விசாரித்தாள்.

''இந்த நம்பிக்கையினால்தானே நாங்கள் உன்னை ஊக்குவித்ததும்.. இதே நம்பிக்கையில்தான் கண்ணம்மா போன வாரம் நானும் உன்னைப் பற்றி அவனிடம் பேசினேன்.''

''என்னைப் பற்றியா?''

''ஆமாம் ஷண்மிம்மா! உன்னை எங்களெல்லோருக்கும் மிகவும் பிடித்திருப்பதாகக் கூறி அவன் அபிப்ராயத்தை கேட்டோம். முடியவே முடியாதென்றுவிட்டான்.''

முகம் வாட, ''அப்பொழுது ஸ்ரீதருக்கு என்னைப் பற்றிய ஒரு தவறான அபிப்ராயம் இருந்தது அத்தை! அதனாலேயே மறுத்திருக்கலாம்'' என்றாள் ஷண்மதி.

அவளை பரிவுடன் நோக்கினார் தேவகி. ''காரணம் அதுமட்டுமில்லைம்மா. வேறு பெண்ணாவது பார்க்கட்டுமாவென்று அவன் அப்பா கேட்டதற்கு ஷண்மதி பற்றியோ அல்லது வேறு பெண் பற்றியோ பேசவே கூடாதென்று விட்டான்'' என்றவர் மேலும் தொடர்ந்து,

''ஷண்மதியும் வேண்டாம், வேறு பெண்ணும் வேண்டா மென்றால் என்ன அர்த்தம்? காரணத்தையாவது சொல்லு. நியாயமான காரணமாக இருந்தால் நாங்கள் உன்னை வற்புறுத்தவில்லை என எவ்வளவோ பொறுமையாக கேட்டும் பதிலே இல்லை.

''பிறகு?'' என்றாள் ஷண்மதி சிலீரென்ற குரலில்.

''அப்படியென்றால் ஒரே அர்த்தம் அந்த ஷ்ரத்தியை இன்னும் மறக்கவில்லை அப்படிதானேயென்று கேட்டேன்.''

இமைக்க மறந்த விழிகள் மேலும் விரிய, ''அதற்கு ஸ்ரீதர் என்ன சொன்னார் அத்தை?'' என உயிரை கையில் பிடித்துக் கொண்டு கேட்டாள் ஷண்மதி.

என்ன சொல்லியிருப்பானென்று அவளால் ஊகிக்க முடிந்தது. ஆனால் அதை ஜீரணிக்கமாட்டாமல் கடைசி நேர நப்பாசையில்தான் அவள் தேவகியை வினவினாள்.

அவளை பரிவு ததும்ப பார்த்தவர் சற்று தயங்கி, ''ஒரு நிமிஷம் ஒன்றும் பேசவில்லை. பின் அழுத்தமான குரலில், 'உள்ளத்தில் ஒருத்தியை உறுதியாக நினைத்த பிறகு தூக்கி எறிவது சுலபமல்ல' என்று விட்டான். இது முட்டாள்தனம். தகுதியில்லாத ஒருத்திக்காக காத்திருப்பாயா? என எவ்வளவோ எடுத்துச் சொல்லியும் கேட்கவில்லை. 'தகுதியற்றவள் என்றுதான் ஒத்துவராதென்று எண்ணி விலகி விட்டேன். ஆனால் அவள் மீது நான் வைத்த காதல் உண்மையானது. அதை மறந்து, 'அவளை நினைத்த மனதில் இன்னொருத்தியை ஏற்க இயலாது. கற்பனையில் கூட இயலாத காரியம். 'அவள் மீது நான் வைத்த உண்மையான காதலின் நினைவுகளுடன் காலமெல்லாம் வாழ்ந்து விடுவேன்' என்றும் அவள் இருக்



கும் இதயத்தில் இன்னொருத்திக்கு இடமில்லை' என்று விட்டான்'' என்றார் ஆற்றாமையுடன்.

கன்னத்தில் யாரோ ஓங்கி ஓர் அறை விட்டது போல் உணர்ந்தாள் ஷண்மதி.

## 22



''ஒரு வாரமாகவே உன்னிடம் சொல்ல முயன்றும் முடியாமல் தவித்துக் கொண்டிருந்தேன். அவன் பேசிய தீர்மானமான குரலைக் கேட்டபிறகு அவனை மாற்றுவது இலேசான காரியமாக எனக்குத் தோன்ற வில்லைம்மா. பிடிவாதமாக முடிவெடுத்து விட்டானானால் அவனை யாராலும் மாற்ற முடியாது ஷண்மிம்மா. அதனால்தான் உன்னிடம் எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டு மென்று வந்தேன்'' என்றார் அவர் வேதனையோடு.

ஷண்மதி எதுவுமே பேசவில்லை. முகம் கசங்க மவுனமாகவே அமர்ந்திருந்தாள். பிறகு ஒரு நெடுமூச்சை வெளிவிட்டவள் இன்டர்காமில், ''அப்பாவிற்கு லஞ்ச் அனுப்பியாகி விட்டதா?'' என கேட்டறிந்துக் கொண்டு, ''சாப்பிட போகலாம், வாருங்கள் அத்தை!'' என்று அமைதியாய் அழைக்கவும் தேவகி அவளை வியப்புடன் பார்த்தார்.

உடைந்து போய் அமர்ந்திருந்தவள் சட்டென தன் உணர்வுகளை கட்டுக்குள் கொண்டு வந்து சாதாரணமாக சாப்பிட அழைப்பதை கண்டவருக்கு, 'பார்ப்பதற்கு விளையாட்டு பெண் போல தோன்றினாலும் உள்ளுக்குள் இவளும் ஸ்ரீதரைப் போல் மன உறுதி மிக்கவள்' என்பது நன்கு புலனாகியது.

எனவே இதிலிருந்து மீண்டு வந்து விடுவாள் என்ற நிம்மதியோடு, ''இல்லைடா. உதி வீட்டில் சாப்பிடாமல் காத்துக் கொண்டிருப்பாள். தனியாகச் சாப்பிட வேண்டு மானால் அவளுக்கு சாப்பாடே இறங்காது. நான் இன்னொரு நாள் நிச்சயமாக வருகிறேன். ஆனால் கண்ணம்மா நீ கண்டிப்பாக சாப்பிட்டு விடு'' என்றபடி கிளம்பினார்.

அவரை வழியனுப்பி விட்டு தன்னறைக்கு வந்தவள் முகத்தில் துயரம் பெருக வெகுநேரம் சிலையாக அமர்ந் திருந்தாள்.

கிளம்பும்முன் தேவகி கூறிய வார்த்தைகள் நினைவிற்கு வந்தன. 'இந்த பிரச்சனையிலிருந்து விடுபட்டு சீக்கிரமே ஒரு நல்ல ப்யூச்சரை அமைத்துக் கொள்ள வேண்டும் ஷண்மதி. அந்த நம்பிக்கையை எனக்கு தருவாயா?' என்று அவர் கேட்டதும்,

வெகு தெளிவாக, 'ஸ்ரீதரை நானாக சந்தித்து பேச மாட்டேனென்று கூறியிருக்கிறேன். அவரும் என்னை தேடிவரப் போவதில்லை. எனவே எனக்காக அவரிடம் ஒன்றை மட்டும் தெரிவித்து விடுங்கள். தகுதியற்ற ஒருத்தியின் நினைவில் அவர் வாழும்பொழுது, தகுதி நிறைந்த ஒரு நல்லவரான அவரையே நினைத்து காலம் முழுவதும் நானும் வாழ்வேன் என்று சொல்லுங்கள்' எனக் கூறியதும், நினைவிற்கு வந்தன.

'கிட்டதட்ட ஸ்ரீதரைப் போலவே தீர்க்கமான பிடிவாதத் துடன் கூடிய அழுத்தமும் அமைதியும் நிறைந்த தொனி. இம்.. கடவுள் விட்ட வழி' என்று பாரத்தோடு தேவகி சென்றதும் நினைவிற்கு வந்தது.

**முடிந்தது!**
**எல்லாம் முடிந்தது!**



கரங்களில் முகத்தை பதித்து விம்மி விம்மி அழத் துவங்கினாள் ஷண்மதி.

மாலையில் சற்று சீக்கிரமாக வீடு திரும்பிய ஷண்முக பிரகாஷ் முகம் கழுவி உடைமாற்றி வரவும் அதற்காகவே காத்திருந்தாற்போல் ரங்கனும் முத்துவும் வந்து நின்றனர். 'சின்னம்மா மதியம் சாப்பிடவில்லை. ஈவனிங் டிபன், காபியும் வேண்டாமென்று விட்டார்' என வருத் தத்துடன் சொல்லிச் சென்றனர்.

யோசனையுடன் மகளைத் தேடிச் சென்றவர் அழுதழுது சிவந்திருந்த மகளின் முகத்தை கண்டு பதறிப் போனார்.

''ஷண்மதி! என்னம்மா...'' என்ற அவரது குரலை கேட்டதும் பெருமுயற்சி செய்து அடக்கி வைத்த அழுகை மீண்டும் வருவேனென்று பயமுறுத்தியது.

''ம்கூம்! அழக்கூடாது.. அப்பா முன் அழக்கூடாது. அழுதால் அவர் தாங்க மாட்டார்.

வெகு பிரயத்தனப்பட்டு வந்த அழுகையை அடக்கியவள் அருகில் அமர்ந்து, ''ஷண்மதி! என்னவாயிற்று?'' என பதற்றத்துடன் தந்தை வினவவும் மீண்டும் உடைந் தாள்.

''அப்பா'' என்றவளுக்கு மீண்டும் அழுகையில் உதடு பிதுங்க ஷண்முகபிரகாஷ் வெகுவாய் பதறிப் போனார்.

''ஷண்மதி! அப்பா இருக்கும்பொழுது எதற்கு இந்த கவலை? அழுகையை நிறுத்தும்மா'' என்ற அவரின் அன்பான குரலில் சற்றே அமைதியடைந்தாள்.

முகத்தில் படிந்திருந்த கற்றை கூந்தலை இரு கைகளாலும் ஒதுக்கி விட்டவர், ''இப்பொழுது சொல்! ஏனிந்த அழுகை?'' என கனிவுடன் விசாரித்தார்.

''இன்று ஸ்ரீதரின் அம்மா வந்திருந்தார்கள் அப்பா.''

''ஓ...'' என்றவர் சற்றுப் பொறுத்து மகளது கையை தட்டிக் கொடுத்தபடி, ''ஸ்ரீதர் ஏற்கனவே ஒரு பெண்ணை காதலித்த விஷயத்தை சொன்னார்களா?'' என்று நிதானமாகக் கேட்கவும் திடுக்கிட்டு தந்தையை பார்த்தாள் ஷண்மதி.

வியப்புடன், ''அப்பா! உங்களுக்கு முன்பே தெரியுமா?'' எனக் கேட்கவும் இலேசாக புன்னகைத்தார் ஷண்முக பிரகாஷ்.

மகளை நோக்கி, ''உன் அப்பாவைப் பற்றி என்ன எண்ணினாய் ஷண்மதி? என் உயிருக்குயிரான செல்லமகள் நீ. அப்படியிருக்க உன் விஷயத்தில் அலட்சியமாக இருக்க முடியுமா? உன்மேல் கொண்ட அக்கறையினால் குணா ஸ்ரீதரைப் பற்றி விசாரித்தானே... அதற்கும் முன்பே நான் விசாரித்து விட்டேன். என்ன பார்க்கிறாய்? நீயும் குணாவும் சொல்லவில்லையென்றால் எனக்குத் தெரியாதா? அது மட்டுமல்ல, பள்ளி, கல்லூரி முதற்கொண்டு விசாரிக்க சொன்னேன். ஏதோ ஒரு பெண்ணைக் காதலித்ததாகவும், ஒத்துவரவில்லையென்று பிரிந்துவிட்டதாகவும் செய்தி கிடைத்தது. எனக்கு இது பெரிய விஷயமாகப் படவில்லை. இந்த காலத்தில் இதெல்லாம் சகஜம்தானே யென்று விட்டு விட்டேன்'' என்று கூறினார் அவர்.

விழிகள் விரிய, ''என்னிடம் சொல்லியிருக்கலாமே டாட்'' என்று குறைப்பட்டாள் ஷண்மதி.

''அப்பொழுது உடனே சொல்லி என்னவாகப் போகிறது என்றுதான்டா சொல்லவில்லை. உன்னைப் பற்றி நன்றாகத் தெரியும். என்றோ முடிந்த கதையை நீயும் பெரிதுப்படுத்த மாட்டாய் என்பதும் நிச்சயம். அந்த விஷயத்திற்குப் பின் ஸ்ரீதர் புடம்போட்ட பொன்னென்பதும் தெரிந்து போயிற்று. அதான் சொல்லவில்லை. அது மட்டுமல்ல... இது ஸ்ரீதரின் விஷயம். உன்னிடம் எப்பொழுது சொல்ல வேண்டுமென்று முடிவு செய்ய வேண்டியதும் ஸ்ரீதர்தான். உங்களிடையில் பிரச்சனை தீர்ந்தால் அடுத்த கணம் ஸ்ரீதரே உன்னிடம் எல்லாவற்றையும் கூறப் போவது நிச்சயம். அதான் நான் ஒதுங்கிக் கொண்டேன்.''



யோசனையோடு தந்தையை ஏறிட்டு, ''அப்பா! இத்தனை நாட்களாய் என்னிடம் சொல்லாததற்கு ஸ்ரீதரின் அம்மாவும் இதே காரணத்தைதான் சொன்னார்கள்'' என்றாள் ஷண்மதி.

''ஆனால் ஷண்மதி.. முடிந்து போன விஷயத்திற்காகவா நீ அழுவது? இதற்கு நீ வெயிட் கொடுக்கமாட்டாய் என்றல்லவா நான் நினைத்தேன்'' என்றார் ஷண்முகபிரகாஷ் ஏமாற்றத்துடன்.

முகம் வேதனையில் கசங்கியது ஷண்மதிக்கு. பொங்கிய துயரத்தை அடக்கிக் கொண்டு, ''இது முடிந்து போன விஷயமில்லை டாட். தன் அம்மாவிடம் ஸ்ரீதர் உறுதியாகக் கூறி விட்டாராம். உயிராய் காதலித்தவளை மறந்து விட்டு வேறு பெண்ணை நினைத்து கூடப் பார்க்க முடியாதாம். அவளை நினைத்தே காலம் முழுவதும் வாழ்ந்து விடுவாராம்'' என்றாள் வேதனை நிறைந்த குரலில்.

ஷண்முக பிரகாஷின் முகத்தில் தீவிர யோசனை படர்ந்தது. இதென்ன புதுப் பிரச்சனையாக அல்லவா இருக்கிறது. அப்பெண்ணை மறந்திருப்பானென்று நினைத்திருந்தார். கூடவே மகளை பற்றிய கவலையும் எழுந்தது. இவளும் பிடிவாதக்காரியாயிற்றே! அவன் அந்த பெண்ணின் நினைவில் வாழ்வதுபோல் நானும் ஸ்ரீதரை நினைத்தே இருந்து விடுகிறேன் என முடி

வெடுக்கவும் தயங்கமாட்டாளே! ம்ம்.. பிரச்சனை சற்று சிக்கல்தான்.

''சரிம்மா! ஸ்ரீதர் திரும்பி வரட்டும். நானே அவரிடம் பேசுகிறேன்'' என்றார் முடிவாக.

சட்டென நிமிர்ந்து அமர்ந்து, ''வேண்டவே வேண்டாம் டாட். எக்காரணம் கொண்டும் எனக்காக ஸ்ரீதரிடம் நீங்கள் பேசவே கூடாது'' என உறுதியோடு மறுத்தாள் ஷண்மதி.

புரியாமல் புருவம் உயர்த்தி, ''ஏனம்மா?'' என விசாரித்தார் அவர்.

அவரை நேராக நோக்கி, ''சற்று யோசியுங்கள் டாட். அவருக்கு என்னை பிடிக்காமல் போயிருந்தாலோ, கோபத்தில் இருந்தாலோ... போய் பேசிப் பார்க்கலாம். தவறில்லை. ஆனால் எப்பொழுது 'தன் மனதில் ஒருத்தியை தவிர வேறொருத்திக்கு இடமில்லை. காலமெல்லாம் அவளை நினைத்தே தான் வாழ்வேன்' என்று விட்டாரோ... அதன் பிறகு எனக்காக போய் பேசுவது என் சுயகௌரவத்திற்கு இழுக்கு அப்பா. இன்னொருத்தியை காதலிப்பவரிடம் போய் என்னை திருமணம் செய்துக் கொள் என்று கேட்பதா? சேச்சே! அதை விட எனக்கு கேவலம் எதுவுமில்லை. அவரே மனம் மாறி என்னை தேடி வந்தால் வரட்டும். மற்றபடி நீங்களாக போய் பேசவே கூடாது அப்பா'' என்றாள் தீர்மானமான குரலில்.

மீண்டும் ஷண்முக பிரகாஷின் முகத்தில் யோசனை படர்ந்தது. ஷண்மதி சொல்வதும் சரிதான். தன்மானம் உள்ள எந்த பெண்ணும் சொல்வதுதான். பிரச்சனையின் சிக்கல் அதிகமாகிறதே.. வேறு ஏதாவது வழிதான் யோசிக்க வேண்டும்'' என்று தீர்மானித்துக் கொண்டவருக்கு மகளை நினைத்து சற்று கவலையும் உண்டாயிற்று.



பூப்போன்ற அவரது அழகிய செல்லப் பெண். அவள் இப்படி வேதனைப்படும்படி ஆகிவிட்டதே' என்று வருந்தினார் அவர்.

அவரது முகத்தில் இலேசாக தென்பட்ட கவலையை கண்ட ஷண்மதிக்கு மனம் தாங்கவில்லை. கவலையின் சிறு நிழல் கூட தன்மேல் விழாமல் கண்ணும் கருத்துமாய் வளர்த்தவர். அவர் இன்று தன்னை நினைத்து கவலைப்படும்படி விடக்கூடாது என தீர்மானித்துக் கொண்டாள். கூடவே தானும் துவண்டு போகக் கூடாது என்றும் உறுதியேற்றுக் கொண்டாள்.

எனவே, ''டாட்! உங்களிடம் பேசியபிறகு எனக்கே எவ்வளவு தெம்பாக இருக்கிறது தெரியுமா? நீங்கள் எனக்கு பக்க பலமாய் இருக்கும்பொழுது இந்த பிரச்சனையிலிருந்து நான் சீக்கிரமே வெளிவந்து விடுவேன். உங்கள் பெண் தைரியசாலி அப்பா. எந்தக் கஷ்டத்தையும் பேஸ் பண்ணுவாளே தவிர உடைந்து போக மாட்டாள்'' என தைரியமும், நம்பிக்கையுமாகப் பேசி அவரைத் தேற்றினாள்.

முறுவலோடு, ''இதுதான் என் பெண் ஷண்மதி. இப்பொழுது டிபன் சாப்பிட போகலாம் வா!'' எனவும் ''இதோ'' என்றபடி முகம் கழுவிக் கொண்டு தந்தையுடன் கீழே சென்றாள் ஷண்மதி.

## 23



அடுத்து வந்த இரண்டு நாட்களும் தந்தையின் முன்னிலையில் எவ்வளவுதான் தைரியமாக காட்டிக்

கொண்டாலும் உள்ளூர மனம் மிகவும் சோர்ந்து போனாள் ஷண்மதி.

ஷண்முகபிரகாஷ் அதைக் கவனிக்காமலில்லை. ஜீபூம்பா போல அடுத்த நாளே அவள் பழையபடி துடிப்பும் துள்ளலுமாக மாறிவிடுவாளென்று எதிர்பார்க்கும் அளவுக்கு மூளையில்லாதவர் அல்லவே அவர்.

அடுத்தடுத்து சந்திக்க நேர்ந்த அதிர்ச்சியிலிருந்து அவள் விடுபட சில காலம் பிடிக்குமென அவர் அறிந்தேயிருந்தார்.

எனவே அவளை ரொம்பவும் தொந்தரவு பண்ணாமல் உணவை மட்டும் சரியாக சாப்பிடும்படி பார்த்துக் கொண்டார். காலையில் வழக்கம்போல இருவரும் வாக்கிங் சென்றனர். மாலையிலும் முடிந்தளவு நேரத்தை மகளிடம் செலவழித்தார்.

அப்பாவுடன் இருக்கும்பொழுது சற்று அமைதியாக இருக்கும் ஷண்மதிக்கு மற்ற நேரங்களில் மனம் அமைதியிழந்து தவிப்பதை தடுக்க முடியவில்லை.

எல்லாவற்றையும் விட ஸ்ரீதர் இன்னொரு பெண்ணை உயிராய் நேசிக்கிறான் என்பதைதான் அவளால் தாங்க முடியவில்லை. அதை நினைக்கும்பொழுது இதயத்தை இறுக்கிப் பிழிவது போன்ற வேதனை எழவே செய்தது. யாரை அவள் தன் உயிர் மூச்சாய் நேசித்தாளோ அவனது மனதில் இன்னொருத்தி. அதுவும் எப்படி..? வேண்டாமென்று பிரிந்து சென்ற இத்தனை ஆண்டுகளுக்குப் பின்பும் அவளை மறக்க முடியாதளவிற்கு! ஸ்ரீதரின் இதயத்தில் நீங்காத இடம் பிடித்த ஷ்ரத்தியை நினைக்கும்பொழுது அவளுக்கு வாழ்விலே முதன்முறையாக பொறாமை கூட எழுந்தது. கூடவே, தகுதியற்றவள் என்று புரிந்தும்



அவளை மறக்க முடியாமல் ஸ்ரீதர் தவிக்கும் அளவிற்கு அவனை வசீகரித்த ஷ்ரத்தியை எண்ணி வியப்பும், ஆச்சரியமும் உண்டாயிற்று. கூடவே தன்னை நினைத்து துக்கமும் எழுந்தது. அந்த ஷ்ரத்தியால்தானே தன்னை துச்சமாக தூக்கியெறிந்து விட்டான் என்ற வேதனையும் எழவே செய்தது.

இப்படியே வேண்டாத சிந்தனையில் இரண்டு நாட்கள் கழிய, மூன்றாம் நாள் வழக்கம்போல் தன்னுள் யோசித்தபடி அமர்ந்திருந்த ஷண்மதி ஒரு முடிவிற்கு வந்தவளாய் குளித்துவிட்டு வெளியே கிளம்ப ஆயத்தமானாள். அந்நேரம் இன்டர்காம் ஒலிக்கவும் எடுத்தவளிடம் சங்கர், ''மேடம்! சாம்பவி வந்திருக்கிறார்கள். என்ன செய்யட்டும்?'' என வினவினான்.

உதட்டை கடித்தாள் ஷண்மதி. இரண்டு நாட்களுக்கு முன் அவள்தான் யார் வந்தாலும், என் ப்ரெண்ட்சே வந்தாலும் கூட என்னிடம் கேட்ட பிறகே அவர்களை அனுப்ப வேண்டுமென கண்டிப்பான உத்தரவிட்டிருந்தாள். இரண்டு நாட்களாக யாரையும் பார்க்கும் மனநிலையில் அவளில்லை என்பதுதான் உண்மை.

''மேடம்!''என்ற சங்கரின் வினய குரலில் சட்டென கலைந்தவள், ''அனுப்புங்கள் சங்கர்'' என்றாள்.

உள்ளே நுழையும்பொழுதே, ''என்னடி நினைத்துக் கொண்டிருக்கிறாய் உன் மனதில்..? நான் கூட அனுமதி பெற்றுக் கொண்டுதான் உன்னைப் பார்க்க வர வேண்டுமா? அந்த மேனேஜருக்கும் இருக்கிறது ஒருநாள். அது சரி நீ ஏன்டி இப்படி செய்கிறாய்? செல்போன் ஸ்விட்ச் ஆஃப், லேண்ட்லைனில் கேட்டால் 'மேடம் பிஸி' யென்றே பதில்'' எனப் பொரிந்து கொட்டிக் கொண்டே வந்த சாம்பவி அவள் முகத்தைப் பார்த்ததும், ''என்ன

ஷண்மி? ஸ்ரீதர் சார் திரும்பி வந்ததும்தான் அவரிடம் பேசி நம் பந்தய மேட்டரை தெளிவுபடுத்துவதாக கூறினோமே! அப்புறம் மீண்டும் என்னவாயிற்று? இப்படி சோர்ந்து தெரிகிறாயே'' என கவலையுடன் விசாரித்தாள்.

சன்னமான முறுவலுடன், ''நானே உன் வீட்டிற்கு தான் கிளம்பிக் கொண்டிருந்தேன் பவி. உன்னை அழைத்துக் கொண்டு போகலாமென்றிருந்தேன். நீயே வந்துவிட்டாய்'' என்றாள் ஷண்மதி.

''சரிடி! அதெல்லாம் இருக்கட்டும். இரண்டு நாட்களாக எங்களிடம் காண்டாக்ட் கூட வைத்துக் கொள்ளாமல் ஏனிந்த தனிமை தவம்?'' என கேலியாக கேட்டபடி ஷண்மதியின் முகத்தை நோக்கியவள் திடுக்கிட்டு போனாள்.

இல்லை! இது வேறு ஏதோ பெரிய விஷயம் என உணர்ந்தவளாய், ''ஷண்மி!'' என்றாள் திகைப்புடன்.

சலனமற்று அவளைப் பார்த்த ஷண்மதி, ''சொல்கிறேன் பவி. அதற்குதான் உன் வீட்டிற்கு கிளம்பினேன்'' என்றபடி அமைதியான குரலில் நடந்தது எல்லாவற்றையும் கூற சாம்பவி அதிர்ந்தே போனாள்.

''என்னடி இது? இப்படி ஒரு பிச்சனை. யார் அந்த ஷ்ரத்தி? நமக்கு பிரச்சனையாக திடீரென்று வந்து முளைத்திருக்கிறாளே!'' என பொருமிய சாம்பவியை கண்டு தன்னை மீறி புன்னகைத்தாள் ஷண்மதி.

''பவி! அவள் திடீரென்று முளைக்கவில்லை. ரொம்ப வருடங்களுக்கு முன்பே முளைத்துவிட்டாள். இப்பொழுது ஸ்ரீதரின் மனதில் மரமாய் வளர்ந்து நிற்கிறாள்'' என்றாள் கசந்த குரலில்.

தலையில் கை வைத்தபடி அமர்ந்து விட்டாள் சாம்பவி.



'இந்த சிக்கலை எப்படித் தீர்ப்பது? இப்படி ஒருத்தி உள்ளே புகுந்து குழப்புவாளென்று எதிர்பார்க்கவில்லையே. அது சரி... ரொம்ப அக்கறையாய் வேலைக்கு சேர்ந்த இடத்திலெல்லாம் விசாரித்தானே குணா, காலேஜ் லைஃபையும் சேர்த்து விசாரித்திருக்கக் கூடாதா? ஆரம்பத்திலேயே கொஞ்சம் உஷாராகியிருக்கலாம்' என உள்ளுக்குள் ஷ்ரத்தியையும் குணாவையும் அர்ச்சித்தவள், 'எல்லாம் தெரிந்த அங்கிளாவது ஆரம்பத்திலேயே சொல்லியிருக்கக் கூடாதா?' என அவரையும் அலுத்துக் கொண்டாள். ஆனால் சொல்லாமல் விட்டதற்கு அவர் சொன்ன காரணமும் சரிதான். அப்படியே சொல்லியிருந்தாலும், ஸ்ரீதர் இப்படி என்றோ போன அந்த ஷ்ரத்திக்காக ஷண்மதியை போன்ற ஒரு பெண்ணை வேண்டாமென்பான் என நாமும் எதிர்பார்த்திருக்க மாட்டோமே' என தனக்குள்ளேயே புலம்பியவள்,

''ஷண்மி! இந்த சிக்கலை எப்படி சரி செய்வது? அங்கிளிடம் கேட்டாயா? அவரென்ன சொல்கிறார்?'' என்று யோசனையுடன் விசாரித்தாள்.

''இந்தப் பிரச்சனையை ஒதுக்கி வைத்துவிட்டு மேற்கொண்டு வெளிநாடு போய் படிப்பதானால் படி. அல்லது குணா படிப்பை முடித்ததும் பிஸினெஸில் நுழைந்தது போல் நீயும் பிஸினெஸை அவனுடன் சேர்ந்து கவனித்து கொள்'' என்றார்.

விழிகள் பளிச்சிட, ''அங்கிள் சொல்வதுதான் கரெக்ட் ஷண்மி. பிரச்சனையை ஒதுக்கி வைத்து நாம் வேறு வழிகளில் மனதை செலுத்தும்பொழுது நாமே எதிர்பாராதவிதமாக பிரச்சனைக்கும் சரியான தீர்வு கிடைத்து விடும்'' என்றவள் தொடர்ந்து.

''என்னை அழைத்துக் கொண்டு போகலாமென்றிருந் தேன் என்றாயே.. எங்கேடி?'' என்றும் விசாரித்தாள்.

ஷண்மதி சொன்ன பதிலைக் கேட்டு முறைத்தாள் சாம்பவி.

''இப்பொழுது ஏன் அங்கு போக வேண்டும்?''

''என் அம்மாவின் மோதிரம் எனக்கு வேண்டும் பவி. அன்று ஏதோ என்னையும் மீறிய கோபத்தில் வீசியெறிந்து விட்டேனே தவிர பிறகு ரொம்பவும் வருத்தமாகி விட் டது. வெறும் விரலை கவனித்த அப்பா எதுவும் கேட்க வில்லையே தவிர அவரது முகத்தில் வேதனை தெளி வாய் தெரிந்தது பவி. போய் வாங்கிக் கொண்டு வந்து விடலாம். ஸ்ரீதர் வந்த பிறகு அங்கு போவது முடியாது அல் லவா?'' என்று பொறுமையாக விளக்கினாள் ஷண்மதி.

''இம்.. கோபமே வராதவர்களுக்கு கோபம் வந்தால் இப்படிதான். என்ன செய்கிறோமென்று அறியாமலே செய்து விடுவார்கள்'' என்றவள் தொடர்ந்து, ''ஸ்ரீதர் அம்மா வந்த பொழுது உன்னிடம் மோதிரத்தை தர வில்லையா?'' என்று விசாரிக்கவும் கையை விரித்தாள் ஷண்மதி.

''எங்கே பவி? அன்று இருந்த மனநிலையில் இதைப் பற்றிய நினைவே எங்களுக்கு இல்லையே!'' என்றாள்.

அவளைப் பாசத்தோடு பார்த்த சாம்பவி, ''ஆல்ரைட்! டிரெஸ் சேஞ்ச் செய்துக் கொண்டு வா. நாம் போகலாம்'' என்றாள் தன்மையாக.

''நான் ரெடிதான். இந்த டிரேஸே ஓகே'' என எழுந்த ஷண்மதியை முறைத்தாள் சாம்பவி.

''இதைவிட அழுதுவடியும்படி டிரெஸ் பண்ணிட்டு வர வேண்டியதுதானே!'' என அதட்டியவள் அவளை இழுத்துக் கொண்டு டிரெஸிங் ரூமிற்குள் சென்று



வார்ட்ரோபை திறந்து வேகமாக விழிகளால் ஆராய்ந்து ப்ளாக் ஜீன்ஸையும், பேபி பிங்க்கில் கழுத்தில் நெட் வொர்க் செய்த அழகான டாப்பையும் எடுத்து நீட்டினாள்.

''இதைப் போட்டு கொண்டு வா'' என்றபடி வெளியே வந்து சோபாவில் அமரவும் அதற்காகவே காத்திருந் தாற்போல் முத்து தலையை நீட்டினாள்.

''இன்னும் காலை டிபன் சாப்பிடவில்லை. ஏன் பால் கூடக் குடிக்கவில்லை தெரியுமா?''

''அடடா! ஏன் முத்து? உன்னை யார் சாப்பிட வேண்டா மென்றார்கள்'' என்று வியப்புடன் வினவினாள் சாம்பவி.

''அடக் கடவுளே! நானில்லை. சின்னம்மாதான். ஏதோ திருமணத்திற்குப் போக வேண்டுமென்று ஐயா காலை ஐந்தரைக்கெல்லாம் கிளம்பிவிட்டார். சின்னம்மாவிற்கு ரொம்ப வசதியாகி விட்டது. காலையிலிருந்து பச்சை தண்ணீர் கூடக் குடிக்கவில்லை'' எனக் குறைப்பட்டாள்.

அதற்குள் ஷண்மதி வெளியே வரவே, ''எனக்கு குடிப்ப தற்கு ஒன்றும் வேண்டாம் முத்து. ரொம்ப பசிக்கிறது. டிபன் எடுத்து வை'' என்றவள் ஷண்மதியிடம் திரும்பி,

''நீ சாப்பிட்டுவிட்டாயா ஷண்மி?'' என ஏதும் தெரியாதவள் போல் விசாரித்தாள்.

முத்து சந்தோஷமாக குறுக்கிட்டு, ''இன்னும் இல் லையே. இரண்டு பேரும் சாப்பிட்டுவிட்டே வெளியே கிளம்பலாம். நான் போய் எடுத்து வைக்கிறேன்'' என்று கீழே விரைந்தாள்.

இருவரும் சேர்ந்து கொண்டு நடத்தும் நாடகம் புரிந்த ஷண்மதி மேலே மறுத்து பேசாமல் சாப்பிட கிளம்பினாள்.

கீழே எதிர்பட்ட சங்கரிடம், ''ஹலோ மேனேஜர். நானும் ஷண்மியும் வெளியே போகிறோம். ரவியிடம்

போய் காரை ரெடி பண்ண சொல்லுங்கள். அதுமட்டுமல்ல இனிமேல் ஷண்மியை பார்க்கவிடாமல் தடுத்தால் எனக்கு கெட்ட கோபம் வரும். அவளே அப்படிச் சொன்னாலும் இந்த விஷயத்தில் நீங்கள் என் பேச்சை தான் கேட்க வேண்டும். இல்லையென்றால் அங்கிளிடம் சொல்லி சீட்டைக் கிழித்து விடுவேன்'' என ஏகமாய் மிரட்டவும் ஷண்மதிக்கும் புன்னகை மூண்டது.

ரொம்பவும் பணிவு போல, ''சரிங்கம்மா'' என்று விட்டு சென்றான் சங்கர்.

சாப்பிடும் பொழுதும், ''முத்து! ஷண்மிக்கு இன்னும் கொஞ்சம் கிச்சடி வை. இன்னொரு வடை, சட்னி ஊற்று'' என்று சொல்லச் சொல்ல முத்துவும் ஷண்மதியின் தட்டில் நிறையவே வைத்தாள்.

''என்னடி?'' என முறைத்த ஷண்மதியிடம், ''என்னடி முறைக்கிறாய்? சாப்பிடு. நீ தட்டில் இருக்கும் கிச்சடி முழுக்க காலி பண்ணவில்லையென்றால் நான் எனக்கு இன்னொரு இட்லி வைத்துக் கொள்ள மாட்டேன். பசியோடு எழுந்து விடுவேன்'' என மிரட்டவும் வேறுவழியில்லாமல் தட்டில் வைத்ததை எதுவும் பேசாமல் ஷண்மதி சாப்பிடவும் முத்துச் செல்விக்கு உள்ளூர சந்தோஷம் தாளவில்லை.

'சின்னம்மாவிற்கு இந்த பெண்தான் லாயக்கு. இப்படி நன்றாய் சாப்பிட்டு மூன்று நாட்களாயிற்றே. நாம் சொன்னதை கேட்டார்களா.. எப்படி நழுவினார்கள்... ஆனால் இந்த பெண் சாப்பிட வைத்து விட்டாளே' என உள்ளுக்குள் அகமகிழ்ந்து போனவளாய், சாப்பிட்டு விட்டு வந்தவர்களிடம் இரண்டு பெரிய க்ளாஸ்களில் பாலை நீட்டவும் முத்துவை முறைத்தாள் ஷண்மதி.



முத்து குறிப்பாக சாம்பவியை பார்க்கவும், ''எடுத்து குடி ஷண்மி. சீக்கிரம் குடித்து விட்டு வா. கிளம்ப வேண்டாமா?'' என்றபடி தன் க்ளாஸை எடுக்கவும் வேறு வழியின்றி பாலை குடித்தாள் ஷண்மதி.

''லெட்ஸ் கோ'' என்றபடி ஷண்மதியின் கையை பிடித்து கொண்டு சாம்பவி செல்வதையும் ஷண்மதியின் முகத்தில் பூத்த முறுவலையும் மனம் நிறைய பார்த்துக் கொண்டிருந்தாள் முத்துச் செல்வி.

## 24



''அத்தை! இவள் சாம்பவி. வன் ஆஃப் மை பெஸ்ட் ப்ரெண்ட்ஸ். பவி! இவர்கள்தான் நம் சாரோட அம்மா. அவர்கள் அண்ணி'' என முறைப்படி அறிமுகம் செய்து வைத்தாள் ஷண்மதி.

இருவரையும் பார்த்து அன்போடு புன்னகைத்த தேவகி, ''உட்காருங்கள்'' என்று உபசரித்தார்.

''வீட்டில் எல்லோரும் நலமா அத்தை!'' என்றபடியே அமர்ந்தாள் ஷண்மதி.

''நல்லா இருக்கிறார்கள் ஷண்மிம்மா. வாசுவும், கிரியும் பிஸினெஸ் விஷயமாக பெங்களூர் போயிருக்கிறார்கள்'' என்றார் தேவகி.

சற்று நேர பொதுப்படையான பேச்சிற்கு பின் வந்த விஷயத்தை அவர்கள் சொல்லவும் தேவகி வியப்படைந்தார்.

அந்த மோதிரம் அவளுக்கு மிகவும் சென்டிமெண்டென்று அவருக்கு நன்றாகத் தெரியும்.

'என் அம்மாவினுடையது என்று கூறி அப்பா தந்த இந்த மோதிரம்தான் என்னிடம் இருப்பதிலேயே விலை மதிப்பில்லாதது' என்று அடிக்கடி ஷண்மதி கூறி கேட்டவருக்கு 'அதை ஏன் ஸ்ரீதரிடம் கழற்றி வீசினாள்?' என்ற கேள்வி உள்ளுக்குள் எழவே செய்தது.

ஆனால் அதைக் கேட்டு அவளை சங்கடப்படுத்த விரும்பாமல், ''அன்று அவன் என்னிடம் எந்த மோதிரத்தையும் தரவில்லையே ஷண்மிம்மா. அன்று இருந்த அவசரத்தில் எடுத்து வைக்க மறந்திருப்பான் என்று நினைக்கிறேன். சொல்லப்போனால் ரொம்பவும் சுத்தம் பார்த்து நீட்டாக அணிபவன் அவன். அன்று ஷர்ட்டின் கைப்புறம் இலேசான அழுக்கு. வேறு ஷர்ட் மாற்றிக் கொண்டு போவென்றதற்கு கூட 'நேரமில்லை அம்மா' என கிளம்பி விட்டான். மோதிரம் நீ போட்ட இடத்தில்தான் இருக்குமென்று நினைக்கிறேன். உதிம்மா அவனது ரூம் சாவியை ஷண்மியிடம் கொடு'' எனவும் சாவியை நீட்டிய உதயாவையும் கூடவே இழுத்துக் கொண்டு அறைக்குள் நுழைந்தனர்.

மிக விசாலமான அவ்வறையில் விழிகளை ஓட்டிய சாம்பவி, ''பரவாயில்லை. நீட் அண்ட் க்ளீனாகத்தான் ரூமை வைத்திருக்கிறார்'' என பாராட்டிவிட்டு, ''அக்கா! இந்த ஷ்ரத்தி பார்க்க எப்படி இருப்பாள்?'' என நைஸாக விசாரித்தாள்.

வியப்புடன் அவளை நோக்கிய உதயா, ''ம்ம்... ரொம்பவும் அழகு. இந்த வீட்டிற்கு இரண்டு மூன்று முறை வந்திருக்கிறாள். எனக்கு திருமணமான புதிது. அப்பொழுது பார்த்ததுதான்'' என்றாள் உதயா.

அதற்குள் மேஜை மீதிருந்த அவ்வளவு புத்தகங்களையும் கவனமாக நகர்த்தி தேடிப் பார்த்த ஷண்மதி, ''அக்கா! இங்கே இல்லையே'' என்றாள் கவலையோடு.



''நன்றாக தேடிப்பார் ஷண்மி. நீ போட்ட வேகத்தில் உருண்டு கீழே கூட விழுந்திருக்கலாம்.. இரு.. நானும் தேடிப் பார்க்கிறேன்'' என்றவள், அதற்குள் சேரின் மீது ஏறி நின்று வினேஷ் மேஜை மீதிருந்த புக் ஒன்றை உருவ சரிந்து நான்கைந்து புக்ஸ் கீழே விழவும், ''டே...ய் வாலு பையா! சித்தப்பாவோட முக்கியமான புக்ஸ்டா'' என்றபடி அவனை எட்டிப் பிடித்து தூக்கினாள்.

''ஷண்மி! நீ தேடிக் கொண்டிரு. இந்த விஷமத்திற்கு பதினொன்றரைக்கெல்லாம் பருப்பு சாதம் கொடுக்க வேண்டும். சாதத்தை பிசைந்து அத்தையிடம் கொடுத்து விட்டு இதோ வருகிறேன்'' என்று வினேஷை தூக்கிக் கொண்டு சென்றாள்.

தரையில் மண்டியிட்டு குனிந்து கட்டிலுக்கடியில் விழிகளால் துழாவிய ஷண்மதி, ''பவி! இங்கும் காண வில்லையே'' என்றபடி நிமிர்ந்தாள்.

''டோண்ட் வொர்ரி ஷண்மி! நன்றாகத் தேடிப்பார். அப்படியும் கிடைக்கவில்லை என்றால் சார் எடுத்து வைத்திருப்பார். என்னதான் உன் மீது கோபமென்றாலும் அம்மோதிரத்தை சார் பொறுப்பாய் எடுத்து வைத்திருப்பார். நாம் ஆன்ட்டியை விட்டு போன் செய்து கேட்கச் சொல்வோம்'' என்றாள் சாம்பவி எளியாக.

''அப்படிதான் செய்ய வேண்டும். வீராப்பாக வைத்து கொள்ளுங்கள் என்று கழற்றி வீசி விட்டேனே தவிர மனம் கேட்கவில்லை பவி.'' என்றபடி நிமிர்ந்தவள் சாம் பவி ரொம்ப மும்முரமாக கப்ஃபோர்டில் தேடுவதைக் கண்டு, ''பவி! அங்கு எதை தேடுகிறாய்? பார்த்து.. எதாவது மிஸ்ஸாகி விடப் போகிறது'' என்று எச்சரித்தாள்.

குரலை தணித்து, ''ஷண்மி! உன்னையே வேண்டாமென்றாரே... அந்தளவிற்கு அந்த ஷ்ரத்தி என்ன

பேரழகென தெரிந்து கொள்ளும் க்யூரியாசிட்டிதான். அதான் போட்டோ ஏதாவது கிடைக்குமாவென பார்க்கிறேன்'' என்றாள் சாம்பவி.

முகம் வாட, ''அவள் எப்படியிருந்தால் நமக்கென்ன பவி? வெட்டி வேலையை விட்டுவிட்டு வந்த வேலையை பார்'' என்றாள் ஷண்மதி.

மேலும் மும்முரமாக தேடியபடி, ''போடி! இதுவா வெட்டி வேலை. நீ மாட்டி வைத்திருக்கிறாயே அது போல் பெரிதாக இல்லாவிட்டாலும் ஒரு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ கூடவா மாட்டாமல் போகும்'' என வீராப்பாக தேடிப் பார்த்தவள் ''ச்சு'' என்று அலுத்துக் கொள்ளவும் ஷண்மதி ''நான்தான் சொன்னேனே!'' என்றபடி மீண்டும் மூலை முடுக்கெல்லாம் மோதிரத்தை தேடினாள்.

வினேஷ் கைங்கரியத்தால் கீழே கிடந்த புக்ஸை அடுக்கியபடி ''உதி அக்காவிடம் சொல்லி, ஸ்ரீதர் சாரிடம் நைஸாக பேசி ஷ்ரத்தி போட்டோவை வாங்கி தர சொல்ல வேண்டும்'' என்ற சாம்பவி கீழே சற்று விரிந்திருந்த புக்கிலிருந்து வெள்ளை நிறத்தில் கார்டைபோல் இலேசாக நீட்டிக் கொண்டிருக்கவும் கூர்ந்து பார்த்தவள் அது புகைப்படத்தின் பின்பக்கமென்பதை கண்டு, ''உதி அக்காவிடம் சொல்லவே வேண்டாம். நானே கண்டுபிடித்து விட்டேன்'' என தன்னையே பாராட்டிக் கொண்டவளாக போட்டோவை திருப்பி பார்த்தாள்.

''ம்கூம்! எங்குமே கிடைக்கவில்லை. அத்தையிடம் சொல்லி ஸ்ரீதரைதான் கேட்கச் சொல்ல வேண்டும்'' என்றபடி எழுந்து வந்த ஷண்மதி, சாம்பவியிடமிருந்து சத்தமே வரவில்லையென கண்டு திரும்பியவள், ''ஏய் பவி! போட்டோவை கண்டு பிடித்து விட்டாயா?'' என



விசாரிக்கவும் நிமிர்ந்து அவளைப் பார்த்த சாம்பவி வெற்றியோடு சிரித்தாள்.

''வெட்டிவேலை! கிடைக்காதென்றாயே... கண்டு பிடித்து விட்டேன் பார்த்தாயா?'' எனப் பீற்றியவள் மீண்டும் ரசனையோடு புகைப்படத்தில் பார்வையை பதித்து, ''ஷண்மி! உண்மையிலேயே சூப்பர் அழகுடி. ஐ காண்ட் பிலீவ் இட்! ஸ்ரீதர் சாரோட செலக்ஷன்... வாவ்! போட்டோவிலேயே கொள்ளை அழகு'' என பொறாமையேயின்றி மனமார பாராட்டினாள்.

கேட்டுக் கொண்டே உள்ளே நுழைந்த உதயாவிடம், ''உதி அக்கா! இப்பொழுதுதானே புரிகிறது. இவ்வளவு அழகாகயிருந்தால் ஏன் தலைக்குப்புற விழமாட்டார்'' என்று கூறியபடி சாம்பவி நீட்டிய புகைப்படத்தில் பார்வையை பதித்த உதயா விழிகள் வியப்பில் விரிய, ''ஷண்மி! இது உன் போட்டோ'' என்றாள் நம்ப முடியாத ஆச்சரியமும், திகைப்பும் வழிந்த குரலில்.

கைதட்டி குதித்தாள் சாம்பவி.

## 25



''முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதென்று கேள்விப்பட்டிருக்கிறேன். அதை இன்றுதான் கண்கூடாகப் பார்க்கிறேன். என் மகன் அதை செய்தே காட்டி விட்டான்'' என்று கூறி மனம்விட்டு சிரித்தார் தேவகி.

சோபாவில் அமர்ந்திருந்த ஷண்மதியின் தோளை, பின்னால் நின்றுக் கொண்டிருந்த சாம்பவி கட்டிக்

கொண்டு, ''அதானே பார்த்தேன். எங்கள் ஷண்மியை வேண்டாமென்று சொல்ல யாரால் முடியும்'' என்று எல்லையற்ற குஷியோடு ஷண்மதியின் கன்னத்தில் முத்தமிட்டாள்.

அனைவருக்கும் சூடாக ஒரு காபி தேவைப்படவே எடுத்துக் கொண்டு வந்த உதயா, ''அத்தை! போட்டோவிற்கு பின்னால் ஸ்ரீதர் எழுதியிருந்ததை படித்தீர்களா?'' என்று சிரிக்கவும், சாம்பவி உடனே,

**மதிமுகம் கண்டேனடி**
**கண்ட கணம் முதலாய்**
**மதி மயங்கி தவித்தேனடி''**

என அக்கவிதையை மீண்டும் ஒரு முறை கூறி கலகலவென்று நகைத்தபடி ஷண்மதியின் அருகில் வந்து அமர்ந்தாள்.

''நேரிலே பார்க்கும்பொழுதெல்லாம் அவளை என்ன விரட்டு விரட்டிவிட்டு கவிதையில் எப்படி உருகியிருக்கிறான் பாருங்களேன். அவன் வரட்டும் என்னிடம் நன்றாக மாட்டினான்'' எனப் போலியாக கறுவினாள் உதயா.

தேவகியின் முகத்தில் சற்றே யோசனை படர, ''ஆனால், எனக்கு ஒரு சந்தேகம். இவளை காதலிப்பதை ஏன் ஒற்றுக் கொள்ள மறுக்கிறான்'' என வினவினார்.

சாம்பவி உற்சாகத்தோடு குறுக்கிட்டு, ''அது ரொம்ப சிம்பிள் ரீசன் ஆன்ட்டி. எங்கள் ஷண்மதி, சாரை பார்ப்பதற்கு முன் ரொம்பவும் வீரமாக ஒரு சவால் விட்டாள். என்ன.. எங்கள் வீரமெல்லாம் சவால் விடுவதோடு மட்டும்தான். அதன் பிறகு அதை அப்படியே காற்றில் பறக்க விட்டுவிடுவோம். அது புரியாமல் சவாலில் ஜெயிப்பதற்காகத்தான் ஷண்மி தன்னிடம் பழகுவதாக



சார் தவறாக நினைத்துக் கொண்டுவிட்டார். அப்பவே நினைத்தேன். நம் ஷண்மியிடமிருந்து ஒருவர் தப்ப முடியுமாவென்று!'' என குழந்தையாய் குதூகலித்தாள்.

அவளுக்கு தன் உயிர் தோழியின் பிரச்சனை தீர்ந்ததில் ஏக உற்சாகம்.

கூடவே உதயாவும், ''இப்பொழுது புரிகிறது அத்தை! அன்று, 'தகுதியற்றவள் என்றாலும் என் காதல் உண்மை. அவளை மறக்க முடியாது' என்றெல்லாம் சொன்னது நம் ஷண்மியை மனதில் வைத்துதான். நாம்தான் ஷரத்தியென்று புரிந்து கொண்டோம்'' என கூறியவள் கலகலவென்று சிரித்தாள்.

கூடச் சேர்ந்து சிரித்த தேவகி, ''திருமணத்திற்கு ஷண்மதி சம்மதித்தாலே அவள் நடிக்கவில்லையென்பது ஸ்ரீதருக்கு புரிந்து போய் விடுமே! வரட்டும் அவன். இந்த போட்டோவை காட்டி 'இதற்கு என்னப்பா சொல்கிறாய்? என பயங்கரமாக கேலி செய்ய வேண்டும்' என்று நகைத்தவர், ''அவனிடம் பேசி விரைவிலேயே திருமணத்திற்கான ஏற்பாடுகளை தொடங்கி விடலாம்'' என்றார் எல்லையற்ற மகிழ்ச்சியோடு.

''வேண்டாம்'' என்று உறுதியோடு எழுந்தது. அதுவரை ஒரு வார்த்தை கூட பேசாமல் மவுனமாக இருந்த ஷண்மதியின் குரல்.

## 26



ஒரு கணம் அங்கு எள் விழுந்தால் கூட கேட்குமளவிற்கு நிசப்தம் நிலவியது.

அதிர்ச்சியோடு அவளை நோக்கி, ''நீ என்ன சொன்னாய்?'' என உதயா நம்பமுடியாமல் கேட்டாள்.

முகத்தில் வர்ணஜாலங்களாய் பல்வேறு உணர்ச்சிகள் மின்னி மறைய, ''வேண்டாம் என்றேன்'' என தெள்ளத் தெளிவாகக் கூறினாள் ஷண்மதி.

நம்ப இயலாத திகைப்புடன் அவளை நோக்கினார் தேவகி.

தலையை உலுக்கி விட்டுக் கொண்ட சாம்பவி, ''என்னடி விளையாடுகிறாயா?'' என்று சந்தேகத்தோடு வினவவும் உறுதியாய் தலையசைத்து மறுத்தாள் ஷண்மதி.

''இல்லை பவி! நான் உண்மையாகத்தான் கூறுகிறேன். எடுத்த போட்டோவை அதே இடத்திலேயே வைத்து விடுங்கள். ஸ்ரீதர் வந்ததும் என்னைப் பற்றியோ, இப்படத்தைப் பற்றியோ பேசவே தேவையில்லை'' என்றாள் அவள் அழுத்தமான குரலில்.

திகைப்புடன் ஷண்மதியை நோக்கியவள், ''ஏன் ஷண்மி? ஏன்?'' எனப் புரியாமல் கேட்டாள் சாம்பவி.

சட்டென கண்களில் கோபக்கனல் கொழுந்து விட்டு எரிய, ''ஏனென்றா கேட்கிறாய்? இதோ இந்த போட்டோவை பார் பவி. பின்னாலிருக்கும் கவிதையை பார். இப்படி உருகி எழுதியிருக்கிறவர், ஏன் ஷண்மதியைப் பற்றியோ திருமணம் பற்றியோ பேசக் கூடாதென்றார்? அதன் காரணத்தை யோசித்தாயா? என் மீது நம்பிக்கையில்லை என்பதால்தானே. இதுவரை இருந்த நிலை வேறு பவி. என் மீது கோபமாக இருக்கிறார். சந்தர்ப்ப சூழ்நிலையால் என் மீது நம்பிக்கையிழந்திருக்கிறார். மனம் மாறும். என் மீது அன்பும் ஏற்படும் என்றுதான் எண்ணிக் கொண்டிருந்தேன். ஆனால் முன்பே என்னை காதலிக்க ஆரம்பித்



தவர் என்னை நம்பவில்லையே என்பதை என்னால் தாங்க முடியவில்லை.

எப்பொழுது என்னை காதலிக்க ஆரம்பித்தாரோ அப்பொழுது காதலிக்கும் பெண்ணின் மீது நம்பிக்கை வைத்திருக்க வேண்டாமா? சந்தர்ப்ப சூழ்நிலையால் நம்பிக்கை இழக்கும்படி ஆகி விட்டதென்றாலும் அட்லீஸ்ட் இவள் நம்பிக்கைக்குரியவளா என்று என்பக்க சாதக கூறுகளை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? இதையெல்லாம் செய்யாமல் தன் காதலை தனக்குள்ளேயே புதைத்துக் கொண்டாரே. அவரிடம் இனி பேசுவதற்கென்ன இருக்கிறது'' என ஆணித்தரமாக கேட்டாள்.

''கோபத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்காதே ஷண்மி'' என்றாள் சாம்பவி கெஞ்சுதலோடு.

''உனக்கு புரியவில்லை பவி. காதலின் அடிப்படையே நம்பிக்கைதானே. காதல் மட்டுமல்ல நட்பு, ரத்த பந்தம் என்று எல்லா உறவுகளும் செழித்து வளர்வதற்கு அஸ்திவாரமே நம்பிக்கைதானே. நம்பிக்கை இல்லாத அன்பு அர்த்தமற்றதாகிறது. ஒருவர் மீது அன்பு செலுத்துவது மட்டும் முக்கியமல்ல... அதே அளவு அவர் மீது நம்பிக்கை வைப்பது அவசியம். இவர் இதைச் செய்யக்கூடியவர், இதை செய்ய மாட்டார் என்கிற தெளிவுடன் கூடிய நம்பிக்கை அவசியம். அது இல்லாத அன்பு என்னைப் பொறுத்தவரை அர்த்தமற்றதுதான். இதை ஸ்ரீதருக்கு புரிய வைக்கத்தான் போகிறேன்'' என்றாள் ஷண்மதி கோபத்துடன்.

அவளைக் கூர்ந்து பார்த்த தேவகி, ''இப்பொழுது என்ன செய்வதாக இருக்கிறாய்? அவனுக்கு எப்படி புரிய வைக்கப்போகிறாய்?'' என தணிந்த குரலில் விசாரித்தார்.

அதற்கு அவள் சொன்ன பதில் அனைவரையும் தூக்கி வாரிப் போட வைத்தது.

சற்றும் தயங்காமல், ''திருமணம் செய்துக் கொள்ளப் போகிறேன்'' என கோபக் குரலிலேயே அறிவித்தாள் ஷண்மதி.

செவிகளை சந்தேகத்தோடு தேய்த்து விட்டுக் கொண்டாள் சாம்பவி.

திகைத்து போனவளாக, ''யாரை?'' என கேட்டாள் உதயா.

''குணாவை!'' என்ற அவளின் பதிலில் மேலும் அதிர்ந்தனர் மற்றவர்கள்.

## 27



''உனக்கு பைத்தியம்தாண்டி பிடித்திருக்கிறது'' என கோபத்தோடு எழுந்து நின்ற சாம்பவியை பார்த்து, ''இல்லை பவி! நான் தெளிவாகத்தான் இருக்கிறேன்'' என்றாள் அமைதியாக.

''குணா ஒப்புக்கொள்வானா? அபிராமி ஆன்ட்டி தன் அண்ணன் மகளை குணாவிற்கு திருமணம் செய்ய எண்ணியிருப்பதாக நீயே சொன்னாயே.''

''ஆனால் இப்பொழுது நான் ஒரு வார்த்தை கூறினால், கட்டாயத்தினால் அல்லாமல் மனப்பூர்வமாகவே ஒப்புக் கொள்வார்கள் அவர்கள் மூவரும்.''

''வேண்டாம்டி! ஸ்ரீதர் சார் மனமொடிந்து போவார்'' என்றார் சாம்பவி அவசரமாக.



ஷண்மதியின் முகத்தில் கசப்பானதொரு புன்னகையின் சாயல் தோன்றியது. ''அப்பாவிடி பவி நீ. அவர் ஏன் மனமொடிய போகிறார். அவரை பொறுத்தவரை நான் அவரது அன்பிற்கு தகுதியற்றவள். சோ விலகிக் கொண்டு விட்டார். அவ்வளவுதான்'' என்றாள் குரலிலும் கசப்பு தெரிய.

''அப்படியல்ல...'' என மீண்டும் தொடங்கிய சாம்பவியை இடைமறித்தாள் ஷண்மதி.

''போதும் பவி! அவரை பற்றியே நினைக்கிறாயே. என்னை சற்று நினைத்து பார். கடந்த சில நாட்களாக ஸ்ரீதர் மனதில் வேறொருத்தி என்ற நினைவில் எப்படி தவித்தேனென்பதை கண்டவள்தானே நீ. எல்லாவற்றையும் தள்ளி விடலாம். ஆனால்.. அன்று காலங்காத்தாலே தேடி வந்து பேசினேனே. என் அம்மாவின் மோதிரத்தை கழற்றிய பின்பும் கூட தான் நேசிக்கும் பெண்ணை நம்பாமல் சென்றாரே... வேண்டாம் பவி. விட்டுவிடு. நீ சொல்வதுபோல அவர் வேதனைப்பட்டாலும் படட்டும். நான் எவ்வளவு தவித்திருப்பேன். அவரும் கொஞ்சமேனும் தவிக்கட்டும். அப்பொழுதுதான் என் வேதனை புரியும்'' என்றாள் கோபம் குறையாமலே.

இதுவரை கோபப்பட்டே பார்த்திருக்காத ஷண்மதியின் கோபத்தை முதன்முறையாக கண்டு மேற்கொண்டு ஏதும் பேசமாட்டாமல் நின்றாள் சாம்பவி.

தேவகி பக்கம் திரும்பி, ''நீங்களாவது என் பக்க நியாயத்தை யோசியுங்கள். என் கோபம், என் மனநிலை உங்களுக்கும் புரியவில்லையா?'' என்று பேசிப்பேசியே அவரை சமாதானப்படுத்தி தன் பக்கம் கரைப்பதை முறைத்து பார்த்தபடி எதுவும் செய்ய இயலாதவளாய் நின்றிருந்தாள் சாம்பவி.

# 28



"இப்பொழுது எங்கே போகிறோம்?" என விசாரித்தாள் சாம்பவி.

"நேராக குணா வீட்டிற்கு."

"இம்.." என பெருமூச்சு விட்ட சாம்பவி, "அவன் ஆபீஸில் அல்லவா இருப்பான்" என வினா எழுப்பவும்,

"வீட்டில்தான் இருக்கிறான். லஞ்ச் சாப்பிட வந்தானாம். முக்கியமான விஷயம். பேச வேண்டும், வீட்டிலேயே இரு என்றிருக்கிறேன்" என்ற ஷண்மதியின் பதிலில்,

"கடவுளே! குணா ஒத்துக் கொள்ளக் கூடாது" என உரக்க பிரார்த்தித்த சாம்பவி ஷண்மதி பார்த்த பார்வையில் வாயை மூடிக் கொண்டு எரிச்சலாய் வெளியே பார்த்தாள்.

"வா பவி! வா ஷண்மி! உள்ளே வாருங்கள்" என்று முகம் மலர, ஆவலாய் வரவேற்ற குணா, "என்ன ஷண்மி? ஏதோ மிகவும் முக்கியமான விஷயமென்றாயே.." என விசாரித்தான்.

"சொல்லத்தானே வந்திருக்கிறேன்" என்றவள், "நீங்களும் வாருங்கள்" என்று அபிராமியையும் சதாசிவத்தையும் அழைத்து விஷயத்தை சொல்லவும் குணா அவளை ஆச்சரியமாக பார்த்தான்.

"குணா! உனக்கு ஸ்ரீதர் பற்றிய என் விருப்பமெல்லாம் முன்பே தெரியும். என்மீது கொண்ட அக்கறையி



னால் என் பேச்சையும் மீறி ஸ்ரீதரைப் பற்றி விசாரித்து சொன்னவன் நீ. இப்பொழுது... குணா.. ப்ளீஸ்.. என்ன சொல்கிறாய்? நான் உன்னை நம்பிதான் வந்திருக்கிறேன்" என்றாள் ஷண்மதி.

அதற்குள் அபிராமி குறுக்கிட்டு, "என்னடா... ஷண்மியை இவ்வளவு தூரம் கேட்க விட்டுக் கொண்டு நீ பேசாமல் இருக்கலாமா? சம்மதமென்று சொல்" எனவும்,

"நீங்கள் என்ன சொல்வீர்களோ என்றுதான் தயங்கினேன் அம்மா. அத்தோடு சுசித்ரா வேறு..." என மகன் இழுக்கவும்,

"என் அண்ணன் மகளை பற்றி எனக்கு தெரியாதா? நான் அவளிடம் பேசிக் கொள்கிறேன்" என்று உறுதியளித்தார்.

முறுவல் மலர குணா, ஷண்மதியை பார்த்து, "என்ன ஷண்மி சந்தோஷம்தானே?" என கேட்கவும் ஷண்மதிக்கு உள்ளம் நெகிழ்ந்தது.

அவள் மீது எவ்வளவு அன்பிருந்தால் உடனே சம்மதிப்பார்கள்.

"ஒப்புக் கொள்வீர்களோ மாட்டீர்களோ என்று உள்ளூர ஒரு குழப்பத்திலேயே வந்தேன்" என்றாள் உணர்ச்சியோடு.

"பைத்தியம்! நீ என்றால் அபிக்கு உயிராயிற்றே!" என புன்னகைத்தார் சதாசிவம்.

"உங்களுக்கு மட்டும் இவனென்றால் உயிரில்லையா?" என அவரை கேலி செய்த அபிராமி ஷண்மதியின் நெற்றியில் முத்தமிட்டு, "நான் தூக்கி வளர்த்த பெண் நீ. உன் விருப்பத்தை என்றாவது மறுத்திருப்போமா? நீ ஷண்முகம் அண்ணாவிற்கு மட்டும் செல்லப் பெண்

ணல்ல. இந்த வீட்டிற்கும் நீதான் செல்லம்'' என்றார் புன்னகையோடு.

எல்லாவற்றையும் கவனித்துக் கொண்டிருந்த சாம்பவிக்கு அந்த குடும்பமே ஷண்மதி மீது வைத்திருந்த அன்பைக் கண்டு உள்ளம் உருகியது.

''ஷண்மி! இன்றே நேராகப் போய் அங்கிளிடம் பேசி விடுவோமா?'' எனக் கேட்டபடி குணா எழுந்தான்.

தானும் எழுந்தபடி, ''கண்டிப்பாக.. அப்பாவை ஆபீஸிலேயே பார்த்துப் பேசி விடலாம்'' என்றாள் ஷண்மதி.

சாம்பவியை வீட்டில் விட்டுவிட்டு நேராக ஷண்முக பிரகாஷை அவரது ஆபீஸ் அறையிலேயே சந்தித்து பேசினர் குணாவும், ஷண்மதியும்.

ஆனால் எதிர்பார்த்தது போல் அவர் உடனே சரியென்று விடவில்லை.

மாறாக, ''தடாலென்று இப்படி சொன்னால் எப்படி ஷண்மதி? முதலில் இதற்கென்ன அவசியம்? ஸ்ரீதர் வரட்டும். உட்கார்ந்து பேசி எல்லாவற்றையும் சரி செய்வோம்'' என்றே கூறினார்.

ஆனால் முடியாதென பிடிவாதமாக மறுத்துவிட்டாள் ஷண்மதி.

யோசனையுடன் குணாவிடம் திரும்பினார் ஷண்முக பிரகாஷ்.

''குணா! நன்றாக யோசித்துதான் எஸ் சொன்னாயா? உனக்கும் உன் மாமா பெண்ணிற்கும் திருமண...'' என்றவரை இடைமறித்தான் குணா.

''ஒரு பிரச்சனையுமில்லை அங்கிள். சுசி புரிந்து கொள்வாள்'' என்றான் சுருக்கமாக.

''ம்ம்... இவள் கேட்டதும் உடனே எப்படி குணா ஒத்துக் கொண்டாய்?'' என கேட்டபடி சேரில் இலேசாக சுழன்றார் ஷண்முக பிரகாஷ்.



''அங்கிள்! உங்களுக்கு தெரியாதா என்ன? இவள் ப்ளீஸ் போட்டு கேட்டால் மறுக்க யாரால் முடியும்?'' என்று சிரித்தான் குணா.

அவனை பார்த்து, ''இவள் ப்ளீஸ் போட்டால் உடனே நீ மண்டையை ஆட்டி விடுவதா?'' என கேலியாக வாரியவர்,

''அப்பா! ப்ளீஸ்ப்பா... எஸ் சொல்லுங்களேன்'' என்று ஷண்மதி கேட்கவும்,

''ம்...'' என யோசித்தவர் ''சரிம்மா'' என்று தலையாட்டவும் குணா பக்கென்று சிரித்துவிட்டான். கூடவே அவரும் இணைந்து கொண்டார்.

## 29



காரிலிருந்து இறங்கிய ஷண்மதி, ''நான் இங்கே இருக்கிறேன்ம்மா'' என்ற தந்தையின் குரலை கேட்டு திரும்பி பார்த்தாள்.

தோட்டத்து லானில் சேரைப் போட்டு, மாலைக் காற்றின் சுகத்தை அனுபவித்தபடி அமர்ந்திருந்த தந்தையைக் கண்டு புன்னகைத்தபடி அருகில் வந்தாள்.

அதற்குள் ரங்கன், ''சின்னம்மா! உங்களுக்கும் டிபன், காபி இங்கே கொண்டு வரவா?'' என வினவவும்,

''ம்!'' என்றபடி தானும் ஒரு சேரில் அமர்ந்த ஷண்மதி, ''என்ன டாட் அதிசயம்? சீக்கிரம் வந்து விட்டீர்கள்''என வியப்புடன் கேட்டாள்.

கடந்த பத்து தினங்களாக மகளிடம் பழைய துள்ளலும் துடிப்பும் வெளிப்படுவதை கண்டவர் தன்னுள்

புன்னகைத்து கொண்டவராக, ''என்னம்மா ஷாப்பிங்கா?'' என கேட்டார்.

''எஸ் டாட்! குணா பேமிலியோடு மேரேஜ்க்கான டிரெஸ் செலக்ஷனுக்கு போயிருந்தேன்'' என்று உற்சாகத்தோடு உரைத்தவள் ரங்கன் கொண்டு வந்து வைத்த ட்ரேயிலிருந்த டிபன் ப்ளேட்டை எடுத்துக் கொண்டாள்.

அவன் அகன்றதும் மகளை நோக்கிய ஷண்முகபிரகாஷ், ''இன்று உன்னைப் பார்க்க வீட்டிற்கு ஸ்ரீதர் வந்திருந்தார் போல'' என குறுகுறுப்புடன் கேட்டார்.

ஸ்ரீதர் பெயர் பேச்சில் வரவும் சட்டென்று முகம் மாற, ''ரங்கன் அதற்குள் ஒப்பித்து விட்டானா? சரியான முந்திரி கொட்டை!'' என கோபத்தோடு முணுமுணுத்தவள், ''அப்பா! அவர் பெயரையே என் முன்னால் சொல்லாதீர்கள்'' என்றாள் எரிச்சலோடு.

''சரிம்மா! சொல்லவில்லை... இப்பொழுது சொல், நம் வீட்டிற்கு இன்று ஒருவர் வந்தாராமே'' என பதவிசாய் கேட்கவும் தன்னை மீறி சிரித்துவிட்டாள் ஷண்மதி.

''அப்பா! பொல்லாத ஆளப்பா நீங்கள்!'' என்று கூறி மீண்டும் சிரித்தாள்.

அவரும், ''பொல்லாத பெண்ணின் அப்பா பொல்லாதவராக இருப்பதில் வியப்பில்லை மகளே!'' என்று சிரிக்காமல் கூறவும்,

''அப்பா!'' என போலியாக முறைத்தவள், ''நான் பொல்லாத பெண்ணா?'' என்று கண்டிப்பான குரலில் கேட்கவும்,

''இப்படி முறைத்துக் கொண்டு கேட்டால்.. பயத்தில் நல்ல பெண் என்று பொய்தான் சொல்ல வேண்டும்'' என ஷண்முகபிரகாஷ் பயந்து போனவராக கூற ''டாட்'' என்றவளுக்கு மீண்டும் சிரிப்புதான் வந்தது.



கலகலவென சிரிக்கும் மகளை மகிழ்ச்சியுடன் பார்த்திருந்தவர், ''ஸ்ரீதர் என்னம்மா சொன்னார்?'' என தன்னை மீறிய ஆவலுடன் வினவவும் ஷண்மதியின் முகத்தில் குறும்பு எட்டிப் பார்த்தது.

''ஏன் உங்கள் ரங்கன் அதைப் பற்றி எது..வுமே சொல்லவில்லையா?'' என சாதுவாய் கேட்டாள்.

உதட்டை பிதுக்கினார் ஷண்முகபிரகாஷ். ''நான் கேட்கவில்லைடா. அவனாகத்தான் சொன்னான். நீ மாட்டி வைத்திருந்த போட்டோவை பார்த்தவனாயிற்றே. அதான் அவருக்கு ஏக உபசரிப்பு தந்தார்களாம். 'இரண்டு பேரும் இங்கிலீஷிலேயே பேசினார்கள். எனக்கு ஒன்றும் புரியவில்லை ஐயா. ஆனால் கேட்க நல்லாயிருந்தது ' என்றான்'' என்று சிரித்தார் அவர்.

அவள் முகத்திலும் சிரிப்பு மலர்ந்தது. ஆனால் உடனேயே அச்சிரிப்பு மறைய, ''வந்தார் அப்பா. ஆனால் நீங்கள் நினைப்பது போல் எதுவும் சொல்லவில்லை. ஹாலிலேயே உட்கார வைத்துதான் பேசினேன். வேலையாட்கள் அங்கே, இங்கே கண்ணில் படவும் தனியே பேச வேண்டுமென்றார். தேவையில்லை இங்கேயே பேசலாம் என்றுவிட்டேன். ரொம்ப அழுத்தம் அப்பா. 'திடீரென திருமணமென முடிவெடுத்து விட்டாயே. சுயமாக எடுத்த முடிவுதானா? இல்லை யாராவது போர்ஸ் செய்து ஒத்துக் கொண்டாயா?' என்று கேட்டார்.

'தெரிந்து கொண்டு என்ன செய்யப் போகிறீர்கள்?' என்று கேட்டேன். அதற்கு.. கொஞ்சமும் அலட்டிக் காமல் பதில் சொல்கிறார் டாட். 'நன்றாக படிக்கின்ற புத்திசாலி பெண். மேலே எம்.டெக் முடிக்கலாமே. முழு மெச்சூர்ட் வந்த பிறகு இந்த திருமணத்தை செய்துக் கொள்ள

லாமே என்றுதான்.. அதுவும் நல்ல டேலெண்ட்டான தன் ஸ்டூடண்ட் என்ற முறையில்தான் தன் அறிவுரையை கூறினாராம். எப்படி இருக்கிறது?'' என கோபத்தோடு கேட்டாள் ஷண்மதி.

''ம்ம்.. தன் ஸ்டூடண்ட் என்ற முறையில் சொல்லியிருக்கிறார். கரெக்ட்தானே! உனக்கேன் கோபம் வருகிறதென்றுதான் புரியவில்லை'' என சாதுவாக உரைத்த தந்தையை முறைத்தாள் ஷண்மதி.

''என்னப்பா நீங்கள்? அவரை சப்போர்ட் செய்கிறீர்கள். என்னை காதலித்துக்கொண்டே, 'ஸ்டூடண்ட் என்ற முறையில்தான் திருமணத்தை தள்ளி போடலாமென்று சொல்கிறேன்' என பட்டும்படாமலும் சொன்னால் கோபம் வராதா... என்னப்பா சிரிக்கிறீர்களே!'' என குறைப்பட்டாள் ஷண்மதி.

''சரிடா! சிரிக்கவில்லை. நீ அதற்கு என்ன பதில் சொன்னாய்?'' என மேலும் விசாரித்தார் தந்தை.

''எனக்கு ரொம்பவும் கோபம் அப்பா'' என தொடங்கிய மகளை இடைமறித்து,

''அடடே! உனக்கு இப்பொழுதெல்லாம் அடிக்கடி கோபம் கூட வருகிறது போல'' என தந்தை கிண்டலடிக்கவும்,

''போங்கள் அப்பா! இப்படியே என்னை கிண்டலடித்தால் நான் மேலே சொல்ல மாட்டேன்'' என முறுக்கிக் கொண்டாள் மகள்.

வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு, ''சரிங்க மேடம்! ரொம்பவும் பிகு செய்யாமல் விஷயத்தை சொல்லுங்கள்'' என கேட்டார் ஷண்முகபிரகாஷ்.

தந்தையின் போலி பணிவில் தன்னை மீறி புன்னகைத்தவள் மறுகணமே அப்புன்னகை மறைய, ''அவரிடம்



ரொம்பவும் தைரியமாக, 'என் பணத்திற்காக வட்டமிடும் பலர் திருமணத்தை நிறுத்துவதற்காக இப்படிதான் அறிவுரையெல்லாம் வழங்குகிறார்கள்' என்று கூறி விட்டேன் டாட்'' என மெல்லிய குரலில் கூறவும் ஷண்முகபிரகாஷ் திகைத்தார்.

''ஏண்டா அப்படி கூறினாய்?'' என கேட்டவர் மகள் மவுனமாய் இருக்கவும், ''நீ பேசியது ரொம்பவும் தப்பு ஷண்மதி'' என மகளை கண்டித்தவர், ''அதற்கு அவர் என்ன சொன்னார்?'' என கவலையுடன் விசாரித்தார்.

''ஒன்றுமே பேசவில்லை அப்பா. கன்னத்தில் அடி வாங்கியவர் போல திகைப்புடன் என்னை பார்த்தவர் ஒன்றும் பேசாமல் எழுந்து சென்று விட்டார்'' என்றவளின் குரல் அவளையும் மீறி தழுதழுத்தது.

மகள் முகத்தை உற்று பார்த்தவர், ''ம்கூம்! இது சரியில்லை'' என்றார்.

சற்றே திடுக்கிட்டு, ''எது அப்பா?'' என கேட்டாள் ஷண்மதி.

''குணாவை திருமணம் செய்துக் கொள்ள போகிறவள், இப்படி ஸ்ரீதருக்காக அனுதாபப்பட்டு வருந்துவதுதான். குணாவிற்கு போன் செய்து போட்டு கொடுக்கப் போகிறேன்.''

''போங்கள் அப்பா!'' என சிரித்தாள் ஷண்மதி.

''என்னவோ குணாவை நிஜமாகவே திருமணம் செய்துக் கொள்ள போகிறேனென்பது போல மிரட்டுகிறீர்களே. நாடகமென்பதை மறந்து கதாபாத்திரத்தோடு ஒவராக ஒன்றி விடாதீர்கள் டாட். அப்புறம் இப்படிதான் நாம் மட்டும் இருக்கும் சமயங்களில் கூட ஆக்டிங்கை அவிழ்த்து விட்டு விடுவீர்கள்'' என்று கிண்டலடித்து கலகலவெனச் சிரித்தாள்.

''ஓவராக கிண்டலடிக்கிறாயே! குணாவிடம் போட்டு கொடுப்பதற்கு பதில் ஸ்ரீதரிடம் எல்லாம் ஷண்மதியின் நாடகமென்று போட்டு கொடுத்து விடுகிறேன்'' என போலியாக மிரட்டி மகளை மேலும் சிரிக்க வைத்தார்.

கூடவே, ''ஆனாலும் வீடு தேடி வந்தவரிடம் மனம் வருந்த பேசி விட்டாயேம்மா'' என கவலைப்பட்டார் அவர்.

''ரொம்பவும் உருகாதீர்கள் டாட். உண்மையை ஒத்துக் கொள்ளாமல் ஸ்டூடண்ட் என்ற முறையில்தான் பேச வந்தேனென்றால் எனக்கு கோபம் வராதா? தான் காதலிக்கும் பெண் இன்னொருவனை திருமணம் செய்யப் போகிறாளென்றால் அவரையும் மீறி அவரது உள்ளம் தவிக்குமே டாட். அந்த தவிப்புதான் என்னைப் பற்றி அவரை யோசிக்க செய்யும். அந்த தவிப்புதான் அவரையே அவருக்கு புரிய வைக்கும் என்பதற்காகவே தான் இந்த நாடகம். அப்படியிருக்க தவிப்பை சற்றும் காட்டாமல் பேசினால் நான் என்ன செய்வது?''

''சரிடா! இந்த ட்ராமாவிற்கு என்று க்ளைமேக்ஸ்'' என அவர் விசாரிக்கவும், சிரித்தாள் ஷண்மதி.

''என் மீது கொண்ட அவநம்பிக்கையெல்லாம் மறைந்து அவர் என்றைக்கு என்னை தேடி வந்து உண்மையை ஒத்துக் கொள்கிறாரோ அன்று! அவர் தன் அழுத்தத்தை தொடர்ந்து கடைப்பிடித்தால் இன்னும் பத்து நாட்களில் குணாவிற்கும், சுசித்ராவிற்கும் நடக்கவிருக்கும் திருமணத்தன்றுதான் க்ளைமேக்ஸ்'' என்று சிரித்தாள் ஷண்மதி.

ஆனால் அன்றைய க்ளைமேக்ஸ் தான் எதிர்பார்த்த தற்கு நேர்மாறாக தன்னையே நிலைகுலைய வைக்க போகிறதென்று சற்றும் அறியவில்லை அவள்.



# 30



''ஹலோ! ஷண்மிம்மா நான் அத்தை பேசுகிறேன்'' என்ற தேவகியின் குரலை கேட்டவுடன் குதூகலமானாள் ஷண்மதி.

''நானே உங்களுக்கு கால் செய்ய வேண்டுமென்று நினைத்திருந்தேன், அத்தை. ஸ்ரீதர் இன்று என்னை பார்க்க வந்திருந்தார்'' என்று அவள் கூறவும் உற்சாக மானாள் தேவகி.

''வெரிகுட்! வெரிகுட்! என்ன சொன்னான்?'' என பர பரப்புடன் வினவவும் இந்த பக்கம் உதட்டை பிதுக்கி னாள் ஷண்மதி.

''நீங்கள் எதிர்பார்ப்பதுபோல் ஒன்றும் சொல்ல வில்லை அத்தை'' என்றபடி தங்கள் பேச்சை பற்றி கூறி யவள், ''மை காட்! கல்லில் இருந்து கூட நார் உரிக்கலாம். ஆனால் உங்கள் அருமை செல்ல இளைய பிள்ளையிடம் இருந்து விஷயத்தை வாங்கவே முடியாது அத்தை!'' என அலுத்துக் கொள்ளவும் தேவகியும் அதை புன்னகை யோடு ஆமோதித்தார்.

''உண்மைதான் ஷண்மிம்மா. வெளிநாட்டிலிருந்து திரும்பி வந்தவனிடம் உன் திருமண விஷயம் பற்றி கூறியபொழுது ஒரு கணம் முகத்தில் திகைப்பு தெரிந் தாலும் மறுகணமே 'அப்படியெல்லாம் இருக்காது' என மறுத்தான். மாட்டினாயா என்றெண்ணி நானும் 'எதை வைத்துப்பா இவ்வளவு நம்பிக்கையாய் சொல்கிறாய்?'

என்று கேட்டதற்கு 'அவள் பிடிவாதக்காரி அம்மா. அவ்வளவு எளிதாக மனதை மாற்றிக் கொள்ள மாட்டாளே என்றெண்ணிதான் சொன்னேன்' என சமாளித்து விட்டான்'' என்றார் தேவகி.

''சமாளிக்கட்டும்! சமாளிக்கட்டும்! எவ்வளவு நாள் தான் மூடி மறைப்பாரென்று பார்க்கிறேன்'' என கறுவினாள் ஷண்மதி.

''ஆனால் ஷண்மி வெளிப்படையாக காட்டிக் கொள்ளவில்லையே தவிர அவனிடம் கலகலப்பு குறைந்து விட்டது. தனக்குள்ளேயே எப்பவும் சதா யோசனை'' என்று சிரித்தவர்,

''உதி உன்னிடம் பேச வேண்டுமாம்'' என்று ரிசீவரை உதயாவிடம் தந்துவிட்டு அகலவும் இருவரும் சற்று நேரம் பேசிக் கொண்டிருந்தனர்.

பேச்சின் நடுவே உதயா, ''ஷண்மி! நானும் உன்னைப் பற்றி பேசி 'அந்த குணா ரொம்ப நல்ல பையனாம். அந்த குடும்பத்திற்கே ஷண்மியென்றால் உயிராம். நீதான் மிஸ் பண்ணி விட்டாய்' என்றெல்லாம் பேசி சீண்டிப் பார்க்கிறேன். ம்கூம் வாயே திறப்பதில்லை. முகம் மாறாமல் கேட்டுக் கொண்டு உட்கார்ந்திருக்கிறான்'' என்று அலுத்துக் கொள்ளவும்,

சிரித்தபடி, ''டோண்ட் வொர்ரி அக்கா. நாளை மாலை சாரை வெளியே போகவிடாமல் வீட்டில் அமுக்கி வையுங்கள். நானும் குணாவும் இன்விடேஷன் வைக்க வருகிறோம்'' என்றாள் ஷண்மதி உற்சாகமாக.

''ஏய் என்னது இன்விடேஷனா? அதைப் பார்த்தால் உண்மை புரிந்து போகுமே!'' என சிறு கவலையோடு உதயா கேட்கவும் சிரித்தாள் ஷண்மதி.



''கவலையே படாதீர்கள் அக்கா. குணாவின் ஐடியாப்படி அவனது திருமண பத்திரிகை போலவே ஆனால் என் பெயர் போட்டு பொய்யாக இரண்டு இன்விடேஷன்ஸ் அடித்து இன்றுதான் கொண்டு வந்து குணா தந்தான். நாளை நாங்கள் அப்பத்திரிகையோடு வருகிறோம். பார்ப்போமே.. சாரோட ரியாக்ஷன் என்னவென்று?'' என்று கூறி மேலும் சிரித்தாள் ஷண்மதி.

சொன்னது போலவே மறுநாள் குணாவுடன் அவ்வீட்டிற்குச் சென்றாள். ஸ்ரீதரை தவிர அனைவருக்கும் இந்நாடகம் தெரியும். அவனின் மறுப்பினால் ஷண்மி பட்ட வேதனை உணர்ந்ததாலும் அவள் மீது கொண்டுவிட்ட மாறாத அன்பினாலும் அவர்கள் இந்நாடகத்திற்கு முழு ஒத்துழைப்பு தந்தனர்.

ஸ்ரீதர் எதையும் காட்டிக் கொள்ளாமல் சகஜமாக வரவேற்று குணாவுடன் உரையாடுவதை கண்ட ஷண்மதிக்கு சொத்தென்றாகியது. அவன் முகத்தில் அவள் எதிர்பார்த்த ரியாக்ஷன்ஸ் எதையும் காணோம். மிக இயல்பாக அவன் குணாவுடன் பேசி சிரித்துக் கொண்டிருந்தான்.

பேச்சினிடையே செல் ஒலிக்கவும் பேசுவதற்காக ஸ்ரீதர் எழுந்து செல்லவும், கிடைத்த இடைவெளியில் குணாவிடம் பாய்ந்தாள் ஷண்மதி.

''பாரேன், கொஞ்சம் கூட அலட்டிக் கொள்ளாமல் உன்னிடம் பேசுவதை'' என்றவள் தொடர்ந்து ''நீ மட்டுமென்ன.. என்னைக் கூட கண்டு கொள்ளாமல் ஸ்ரீதருடன் அவ்வளவு ஆர்வமாக பேச ஆரம்பித்து விட்டாயே!'' என அவன் மீது குற்றம் சாட்டவும் சிரித்தான் குணா.

''பேச ஆரம்பித்த சற்று நேரத்தில் எனக்கே அவரை ரொம்பவும் பிடித்து விட்டது ஷண்மி. எவ்வளவு நன்றாக பழகுகிறார்'' என புகழவும்,

''ஆமாம்! என்னைத் தவிர எல்லோரிடமும் நன்றாக சிரித்துப் பேசுவார்'' எனப் பொரிந்தவள் குணா நமட்டு சிரிப்புச் சிரிக்கவும், அவனை முறைத்தபடி, ''இருடா! இதேப்போல் இன்னொரு இன்விடேஷனை சுசிக்கு அனுப்பி வைக்கிறேன்'' என்று மிரட்டினாள்.

சற்றும் கவலையற்று, ''நோ ப்ராப்ளம் மேடம், நீ நினைப்பது போலில்லை. ஏற்கனவே அவள் உங்களது ட்ராமாவில் எனக்கும் ஒரு ரோல் தாருங்கள் என நச்சரித்துக் கொண்டிருக்கிறாள்'' என்று கூறிச் சிரித்தான் குணா.

ஷண்மதிக்கும் சிரிப்பு வந்தது. அவனின் மாமா பெண்ணான சுசி அவளுக்கும் சிறுவயதிலிருந்தே நல்ல ப்ரெண்ட்.

போன் பேசிவிட்டு வந்த ஸ்ரீதர் இருவரும் சிரித்துக் கொண்டிருப்பதைக் கண்டு சற்று தயங்கி நிற்பதைக் கவனித்த ஷண்மதி கண்களில் குறும்பு மின்ன வேண்டுமென்றே குணாவிடம் ஏதோ கூறி கன்னம் குழிய சிரித்து அவனை வெறுப்பேற்றினாள்.

அதற்குள் கிச்சனிலிருந்து ஸ்வீட்டோடு தேவகியும், உதயாவும் வரவே சூழல் மீண்டும் கலகலப்பானது. சற்று நேரத்திலேயே கிரிதரும், வாசுதேவனும் அலுவலகத்திலிருந்து வந்து விடவே, அவர்களும் தங்கள் பங்கிற்கு ரொம்ப உற்சாகமாக நடித்தனர்.

''என்ன கல்யாண பொண்ணு. திடீர் விஜயம்'' என வாசுதேவன் கலாட்டா செய்வதை மவுனமாக பார்த்தபடி அமர்ந்திருந்தான் ஸ்ரீதர்.

பத்திரிகையை வாசுதேவனிடம் தந்த குணா, ''அங்கிள் என் பேரெண்ட் தனியாக வந்து உங்களுக்கு அழைப்பு வைப்பார்கள். ஷண்மதி உங்கள் குடும்பத்தை



பற்றி உயர்வாக பேசியதை கேட்டு உங்களையெல்லாம் சந்திக்க ஆவலாக இருக்கிறார்கள்'' என்றபடி மீதமிருந்த இன்விடேஷனை ஸ்ரீதரிடம் நீட்டி,

''எங்கள் சார்க்கு தனியாக வைக்க வேண்டுமென ஷண்மி ஆர்டர் போட்டுவிட்டாள்'' என சிரித்தபடி கூறினான்.

அதற்குள் வாசுதேவன் குணாவிடம், ''திருமணம் நடக்கவிருக்கும் உங்கள் குலதெய்வ கோவிலுக்கு பக்கத்து ஊர்தான் எங்களுக்கு சொந்த ஊர். திருவிழாவிற்கு இன்னமும் நான்கு நாட்களில் அங்கு கிளம்பி விடுவோம். பக்கத்து ஊர்தானே உங்கள் ஊர். முதல் நாளே வந்து விடுகிறோம்'' என்றார் உற்சாகமாக.

ஸ்ரீதரை கண்களில் குறும்புடன் நோக்கிய ஷண்மதி, ''சார்! திருமணத்திற்கு கண்டிப்பாக நீங்கள் வர வேண்டும். நான் உங்கள் வரவை ரொம்பவும் ஆவலாக எதிர்பார்க்கிறேன்'' என்று கண்கள் மின்னக் கூறுவதை கண்ட ஸ்ரீதர் குணாவிடம் திரும்பி, ''வேலை நிறைய இருக்கிறது. எங்கள் திருவிழாவிற்கு செல்லவே நேரம் ஒதுக்க முடியாது போலிருக்கிறது. முடிந்தால் வருகிறேன்'' என்றான். மன்னிப்பு கோரும் குரலில்.

முகம் மேலும் மலர்ந்து பளிச்சிட, ''சார்! அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். நான் ஒத்துக் கொள்ளவே மாட்டேன். மேரேஜ் பற்றி அப்பா காலேஜிற்கு கூட இன்னும் தெரிவிக்கவில்லை. ரிசப்ஷனுக்கு சொல்லிக் கொள்ளலாமென்று விட்டார். நம் காலேஜிலேயே உங்களுக்கு மட்டும்தான் சார் ஸ்பெஷல் அழைப்பு. சோ அவாய்ட் பண்ணாதீர்கள். கண்டிப்பாக வர வேண்டும். என் மேல் ப்ராமிஸ்'' என தன் தலைமீது கை வைத்து கூறியபடி குணாவை இழுத்துக் கொண்டு கிளம்பி விட்டாள் ஷண்மதி.

வரும் வழியில், "ச்சு! ஸ்ரீதர் பாவம் ஷண்மி... பெரிதாக காட்டிக் கொள்ளா விட்டாலும் அவரது முகமே வாடியிருக்கிறது கவனித்தாயா? அவரிடம் உண்மையை சொல்லி வெளிப்படையாக பேசி விடலாமே. இந்த நாடகமெல்லாம் தேவையா?" என ஸ்ரீதருக்காக ரொம்பவும் கவலைப்பட்ட குணாவை முறைத்தாள் ஷண்மதி.

"சிறுவயதிலிருந்து பழகிய என்னை விட மிஞ்சி மிஞ்சி ஓர் அரைமணி நேரம் பழகியிருப்பாயா? அவருக்காக இவ்வளவு உருக்கமா?" என கிண்டலாக கேட்டவள், "கிட்டதட்ட ஒரு வருடமாக நான் எவ்வளவு கவலைப்பட்டிருப்பேன். அதிலும் உண்மை தெரிவதற்கு முன்பாக கடைசி சில நாட்களில் எவ்வளவு வேதனை. இதெல்லாம் ஸ்ரீதருக்கு புரிய வேண்டாமா? தான் விரும்புகின்றவர் தனக்கு இனி கிடைக்கமாட்டாரென்ற நிலை எப்படி இருக்குமென அவருக்கும் தெரிய வேண்டாமா? இன்னமும் கொஞ்ச நாட்கள்தானே பரவாயில்லை!" என சிரித்தாள் ஷண்மதி.

பின் வந்த நாட்களில் குணாவின் திருமண வேலைகளில் அபிராமி ஆன்ட்டியுடன் சேர்ந்து முழு மூச்சோடு பங்கெடுத்துக் கொண்டாள் ஷண்மதி.

குணாவின் பெற்றோர் ஸ்ரீதர் வீட்டிலில்லாத நேரத்தில் ஷண்மதியோடு வந்து அழைப்பு வைக்க வாசுதேவன் தன் குடும்பத்தினருடன் திருமணத்தில் கலந்துக் கொண்டார்.

அவர்களை அன்புடன் வரவேற்று உரையாடிய ஷண்முகபிரகாஷ், சதாசிவம், ஷண்மதி ஆகியோர் 'ஸ்ரீதர் வரவில்லையா?' என ஆளாளுக்கு மாற்றி மாற்றி விசாரிக்கவும் சிரித்தார் வாசுதேவன்.



"திருவிழாவிற்காக அவனால் சொந்த ஊருக்கே வர முடியவில்லை. நேற்று போன் செய்து கேட்டபொழுது, 'எப்படியும் கிளம்பி நேரே இங்கு வருவதாகக் கூறினான். இன்னும் சற்று நேரத்தில் வந்து விடுவான்" என்று விபரம் தெரிவித்தார்.

மணமேடையில் சுசித்ராவின் பக்கத்தில் நின்றுக் கொண்டிருந்த ஷண்மதியின் அழகிய விழிகள் அவளையும் அறியாமல் அடிக்கடி ஸ்ரீதர் வருகிறானாவென ஆவலுடன் நுழைவாயிலை நோக்கிக் கொண்டிருந்தன.

ஸ்ரீதர் வரப்போகிறான். அவன் நினைத்தபடி ஷண்மதிக்கும், குணாவிற்கும் திருமணமல்ல என தெரியும் பொழுது அவன் முகத்தில் ஏற்படும் மாற்றங்களை கண்டு ரசிக்க அவள் உள்மனம் வெகு ஆவலாகயிருந்தது.

ஆனால் திருமணம் முடிந்தும் கூட அவன் வரவில்லை எனவும் 'ஒருவேளை தன் மீது தானே செய்து கொண்ட ப்ராமிஸ்க்கு கட்டுப்பட்டு அவன் வருவானென தான் நினைத்தது தவறோ' என்ற கவலையும் அவளுள் எழுந்தது.

சுசியிடம் ஏதோ கூறிவிட்டு திரும்பிய ஷண்மதியின் சுவாசம் சட்டென தடைப்பட்டது.

அதோ ஸ்ரீதர் வந்துவிட்டான். கையில் கிப்ட்டோடு உள்ளே வந்தவன் முகத்தில் மணமக்களை கண்டதும் சட்டென்று தென்பட்ட அதிர்ச்சியையும், நம்ப இயலாத திகைப்பையும், புரியாத குழப்பத்தையும், கண்களில் குறும்பு மின்ன முறுவலோடு ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷண்மதி.

வேகமாகத் திரும்பிய ஸ்ரீதர் அவன் தாயிடம் ஏதோ கேட்பதையும் அவன் குடும்பத்தினரும் குதூகலத்துடன்

அவனை சூழ்ந்து சிரிப்பும் மகிழ்ச்சியுமாக விஷயத்தைப் போட்டு உடைப்பதையும் புன்னகை ததும்ப பார்த்துக் கொண்டிருந்த ஷண்மதி திகைப்புடன் அவன் பார்வை தன்மேல் படிவதைக் கண்டு விழிகளில் குறும்பு மின்ன புன்சிரிப்போடு அவனை நோக்கினாள்.

அவளை திகைப்பு மாறாமல் பார்த்தவன், பார்வையை அவளிடமிருந்து திருப்பிச் சுற்றி நின்றவர்களிடம் அழுத்தமாக ஏதோ பேசுவதையும் அப்பேச்சை கேட்ட அவனது குடும்பத்தினர் முகத்தில் சட்டென சிரிப்பு துணி கொண்டு துடைத்தாற்போல் மறைவதையும், தன்னை திகைப்புடன் பார்ப்பதையும் கண்ட ஷண்மதி விஷயம் புரியாமல் ஸ்ரீதரின் அருகில் நின்றிருந்த தன் தந்தையை நோக்கினாள்.

அவரும் அப்பொழுது தன் அருமை மகளைதான் கவலை ததும்ப பார்த்துக் கொண்டிருந்தார்.

## 31



"கொஞ்சமாவது.. அதிகமில்லை கொஞ்சமே கொஞ்சமாவது அறிவிருந்தால் இவளை நான் காதலிப்பதாக முடிவுக் கட்டி கொண்டு இப்படிப்பட்ட பைத்தியக்காரத்தனத்தை செய்திருப்பீர்களா?" என ஸ்ரீதர் கோபத்தோடு கேட்கவும் கையை பிசைந்தபடி உதயா தேவகியைப் பார்த்தாள்.

குணாவின் கிராமத்து வீட்டின் மூன்றாவது மாடியில் தான் இப்பேச்சு திருமணத்திற்கு வந்திருந்த மற்றவர்கள் காதில் விழாமல் நடந்துக் கொண்டிருந்தது.



கோவிலில் திருமணம் முடிந்த கையோடு வீட்டிற்கு வந்தவுடனே மற்றவர்கள் கவனத்தை உறுத்தாத வண்ணம் மூன்றாவது மாடிக்கு ஷண்மதியையும் ஸ்ரீதர் மற்றும் அவன் குடும்பத்தினரையும் அழைத்து வந்திருந்தார் ஷண்முகபிரகாஷ்.

அங்கு வைத்துதான் அந்த அர்ச்சனை ஸ்ரீதர் தலைமையில் மற்றவர்களுக்கு நடந்துக் கொண்டிருந்தது.

சற்று சமாளித்துக் கொண்டு, "அதில்லை கண்ணா!" என ஆரம்பித்த தாயாரை கண்களில் கண்டனத்துடன் நோக்கினான் ஸ்ரீதர்.

"போதும் அம்மா. பேசாதீர்கள். நீங்களும் இவர்களுடன் சேர்ந்துக் கொண்டு.. கடவுளே! ஒரு போட்டோ என் புக்கில் இருந்தால் உடனே அவளை நான் காதலிப்பதாக முடிவு கட்டி விடுவதா?" என கோபம் குறையாதவனாய் ஸ்ரீதர் கேட்டான்.

'நீ கட்டுகின்ற கதையை கட்டு' என்பதுபோல் மாடி வராண்டா தூணில் ஸ்டைலாக சாய்ந்தபடி தூரத்தில் தெரிந்த தென்னை மரங்களை வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷண்மதி. அதைக்கண்ட ஸ்ரீதருக்கு இன்னும் கோபம் வந்தது. 'செய்வதையெல்லாம் செய்து விட்டு மரங்களை வேடிக்கை பார்ப்பதை பார். முக்கியமான நேரங்களிலெல்லாம் ஒன்று குருவியை வேடிக்கை பார்ப்பது அல்லது மரங்களை வேடிக்கை பார்ப்பது.'

கிரியும் சந்தேகத்தோடு, "போட்டோ மட்டுமல்லடா.. பின்புறம் கவிதை வேறு எழுதியிருந்தாயே.. பெங்களூரில் இருந்து வந்தவுடனே உதி என்னிடம் காட்டினாளே" என்று நினைவுப்படுத்தவும் அண்ணனை பார்த்தான் ஸ்ரீதர்.

''என்ன அண்ணா இது? வருடக்கணக்கில் என் ஆங்கில கையெழுத்தை மட்டும் பார்த்து உனக்கு என் தமிழ் கையெழுத்து எப்படியிருக்கும் என்பதே மறந்து போய் விட்டது அப்படிதானே! அது என் கையெழுத்தே இல்லை'' என அழுத்தம் திருத்தமாக தெரிவிக்கவும்,

''பின் ஷண்மி போட்டோ உன்னிடம் எப்படி வந்தது?'' என உதயா விடாமல் வினவவும் ஸ்ரீதர் சற்றும் தயங்காமல் பதிலளித்தான்.

ஷண்மதியை சுட்டிக்காட்டி, ''இதோ இவளின் கூடப் படித்த சந்தோஷ் வைத்திருந்த போட்டோதான் அது. அந்த கிறுக்கலும் கூட அவனதுதான். அவனிடம் அப்போட்டோவை எதேச்சையாகக் கண்ட நான் அவனை வார்ன் பண்ணி போட்டோவை வாங்கி என் கையிலிருந்த புக்கினுள் வைத்தேன். இவளிடம் தர எண்ணியிருந்தவன் வேலை மிகுதியில் மறந்தேப் போனேன். அவ்வளவுதான் விஷயம். அதைப்போய்...'' என அலுத்த குரலில் கூறவும் ஷண்மதிக்கு தலை சுற்றுவது போலிருந்தது.

இதுவரை அவன் கூறியது எதையுமே அவள் நம்பவில்லை. இருபது நாட்களாக அவனை சீண்டியதற்கு பதிலுக்கு சற்று நேரம் பழி வாங்குகிறான் என்றுதான் எண்ணினாள். ஆனால் கையெழுத்தே தன்னுடையதில்லையென அவன் கூறியது அவளை சற்றே தடுமாற வைத்தது. அவனது ஆங்கில கையெழுத்து அவளுக்கு மனப்பாடம். அதுமட்டுமல்லாமல் சந்தோஷ் கொஞ்ச நாட்கள் அவள் பின்னால் சுற்றியதும் உண்மைதான். அது ஓரளவிற்கு வகுப்பில் அனைவருக்கும் தெரிந்த விஷயமே. ஸ்ரீதருக்கு அவ்விஷயம் தெரிந்திருப்பதில் ஆச்சரியப்பட எதுவுமில்லை. ஆனால் அவனே பிறகு மனம் மாறி வேறு பெண் பின்னால் சுற்றப் போய் விட்டான். இப்பொழுது ஸ்ரீதர் அதை சுட்டிக்காட்டி சந்தோஷ் வைத்திருந்த போட்டோ எனவும் நம்பவும் முடியாமல் மறுக்கவும் முடியாமல் சற்றே தடுமாறினாள் அவள். ஆனாலும் ஏனோ அவளது உள்மனதிற்கு ஸ்ரீதர் விளையாடுகிறான் என்றே தான் தோன்றியது. எனவே அதிகமாக மனதை போட்டு அலட்டிக்காமல் மேற்கொண்டு நடப்பதை கவனித்தாள்.



''இது எதுவுமே புரியாமல் நீங்கள் பாட்டிற்கு ஏதேதோ கோட்டை கட்டி என்னவெல்லாம் செய்து விட்டீர்கள்'' என்ற ஸ்ரீதருக்கு பதிலாக,

''உன் தமிழ் கையெழுத்து அதில்லை என்று எனக்கு எப்படி தெரியும் ஸ்ரீதர்?'' என முணுமுணுத்த உதயா,

''தெரியாவிட்டால் வந்தவுடனே என்னிடம் கேட்டிருக்கு வேண்டும்'' என ஸ்ரீதர் கடிந்து கொள்ளவும் கப்பென்று வாயை மூடிக் கொண்டாள்.

தாயாரிடம் திரும்பியவன் குரலில் சற்றே கேலி இழையோட, ''அண்ணி, ஷண்மதிக்கு என் தமிழ் கையெழுத்து தெரியாது. ஓ.கே. என்னறையில் போட்டோவில் கவிதையை கண்டதும் அது என் கையெழுத்து என்று எண்ணிவிட்டார்கள். கிரி கூட ஓரளவு மறந்திருப்பான் என்பதை ஏற்றுக் கொண்டாலும் கூட, நீங்களும் அப்பாவுமாவது கண்டு பிடித்து என்னிடம் பேசியிருக்க வேண்டும்தானே அம்மா. நானே எல்லா உண்மையையும் வெளிப்படையாக கூறியிருப்பேனே அம்மா. விஷயம் என்றோ தெளிவாகி சீராகியிருக்குமே. என்னிடம் ஏன் பேசவில்லை அம்மா?'' என கேட்கவும்,

மகனை ஏறிட்டுப் பார்த்த தேவகி, ''கண்ணா! அந்த போட்டோவையும், கவிதையையும் கண்டவுடனே எனக்கு..'' என தொடங்கவும்,

''போதும் அம்மா உங்கள் சமாதானம்'' என்றபடி மகன் அழுத்தமாய் பார்த்த பார்வையில் அவரும் கப்பென்று வாயை மூடிக் கொண்டார்.

கையை கட்டிக் கொண்டு கண்களில் மட்டும் மிகவும் இலேசாக சிரிப்பு படர எல்லாவற்றையும் வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்த ஷண்மதியின் பக்கம் திரும்பிய ஸ்ரீதர் அவளை சுடச்சுட பார்த்தான்.

''எல்லாவற்றுக்கும் காரணம் நீதான் இல்லையா? உனக்கு இவர்கள் அத்தனை பேரும் ஜால்ரா. இதெல்லாம் என்ன விளையாட்டு ஷண்மி? விளையாட்டு தனம் அதிகமென்றாலும் அதற்காக பொய்யாக இன்விடேஷன் அச்சடிக்கும் அளவிற்கா விளையாடுவது? குறும்புத் தனம் அதிகமென்றாலும் நன்றாக படிக்கிறாய், கெட்டிக்கார மாணவியென்றல்லவா நினைத்திருந்தேன், இப்படி செய்யலாமா?'' என குரலில் கண்டனத்துடன் கேட்கவும்,

முகத்தில் முறுவல் நன்றாகவே மலர, எதுவும் பேசாமல் அவனை பார்த்த ஷண்மதி உதயாவின்புறம் திரும்பி அவளை நேராக பார்க்கவும் அவளது கண்களில் தெரிந்த குறிப்புணர்ந்த உதயா முகம் பளிச்சிட நம்பிக்கையுடன் ஸ்ரீதரிடம் திரும்பினாள்.

''ஏய் ஸ்ரீதர்! அவளுக்கு விளையாட்டுதனம் அதிகமென்று விட்டு நீதான் விளையாடுகிறாய். போதுமே உன் விளையாட்டு'' என சிரிக்கவும் புரியாமல் புருவம் சுருக்கி அண்ணியை நோக்கினான் ஸ்ரீதர்.

உதயா தொடர்ந்து, ''புரியவில்லையா ஸ்ரீதர். பாரினிலிருந்து திரும்பியவன் ஷண்மதியின் திருமண விஷயம் கேள்விப்பட்டு கலகலப்பு குறைந்துதானே நடமாடினாய். எப்பவும் உள்ளூர ஒரு கவலை, யோசனை. ம்ம்.. பல



நாட்களுக்குப் பிறகு இன்றுதானே உன் முகத்தில் இந்த மலர்ச்சியைப் பார்க்க முடிகிறது. பதிலுக்கு விளையாடியதெல்லாம் போதும். உண்மையை ஒத்துக் கொள்'' எனச் சிரித்தாள்.

''அடக் கடவுளே!'' என்று அலுப்புடன் கூறிய ஸ்ரீதர், ''அண்ணி! அதன் காரணம் வேறு. முற்றிலும் வேறு'' என்றான்.

''அதென்ன காரணம்? அதை முதலில் சொல்லேன்'' என கிரியும் சேர்ந்து கொண்டான்.

''அது... நம் வீட்டிற்கு போய் பேசலாமே அண்ணா. ஷண்மதியை வைத்துக் கொண்டு அதைப்பற்றி பேச வேண்டாமே'' என்றவன் பேச்சில் எதுவும் பேசாமல் வாசுதேவனுடன் அமர்ந்து நடப்பவற்றை கூர்ந்து கவனித்துக் கொண்டிருந்த ஷண்முகபிரகாஷ் சட்டென்று இடையிட்டார்.

''இல்லை ஸ்ரீதர். நடந்த எல்லாவற்றுக்குமே அடிப்படை காரணம் எதையும் வெளிப்படையாகப் பேசிக் கொள்ளாததுதான். எதுவானாலும் தயங்காமல் சொல்லிவிடுங்கள். ஷண்மதிக்கும் தெரியட்டும். அவள் தாங்கிக் கொள்வாள்'' என்றார் உறுதியோடு.

''ஓகே! உங்களிஷ்டம்'' என்றவன் தொடர்ந்து, ''அண்ணி! நீங்கள் கேட்டது சரிதான். ஆனால் அதன் காரணம்... சிங்கப்பூரில் மீண்டும் நான் ஷ்ரத்தியை தற்செயலாய் சந்தித்தேன் என்பதுதான்'' என நிதானமாக குண்டை தூக்கிப் போட்டான்.

எல்லோருமே அதிர்ந்து நோக்க அவனோ அழுத்தமாய் தொடர்ந்தான். ''தினமுமே சந்தித்தோம். பேசினோம். ஏர்போர்ட் வரை வந்து வழியனுப்பியதும் அவள்தான். பிரிந்திருந்தாலும் கூட உள்ளூர அதே அன்பு இருப்

பதை உணர்ந்தோம். ஆனால் வாய்விட்டு இருவரும் அதைப் பற்றி பேசிக்கொள்ளவில்லை. ஊருக்கு வந்த பிறகும் நான் அதே யோசனையிலும், 'நாமாவது முதலில் பேசியிருக்கலாமோ' என்ற கவலையிலும் இருந்தேன். அத்தோடு போன் செய்வதாக கூறியவள் போனே செய்யவில்லையே, அவள் மனதில் என்ன நினைக்கிறாளோவென்ற யோசனையிலும் கவலையிலுமே இருந்தேன். நேற்றுதான் அவள் போன் செய்தாள். எல்லாவற்றையும் பேசி தீர்த்துக் கொண்டோம். நாளை அவள் இந்தியா வருகிறாள். வரும் வாரமே நிச்சயதார்த்தம் வைத்து கொள்ளலாமென்று நினைத்தோம். அதைப்பற்றி உங்களிடம் பேசுவதாக இருந்தேன். பட் இப்படி இடையில் ஒரு குழப்பத்தை எதிர்பார்க்கவில்லை'' என்றவன் தீராத அதிர்ச்சியில் சிலையாக நின்றிருந்த ஷண்மதியிடம் திரும்பி,

''ஷ்ரத்தி பற்றி உனக்கு எல்லாமும் தெரியுமென்றும், அதனாலேயே நீ மனம் மாறி திருமணம் செய்துக் கொள்ளச் சம்மதித்ததாகவும் அண்ணியும் அம்மாவும் கூறினார்கள். அதனாலேயே உன்னை சந்தித்து பேச வந்தேன். ஷ்ரத்தி விஷயம் தெரிந்து அவசரப்பட்டு என் மீதுள்ள கோபத்தில் திருமணம் செய்துக் கொள்ள முடிவெடுக்காமல் சற்று நிதானித்து மேற்படிப்பா? திருமணமா? என யோசித்து முடிவெடு என என கூறவே வந்...'' எனக் கூறிக் கொண்டே வந்தவன் அவளது முகத்தில் வெள்ளமென பொங்கிய வேதனையைக் கண்டு பேச்சை நிறுத்தினான்.

அதற்குமேல் அங்கே நிற்க முடியாமல் விடுவிடுவென்று கீழே இறங்கி வந்தவள், யார் முகத்தையும் பார்க்க விரும்பாமல் கொல்லைப்புறம் சென்று அங்கிருந்த பெரிய கிணற்றடியில் அமர்ந்தாள்.



அவளால் எதையுமே ஜீரணிக்க முடியவில்லை. ஸ்ரீதர் சொல்வதை நம்பவும் முடியவில்லை. நம்பாமல் இருக்கவும் முடியவில்லை. அவள் செய்ததற்கு பதிலுக்கு பதில் செய்கிறான் என்றுதான் நினைத்தாள். ஆனால் ஷ்ரத்தி பற்றி அவன் கூறியது.. மேற்கொண்டு சிந்திக்க முடியாமல் மனம் எரிமலையாய் பொங்கியது.

தலையை கைகளில் தாங்கியபடி சிலையாய் அமர்ந்திருந்தவள் காலடியோசை கேட்டு நிமிர்ந்தாள்.

அவள் எதிரே வந்து நின்ற ஸ்ரீதர் சற்று தணிவான குரலில், ''உன் மனநிலை இப்பொழுது எப்படியிருக்குமென்று எனக்குப் புரிகிறது ஷண்மதி. அதனாலேயே உன்னைத் தேடி வந்தேன் நான்..'' என்றவன் பேச்சில் 'போதும்' என்பதுபோல் கையுயர்த்தி நிறுத்தியபடி எழுந்தாள் ஷண்மதி.

''உங்கள் பரிதாபம் எனக்கு தேவையில்லை மிஸ்டர்'' என கோபத்திலும் கம்பீரம் குறையாமல் மொழிந்தவள் வேகமாக உள்ளே வந்து தன் ஹேண்ட் பேகை எடுத்துக் கொண்டு அப்பாவிடம் சென்று, ''நான் உடனே கிளம்புகிறேன் டாட். ஆன்ட்டி, அங்கிளிடம் சொல்லி விடுங்கள். குணா சுசியிடமும் கூட நீங்களே கூறி விடுங்கள்'' என்றபடி நிற்காமல் ரவியை காரை எடுக்கச் சொல்லி உடனே கிளம்பி விட்டாள்.

## 32



தன்னறையில் அமர்ந்து நகத்தை கடித்தபடி யோசித்துக் கொண்டிருந்தாள் ஷண்மதி. சொல்லப்போனால்

ஊருக்கு திரும்பிய நான்கு நாட்களாய் அவள் உருப்படியாய் செய்துக் கொண்டிருப்பது இந்த வேலை ஒன்றுதான். அதாவது முற்பாதி வேலையான நகத்தை கடிப்பது மட்டும்தான் உருப்படியாக நடந்தது. பிற்பாதி வேலையான யோசனையில், மூளை காய்ந்ததுதான் மிச்சம். அடுத்து என்ன செய்வதென ஒரு முடிவிற்கும் வர இயலவில்லை.

அவளுக்கு மட்டுமல்ல... அவளது வரவை ஆவலோடு எதிர்பார்த்திருந்த சாம்பவிக்கும் ஷண்மதி கூறியதைக் கேட்டு அடுத்தென்ன செய்வதென்று ஒன்றும் புரியவில்லை.

ஏதேதோ பேசி தேற்றிவிட்டு வீட்டிற்கு கிளம்பிச் சென்றாள் சாம்பவி. அவள் சென்றபின் அறைக்குள்ளேயே அடைந்து கிடந்த ஷண்மதிக்கு, தான் என்னவெல்லாமோ நினைத்திருக்க எல்லாமே இப்படி தலைகீழாகி விட்டதேயென்ற எண்ணமே அவளை நிலைகுலைய வைத்தது.

அன்றும் அப்படிதான் காலையிலேயே எழுந்து குளித்துவிட்டு வந்தவள் வழக்கம்போல் தாயின் படத்திற்கு முன் சென்று நின்றாள்.

அப்படியே நின்றவள், ''ஷண்மி'' என்ற சாம்பவியின் குரலில் தான் திரும்பினாள்.

''வா பவி! உட்கார்! ஷீத்தல், ப்ரீ டூரிலிருந்து திரும்பி விட்டார்களா?'' என விசாரித்தபடி வந்தவள் அவளருகில் தானும் அமர்ந்தாள்.

பொதுப்படையாக பேசிக் கொண்டிருந்த சற்று நேரத்திலேயே சாம்பவியின் முகத்தைக் கூர்ந்து நோக்கிய ஷண்மதி சட்டென்று, ''பவி! உனக்கு என்னவாயிற்று? முகமே சரியில்லையே!'' என கவலையோடு கேட்டாள்.



''அதெல்லாம் ஒன்றுமில்லை'' எனச் சமாளித்தவளை நேராக நோக்கி, ''ம்கூம்! ஏதோ இருக்கிறது பவி! உன்னை எனக்குத் தெரியாதா? என்ன விஷயம் சொல்லு பவி'' என மென் குரலில் வினவினாள் ஷண்மதி.

சற்றுநேரம் மவுனமாகயிருந்தவள், ''ஷண்மி! நேற்று மாலை நல்லியில் ஸ்ரீதரை அவரது பேமிலியோடு பார்த்தேன்'' என்றாள் மெல்லிய குரலில்.

ஒரு கணம் அசைவற்றுப் போனாள் ஷண்மதி.

தயக்கத்துடன் தொடர்ந்தாள் சாம்பவி. ''நாளை மறுநாள் அவருக்கு நிச்சயதார்த்தமாம். அதற்கு புடவை எடுக்க வந்தார்களாம்'' என்றாள்.

இதுவரை மனதில் ஓர் ஓரமாக ஸ்ரீதர் கூறியதெல்லாம் பதிலுக்கு தன்னை சீண்டுவதற்காக இருக்குமோ' என்ற சின்ன நம்பிக்கையும் அழிந்து விட வேதனையை விழுங்கிக் கொண்டு எழுந்தாள் ஷண்மதி.

''விடு பவி! அதைப் பற்றி பேசியோ, கவலைப்பட்டோ ஆகப் போவதென்ன?'' என்றாள் கசந்த குரலில்.

கோபத்தோடு எழுந்தாள் சாம்பவி. ''எப்படி விடுவது ஷண்மி? தேவகி ஆண்ட்டி உன்னிடம் ஷ்ரத்தி பற்றி பேசிய பிறகு ஸ்ரீதர் விஷயமாக வேதனையை விழுங்கிக் கொண்டு இதுதான் முடிவென்றிருந்த சமயத்தில் அந்த போட்டோவினால்தானே இழந்த நம்பிக்கை மீண்டும் நமக்கு உண்டாயிற்று. இப்பொழுது ஆசைக்காட்டி மோசம் செய்தது போல் ஆகிவிட்டதே. கவனக் குறைவால் போட்டோவை உடனே உன்னிடம் தர மறந்ததால் தானே நாம் எதையெல்லாமோ நினைத்து இன்று மீண்டும் ஒருமுறை வேதனை படும்படி ஆகிவிட்டது'' எனப் படபடத்தவள், ''நேற்று சாரிடம் நன்றாக கேட்டு விட்டேன்.

உங்களால் எங்கள் ஷண்மி பட்ட வேதனை போதாதா? போட்டோவை தர மறந்து அஜாக்கிரதையாய் உங்கள் புக்கிலேயே வைத்ததால் அவளுக்கு மீண்டும் ஒரு துன்பத்தை உண்டாக்கி விட்டீர்களே'' எனக் கோபத்தில் பொரிந்து கொட்டி விட்டேன்'' என்றாள் வேகத்தோடு.

அவளது அன்பில் மனம் நெகிழ்ந்தவள், ''அதற்கு ஸ்ரீதர் என்ன சொன்னார்?'' எனக் கேட்டாள் ஷண்மதி.

''என்ன சொன்னாரா..? 'அடுத்தவர் அறையில் அவரது அனுமதியின்றி புகுந்து ஆராய்ந்தால் இப்படிதான் தப்புத் தப்பாக ஆகுமாம்'' என்றவள் தொடர்ந்து, ''ஷண்மி! அந்த தேவகி ஆன்ட்டி... அவர் கூட தன் மகனுக்கு அவருக்கு பிடித்த பெண்ணோடு திருமணமானால் சரியென்று ஒரேடியாக மாறிவிட்டார்கள் தெரியுமா? உதி அக்காவும் கூடதான். சாரின் சந்தோஷமே தங்கள் சந்தோஷமென்பது போல் அந்த குடும்பமே அந்தப் பெண்ணிற்காக பார்த்துப் பார்த்து புடவை செலக்ட் செய்கிறார்கள் தெரியுமா? எனக்கு 'எல்லாவற்றையும் நிறுத்துங்கள். உங்களின் இந்த சந்தோஷத்திற்கு முன் ஷண்மதியென்ற வேதனை அர்த்தமற்றதாய் ஒன்றுமில்லாததாய் ஆகிவிட்டதா'வென்று கத்த வேண்டும் போல் வந்தது'' என்றாள் சாம்பவி கோபத்தில் முகம் சிவக்க.

''ஷ்! பவி விடுடா!'' என தன் வேதனை மறைத்து சாம்பவியை சமாதானப்படுத்தினாள் ஷண்மதி.

''வாழ்வில் உண்மையான நட்பென்பது மிகவும் உயர்வான விஷயம் பவி. நீ, ஷீத்தல், ப்ரீ மூவரும் எனக்கு கிடைத்ததே போதும். நீயே பாரேன் உங்களது நட்பின் பலத்தாலேயே நான் இத்துன்பத்திலிருந்து வெளிவந்து விடுவேன்'' எனப் பேசி சாம்பவி முகத்தை தெளிய செய்தாள் ஷண்மதி.



மேலும் ஆறுதலாய் இருவரும் பேசிக் கொண்டிருந்து விட்டு சேர்ந்தே மதியம் சாப்பிட்டுவிட்டு அவள் கிளம்பிச் செல்லவும் அப்படியே சோபாவில் சாய்ந்து அயர்வுடன் விழிகளை மூடினாள் ஷண்மதி.

முன்மாலை வரை அப்படியேதான் சற்றும் அசையாமல் அமர்ந்திருந்தவள் பெருமூச்சுடன் எழுந்து முகம் கழுவிக் கொண்டு வந்தாள்.

கதவு தட்டப்படவும் ''எஸ் கமின்'' என்றபடி திரும்பியவள் உள்ளே தலை நீட்டிய ரங்கனை கண்டு, ''எனக்கு டிபன் வேண்டாம்'' என மறுக்கும்பொழுதே கூடவே நுழைந்த ஸ்ரீதரைக் கண்டு திகைத்துப் போனாள்.

'இவன் எங்கே இங்கே?'

அறையை அடையாளம் காட்டிவிட்டு ரங்கன் திரும்பிச் செல்லவும், 'இவன் ஏன் வந்தான்? அப்படியே வந்தாலும் அவளது அனுமதியின்றி இந்த ரங்கன் எப்படி அறைக்கே அழைத்து வரலாம். மேனேஜர் சங்கர் என்னச் செய்து கொண்டு இருக்கிறான்' என உள்ளூர பொருமியவள் ஸ்ரீதரை நோக்கி, ''என்ன விஷயம்? எதுவானாலும் கீழேயே பேசியிருக்கலாமே, அன்னியருக்கெல்லாம் என் அறையில் நுழையவே அனுமதி கிடையாது'' என்றாள் அழுத்தமாக.

கையை விரித்தான் அவன். ''எனக்கும் தெரியும் ஷண்மதி. என்கேஜ்மெண்ட் இன்விடேஷன் வைக்கவே வந்தேன். உன் அப்பாவை கீழேயே பார்த்தேன். அவர் தான் 'ஷண்மதியை அழைக்க வேண்டுமானால் மேலேயே போங்கள். இங்கே வேண்டாம். வேலையாட்கள் வந்து போகும் இடம். அவள் கண் கலங்கினால் இவர்களும் தாங்க மாட்டார்கள்' என்றார். அதனால்தான் வந்தேன்'' என்றான் சாதாரணமாக.

'அவனது நிச்சயதார்த்தத்திற்கு அவளுக்கு அழைப்பு தர வந்தானாமா...' உள்ளே பொங்கிய வேதனை கோப மாக முகத்தில் பிரதிபலிக்க அவனைப் பார்த்தாள் ஷண்மதி.

அவள் முகத்தை கண்டவன் தலையசைத்து, ''உன்னை வருத்தப்படுத்துவதற்காக இன்விடேஷன் வைக்க நான் வரவில்லை ஷண்மதி. குடும்பத்தில் ஒருத்தியாக பழகிவிட்டவளை ஒதுக்க முடியாதென்று அம்மா வற்புறுத்தியதாலேயே தான் வந்தேன்'' என்று கூறவும் தாங்க முடியாமல் பொங்கி வந்த அழுகையை சிரமப்பட்டு அடக்கியபடி,

''உட்காருங்கள்!'' என சோபாவை காட்டினாள்.

''உட்கார நேரமில்லை ஷண்மதி. நான் உடனே கிளம்ப வேண்டும்'' என்றபடி இன்விடேஷனை நீட்டிய வன் அவள் வேண்டா வெறுப்பாக பத்திரிகையை வாங்கவும்,

''இது நீ அச்சடித்தது போல் பொய்யான பத்திரிகை யல்ல. உண்மையான பத்திரிகை'' என கிண்டலுடன் கூறினான்.

கலங்கிய விழிகளை இமை தாழ்த்தி மறைத்தவள், சற்று சமாளித்துக் கொண்டு நிமிர்ந்து அவனை நேராக நோக்கி, ''அழைப்பு வைத்து விட்டீர்கள் அல்லவா? சந்தோஷம்'' என்றாள். மேலும் தொடர்ந்து, ''எனக்கு நிறைய வேலையிருக்கிறது. குணாவின் ரிசப்ஷனுக்கு செல் லவே நேரம் ஒதுக்க முடியாது போலிருக்கிறது. முடிந்தால் வருகிறேன்'' என்று முன்பு அவன் கூறிய அதே வார்த் தைகளையே பயன்படுத்தி கூறவும் அதைக் கண்டுக்



கொண்டவனாய் அவன் முகத்தில் புன்னகையின் சாயல் தோன்றியது.

சட்டென்று விழிகள் மீண்டும் கலங்க வேறுபுறம் திரும்பினாள் அவள்.

அவனோ தொடர்ந்து, ''கண்டிப்பாக வரவேண்டும். என் மேல் ப்ராமிஸ்'' எனவும் அதற்கு மேல் தாங்க முடியாமல் தொண்டையடைக்க, ''போதும் ஸ்ரீதர்'' என்றாள் அவள்.

''ம்கூம்.. சொல்ல வந்ததை முழுதாய் சொல்ல விடு... ம்.. எதில் விட்டேன்.. ஆங், என்மேல் ப்ராமிஸ் என்றெல்லாம் சொல்ல மாட்டேன். முடிந்தால் வா... இல்லாவிட்டாலும் நான் தவறாக நினைக்க மாட்டேன். கூடிய விரைவில் நீயும் ஒரு நல்ல செய்தியை தர வேண்டுமென வாழ்த்துகிறேன். வரட்டுமா!'' என கிளம்பிச் செல்லவும் அதீத துக்கம் தொண்டையை அடைத்தது ஷண்மதிக்கு.

விழிகளை இறுக மூடியபடி மூச்சை ஆழமாக எடுத்து விட்டபடி அப்படியே நின்றாள் அவள்.

வெகு நேரம் சிலையாக நின்றவள் வேதனையுடன் குனிந்து இன்விடேஷனை டீபாயில் போட்டுவிட்டு திரும்பி தன் தாயாரின் புகைப்படத்தை ஆற்றாமையுடன் நோக்கினாள்.

'அம்மா! உள்ளுணர்வாக இருந்து எனக்கு எப்பவும் நல்வழி காட்டுவீர்களே.. ஸ்ரீதரின் விஷயத்தில் மட்டும் எப்படிம்மா தப்பாக போனது?' என வேதனையோடு முணுமுணுத்தபடி திரும்பியவள் திடுக்கிட்டுப் போனாள்.

ஏனெனில் அறைவாயிலின் கதவருகே கை கட்டியபடி சுவரில் சாய்ந்து குறும்பு புன்னகையுடன் அவனையே பார்த்தபடி ஸ்ரீதர் நின்றிருந்தான்.

# 33



'இவ்...வளவு நேரமும் இவன் இங்கேயா நின்றுக் கொண்டிருந்தான்.'

நம்பமாட்டாமல் கண்களை கசக்கி விட்டு கொண்டு மீண்டும் நோக்கினாள் ஷண்மதி.

'இவன் அப்பொழுதே போகவில்லையா.. போகாமல்..' மேற்கொண்டு சிந்தனை ஓடமறுத்து விழிகள் இமைக்க மறந்து அவனிலேயே பார்வை வியப்புடன் படிந்தது.

இதயத்தின் துடிப்போசையோ டமடமவென்று பேரோசையாக அவளது செவிகளை மோதித் தாக்க.. கால்களோ நிற்கமாட்டாமல் வெலவெலத்தன.

புன்னகையோடு அவன் தன் அருகில் வருவதையும், குனிந்து பத்திரிகையை எடுத்து அவள் கையில் திணித்து, ''பிரித்து படி'' என மிருதுவாய் கூறி முறுவலிப்பதையும் கண்டு நம்பமாட்டாமல் திக்பிரம்மித்து நின்றிருந்தாள்.

அவனது செயலும், சொல்லும், பார்வையும் உணர்த்திய உண்மையை நம்ப மாட்டாமல் திகைத்துப் போனவளாய் கரங்கள் நடுங்க, பத்திரிகையை பிரித்து பார்வையை ஓட்டியவள் அப்பத்திரிகை அறிவித்த இனிய செய்தியை முழுதும் ஜீரணிக்க முடியாமல் செயலிழந்தவளாய் நின்றாள்.

வியப்பும், திகைப்புமாய் நிமிர்ந்தவள் ஸ்ரீதர் என அவன் பெயரை சொல்ல முயன்றும் முடியாமல்



குப்பென்று எழும்பிய சந்தோஷ அலையில் பேசவும் கூட சக்தியற்றவளாய் அவனைப் பார்த்தது பார்த்தபடி அப்படியே நின்று விட்டாள்.

அவள் நிலை உணர்ந்தவனாக அவளது விழிகளை நேராக நோக்கியபடி அவன் ஆதரவாய்.. ஆமோதிப்பாய்.. தலையசைத்து முறுவலிக்கவும், இது கனவா... அல்லது நனவா..? என்று தலை சுற்றியது ஷண்மதிக்கு.

சற்றே தள்ளாடியவளை சட்டென தோளை பற்றி நிறுத்திய ஸ்ரீதர், ''ஷண்மதி! ஆர் யூ ஆல்ரைட்?'' என்றான் பதற்றத்துடன்.

அதற்கு மேல் தாங்க மாட்டாமல் எதுவும் பேசமாட்டாமல் அவன் மீதே சாய்ந்தவள் விக்கி, விம்மி விம்மி அழ ஆரம்பித்து விட்டாள்.

அவனும் எதுவும் பேசவில்லை. அவளது நிலை, புரிந்தவனாய் மவுனமாக அணைத்தபடியே நின்றிருந்தவன் கண்களும் இலேசாய் கலங்கின.

அவளது அழுகை சற்று குறைந்ததும், அவளது பூமுகத்தை தன்னிரு கைகளில் ஏந்தியவன், ''மதி! ப்ளீஸ் போதும்! அழாதே!'' என்றபடி சோபாவில் அமர வைத்து விட்டு அறையின் மறுபுறமிருந்த ப்ரிஜ்ஜிலிருந்து வாட்டர் பாட்டிலை எடுத்து வந்து மூடியை கழற்றி ''இதை குடி!'' என்றபடி அவளருகில் அமர்ந்தான்.

மறுக்காமல் வாங்கி குடித்துவிட்டு, ''போ.. போதும்'' என்றாள் அவள் விசும்பலினிடையே.. பாட்டிலை வாங்கி சிறிது நீரை தன் கர்ச்சீப்பில் ஊற்றி அதை ஈரமாக்கியவன் சற்று எட்டி டீபாயில் பாட்டிலை வைத்து விட்டு, ஈரகர்ச்சீப்பால் அவள் முகத்தை அழுந்த துடைத்தான்.

''இப்படியா அழுவார்கள்..? பார் கண், முகமெல்லாம் எப்படி சிவந்து போய் விட்டது'' என்றான் அவன் குரலில் கண்டனத்துடன்.

மீண்டும் நம்பமாட்டாமல் விழிகள் விரிந்தன அவளுக்கு. பெருமுயற்சி செய்து, ''ஸ்ரீதர்... அப்படியென்றால் குணாவின் திருமணத்தன்று சொன்னது எல்லாமே பொய்யா?'' என்று கேட்டாள் முகத்தில் வியப்பை தேக்கி.

''ஆமாம்! குணாவுடன் திருமணமென்று நீ சொன்னது எவ்வளவு பொய்யோ... அவ்வளவு பொய் அன்று நான் சொன்னது எல்லாமே!'' என்று கூறினான் அவன் குறுஞ்சிரிப்புடன்.

அவனது முகத்தில் படிந்த தனது பார்வையை அகற்ற மாட்டாமல், ''ஏன் அப்படி சொன்னீர்கள் ஸ்ரீதர்? இந்த நான்கு நாட்களாக நான் என்ன பாடுபட்டேன் தெரியுமா?'' என முகம் வாடினாள் அவள்.

''தெரியுமே மதி! நன்றாகத் தெரியும். ஆனால் இப்பொழுது உனக்கும் புரிந்திருக்குமே! அந்த இருபது நாட்கள் நான் எப்படி தவித்திருப்பேன் என்பதும் இந்த நான்கு நாட்களில் உனக்கும் நன்றாகப் புரிந்திருக்குமே!'' என்று ஸ்ரீதர் கூறவும் அவளது விழிகள் மேலும் அகன்றன.

''ஆனால்... ஆனால் நான் வேறென்ன செய்யட்டும் ஸ்ரீதர்? என்னைக் காதலித்துக் கொண்டே, என் மீதுள்ள நம்பிக்கையின்மையினால் அதை ஒத்துக் கொள்ள நீங்கள் மறுக்கும்பொழுது நான் என்ன செய்வதாம்? உங்களை விட்டு விலகிப் போகிறேன் என்று தெரிந்தால் ஒருவேளை நீங்கள் உணர்வீர்களோ, காதலை சொல்வீர்களோ என்றுதான் அப்படிச் செய்தேன்'' என பேசிக் கொண்டே வந்தவள் சட்டென குரல் கம்ம,

''அன்று உங்கள் அறையில் ஷ்ரத்தி போட்டோ என்று நினைத்து கையில் எடுத்து பார்த்த எங்களுக்குதான் எவ்வளவு பெரிய அதிர்ச்சி. அதுவும் அந்த கவிதையை



படித்த பொழுது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா? என்னைக் காதலிக்கும் நீங்கள் அதை வெளிப்படையாக ஒத்துக்கொள்ள மறுப்பதன் காரணம், நானும் உங்களை உண்மையாக நேசிக்கிறேன் என்பதை நம்பாததுதானே! அதை நினைத்து உள்ளூர எப்படி குமுறினேன் தெரியுமா? அந்த கோபத்தில்தான் அந்த நாடகத்தையே நடத்தினேன்'' என்றவள் மேலும் குரல் உடைய,

''ஆனால்.. கடைசி வரை என்னை நீங்கள் நம்பவில்லையே ஸ்ரீதர். அன்று உங்கள் வீட்டிற்கே வந்து நான் தோற்றுவிட்டதாகக் கூறியபொழுதும் கூட நம்பாமல் மவுனமாக நின்றீர்களே!''என்ற ஷண்மதியின் விழிகளில் நீர் பெருகியது.

''மதி! ப்ளீஸ்!'' என்றபடி அவள் கண்ணீரை துடைத்து விட்டான் ஸ்ரீதர்.

விழிகளில் வேதனையோடு அவனை ஏறிட்டுப் பார்த்தவள், ''ஒரு வருடம் ஸ்ரீதர்... கிட்டதட்ட ஒரு வருடமாக உங்கள் பாராமுகத்தால் உள்ளூர எப்படி தவித்திருப்பேன் தெரியுமா? ஆனாலும் ஒரு நம்பிக்கை. என்றாவது என் அன்பு உங்களுக்குப் புரியுமென்ற நம்பிக்கை மட்டுமே துணையாய்...

ஆனால் பந்தயத்தில் ஜெயிப்பதற்காகத்தான் உங்களை சுற்றி வருவதாக கூறினீர்களே.. உள்ளூர எப்படி உடைந்து போய் விட்டேன் தெரியுமா? அதிலும் இந்த நான்கு நாட்களாக நான் பட்ட வேதனை'' என்றவளுக்கு மீண்டும் குரல் உடைந்தது.

''ஷ்! மதி என்ன இது?'' என்றபடி அவளை தன் தோளில் சாய்த்து அணைத்துக் கொண்டவன், ''ஒரு வருட தவிப்பைப் பற்றி பேசினாயே! எனக்கும் அதே தவிப்பு

தான் தெரியுமா? உன்னை விடவும் அதிகமாகவே நானும் தவித்திருக்கிறேன் கண்ணம்மா. நம்பாமல் போனேன் என்கிறாயே. அதற்கும் காரணம் இருக்கிறது மதி!'' என்றான் அவன் குரலில் வேதனையோடு.

திகைப்புடன் தலையுயர்த்தி அவனை பார்த்தாள் ஷண்மதி.

அந்த குரல்...

அந்த குரலில் காணப்பட்ட வேதனை...

''அப்படியானால்.. ஸ்ரீதர் என்ன காரணம் அது?'' என்று வினவினாள் அவள் புரியாமல்.

''சொல்கிறேன் மதி. இன்று எல்லாவற்றையும் உன்னிடம் சொல்லிவிடும் முடிவோடுதான் வந்திருக்கிறேன். ஆனால் அதற்கு முன்.. மதி.. நான் ஏற்கனவே ஒரு பெண்ணோடு பழகினேன் என்பதில் உனக்கு என்மீது வெறுப்போ, கோபமோ இல்லையே''என தணிவான குரலில் விசாரித்தான் அவன்.

ஆச்சரியத்தோடு அவனை நோக்கினாள் ஷண்மதி. கூடவே, ''என்ன ஸ்ரீதர் இப்படிக் கேட்டு விட்டீர்களே..! அதையெல்லாம் நான் பொருட்படுத்தவேயில்லை. அப்படி பொருட்படுத்தியிருந்தால் குணாவோட சேர்ந்து நாடகமாடி உங்களைச் சீண்டியிருப்பேனா?'' என கேட்டு முறுவலித்தாள்.

பதிலுக்கு முறுவலித்தான் அவனும். ''உண்மைதான் மதி. அந்த நம்பிக்கையில்தான் நானும் நிச்சய பத்திரிகையோடு உன்னை தேடி வந்தேன். இருந்தாலும் உன் வாயால் தெளிவுப்படுத்திக் கொள்ள வேண்டுமென்றுதான் கேட்டேன்'' என விளக்கினான் அவன்.

''ம்ம்..'' என்றவள் முகத்தில் சட்டென சிந்தனையின் சாயல் படர்ந்தது.



அவனிடமிருந்து விலகி நிமிர்ந்து அமர்ந்தவள், ''ஆனால் ஸ்ரீதர் எனக்கு ஒன்று புரியவில்லை. கல்லூரியின் கடைசி நாளன்று என்னை நம்பாமல் பேசினீர்களே. பிறகும் உங்கள் வீட்டிற்கு வந்து பேசியபொழுதும் மவுனமாய் நின்றீர்கள். குணாவுடன் திருமணம் என்ற நாடகத்தை நான் நடத்தியிருக்காவிட்டால் நீங்கள் என்ன செய்திருப்பீர்கள்? எப்பொழுது மனம் மாறினீர்கள்? எனக்கொன்றும் புரியவில்லையே!'' என்றாள் குழப்பத்தோடு அவனை நோக்கி.

அவளது கரத்தை ஆதரவாக பற்றி இழுத்து மீண்டும் அவளை தன்மேல் சாய்த்துக் கொண்டவன், ''சொல்கிறேன் மதிம்மா. மறைக்காமல் சொல்லத்தானே நானும் வந்திருக்கிறேன். முதலில் ஒன்றை நன்றாக தெரிந்துக் கொள் மதி. உன்னை சந்தித்த கணத்திலேயே என் இதயத்தில் நீங்காது நிறைந்து விட்டவள் நீ!'' என மிருதுவான குரலில் கூறியவன் திகைப்புடன் தன்னை ஏறிட்டவளைப் பார்த்து, ''நம்ப முடியவில்லையா மதி. ஆனால் உண்மை அதுதான். பந்தயத்திற்காக பழகுகிறாயோவென்று நான் விலகிச் சென்றது உண்மைதான். மனதளவில் விலக முடியாமல் தவித்ததும் உண்மைதான் மதிம்மா. ஆனால் அன்று என் அறைக்கே வந்து கோபமும் தவிப்புமாக வெடித்தாயே.. அந்த கணமே நான் புரிந்து கொண்டேன்'' என்றான் தெள்ளத் தெளிவாக.

இதை சற்றும் எதிர்பார்த்திருக்காத ஷண்மதி மேலும் திகைப்பில் ஆழ்ந்து போனாள்.

அவளது திகைப்பை கண்டவனுக்கு முறுவல் அரும்பியது.

''மீண்டும் நம்ப முடியவில்லையா?'' என சிரித்தவன், ''சத்தியம் மதி! அன்று நீ பேசினாயே, மதி... இதை

சொல்வதற்காக என்னை மன்னித்து விடு. கோபமும், தவிப்புமாக நீ பேசப்பேச... கொஞ்ச நஞ்ச சந்தேகம் தீர்ந்து நான் எல்லையற்ற சந்தோஷத்தைதான் உணர்ந் தேன். உன் பேச்சு உன்னை எனக்கு பரிபூரணமாக உணர்த்தி விட்டது. என் மதி நடிக்கவில்லை என்னை உண்மையாகவே நேசிக்கிறாள் என்று உணர்ந்த தருணம் அது. அந்த ஆனந்த தருணத்தின் அறிமுகத்தில் நான் பேச்சற்று போனேன் கண்ணம்மா.

மதி! அன்று தோற்றுவிட்டதாகக் கூறிய ஒவ்வொரு வார்த்தையிலும் என்னை நீ ஜெயித்து விட்டாய் தெரியுமா?

மோதிரத்தை நீ கழற்றுவதற்கு முன்பே உன்னை நம்பிவிட்டேன் மதி. அதைச் சொல்லி உன்னை தடுக் கத்தான் எண்ணினேன். ஆனால் பேசவோ, தடுக்கவோ முடியாமல் என்னை மீறிய ஆனந்தத்தில் பிரம்மித்து நின்று விட்டேன். பத்திரிகையை பார்த்ததும் நீ நின்றாயே அதே நிலையில்தான் மதி நானும் அன்று இருந்தேன்.

கடைசியில் மோதிரத்தையே கழற்றி வீசினாயே! நான் ஸ்தம்பித்து விட்டேன் மதி. அந்த கணம்..''என அவளை இறுக அணைத்துக் கொண்டவன், ''அந்த கணமே நீயும் என்மேல் எவ்வளவு ஆழமான அன்பு வைத்திருக்கிறாய் என்பது எனக்கு முழுமையாக புரிந்தது மதி. எனக்கு முழு தெளிவும் கிடைத்தது. ஆனால் நீயோ உடனே கிளம்பி சென்றுவிட்டாய்'' என அவன் பேசப்பேச ஷண்மதியின் உள்ளம் ஆகாயத்தில் பறப்பது போல் இருந்தது.

அன்று அம்மா மோதிரத்தை கழற்றியும் கூட, அவன் தன்னை நம்பவில்லையே என்ற அவளது வருத்தம் மாயமாய் மறைய மனம் இலேசாகி மிதப்பது போல் உணர்ந்தாள்.



ஸ்ரீதர் தொடர்ந்து, ''நீ சென்ற பிறகே எனக்கு சற்று சுயநினைவு வந்தது. ஆனால்உன்னை தொடர்ந்து வந்து பேசமுடியாத நிலைமை. ப்ளைட்டுக்கு நேரமாகி விட்டது. உன்னிடம் பேச வேண்டியதோ மிக மிக நிறைய இருந்தது. சிங்கப்பூர் செல்வதோ தவிர்க்கவே முடியாத ஒன்று. எனவேதான் பொறுத்தது பொறுத்தோம். நான்கே நாட்களில் திரும்பி வந்ததும் ஆற அமர பேசலா மென்று கிளம்பி விட்டேன்'' என கூறிக் கொண்டே வந்தவன் அவள் முகம் கன்றவும் பேச்சை நிறுத்தி என்னவென்று வினவினான்.

''ஸாரி ஸ்ரீதர்! நீங்கள் சந்தோஷமாக கிளம்பியதாக அத்தை கூறினார்களா? உங்களை இனி நானாக வந்து சந்திக்க மாட்டேனென்று கூறிய சந்தோஷத்தில் இருந் தீர்களோ எனத் தவறாக எண்ணி விட்டேன்'' என்றாள் அவள் குற்ற உணர்ச்சியோடு.

''தவறாக நினைத்து உன்னையும் வருத்தப்படுத்திக் கொண்டாயாக்கும். நீ சொன்னப்படி நானாகத்தானே உன்னை வந்து சந்தித்தேன். உள்ளேயும் கொஞ்சம் மதி இருக்குமென்று நினைத்தேன். ம்கூம் சரியான மக்கு மதி'' என்று கிண்டல் செய்து சிரித்தான் ஸ்ரீதர்.

''ஹலோ சார்! க்ளாஸில் என்னை மக்கு என்று திட்ட முடியாமல் போனதற்கு இப்படி பழி தீர்த்து கொள்கிறீர் களோ'' என கேட்டு அவனை வம்பிழுக்கவும்,

''அடடா! உள்ளேயும் கொஞ்...சம் மதி இருக்கிறது போலும். சரியாகக் கண்டுபிடித்து விட்டாயே! என் மாணவி ஆயிற்றே. சரியாக கண்டுபிடித்து என் பெயரை காப்பாற்றிவிட்டாய். அது சரி என் மாணவி சரியாக கண்டுபிடிக்காமல் இருந்தால்தான் ஆச்சர்யம்'' என

அவன் பெருமையாக தன் டீசர்ட் காலரை தூக்கி விட்டுக் கொள்ளவும் ஷண்மதிக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

கன்னம் குழிய முத்து பற்கள் மின்னலாய் ஒளிர அவள் சிரிப்பதை மனம் நிறையப் பார்த்திருந்தவன், அவள் சிரிப்பு நின்றதும், ''உன்னை நன்றாக உதைக்க வேண்டும் மதி. சிங்கப்பூர் ட்ரிப்பை முடித்துவிட்டு எவ்வளவு சந்தோஷமாக வந்தேன் தெரியுமா? உன்னைப் பார்த்து எல்லாவற்றையும் கூற வேண்டுமென்று எல்லையில்லாத உற்சாகத்தோடு ஓடிவந்தால்.. நீ என் அறையினுள் நுழைந்து போட்டோவை எடுத்து.. அசடு அவசரக் கொடுக்கையாய், முட்டாள் முந்திரிக்கொட்டையாய் இல்லாத வேலையெல்லாம் செய்திருக்கிறாய்'' என்றான் குரலில் சிறு கண்டிப்போடு.

முகத்தில் அசடு வழிய தலைகுனிந்தாள் ஷண்மதி. ''நான் என் மோதிரத்தை தேடிதான் வந்தேன். அதைக் காணவில்லை. கூடவே ஷ்ரத்தி எப்படியிருப்பாள்? அவளது போட்டோ கிடைக்குமாவென பவிக்கு ஒரே குறுகுறுப்பு. ஆனால் என் போட்டோ கிடைத்தது விஜு குட்டியால்தான். பிறகுதான் கொஞ்சம் விளையாடிப் பார்க்கத் தோன்றியது'' என முணுமுணுத்தாள் ஷண்மதி.

அவள் முணுமுணுப்பு பேச்சை கேட்டவன் வந்த சிரிப்பை அடக்கிக் கொண்டு அவள் மூக்கை பிடித்து ஆட்டியவன், ''சரி, உன் போட்டோ கிடைத்தது. என்னிடம் நேரடியாக கேட்பதுதானே'' என்று சிரித்தவன் சட்டென்று குரல் மாற, ''உனக்கும் குணாவிற்கும் திருமணம் என்ற பொழுது நான் நம்பவில்லை மதி. 'உங்களுக்கு உண்மை புரியும்வரை காத்திருப்பேன்' என்றவள் எப்படி மாற முடியுமென்ற திகைப்போடுதான் உன்னை சந்திக்க வந்தேன். நீ பணத்துக்காக தான் மனம்மாறி உன்னிடம்



பேச வந்ததாக கூறவும் மேற்கொண்டு பேச மாட்டாமல் திரும்பிவிட்டேன்'' என்றவன் அவள் முகம் பார்த்து,

''ஏன் அப்படி சொன்னாய் ஷண்மதி?'' என குரலில் கண்டிப்பும் அதை மீறிய வலியுமாய் கேட்கவும் ஷண்மதிக்கு மனம் மெழுகாய் உருகி விட்டது.

''சாரி ஸ்ரீதர். நீங்களாக காதலைச் சொல்ல வேண்டுமென எதிர்பார்த்தேன். அப்படியில்லாவிட்டால் குணா திருமணத்தன்று உங்களுக்கு சர்ப்ரைஸ் கொடுப்பதுதான் எங்கள் திட்டம். ஒரு வருடமாக தவித்தோமே அட்லீஸ்ட் இருபது நாட்களாவது தவிக்கட்டுமே என்று உள்ளூர எனக்கும் சிறு கோபம். ஆனால் உங்களைப் பார்த்ததுமே திருமணம் பற்றி அக்கறையாய் விசாரித்ததுமே உங்களிடம் எல்லாவற்றையும் கூறிவிட மனம் துடித்தது. ஆனால் நீங்களோ உங்களது மனம் பற்றிக் கூறாமல் என் மேற்படிப்பு பற்றிப் பேசவும் கோபம் வேறு வந்துவிட்டது. அத்தோடு உண்மையை உளறி விடுவோமோவென்று பயத்தில் உங்களை உடனே கிளப்புவதற்காக அப்படி பேசினேன்'' என்றாள் அவள் சமாதானமாக.

''இம்ம்'' என பெருமூச்சு விட்டவன், ''குணாவோடு நீ பத்திரிகை கொடுக்க வந்தபொழுது மிகவும் நம்பிக்கையிழந்து விட்டேன்'' என்றவனை இடைமறித்து,

''உங்களை சீண்டி விடவே அப்படி செய்தோம். நீங்கள்தான் ஒன்றையும் காட்டிக் கொள்ளவே இல்லையே'' என குறையாக உதட்டைப் பிதுக்கினாள் ஷண்மதி.

''இன்னொருவனுடன் திருமணமென்று பத்திரிகையை நீட்டும்பொழுது எப்படி காட்டிக் கொள்வதாம்?'' என பதிலுக்கு கேட்டவன் தொடர்ந்து, ''ஆனால் உள்ளே தூள் தூளாய் உடைந்து போனேன். திருமணத்திற்கு வந்திருக்கவும் மாட்டேன். உன்மேல் நீ செய்துக்

கொண்ட ப்ராமிஸ்க்கு கட்டுப்பட்டுதான் மனமெல்லாம் வேதனையோடு வந்தேன். ஆனால் உண்மை தெரிந்த பின்போ... வெள்ளமாய் பொங்கிய மகிழ்ச்சி ஒரு புறம் என்றால் மறுபுறம் 'எதில்தான் விளையாடுவது என்றில்லையா இவளுக்கு. பொய்யாக பத்திரிகை அடித்து.. எப்படியெல்லாம் நம்மை அலைக்கழித்து விட்டாள்' என்ற கோபமும் வந்தது. அதனால்தான் பதிலுக்கு நானும் அப்படி பேசினேன்'' என்றவன் குரல் தணிய, ''அப்பொழுதும் உன் வேதனை நிறைந்த வெளிறிய முகம் பார்த்ததும் மனம் தாங்கவில்லை. நீ கிணற்றடியில் இருக்கும்பொழுது உண்மையைச் சொல்லி விடலாமென்றுதான் தேடி வந்தேன். மேடம்தான் பேசவே விடவில்லை'' என்று கூறியவன் மேலும் தொடர்ந்து,

''மதி! இப்பொழுது சொல்லு. இனி பியூச்சரில் எந்த பிரச்சனையானாலும் நேரடியாகப் பேசித் தீர்த்துக் கொள்ள வேண்டும் சரியா? இனி இப்படியெல்லாம் நாடகம் போடக்கூடாது என்ன?'' என அவன் இதமாக கண்டிக்கவும் அவசரமாக தலையாட்டினாள் ஷண்மதி.

ரொம்பவும் சமர்த்தாக அவள் தலையை ஆட்டிய விதத்தை பார்த்த ஸ்ரீதருக்கு சிரிப்பு வந்து விட்டது.

''ஏய் மதி! என் அம்மா இப்படி தலையை ஆட்டினால் அதை மீறப்போகிறார்கள் என்று அர்த்தம். நீ எப்படி?'' என சிரித்தபடியே கேட்டான்.

''அச்சோ உண்மை ஸ்ரீதர். இனி எதுவானாலும் டைரக்ட்டலிங்தான். ட்ராமாவே கிடையாது. ஏனென்றால் நீங்கள்தான் பதிலுக்கு ஒரு ஷாக் ட்ராமா ஆரம்பித்து விடுகிறீர்களே! சோ.. ஐ ப்ராமிஸ் யூ. இனி எந்த ப்ராப்ளமென்றாலும் உங்களிடமே மறைக்காமல் கொண்டு வந்து விடுகிறேன். நாமே பேசி சரி செய்து விடலாம்'' என்றாள் ஷண்மதி.



''ம்ம்... வெரிகுட்!'' என்று கூறி சிரித்தான் ஸ்ரீதர்.

மலர்ந்த முகத்தோடு மனமார அவன் சிரிப்பதையே மட்டற்ற மகிழ்ச்சியோடு பார்த்திருந்த ஷண்மதி, ''ஸ்ரீதர்! இப்படி என்னிடம் நீங்கள் மனம்விட்டு சிரிப்பது இதுதான் முதல் தடவை தெரியுமா! இப்படி என்னிடம் நீங்கள் பேசிச் சிரிக்கும் தருணத்திற்காகத்தான் நான் இவ்வளவு நாட்களும் காத்திருந்தேன்'' என்றாள் உள்ளம் நெகிழ.

அவன் முகமும் இளகியது. அவள் நெற்றியில் பிரியமுடன் இதழ் பதித்தவன், ''இனி காலமெல்லாம் மனம் விட்டு பேசிக் கொண்டும், சிரித்துக் கொண்டும் தானே மதி இருக்கப் போகிறோம்'' என்றான் ஆத்மார்த்தமான குரலில்.

ஆமோதிப்பின் அறிகுறியாய் அவள் முகமும் மலர்ந்து பிரகாசித்தது.

''ஸ்ரீதர்! என்னால் நம்பவே முடியவில்லை. இதெல்லாம் கனவாக இருக்குமோவென்று ரொம்பவும் பயமாக இருக்கிறது'' என்றவளின் குரலில் சிறு கவலை வேரு முளைக்கவும், அதைக் கவனித்தவன் முகத்தில் குறுஞ்சிரிப்பு மின்னியது.

''நம்புங்கள் மேடம்! இது நனவேதான்'' என்றபடி அவள் பட்டுக் கன்னத்தில் முத்தமிட்டவன் நிமிர்ந்து, ''இனி மேல் நம்புவாய்தானே!'' எனச் சன்னக்குரலில் கேட்டு சிரிக்கவும் ஷண்மதியின் முகம் சிவந்தது.

''ம்... இப்பொழுதுதான் கனவோவென்று ரொம்பவும் தோன்றுகிறது'' என்றபடியே அவன் கையில் நறுக்கென்று கிள்ளினாள் ஷண்மதி.

''ஸ்.. ஏய் என்னதிது?'' என்றபடி கையை உதறியவனை குறும்புடன் நோக்கி, ''ம்... இப்பொழுது நம்பிக்கை வந்துவிட்டது. கனவல்ல நிஜமே'' என்று சிரித்தாள் அவள்.

''உனக்கு நம்பிக்கை வர உன்னையல்லவா கிள்ளிப் பார்க்க வேண்டும். என்னை கிள்ளுகிறாயே, கடவுளே! உன்னிடம் மாட்டிக் கொண்டு காலம் முழுவதும் என்ன பாடு படப் போகிறேனோ?'' என பயந்த பாவனையோடு அவன் கூறவும் ஷண்மதிக்கு மேலும் சிரிப்பு வந்தது.

சிரித்தபடியே, ''ஆஹா ரொம்பவும் பயந்தது போல் நடிக்காதீர்கள் சார்'' எனக் கிண்டலடித்தவள் தொடர்ந்து, ''ஆனாலும் ஸ்ரீதர் நீங்கள் சுத்த மோசம் தெரியுமா? ஏதோ விளையாட்டாய் அன்று பேசிய பேச்சை அத்தோடு நான் மறந்துவிட்டேன். ஆனால் அதைப் போய் சீரியஸாய் எடுத்துக் கொண்டு என்னை தூரத்தில் தள்ளி நிறுத்துவதிலேயே குறியாய் இருந்தீர்களே!'' என குறையாய் உதட்டை பிதுக்கினாள் ஷண்மதி.

சற்று நேரம் ஸ்ரீதர் எதுவுமே பேசவில்லை. பிறகு ஒரு வருத்தமான முறுவலோடு, ''நீ சொல்வதும் ஒரு வகையில் கரெக்ட் தான் மதி. நீ உன் விருப்பத்தை என்னிடம் வெளிப்படையாய் கூறியபொழுது உன்னிடமே அதைப் பற்றிப் பேசி தெளிவுப்படுத்தியிருக்கலாம். அல்லது நாளடைவில் உன் பேச்சை கல்லூரி பருவத்தின் கள்ளமில்லாத கிண்டல் பேச்சு என ஒதுக்கியுமிருக்கலாம். அப்படி நான் ஒதுக்கியுமிருப்பேன். அப்படி ஒதுக்க முடியாமல் போனதற்கும், உன் பேச்சை சீரியஸாய் எடுத்துக் கொண்டதற்கும் ஒரு காரணமிருக்கிறது மதி'' என்றான் அவன் மெதுவாக.

குறுக்கே எதுவும் பேசாமல் என்ன காரணம் என்பது போல் அவன் முகத்தையே பார்த்தவளை ஆழ நோக்கியவன் அந்த காரணத்தை கூறியபொழுது அவள் திகைத்துதான் போனாள்.

''ஸ்ரீதர்!'' என்றாள் திடுக்கிட்ட குரலில்,



இதுதான் காரணமென்று அவன் சொன்ன ஒற்றை வார்த்தை.. இதுவரை புரியாத விஷயங்களை வெகு தெளிவாய் அவளுக்கு விளக்கியது.

அந்த ஒரே வார்த்தை அவனுடைய முதல் காதல் என் முறிந்தது என்பதையும், தன்னை நம்பாமல் என் போனான் என்பதையும் அவளுக்கு தெள்ளத் தெளிவாய் உணர்த்தவும் மீளாத திகைப்பில் ஆழ்ந்தாள் அவள்.

## 34



கண்ணாடி ஜன்னல் வழியே கீழே தெரிந்த அப்பரந்த அழகிய தோட்டத்தையும் நடுவில் கண்ணை மட்டுமில்லாமல் உள்ளத்தையும் கவர்ந்திழுந்த அப்பெரிய நீச்சல் குளத்தையும் பார்த்தபடி நின்றான் ஸ்ரீதர்.

மெல்ல அவன் திரும்பியபொழுது, ஷண்மதி இன்னமும் திகைப்பிலிருந்து விடுபடாமல் அமர்ந்திருப்பதை கண்டான்.

அதே சமயம் அவளது கண்களில் மின்னி மறைந்த உணர்வுகளை கண்டவன், 'ஷாந்தி' என்று தான் சொன்ன ஒரு சொல்லில் கிட்டதட்ட எல்லாவற்றையும் அவள் ஊகித்து கொண்டு விட்டாளென்பதையும் புரிந்துக் கொண்டவனுக்கு, சட்டென்று அதிவிரைவில் விஷயத்தை கிரகித்துக் கொண்ட அவளது புத்திசாலித்தனத்தை நினைத்து உள்ளூர வியப்பும் பெருமிதமும் தோன்றின.

வசதியாக மேஜை மீது இலேசாக சாய்ந்து நின்றபடி மார்பின் குறுக்கே கைகளை கட்டியபடி தன்னையே

பார்த்துக் கொண்டிருந்த ஸ்ரீதரை திகைப்பு மாறாத விழிகளால் நோக்கினாள் ஷண்மதி.

முகத்தில் மெல்ல பரவிய புன்முறுவலுடன் தலையசைத்த ஸ்ரீதர், ''நான் நினைத்ததை விடவும் நீ ரொம்ப ஷார்ப் மதி'' என்றான் வியப்புடன் கூடிய குரலில்.

தொடர்ந்து, ''உனக்கு இப்பொழுதே ஓரளவிற்கு புரிந்து விட்டது. ஆனாலும் நான் சொல்ல வந்ததை முழுமையாக கூறி முடித்து விடுகிறேன் மதி'' என்று ஒரு பெரிய மூச்சை எடுத்துவிட்டபடி சொல்லத் தொடங்கினான்.

''மதி! நான் எம்டெக் பைனல் இயர் படிக்கும்பொழுது, எம்டெக் பர்ஸ்ட் இயரில் வந்து ஜாய்ன் செய்தவள்தான் ஷ்ரத்தி. பார்ப்பதற்கு ரொம்பவும் அழகாகயிருப்பாள். வந்து சேர்ந்த சில நாட்களிலேயே காலேஜ் பியூட்டி க்வீன் அவள்தான். அவள் ஒரு ஹாய் சொல்லமாட்டாளா என்று பாய்ஸ் கூட்டம் அவள் பின்னால்தான் அலையும். அதைப் பார்க்கும்பொழுது எனக்கு சிரிப்பும் சில சமயம் கோபமும் தான் வரும். 'ஏன்டா இப்படி அவள் பின்னாலேயே அத்தனை பேரும் அலைகிறீர்கள்?' என்று நானே என் நண்பர்களைக் கண்டித்திருக்கிறேன்.

ஆனால் இரண்டே மாதத்தில் நிலைமை தலைகீழாக மாறியது. கல்லூரியே யார் பின்னால் சுற்றியதோ அந்த ஷ்ரத்தி என் பின்னால் சுற்ற ஆரம்பித்தாள். விடாமல் துரத்தி துரத்தி காதலித்தாள் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவ்வளவு அழகான பெண், தன்னிடம் ஒரு புன்னகை சிந்தமாட்டாளா என மற்றவர் ஏங்கும் ஒரு பெண் என் பின்னால் சுற்றி காதலை சொன்ன பொழுது எனக்கும் பிடித்திருந்தது. அவள் காதலை மறுக்க எனக்கும் காரணமெதுவும் இருக்கவில்லை.

எங்கள் வீட்டிற்குக் கூட அழைத்துச் சென்றிருக்கிறேன். அவள் சென்ற பிறகு குறுகுறுப்புடன் விசாரித்த



வீட்டினரிடம் உண்மையை தயங்காமல் கூறினேன். அவள் எது கேட்டாலும் செய்து முடிப்பதில் எனக்கு ஓர் ஆர்வம். அதை எதிர்பார்த்திராத வியப்பில் அவளது முகம் மலர்வதை காண்பதில் ஓர் உற்சாகம்.

அப்படிதான் ஒரு முறை பேச்சு வாக்கில் எக்ஸாம்க்கு பாயிண்ட்ஸ் எடுக்க பர்ட்டிகுலர் புக் தேவைப்படுவதாகவும் அது சற்று ரேர் புக்கென்பதால் தனக்கு கிடைக்கவில்லையென்றும் சொன்னாள். தேடியலைந்து அந்த புக்கை வாங்கிக் கொண்டுதான் மறுநாள் கல்லூரிக்கு சென்றேன்.

அந்த புக்கை அவளிடம் தருவதற்காக ஆவலுடன் அவளைத் தேடி வகுப்பிற்குச் சென்றேன். அந்த புக்கை கண்டதும் அவளுக்கு அளவிட முடியாத ஆச்சரியம் ஆனந்தம். என்னையே அந்த புக்கில் அவளது பெயரை எழுதித் தரும்படி கேட்கவும் நானும் சந்தோஷத்துடன் எழுதித் தந்து விட்டுக் கிளம்பி வந்தேன். க்ரெளண்ட் ப்ளோர் வந்த பிறகுதான் என் பார்க்கர் பென்னை அவள் வகுப்பிலேயே விட்டுவிட்டு வந்தது தெரிய வந்தது. அம்மாவின் பரிசு வேறு. மிஸ்ஸாகி விடக் கூடாதென்றுதான் மீண்டும் சென்றேன். ஷ்ரத்தியின் குரல் கேட்டது.. ''நேற்று தான் சொன்னேன். இன்று புக்கோடு வந்து நிற்கிறான் பார்த்தீர்களா.. என்னவோ சொன்னீர்களே! கல்லூரியே உன் பின்னால் சுற்றலாம். ஆனால் இந்த காலேஜ் ஹீரோ அப்படியெல்லாம் மசியமாட்டானென்று சொன்னீர்களே! இப்ப என்ன சொல்கிறீர்கள்? உங்களிடம் சேலெஞ்ஜ் செய்தபடி, நான் சொல்வதையெல்லாம் செய்து கொண்டு நாய்க்குட்டி மாதிரி என் பின்னாலேயே சுற்றி வரும்படி செய்துவிட்டேன் பார்த்தீர்களா?'' என மிக அலட்சியமாகப் பேசியதைக் கேட்டு அதிர்ந்து போனேன்.

தொடர்ந்து, ''அத்தோடு பாவம் இவன். பின்னால் உண்மை தெரிய வரும்பொழுது என்னவாக போகிறானோ?'' என ஒருத்தி பரிதாபப்பட,

ஷ்ரத்தியோ கொஞ்சமும் அலட்டிக்காமல், ''என்ன கொஞ்ச நாள் தாடியோடு திரியலாம். கொஞ்சம் முற்றிய கேஸ் என்றால் தற்கொலைக்கு கூட முயலலாம். ஆனால் அப்படியெல்லாம் பொசுக்கென்று உயிரை விடுபவனாகத் தெரியவில்லை'' என்று கூறினாள்.''

அதற்கு மேல் தாங்க மாட்டாமல் ''ஸ்ரீதர்!'' என்ற ஷண்மதிக்கு கண்களில் நீர் திரையிட்டது.

''கடவுளே! அப்பொழுது உங்களுக்கு எப்படி இருந்திருக்கும் ஸ்ரீதர்?'' என்றாள் தவித்த குரலில்.

''எனக்கு ரத்தம் கொதித்தது மதி. பெரும்பாடுபட்டு என்னைச் சமாளித்துக் கொண்டு அப்பொழுதுதான் வருபவன் போல் சற்று ஷூவை தேய்த்துக் கொண்டே நடந்து உள்ளே சென்று பேனாவை வாங்கிக் கொண்டு திரும்பி வந்துவிட்டேன். பிறகும் கூட தொடர்ந்த நாட்களில் ஒன்றும் காட்டிக் கொள்ளாமல் பழகிவிட்டு, ஒருவாரம் கழித்து அவளது பர்த்டே பார்ட்டிக்கு அழைக்க அவளது ப்ரெண்ட்ஸ் கேங்கோடு வந்தபொழுது ரொம்பவும் கேஷ்வலாக, 'ஐ யம் ஸாரி ஷ்ரத்தி! கல்லூரியே பின்னால் சுற்றும் உன்னை என் பின்னால் சுற்ற வைப்பதாக என் நண்பனிடம் போட்ட சவாலுக்காகத்தான் உன்னை அலட்சியப்படுத்துவது போல் சீண்டி என்னிடம் ப்ரபோஸ் செய்ய வைத்தேன். இவ்வளவு நாட்கள் உன்னிடம் பழகியதும் அதற்காகத்தான். இனிமேலும் உண்மையை மறைக்க விரும்பவில்லை. ஐயம் ஸாரி!'' என ப்ளேட்டை திருப்பிப் போட்டு விட்டேன். அப்பொழுது



அவளது முகத்தையும் அவளின் ப்ரெண்ட்ஸ் கேங் அவளை கேலியும் கிண்டலுமாய் பார்த்த பார்வையையும் கண்டபொழுது அவளுக்கு சரியான பதிலடி கொடுத்த திருப்தி உண்டாயிற்று. படிப்பு முடிய மீதமிருந்த ஒரு மாதத்தில் அவளைத் திரும்பிக் கூட பார்க்கவில்லை.

ஆனால் மதி! உள்ளூர மனம் வெறுத்துவிட்டது. இப்படி போலியாக பழகியிருக்கிறாளேயென்று. அதைவிட என்னை அதிகமாக பாதித்த விஷயம் அவளது நடிப்பை உண்மையென்று நம்பிய என் ஏமாளித்தனத்தை நினைத்து என்னையே வெறுத்துக் கொண்டேன்.

ஆனால் நானே எதிர்பார்க்காத ஒரு விஷயம், அவளை விட்டு விலகிய பிறகு என் மனம் உணர்ந்த நிம்மதிதான். ஏதோ காட்டிலிருந்து விடுபட்டு விடுதலை பெற்றாற் போல ஓர் ஆசுவாச உணர்வு. அவளைப் பற்றி ஆவலாக விசாரித்த என் வீட்டினரிடம் நான் ஏமாந்து போனதைக் கூற முடியாமல் தடுமாறிய சமயத்தில்தான் என் நண்பன் மூலம் அவன் வேலைப் பார்த்த கன்சர்னிலேயே வேலை கிடைக்கவும் நிம்மதியோடு மும்பைக்கு கிளம்பி விட்டேன்.

மனதிற்கு பிடித்த வேலை. குறுகிய காலத்தில் கிடைத்த ப்ரமோஷன்ஸ் என்று நிம்மதியாக, என் வேலையிலேயே கவனத்தை ஒரு முகப்படுத்தி வாழ்ந்தேன். ஆனால் அந்த கவனத்தை கலைத்து தவிடு பொடியாக்கவென்றே நான் வேலைப் பார்த்த இடத்திற்கு மற்றொரு பெண் வந்தாள்'' என சொல்லிக் கொண்டே வந்த ஸ்ரீதர் அதிர்ச்சியோடு எழுந்து நின்ற ஷண்மதியை கண்டு பேச்சை நிறுத்தி மவுனமானான்.

# 35



இப்படி ஒரு திருப்பத்தை சற்றும் எதிர்பார்க்காத ஷண்மதி அதிர்ச்சியில் உறைந்து போய் நின்றிருந்தாள்.

ஷ்ரத்தி மட்டும்தான் என எண்ணிக் கொண்டிருந்தவளுக்கு இன்னொருத்தியைப் பற்றி அவன் கூறியது ஜீரணிக்க கஷ்டமாக இருந்தது.

அவளது அதிர்ச்சியை உணர்ந்தவனாக தலையசைத்தான் ஸ்ரீதர். "நான் என்ன செய்யட்டும் மதி? எனக்கு வேறு வழியில்லை. இன்று உன்னிடம் எதையும் மறைக்காமல் எல்லாவற்றையும் சொல்லி விட வேண்டுமென்ற முடிவில் இருக்கிறேன். நீ இப்படி பார்த்தால் நான் சொல்ல வந்ததை எப்படிச் சொல்வது?" என அவன் வினவவும் மெல்ல தன்னைச் சுதாரித்து கொண்டாள் ஷண்மதி.

அவள் சுதாரித்துக் கொண்டாள் என்றுணர்ந்த அவனும் பேசத் துவங்கினான்.

"கான்ப்ரன்ஸ் ஹாலிலிருந்து நண்பனுடன் வெளியே வந்த நான் மிகவும் தற்செயலாகத்தான் அப்பெண்ணை கண்டேன். அங்கு இருந்த பல பேர்களிலும் தனித்து தெரிந்த அவளை நான் வியப்புடன் கவனித்தேன். நல்ல உயரம், நல்ல நிறமும் கூட. எல்லாவற்றையும் விட என்னை ஈர்த்தது பளிச்சென்றிருந்த அந்த அழகு முகம்தான். துறுதுறுவென்றிருந்த அந்த முகத்தை இதற்குமுன் எங்கோ பார்த்ததுபோல் ஒரு நெருடல். எங்கு பார்த்தோமென்று யோசித்தபடியே அவளை உற்று



நோக்கினேன். அழகிய லெமென் யெல்லோ சுடியில் விரித்து விடப்பட்டிருந்த அடர்ந்த கூந்தல் காற்றில் அழகாய் கலைந்து பறக்க பேனா பிடித்திருந்த வலது கரத்தினால் அதை சரி செய்தபடியே இடது கையில் சின்ன நோட் பேடை பிடித்தபடி என்னுடன் வேலை பார்க்கும் ராகுலிடம் ஏதோ கேட்டுக் கொண்டிருந்தாள்.

ராகுல் கூறியதைக் கவனமாய் கேட்டவள் பதிலுக்கு முகத்தில் குறும்புடன் ஏதோ கேட்டுச் சிரிப்பதையும், சுற்றியிருந்தவர்களுடன் சேர்ந்துக் கொண்டு ராகுலும் சிரிப்பதை பார்த்தபடி மேலே நடக்காமல் நின்றுவிட்டிருந்த என் தோளை நண்பன் கிஷன் தட்டி அழைக்கவும் சட்டென்று சுயநிலைக்குத் திரும்பினேன். என்னைப் பார்த்து கிண்டலும் குறும்புமாக சிரித்தவனிடம், "யாருடா அவர்கள்? எதற்காக வந்திருக்கிறார்கள்? ராகுல் வேறு அவர்களுடன் நின்றுக் கொண்டிருக்கிறான்" என கேட்டேன்.

"ஓ... அவர்கள் எல்லோரையும் தான் நீ இவ்வளவு நேரம் உன்னை மறந்து ரசித்துப் பார்த்தாயா? நம்பிவிட்டேன்" என கிண்டலடிக்கவும், "சும்மா இருடா! நீ நினைப்பது போலில்லை" என அவனை அடக்கிவிட்டேன்.

அடுத்த அரைமணி நேரத்தில் நாங்கள் கேண்டீன் சென்றபொழுது அவர்களும் அங்கு இருப்பதை கண்ட என் பார்வை மீண்டும் அந்த பெண்ணிலேயே நிலைத்தது.

நான்கு பக்கமும் திறந்திருந்த வெளியிலிருந்து வீசிய காற்றில் கலைந்த கேசத்தை கோதியபடி சற்று ஓரமாகப் போடப்பட்டிருந்த டேபிளில் தன் கூட இருந்தவர்களிடம் ஏதோ சுவாரசியமாக பேசி சிரித்தபடி பீட்சாவை சாப்பிட்டுக் கொண்டிருந்தாள்.

எங்களை பார்த்தவுடன் கையாட்டியபடி வந்தமர்ந்த ராகுல் என் பார்வையை தொடர்ந்து அவனது விழிகளை ஓட்டிவிட்டு சட்டென சிரித்தான்.

பிறகு எங்களிடம் திரும்பி, 'சரியான துறுதுறு வாலுடா அந்த பெண். எப்படி பேசுகிறாள் தெரியுமா? கேள்வி மேல் கேள்விதான். நமக்கு அலவ் பண்ணியிருந்த டீடெய்ல்ஸ் தவிர மற்றதை உளராமல் நான் வந்ததே பெரிய விஷயம்டா' என சிரித்தான்.

'பார்த்தாலே தெரிகிறது. சரியான துறுதுறுவென்று' என்று நான் என்னையும் மீறிச் சொல்லிவிடவும் ராகுல் வியப்புடன் என்னை நோக்கினான்.

பிறகு கண்களில் பிறந்த குறும்புடன் 'என்னடா பெயர் தெரிய வேண்டாமா?' என கேட்கவும் நான் உதட்டை கடித்து மவுனமானேன்.

என் பதிலை எதிர்பார்க்காமல் அவனே சொன்னான்.

'நம் கன்சர்ன்க்கு ஐவி வந்திருக்கிறார்கள்.

இதுவரை யாரையும் அலவ் பண்ணியதில்லை. அந்த குருப்பில் ஒரு பையன் நம் எச்.ஆர்.மேனேஜர் ராகேஷோட அண்ணன் மகனாம். சோ அவர் ரெகமென்டேஷனாலதான் இவர்களுக்கு பர்மிஷனே கிடைத்திருக்கிறது' என்ற ராகுல் மேலும் தொடர்ந்து அப்பெண்ணைப் பற்றிய விவரம் சொன்னான்.

'ஷண்மதி ப்ரம் எஸ்எஸ்பி காலேஜ் ஆஃப் இன்ஜினியரிங்' என்று கூறி என்னைப் பார்த்துச் சிரித்தான்.''

அவனது பேச்சில் இடையில் ஏற்பட்ட பரபரப்பும் ஊகமும் கடைசியில் ஊர்ஜிதமாகிவிட அதற்குமேல் நிற்கமாட்டாமல் தொப்பென்று சோபாவில் அமர்ந்தாள் ஷண்மதி.

36



கரங்கள் நடுங்க டீபாயின் மீதிருந்த பாட்டிலை எடுத்து மடமடவென்று தண்ணீரை குடித்தாள் ஷண்மதி.



அவன் கூறியதை முழுமையாய் உள்வாங்கிக் கொள்ளவே அவளுக்கு சற்று அதிக நேரமாயிற்று.

'கடவுளே! தேர்ட் இயரில் தான் சென்ற இன்டெஸ்ட்ரியல் விசிட் அவன் வேலைப்பார்த்த இன்டெஸ்ட்ரி. அது மட்டுமல்ல அங்கு தன்னை ஸ்ரீதர் பார்த்திருக்கிறான்.

அவளால் இச்செய்தியை... அது உணர்த்திய உண்மையை நம்ப முடியவில்லை. கடவுளின் விளையாட்டை எண்ணி வியக்காமலும் இருக்க முடியவில்லை. தான் அவனைச் சந்திப்பதற்கு பல மாதங்கள் முன்பே அவன் தன்னைச் சந்தித்திருக்கிறான். சத்தியமாய் அவள் இதை எதிர்பார்த்திருக்கவில்லை.

அவன் மும்பையில் வேலை பார்த்தவனென்று குணா கூறியபொழுதும் கூட அந்தக் கம்பெனி பெயரை அவள் கேட்டுக் கொள்ளவில்லை. அது அவ்வளவு முக்கியமாகவும் அவளுக்குப் படவில்லை. அதனால்தான் பைலை கூட 'உன்னிடமே இருக்கட்டும்' என்று விட்டாள். பைலை வாங்கியிருந்தால்... ஸ்ரீதர் பற்றிய முழு ரிப்போர்ட்டையும் அன்றே படித்திருந்தால்... ம்கூம் அப்பொழுது கூட அந்த கன்சர்ன்க்கு நாமும் ஒருமுறை ஐவி போனோம் என்றுதான் தெரிந்திருக்குமே தவிர அங்கு தன்னைப் பார்த்து ஸ்ரீதர் இம்ப்ரெஸ் ஆகியிருப்பான் என்பதை அவளால் புரிந்து கொண்டிருக்க முடியாதே... இப்படி கூட நடக்குமா? அவளால் நம்பவே முடியவில்லை.

பார்த்த கணம் முதலாய் யாரை தன் உயிராய் நினைத்தாளோ... யார் தன்னை கன்சிடெர் செய்வதேயில்லை என வருந்தினாளோ... அவன் தன்னை, தான் அவனை அறிவதற்கு முன்பே பார்த்து இம்ப்ரெஸ் ஆகியிருக்கிறான் என்பதை அறிந்தபொழுது அவளுக்கு அந்த ஆனந்த அதிர்ச்சியின் தாக்கத்தில் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது.

பிரம்மித்த விழிகளால் அவனை நோக்கி, ''ஸ்ரீதர்! நீங்கள் சொல்வதெல்லாம்...'' முடிக்கமாட்டாமல் நிறுத்தினாள் அவள்.

முகத்தில் சன்னமான முறுவலோடு, தன் செய்தி அவளிடத்தில் ஏற்படுத்திய மாற்றங்களை ரசித்துப் பார்த்துக் கொண்டிருந்தவன் புன்னகையோடு அவளருகே வந்து அமர்ந்தான்.

''நம்ப முடியவில்லையா? இதோ இதைப் பார்'' என்றபடி தன் செல்லை எடுத்து, ''இதில், பிக்சர் கேலரி முழுக்க அன்று உன்னை எடுத்த போட்டோஸ்தான்'' என்று காட்டினான்.

வாங்கிப் பார்த்தவளின் முகம் ஆச்சரியத்தில் மலர்ந்தது. உண்மைதான். கேப்சர் செய்து வைத்திருந்த அத்தனை படங்களிலும் அவள்தான். அவளேதான்.

எல்லையில்லாத ஆனந்தத்தோடு அவன் தோளில் சாய்ந்துக் கொண்டவள், ''ஸ்ரீதர்! இந்த நாள் என் வாழ்வில் என்றுமே மறக்க முடியாத நாளாக அமைந்து விட்டது. அதுவும் என்னை தேர்ட் இயரிலேயே உங்களுக்கு தெரியும் என்பதை நினைக்கும்பொழுது ஆச்சரியம் தாங்கவில்லை'' என்றபடி பார்வையை மீண்டும் பிக்சரில் பதித்தாள்.

தொடர்ந்து, ''ஸ்ரீதர்! உங்கள் ரூமை குடைந்ததற்கு முன் நாங்கள் உங்கள் செல்லை குடைந்திருந்தால் உங்கள் குட்டு என்றோ வெளிப்பட்டிருக்கும்'' என்று கூறிச் சிரிக்கவும் அவனது முகத்திலும் இளஞ்சிரிப்பு மலர்ந்தது.

''ஆஹாஹா! அதெல்லாம் முடியாது மேடம். அட்வான்ஸ்ட் மாடல். ஐயா அனுமதியில்லாமல் அதில் ஒரு போல்டரை கூட யாரும் ஓப்பன் பண்ண முடியாது'' என்று கூறிச் சிரித்தான்.



''ஹலோ சார்! சிரிப்பது இருக்கட்டும். என் அனுமதியில்லாமல் எனக்குத் தெரியாமல் நீங்கள் எப்படி என்னை இவ்வளவு போட்டோஸ் எடுக்கலாம்'' என வேண்டுமென்றே அவனை வம்புக்கு இழுத்தவளுக்கு உள்ளறையில் தான் மாட்டி வைத்திருக்கும் அவனது புகைப்படத்தை நினைத்து ரகசிய சிரிப்பும் மலர்ந்தது.

மேலும் மலர்ந்த சிரிப்புடன், ''மதி! இந்த கேள்வியை நீ ராகுலைப் பார்த்துக் கேட்க வேண்டும்'' என்றான் பதிலாக.

''ராகுலையா ஏன்?''

''ஏனென்றால் என் செல்லில் உன்னை போட்டோஸ் எடுத்தது அவன்தான்'' என்று சிரித்தவன் ஷண்மதியை தோளோடு அணைத்தபடி, '' 'வாடா! அறிமுகப்படுத்தி வைக்கிறேன்' என தொணதொணத்துக் கொண்டிருந்தான். ஆனால் நான் மறுத்துவிட்டேன் மதி. ஷ்ரத்தியின் செயலால் ஏற்பட்டிருந்த காயம் உன்னிடம் வந்து பேச என்னை விடவில்லை. எனவே மேலே பேசவிடாமல் அவர்களின் வாயை அடைத்து விட்டேன். யாரோ ஓர் அழகான பெண். பாஸிங் க்லௌட் என்பதுபோல் கொஞ்ச நாளில் மறந்து விடக்கூடிய சின்ன சலனம் என்று எனக்கு நானே அறிவுறுத்திக் கொண்டு வேலையில் கவனத்தை பதித்தேன்.

ம்கூம். முடியவில்லை. என் கவனம் கலைவது நன்றாகவே புரிந்தது. அதை தடுக்கும் வழி மட்டும் புரியவில்லை. இரண்டு மாதங்களாக உன்னை மறக்க எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. ராகுலும், கிஷனும் நான் டிஸ்டர்ப் ஆகியிருப்பதை கவனித்து விட்டனர். கேட்டபொழுது மறைக்காமல் சொல்லி விட்டு, 'அவளை உடனே பார்க்க வேண்டும் போல் இருக்கிறதுடா'' என்று சொல்லவும், 'பார்க்க வேண்டியது தானே' என ராகுல் சிரிக்க, 'ஹவ் இஸ் பாஸிபில்டா?

நவ் ஷி இஸ் இன் தமிழ்நாடு' என்றான் கிஷன். அதற்கு ராகுல் என்னைப் பார்த்து, 'அன்று போட்டோஸ் எடுக்க வேண்டுமென்று உன் செல்லை வாங்கிக் கொண்டு போனேனே ஞாபகமிருக்கிறதா?' என குறும்பாகக் கேட்டுச் சிரித்தவன், 'அன்று எங்கள் வாயை நீ ஏதேதோ சொல்லி அடைத்தாலும் எனக்கு என்னவோ நீ தலைக்குப்புற விழுந்து விட்டாயோ என்ற சந்தேகம். எதற்கும் இருக் கட்டும். பின்னால் நீ இப்படி புலம்பும் காலம் வரும் பொழுது உதவும் என்றுதான் உன் செல்லிலேயே அந்த பெண்ணை போட்டோஸ் எடுத்து வைத்தேன்' என்றான்'' என ஸ்ரீதர் சொல்லிக் கொண்டே வரவும்,

கேட்டுக் கொண்டிருந்த ஷண்மதி களுக்கென்று சிரித்தாள். ''உங்கள் ப்ரெண்ட் உங்களை நன்றாகப் புரிந்து வைத்திருக்கிறார்'' என்று கூறி மேலும் சிரித்தாள்.

''உண்மைதான்'' என்று அவனும் சிரித்தான். ''இதில் காமெடி என்னவென்றால் உன்னை பற்றிய குழப்பமும், ஹெவி வொர்க் லோடுமாக அவன் சொல்லும் வரை அந்த போட்டோஸை நான் கவனிக்கவேயில்லை'' என்று கூறியவன் சட்டென்று குரல் தழைய, ''ஓர் உண்மை சொல்லட்டுமா மதி. உன்னை படம் பிடித்த செல்லில் வேறு யாரையும் படம் பிடிக்கக் கூடாதென்று இன்று வரை அதில் நான் வேறு போட்டோஸ் எடுத்ததேயில்லை தெரியுமா?'' என்று கூறவும் ஷண்மதி உருகிப் போனாள்.

''ஸ்ரீதர்'' என உருகியவள் மேலே பேச முடியாமல் மவுனமாகி போனாள்.

அவளது பூங்கரங்களை அன்போடு பற்றிக் கொண்ட வன் தொடர்ந்து, ''உன்னை உடனே வந்து பார்க்க வேண்டுமென்று நினைத்தேன் மதி. ஆனால் அதிலும் பல சிக்கல்கள் மதி.



முதல் சிக்கல் மிகப் பெரிய புராஜெக்ட் என் வசமிருந்தது. ரொம்பவும் முக்கியமான புராஜெக்ட்டும் கூட. இடையில் விட்டுவிட்டு அதிக நாள் லீவில் வரமுடியாது. வந்து உன்னைச் சந்தித்து உன்னிடம் நட்பை வளர்ப்ப தற்கான அவகாசமும் இல்லை. என்ன செய்வதென்று எங்களுக்கு ஒரு வழியும் புலப்படவில்லை. கடைசி வழியாக கையிலிருக்கும் புராஜெக்ட்டை எவ்வளவு சீக்கிரம் முடியுமோ அவ்வளவு சீக்கிரம் முடித்துவிட்டு உன்னைத் தேடி வரலாமென்று நினைத்தேன். பல்லைக் கடித்துக் கொண்டு அந்த புராஜெக்ட்டை ஆறு மாதங் களில் முடித்துக் கொடுத்தேன்.

அந்த ஆறு மாதங்களில் எனக்கு ஒரு விஷயம் நன்றாகப் புரிந்தது மதி. சில நாள் லீவில் உன்னை வந்து பார்த்து விட்டு மீண்டும் பிரிந்து இங்கு வருவது இயலா தென்பது மிகத் தெளிவாய் புரிந்தது. உன் படிப்பும் ஒரு வருடம் பாக்கியிருந்தது. அதுவரை உன்னைப் பார்க்காமல் எப்படி மதி... எனவேதான் வேலையையே ரிசைன் செய்து உன் கல்லூரியில் வேலைக்கு சேர்ந்தேன்'' என்று அவன் கூறவும் சற்றுநேரம் அசைவற்று ஸ்தம்பித்து போனாள் ஷண்மதி.

''ஏய் மதி!'' என அவளை இலேசாக உலுக்கினான் அவன்.

திகைப்புடன் அவனை நிமிர்ந்து பார்த்தாள் ஷண்மதி.

''ஸ்ரீதர்! அப்படியானால் நீ... நீங்கள்... எனக்காக...'' என்றவளுக்கு தொண்டையை ஏதோ அடைக்க பேச்சை நிறுத்தினாள்.

புன்னகைத்தான் அவன். ''ஆமாடா. உனக்காகத்தான் நான் இந்த வேலையில் சேர்ந்தேன். உன்னை சந்தித்து எட்டு மாதங்கள் முடிந்திருந்தன. நீ பைனல் இயரில்

நுழைந்திருந்தாய். உன் படிப்பு முடியும் வரை உன்னை தொந்தரவு செய்யக் கூடாதென்று நினைத்தேன். அதே சமயம் உன்னைத் தினமும் பார்த்துக் கொண்டும் இருக்க வேண்டுமென யோசித்த பொழுது இந்த வழிதான் எனக்குப் புலப்பட்டது.

உன் காலேஜ், நீ படிக்கும் டிபார்ட்மெண்ட் எல்லாம் ஏற்கனவே தெரிந்த விஷயங்கள்தானே. என் பள்ளி நண்பன் ஒருவனின் உதவியுடன், அவனது மாமாவிற்கும் உங்கள் எச்.ஓ.டிக்கும் இருந்த நட்பை பயன்படுத்தி அவன்தான் என்னை இந்த வேலையில் சேர்த்து விட்டான். பைனல் ஐ.டி. வேண்டுமென்று கேட்டு வாங்கிக் கொண்டு வந்தேன்'' என்றவன் அவளது கன்னத்தை தட்டியபடி, ''நான் ஏன் இந்த வேலைக்கு வந்தேனென்று நீங்களெல்லோரும் அடிக்கடி அலசுவீர்களே! ஏன் என்னிடமே பல பேர் கேட்டிருக்கிறார்கள். நீ கூட ஒரு முறை உன் காரில் லிப்ட் கொடுத்தபொழுது 'இந்த வேலைக்கு ஏன் வந்தீர்கள்' என்று கேட்டாயே மதி. உனக்காகத்தான் மதி வந்தேன். உனக்காக மட்டும்தான் வந்தேன். உன் பழைய கேள்விக்கான விடையை இன்று விளக்கி விட்டேன் மதிம்மா'' என்று குரலில் நேசம் பொங்க ஸ்ரீதர் கூறவும் அவள் சட்டென்று உடைந்தாள்.

மடை திறந்த வெள்ளமாய் அழுகை பொங்கிவர தன் கழுத்தை கட்டிக் கொண்டு அழுதவளை சமாதானப் படுத்த அவன் எவ்வளவோ முயன்றும் அவளது அழுகை நிற்கவில்லை.

அவன் வேலைப் பார்த்த நிறுவனம் இந்திய அளவில் மட்டுமல்லாமல் உலக அளவிலும் எவ்வளவு புகழ் பெற்ற நிறுவனம் என்பது அவளுக்கு நன்றாகத் தெரியும்.



மற்ற கம்பெனிகளில் ப்ளேஸான ஸ்டுடண்ட்ஸ்க்கு மட்டும் கேம்பஸ் இண்டர்வியூ நடத்தி தேர்வு செய்யும் நிறுவனம் அது. அதிலும் ஐந்து ஆண்டுகளில் ஸ்ரீதர் பெற்ற போஸ்டிங்... 'தனி மனிதனின் பொருளாதாரத்தில் மிகப் பெரிய விஷயம். அந்த லட்சக்கணக்கான சம்பளத்திற்கு முன் இப்பொழுது வாங்கும் சம்பளம், மலைக்கும் மடுவிற்கும் உள்ள வித்யாசம் போன்றது. அப்பேர்ப்பட்ட வேலையை தூக்கியெறிந்து விட்டு கையில் புத்தகமும், மார்க்கருமாக கல்லூரியில் பாடம் எடுக்கத் துணிந்தானே' என எண்ணிய மாத்திரத்தில் உள்ளம் நெகிழ அழுகையை கட்டுப்படுத்த முடியவில்லை அவளால்.

'எனக்காக வந்தவன். அதுவும் பேசிப் பழகாத ஒருத்திக்காக தன் வாழ்வே நான்தான் என நம்பி எனக்காக என்னைத் தேடி வந்தவன். அவனுக்கு நான் செய்ததெல்லாம் என்ன? பிழையான பேச்சினால் அவன் மனம் வேதனைப்படும் படி விட்டுவிட்டேனே' என எண்ணிய மாத்திரத்தில் உள்ளம் வலித்து கண்களில் அருவி பெருகியது ஷண்மதிக்கு.

''ஸ்ரீதர்! எவ்வளவு அருமையான வேலையை எனக்காக துச்சமென தூக்கி எறிந்திருக்கிறீர்களே! எவ்வளவு பெரிய போஸ்டிங். அதை விட்டுவிட்டு டெக்ஸ்ட் புக்கும் பேப்பர் கட்டுமாக அலைந்தீர்களே! ஏன் ஸ்ரீதர்? இந்தளவிற்கு நான் தகுதியானவள்தானா?'' என விழிகளில் பெருகி வழிந்த கண்ணீரோடு தாங்கமாட்டாமல் கேட்டாள் அவள்.

மனம் தாங்காமல், ''பைத்தியம்'' என அவளை தன்னோடு சேர்த்து அணைத்துக் கொண்டான்.

''என்ன பெரிய வேலை? அந்த மாதிரி வேலை எனக்கு எப்ப வேண்டுமானாலும் கிடைக்கும்டா. வரமாய் நீ கிடைத்ததுதான் எனக்கு பெரிய விஷயம். நீ தகுதியானவள் மட்டுமல்ல கண்ணம்மா. இந்த உலகத்தில்

எனக்கு எல்லாவற்றையும் விட மேலானவளும் நீதானேடா'' என்றான் அவன் உள்ளார்ந்த குரலில்.

மனநிறைவோடு அவனை நோக்கி, ''ஸ்ரீதர்! உங்களின் இந்த அன்பு கிடைக்க நான் கொடுத்து வைத்திருக்க வேண்டும்'' என்றாள் அவள் உளமார.

''இல்லை கண்ணம்மா. நான்தான் கொடுத்து வைத்தவன். உன் ஸ்டேட்டஸ் பார்த்து அம்மாவே தயங்கிய பொழுது, 'என் ஸ்ரீதரை விட இதெல்லாம் எனக்கு பெரிதா?' எனக் கேட்டாயாமே. இரண்டு நாட்கள் முன் அம்மா சொன்ன பொழுது எனக்கு எப்படி இருந்தது தெரியுமா?''

வியப்புடன் அவனை நோக்கியவள், ''இவ்வளவு அன்பை வைத்துக் கொண்டு என்னிடம் எப்படி கடுகடு வென்று நடந்து கொண்டீர்கள் ஸ்ரீதர். என்னை எப்பவும் தூரத்தில் நிறுத்தி வைத்தேதானே நடத்தினீர்கள்'' என்றாள் அவள் குரலிலும் வியப்பு தொனிக்க.

செல்லமாக அவன் மூக்கை பிடித்து ஆட்டியவன், ''நான் வேறு என்னடா செய்வது? எவ்வளவு உற்சாகமாக உன் வகுப்பை கேட்டு வாங்கிக் கொண்டு வந்தேன் தெரியுமா? இரண்டு நாட்கள் மகாராணி ஆப்செண்ட். மூன்றாவது நாளாவது வருவாயா, கண்ணார காண்போமா எனத் தவித்துக் கொண்டிருந்தேன். அன்று ஆபீஸ் ரூமில் சைன் போட்டு விட்டு வரும்பொழுதே மாடியிலிருந்து உன்னைப் பார்த்து விட்டேன். காரிலிருந்து இறங்கி ரவியிடம் ஏதோ சொல்லி சிரித்துவிட்டு பளிச் புன்னகையோடும் உற்சாகத்தோடும் சிட்டுக்குருவி போல நீ நடந்து வருவதை பார்த்து என் மனம் எப்படி பறந்தது தெரியுமா? அப்படி ஒரு குதாகலம். பர்ஸ்ட் அவரே என் அவர்தான். அன்று எனக்கிருந்த உற்சாகத்தில் டைமைக்கூட கவனிக்காமல் உங்கள் வகுப்பிற்கு மிகவும் ஆசையோடு



வந்தேன். ஜன்னல் வழியே நீ டேபிளில் காலாட்டியபடி அமர்ந்து சிரித்து பேசிக் கொண்டிருந்தாய். வகுப்பிலும் கொஞ்சம் பேர்தான் இருந்தீர்கள். என்னடா இதுவென்று அப்பொழுதுதான் டைமை கவனித்தேன். உன்னை பார்க்கும் ஆவலில் வகுப்பு ஆரம்பிக்க பத்து நிமிடம் முன்பே வந்து விட்டோமேயென்று எனக்குள்ளேயே சிரித்துக் கொண்டு வெளியே வராண்டாவில் நின்றுக் கொண்டிருந்தேன்.

அப்பொழுதுதான் என்னை பற்றி மற்றவர்கள் பேசியதும் நீ பந்தயம் கட்டி, பந்தயப் பொருளாய் உன் அம்மா மோதிரத்தையே வைத்ததும் என் செவிகளில் இடியாய் இறங்கியது'' என்று ஸ்ரீதர் கூறவும் ஷண்மதிக்கு இதயம் தவியாய் தவித்தது. அன்றைய பேச்சுக்காக தன்னையே மிகவும் நொந்துக் கொண்டாள் அவள்.

அவளுக்காகவே அந்த வேலையை ஏற்று வந்து, அவளையே தன் வாழ்வென்று நம்பிக்கையோடு நினைத்து, அவளைப் பார்க்கும் ஆவலில் வெளியே காத்திருந்தவனுக்கு அவளது விளையாட்டுப் பேச்சு எவ்வளவு வேதனையை தந்திருக்கும். உள்ளூர எப்படி தவித்திருப்பான். அந்த கணம் அவனது மனம் எவ்வளவு வலியில் துடித்திருக்கும் என எண்ணியவளின் இதயம் அதைவிட அதிக வலியில் தாங்கமாட்டாமல் தவித்து துடித்தது.

அவளது கசங்கிய முகத்தை கண்ட ஸ்ரீதருக்கு அன்றைய தன் நிலை ஊகித்து, இன்று படும் அவளது வேதனை புரிய மனம் பொறுக்காமல், ''ஷ்! என்ன மதி இது?'' என்று அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

பொங்கிய கண்ணீரோடு, ''ஸாரி ஸ்ரீதர்! என்னை மன்னித்து விடுங்கள். நானே என் பேச்சினால் உங்களை வேதனைப்படும்படி செய்து விட்டேனே'' என குமுறினாள் ஷண்மதி.

''ஷ்! போதும் கண்ணம்மா. அன்றைய கஷ்டம் முடிந்து போன ஒன்று. அதை நினைத்து இன்று வேதனை படாதேடா'' எனத் தேற்றினான் அவன்.

மெல்ல அவனை ஏறிட்டவள், ''எனக்கு இப்பொழுது புரிகிறது ஸ்ரீதர். 'நான் விளையாட்டாகத்தானே பேசினேன். அதை சீரியஸாக எடுத்துக் கொண்டு நம்மை இப்படி கஷ்டப்படுத்துகிறாரே'யென்று உள்ளூர கோபப்பட்டிருக்கிறேன். ஆனால் இன்று உங்கள் பக்கம் புரிகிறது. என்னை தேடி வந்த உங்களுக்கு என் பேச்சினால் எவ்வளவு அநியாயம் செய்து விட்டேன். என்னை மன்னித்...'' எனும்பொழுதே அவளது வாயை பொத்தினான் அவன்.

''பெரிய வார்த்தையெல்லாம் சொல்லாதே மதி. நீயும் வேண்டுமென்றே அப்படி பேசவில்லையே'' என்றான் அவன் கனிந்த குரலில்.

''இருந்தாலும்... கேட்டபொழுது வருந்தியிருப்பீர்களே ஸ்ரீதர்'' என்றாள் அவள் வேதனையோடு.

தன் மீது சாய்ந்திருந்தவளை இறுக அணைத்துக் கொண்டவன், ''உண்மைதான் கண்ணம்மா. கேட்டபொழுது அதிர்ந்துதான் போனேன். இவளும் ஷ்ரத்தி மாதிரி பெண்ணாகத் தெரிகிறாளே. இரண்டாம் முறையாக ஏமாந்து போனோமே என்றுதான் வருந்தினேன். ஷ்ரத்தி மேட்டராவது பரவாயில்லை. விடாமல் துரத்தி வந்தவள் அவள். சற்று ஏமாந்து போனோம். ஆனால் இந்த ஐந்து ஆண்டுகளாக வெளிவட்டாரங்களில் பழகி மனிதர்களை எடைபோடும் திறன் பெற்றவன் என்று மற்றவர்களால் பாராட்டப்பட்டவன் பேசிக்கூட பழகாத பெண்ணைப் பார்த்து மயங்கி வேலையை கூட விட்டு வந்து இப்படி ஏமாந்து நிற்கிறோமே என கழிவிரக்கமும் சுய வெறுப்பும்தான் அதிகமாகியது. உன்மீது எந்த



குற்றமும் சுமத்த நான் நினைக்கவில்லை. உன் இயல்பு புரியாமல் உனக்காக ஓடிவந்த என்னை நினைத்துதான் வெறுத்து கொண்டேன்.

ஆனால் மதி, காதலியென்று பழகிய ஷ்ரத்தி சாயம் வெளுத்தபொழுது கூட என்னை சுதாரித்துக் கொண்டு அவளை பார்த்து சாதாரணமாக பேசி பேனாவை வாங்கிக் கொண்டு வர முடிந்தது. ஆனால் உன் பேச்சை கேட்ட எனக்கு ஒன்றும் நடக்காததுபோல் சாதாரணமாக உள்ளே நுழைந்து வகுப்பு எடுக்க முடியவில்லை. நேராக டிபார்ட்மெண்ட்டுக்கு திரும்பிவிட்டேன். நல்ல வேளையாக பிரபு சார் ப்ரியாக இருந்தார். என் முகத்தை பார்த்ததுமே உடம்பு சரியில்லையா என்றுதான் கேட்டார். ஆம் என்றுவிட்டு எனக்காக பர்ஸ்ட் அவர் பைனல் ஐடிக்கு போக முடியுமாவென்று கேட்டேன். உடனே ஒத்துக் கொண்டார்.

அவர் சென்றபின் டிபார்ட்மெண்ட்டில் யாருமில்லை. என் கேபின் டேபிளில் கவிழ்ந்துவிட்டேன். இனியென்ன செய்வதென்று இதயம் ஓலமிட்டது. வேலையை விட்டு ஓடி விடலாமென்று நினைத்தேன். மனம் வரவில்லை. வந்தது வந்து விட்டோம். ஏற்றுக் கொண்ட வேலையை முடித்து விடுவோம் என்று பல சமாதானங்கள் தோன்றின.

ஆனால் இதெல்லாம் வெறும் கண்துடைப்பு. உன்னை தினமும் பார்க்கும் வாய்ப்பை விடக் கூடாதென்றே வேலையில் தொடர விரும்புகிறேன் என்பதும் விரைவிலேயே புரிந்து போயிற்று. உன்னை என் மனதிலிருந்து தூக்கியெறிய முடியாதென்பதும் புரிந்தது. அதனாலேயேதான் உன்னிடமிருந்து விலகினேன்'' என்றவன் அவள் முகம் பார்த்து, ''ஆனால் நீயோ தேடி வந்து வம்பிழுத்தாய்'' என்று சிரித்தான்.

அழுகை குறைந்த ஷண்மதியும் இலேசாக சிரித்தபடியே, ''உங்களைப் பார்த்த அன்றே எனக்கும்

தெளிவாகிவிட்டது ஸ்ரீதர். பிரபு சாரிடம் சைன் வாங்க சொன்னீர்களே. உங்கள் முதல் ஆர்டர் என்று உடனே போய் வாங்கிக் கொண்டு வந்துவிட்டேன். அப்பொழுது தான் என் ப்ரெண்ட்ஸ் என்னிடம் கேட்டார்கள். அன்றே அவர்களிடம் உங்களைக் காதலிப்பதாக அறிவித்து விட்டேன். நம்ப முடியாமல் எப்படி விழித்துக் கொண்டு நின்றார்கள் தெரியுமா?'' என்று மேலும் சிரித்தாள்.

எதுவும் பேசாமல் அவள் சிரிப்பதையே மென்முறுவலோடு பார்த்து கொண்டிருந்தான் அவன்.

அவள் மேலும் தொடர்ந்து, ''ஆனால் சீரியஸாக உங்களை காதலிக்கிறேனென்று தெரிந்ததும் உங்களைப் பற்றி நைஸாக டிபார்ட்மெண்ட்டில் மற்ற ஸ்டாப் வாயை கிண்டி கிடைத்த விஷயங்களை என்னிடம் வந்து ஒப்பித்து விடுவார்கள். உங்களுக்கு திருமணமாகவில்லை என்று தெரிந்ததும் உடனே பார்ட்டி வேண்டுமென்று அடம்பிடித்து என் பர்ஸை காலி செய்து விட்டார்கள்'' என்று மேலும் நகைத்தாள்.

''நீயும் ரொம்ப சந்தோஷமாக அல்லவா கொடுத்திருப்பாய்'' என்று சிரித்தான் அவனும்.

''அச்சோ! அதற்கு மட்டுமல்ல ஸ்ரீதர். உங்கள் சப்ஜெக்ட்டில் பர்ஸ்ட்மார்க் எடுத்ததற்கு, உங்களுக்கு காரில் லிப்ட் தந்ததற்கு... என்று எல்லாவற்றுக்குமே பார்ட்டி தான். என் அப்பா உங்களை வகுப்பில் பாராட்டினாரே... அதற்கு கூட பார்ட்டி கேட்டு தொண தொணத்து விட்டார்கள். பார்ட்டி தந்த பிறகு தான் விட்டார்கள்'' என்று உற்சாகமாக அறிவித்தாள் ஷண்மதி.

''மதி! திஸ் இஸ் டூ மச்'' என்று அவனும் சிரித்தான்.

''போங்கள் ஸ்ரீதர். அதெல்லாம் எவ்வளவு ஜாலியாக இருக்கும் தெரியுமா?'' என்றவள் தொடர்ந்து, ''உங்



களுக்கு கவிதை மூலம் விஷயம் தெரிந்ததும், 'ஹை! சார்க்கிட்டே டைரக்ட்டாக ப்ரபோஸ் செய்து விட்டாயா? தைரியம்தான் உனக்கு' என்று பாராட்டினார்களா...'' எனவும்.

அவன் குறுக்கிட்டு, ''நீயும் பார்ட்டி வைத்தாயா?'' என அவன் கிண்டலாகக் கேட்கவும்,

''ம்கூம் இல்லையே!'' என கையை விரித்தாள். அவள். ''அப்பொழுது பயங்கரமாக திட்டினீர்களா? மூட்அவுட்'' என்றவள் தொடர்ந்து. ''அதன் பிறகு ரொம்ப நாள் கழித்து உங்கள் வீட்டிற்கு வந்த பிறகுதான் பார்ட்டி வைத்தேன். சுவாதி போட்டு கொடுத்து விட்டாள். பயங்கரமாக முறைத்தீர்களா? பிறகு பார்ட்டி வைப்பதையே விட்டு விட்டேன்'' என்றாள் அவள்.

முகம் இளக, ''ஸாரிடா! நீ பந்தயத்தில் கொஞ்சம் கொஞ்சமாக முன்னேறிக் கொண்டிருப்பதற்காக உன் ப்ரெண்ட்ஸ்க்கு பார்ட்டி வைப்பதாக நினைத்து கோபப் பட்டு விட்டேன். சரிவிடு! நாம் இருவரும் சேர்ந்து நம் திருமணத்திற்காக உன் ப்ரெண்ட்ஸ் எல்லோர்க்கும் ஒரு க்ராண்ட் பார்ட்டி கொடுத்து விடலாம் என்ன?'' என சமாதானமாக கேட்கவும் அவள் முகம் மலர தலையாட்டினாள்.

''முக்கியமாக அந்த சுவாதியை அழைக்க வேண்டும் ஸ்ரீதர். நீங்கள் என்னை அவாய்ட் செய்து விலகிப் போனதை ரசித்தவள் அவள்'' என்றாள் அவள் எரிச்சலுடன்.

சிரிப்பு வந்தது ஸ்ரீதருக்கு. ''காலேஜ் லைஃபில் இதெல்லாம் சகஜம்தானே மதி! ஓகே... ஓகே. உன் விருப்பப்படியே அவளையும் அழைத்து விடலாம்'' என்றவன் தொடர்ந்து ''மதி! நீ நடிக்கிறாயென்று நினைத்து உன்னிடம் கோபப்பட்டு விலகினாலும், பல

சமயங்களில் என்னையும் மீறி உன் வம்புகளை, குறும்புகளை ரசிக்க ஆரம்பித்து விட்டேன் தெரியுமா?'' என்று அவன் உண்மையை கூறவும்,

''ம்க்கும்!'' என உதட்டை பிதுக்கினாள் அவள்.

''திட்ட வாய்ப்பு கிடைக்காதா என்று காத்துக் கொண்டிருப்பீர்கள். குருவியை வேடிக்கை பார்த்ததற்கு கேள்வி கேட்டு என்ன பாடுபடுத்தினீர்கள்'' என்று குறைப்பட்டாள் ஷண்மதி.

''மதி! மதி!'' என்று சிரித்தான் அவன்.

''பின்னே முக்கியமாக நடத்தும்பொழுது ஜன்னல் வழியே வெளியே வேடிக்கைப் பார்த்தால் கோபம் வராதா?'' என்று கேட்டவன், ''ஆனால் சிலசமயம், நான் போர்ட் பக்கம் திரும்பும் பொழுது மற்றவர்களிடம் பேசிக் கொண்டிருப்பவள் நான் திரும்பியதும் ரொம்ப சாதுவாய், சமர்த்தாய் முகத்தை வைத்துக் கொண்டு கவனிப்பாயே... சிரிப்பு வந்துவிடும் எனக்கு. கஷ்டப்பட்டு அடக்கிக் கொள்வேன்'' என்று ஸ்ரீதர் கூறவும்

''உண்மையாகவா?'' என ஆச்சரியமாகக் கேட்டாள் ஷண்மதி.

''எஸ் மதி! அதுமட்டுமல்ல, க்ளாஸில் நடத்திக் கொண்டிருக்கும் பொழுது சில நாட்கள் இமைக்காமல் என்னையே ரொம்ப டீப்பாக பார்த்துக் கொண்டிருப்பாய் தெரியுமா? சில சமயம் கோபம் வந்தாலும் பல சமயம் உள்ளூர இதமாய் இருக்கும். அதுமட்டுமல்ல, வேண்டுமென்றே டவுட் கேட்பாயே!'' என்றவனுக்கு சிரிப்பு பொங்கியது.

புரியாமல் ஏறிட்டவளிடம், ''அதுவும் ஒரு நாள் சுவாதிக்கு விஷ் பண்ணிட்டு உனக்கு பண்ணாமல் போனேனென்று கேள்வி மேல் கேள்வி கேட்டு என்னை



ஒரு வழியாக்கி விட்டாயே'' என்று கூறி மேலும் நகைக்கவும் ஷண்மதிக்கு முகம் சிவந்துவிட்டது.

மேலும் தொடர்ந்து, ''ஆனால் அப்பொழுதும், நீ மடக்கி மடக்கி கேள்வி கேட்டபொழுதும், கோபமோ, எரிச்சலோ வரவில்லை அதையும் ரசிக்கவே தோன்றியது. மற்றவர்களுக்கு விஷ் செய்தவன் உனக்கு செய்யவில்லையென்ற உன் கோபத்தின் வெளிப்பாடு என் மனதிற்கு இதமாகத்தான் இருந்தது. அதில் ஓர் உரிமை கோபம் தெரிவதாக எண்ணி எனக்கு நானே சிரித்துக் கொள்வேன்'' என்று கூறி அவன் முறுவலிக்கவும் ஷண்மதிக்கு அசடு வழிந்தது.

அவனுக்கு தெரிந்திருக்கிறது. அன்றே கண்டு கொண்டுமிருக்கிறான்.

''உங்களுக்கு தெரிந்திருக்கிறதே ஸ்ரீதர். கண்டுபிடித்திருக்க மாட்டீர்களென்று நினைத்திருந்தேன்'' என்று அவள் சிறு குரலில் கூறவும் ஸ்ரீதர் முகத்தில் சிரிப்பு நன்றாகவே தோன்றியது.

அவள் கன்னத்தில் தட்டியவன், ''ஹலோ மேடம்! உனக்கு டவுட்டென்று நீ கேட்ட கேள்விகளே உன்னை காட்டிக் கொடுத்து விட்டதே! அந்த டாபிக்கை அக்கு வேறு ஆணிவேறாக விரல் நுனியில் வைத்திருப்பவளின் நுட்பமான கேள்விகள் அவை. பிறகு புரியாமல் போகுமா எனக்கு?'' என்று சிரித்துவிட்டு, ''உன்னை சமாளிப்பதற்குள் அன்று திணறிப்போய் விட்டேன்'' என்றான் சோகமாக.

''ஊகூம்! அதெல்லாமில்லை. நான் நம்பமாட்டேன். கொஞ்சம் கூட அசராமல் ரொம்ப தெளிவாய் எக்ஸ்ப்ளைன் செய்தீர்களே!''

''பின்னே கொஞ்சம் காட்டிக் கொண்டாலும் மக்கு சார் என்று பட்டம் கட்டி விடுவீர்களே. க்ளாஸில் என் கௌரவம் என்னாவது? அதான் காட்டிக் கொள்ளாமல் சமாளித்தேன்'' என்று வெகு சோகமாக கூறவும், ''பொய்'' என்றபொழுதே அவளுக்கு சிரிப்பும் வந்துவிட்டது. அது உடனே அவனையும் தொற்றிக் கொண்டது.

''மதி! ஜெயஸ்ரீ மேம் கூட பேசிக் கொண்டிருக்கும் பொழுதெல்லாம் அவர்களை வெகு எரிச்சலாக முறைப் பாயே! உள்ளூர ரொம்ப ரசித்தேன். அப்பொழுது உன் முகம் போகும் போக்கை இப்பொழுது நினைத்தாலும்...'' என்று இழுத்து ஸ்ரீதர் வாய்விட்டுச் சிரிக்கவும் அவனை முறைத்தாள் ஷண்மதி.

''ஆமாம் சார்! நன்றாகச் சிரியுங்கள். இதையெல்லாம் கரெக்ட்டாக கண்டுபிடித்து சிரிக்கிற நீங்கள் அவர்களை ஏன் முறைக்கிறேன் என்று சற்று.... அதிகமில்லை... சற்றே சற்று யோசித்திருந்தால் கூட விஷயம் விளங்கி யிருக்குமே'' என்றாள் அலுப்புடன்.

''ஏய் மதி! என்னை தப்பு சொல்லாதேப்பா... இப்பொழுது என்னை முறைக்கிறாயே... இதேப் போல் அன்று என்னைப் பார்த்து 'அவர்களோடு என்ன சிரிப்பு உங்களுக்கு' என்பதுபோல் முறைத்திருந்தால் எனக்கும் புரிந்திருக்கும். நீ என்னை முறைக்காமல் அவர்களை முறைத்தால் நான் என்னசெய்வது? 'உனக்கும் அவர்களுக் கும் ஏதோ டெர்ம் சரியில்லையென்று நினைத்தேன்'' என அப்பாவியாய் கைகளை விரித்தான் ஸ்ரீதர்.

''ஸ்ரீதர்!'' என சிணுங்கியவள் அவன் கண்களில் சிரிப்பை கண்டு விளையாடுகிறான் எனப் புரிந்து, ''பயங்கரமான ஆள் நீங்கள்'' என்று சிரித்தாள் அவள்.



ஏதோ நினைவில் அவன் முகத்திலும் சிரிப்பு மலர்ந்தது. ''ஆனாலும் உனக்கு ரொம்ப தைரியம்தான் மதி. அதுவும் என்னிடமென்றால் உனக்கு துளிக்கூட பயமே கிடை யாதே. கவிதை எழுதி டெஸ்ட் பேப்பரோடு பின் செய்து கொடுத்தாயே! உனக்கு துணிச்சல் அதிகம்தான்'' என்றான் அவன் தன்னை மீறிய ஆச்சரியத்தோடு.

''அச்சோ! அது தெரியாமல் நடந்த விஷயம் ஸ்ரீதர்'' என்று சிரித்தவள் தொடர்ந்து, ''ஆனால் அன்று என்ன திட்டு திட்டினீர்கள். மன்னிப்பு கேட்டாலே ஆயிற்று என்று ஒற்றை காலில் நின்றீர்களே'' என குறைப்பட்டு கொள்ளவும்,

அவனும் விடாமல், ''நீ மட்டும் உடனே மன்னிப்பு கேட்டு விட்டாயா? கேட்கமாட்டேனென்று நீயும் ஒற்றை காலிலேதானே நின்றாய். பிரின்சிபாலிடம் போவேனென்று மிரட்டியும் அசராமல் தானே நின்றாய். கடைசியில் நான் தானே விட்டுக் கொடுத்தேன்'' என்று கூறினான் அவன்.

''ஆமாம் ஸ்ரீதர்!'' என ஒத்துக் கொண்டவள் முகம் சட்டென மிருதுவானது. ''ஆனால் ஸ்ரீதர், அன்றிலிருந்து தான் உங்கள் மீது மதிப்பும், மரியாதையும், நேசமும் அதிகமாகியது'' என்றவள் குரலும் மிருதுவாய் மாற, ''என் பெயர் கெடாமல் இருப்பதற்காக எனக்கே விட்டுக் கொடுத்தீர்களே... என் ஸ்ரீதர் எவ்வளவு நல்லவர், உயர்வானவர் என்று எனக்கு நானே எவ்வளவு பெரு மிதப்பட்டு கொண்டேன் தெரியுமா?'' என குரல் தழைய கூறினாள் ஷண்மதி.

எதுவும் பேசாமல் சன்னமான முறுவலோடு அவன் அவளது பேச்சை கேட்டுக் கொண்டிருந்தான்.

''ஆனால் ஸ்ரீதர், அன்றிலிருந்து என்னை சுத்தமாய் விலக்கி நிறுத்தி விட்டீர்கள்'' என புகார் தெரிவிக்கவும்,

முறுவலோடு குனிந்து அவள் கன்னத்தில் முத்தமிட்டான் அவன்.

''விட்டாயா நீ? வீட்டிற்கே அல்லவா வந்து நின்றாய். அன்று என் குடும்பத்தினரோடு அவர்களில் ஒருத்தியாய் கலகலத்து கொண்டிருந்த உன்னைப் பார்த்து திகைத்துப் போனேன் மதி. அம்மா விபரம் சொன்னதுமே நீ செய்த நாடகம் எனக்குப் புரிந்து போயிற்று. ஜெயிப்பதற்காக எந்தளவிற்கு போகிறாளென்று கோபம் வந்தாலும், உள்ளூர உன்னை என் குடும்பத்தினரோடு பார்த்தபொழுது ஒரு பக்கம் இதமாகவும் உணர்ந்தேன். அதற்காக என் மீதே கோபமும் பட்டுக் கொண்டேன்'' என மென்குரலில் ஸ்ரீதர் உரைக்கவும் அவளது முகம் பளிச்சென மலர்ந்தது.

ஆனாலும் விடாமல், ''பட் நான் வீட்டிற்கு வரும் சமயங்களில் பெரும்பாலும் நீங்கள் வீட்டில் இருப்பதில்லையே'' என விசாரித்தாள் அவள்.

''நான் என்னடா செய்வது? வீட்டிற்கு வந்ததற்காக ப்ரெண்ட்ஸ்க்கு ட்ரீட் தருகிறாய். பந்தயத்திற்காகத்தானே இதெல்லாம் என்று உள்ளூர கோபம். வீட்டில் சொல்லி உன் வரவை நிறுத்தப் பார்த்தேன். யாரும் கேட்பதாக இல்லை. அதான் நானே கிளம்பி விட்டேன்'' என்று பொறுமையாக விளக்கினான் அவன்.

''வீராப்பாக கிளம்பி விடுவேனே தவிர, 'இந்நேரம் மதி வந்திருப்பாள். எல்லோருடன் சிரித்து அரட்டையடித்துக் கொண்டிருப்பாள்' என்ற எண்ணமே உள்ளோடும். உன்னை மறக்க வேண்டுமென்ற முயற்சியில் வெற்றிகரமாக தோற்று கொண்டிருக்கிறேன் என்று எண்ணும்பொழுது ஷ்ரத்தியை அவ்வளவு ஈஸியாக விலக்கி ஒதுக்க முடிந்ததே. இவளை அப்படி விலக்க முடியாமல் அல்லாடுகிறோமேயென்று யோசிக்கும்



பொழுதுதான் என் மனதில் உனக்கான இடம் புரிந்தது. தகுதியில்லாத ஒருத்தியை இப்படி நேசிக்கிறோமேயென்று தோன்றினாலும் உன்னை மறப்பது இயலாதென்பதும் தெளிவாய் புரிந்து போயிற்று. அந்த முடிவில்தான் அம்மாவிடம் ஷண்மதியை பற்றியோ, திருமணம் பற்றியோ பேசாதீர்களென்று சொன்னேன். அதை அவர்கள் ஷ்ரத்தியின் நினைவில் பேசுகின்றேனென்று எடுத்துக் கொண்டார்கள். சரிதான் ரொம்பவும் நல்லதாயிற்றென்று நானும் விட்டுவிட்டேன்'' என்று கூறவும் ஷண்மதிக்கு சிரிப்பு வந்தது.

''முழு பூசணிக்காயை சோற்றில் மறைப்பதென்பது இதுதான் ஸ்ரீதர். இருங்கள் அத்தையை பார்த்ததும் முதலில் உங்கள் குட்டை உடைக்கிறேன்'' என்று கலகலவென சிரித்தாள் அவள்.

''ஆனாலும் இது அநியாயம் மதி. உன்னுடன் சேர்ந்துக் கொண்டு என் வீட்டினர் எல்லோரும் இருபது நாட்கள் எனக்கெதிராகவே நடித்தார்களே! நீ வருகிறாய் என்றால் போதும் அப்பா கூட வீட்டில் தங்கிவிடுவார். விருந்து தடபுடல் படும். எரிச்சலோடு நான் கிளம்பி சென்று விடுவேன். நீ கிளம்பியிருப்பாய் என்று தோன்றும் நேரத்தில்தான் திரும்புவேன். வந்ததும் உன்னைப் பற்றிய புராணம்தான். நீ நன்றாக பாடுவாயாமே. உன் பாட்டை அப்பா அப்படி புகழ்வார்'' என்றவன் அவளைப் பார்த்து, ''நான் வரும்பொழுதுகூட ஒருமுறை பாடிக் கொண்டிருந்தாய் அல்லவா? ஆனால் நான் உள்ளே நுழைந்ததுமே நிறுத்தி விட்டாய்'' என்றான் ஸ்ரீதர்.

மிகுந்த உற்சாகத்தோடு நிமிர்ந்து அமர்ந்தாள் அவள். ''ஸ்ரீதர்! அப்பாவிற்கு அந்த பாடலென்றால் மிகவும் பிடிக்கும். அம்மா அடிக்கடி அப்பாடலை பாடுவார்

களாம். கேட்டு கேட்டு அப்பாவிற்கு ரொம்பவும் பிடித்து விட்டதாம். நிலவொளியில் மொட்டைமாடியில் அல்லது தோட்டத்தில் என்னை பாடச் சொல்லி கண்மூடி கேட்டுக் கொண்டிருப்பார்'' என்றவள் அவனது தோளில் சாய்ந்தபடி குரல் கனிய, ''எனக்கு எல்லாமே என் அப்பாதான் ஸ்ரீதர். அவரைப் போல் ஓர் அப்பா கிடைக்க நான் எத்தனையோ பிறவிகளில் புண்ணியம் செய்திருக்க வேண்டும். அவருக்கு பிடித்ததாலேயே எனக்கும் அப்பாடல் பிடித்து விட்டது'' என கண்மூடி கூறியவளின் கூந்தலை காதோரம் நேசத்தோடு ஒதுக்கி விட்டான் அவன்.

மீண்டும் நிமிர்ந்து அமர்ந்தவள் அவனை ஆவலோடு பார்த்து, ''யூ நோ ஸ்ரீதர்! அன்று பாடினேனே... 'மன்ன வன் வந்தானடி' என்ற பர்ட்டிகுலர் வரிகளில் நீங்கள் உள்ளே நுழைந்தீர்களே... அந்த கணம் என் வாழ்வில் என் றுமே மறக்கவே முடியாத கணம் ஸ்ரீதர். என் மன்னவன் இதோ எனக்காக வந்தேவிட்டான் என்பது போன்ற மகிழ்ச்சி பெருக்கில் ரொம்பவும் உணர்ச்சி வசப்பட்டு மேலே பாட முடியாமல் நிறுத்தி விட்டேன். ஆனால் அந்த கணத் திலிருந்து அப்பாடல் எனக்கு இன்னும் ரொம்பவும் பிடித்துப் போய்விட்டது'' என்றாள் உளமார்ந்த குரலில்.

''ஆமாம் கண்ணம்மா! அது உண்மைதானே. என் மகாராணியை தேடித்தானே நானும் வந்தேன்'' என்றான் அவனும் உணர்ச்சியோடு.

குழலை இலேசாக்குவதற்காக, ''அந்த சந்தோஷத்தில் எவ்வளவு ஆசையாக காபி போட்டு கொடுத்தேன். குடித்துவிட்டு அந்த காபியை எவ்வளவு கிண்டலடித் தீர்கள். அன்றே முடிவு செய்து விட்டேன்'' என்றாள் அவள் வெகு சீரியஸாக.



''என்ன முடிவும்மா அது? இனி ஜென்மத்திற்கும் காபியே போடப் போவதில்லையென்ற நல்ல முடிவா?'' என்று ஸ்ரீதர் வெகு ஆர்வம் காட்டி கேட்கவும்,

''ச்சேச்சே! அப்படியெல்லாம் உங்களை தப்ப விடு வேனா? நம் திருமணத்திற்கு பிறகு உங்களுக்கு தினமும் நானே காபி அதுவும் சுகர் போடாத காபியாக கலந்து தர வேண்டுமென்று திட்டம் போட்டுக் கொண்டேன்'' என்றாள் அவள் தேனொழுகும் குரலில்.

''அய்யய்யோ! மிகப் பெரிய பயங்கரமான சதி திட்ட மாக தெரிகிறதே! நான் காபி குடிப்பதையே விட்டுவிட வேண்டியதுதான். ஆனால் அதுவும் கஷ்டம். பேசாமல் நாமே சுய தயாரிப்பில் காபி கலந்து கொள்ள வேண் டியதுதான்'' என சோகமாக கூறவும் ஷண்மதிக்கு சிரிப்பு வந்தது.

கூட சேர்ந்து சிரித்தவன், ''மதி! அன்று அண்ணியிடம் உனக்கு விஷ் கூட பண்ணுவதில்லையென்று புலம்பி னாயே... எனக்கு, அதற்கு பதிலடியாக வகுப்பில் கேள்வி யாய் கேட்டு என்னை படுத்தினாயே அது ஞாபகத்திற்கு வந்து சிரிப்பு வந்துவிட்டது'' என்று கூறி மேலும் சிரித்தான்.

''ஓ! அதுதான் சார் அன்று அப்படி சிரித்தீர்களோ?'' எனக் கிண்டலாக கேட்டவள் தொடர்ந்து, ''கேள்வி மேல் கேள்வி கேட்டால் அது ஏனென்று புரிகிறது. ஜெயஸ்ரீ மேலே முறைத்தால் அது கரெக்ட்டா புரிகிறது. வீட்டிற்குள் திட்டமிட்டு நுழைந்தால் அதுகூட உடனே புரிகிறது. இதையெல்லாம் கண்டுபிடித்த உங்களுக்கு நான் உங்களை உண்மையாய் நேசிப்பது மட்டும் புரியவில்லை யாக்கும்'' என சற்றே ஆற்றாமையுடன் கேட்டாள் ஷண்மதி.

ஆதரவாய் அவளது தலையை வருடினான் அவன். ''புரியாமல் இல்லைடா. அவ்வப்பொழுது சந்தேகம்

வரத்தான் செய்தது. ஜெயஸ்ரீ மேலே பொறாமையோடும், எரிச்சலோடும் முறைத்தாயே... வகுப்பு நடத்தும் பொழுது சில நேரம் என்னையே கண்ணிமைக்காமல் பார்ப்பாயே... அப்படிப் பார்த்த ஒரு சமயத்தில் பதிலுக்கு நானும் பார்த்துக் கொண்டு என்னையே மறந்து நின்று விட்டேனே... பிறகுதான் உன் பார்வையை சந்திப்பதையே தவிர்த்தேன். உனக்கு ஞாபகம் இருக்கிறதா மதி. ஒருமுறை உடம்பு சரியில்லாமல் லீவ் எடுத்துக் கொண்டு மீண்டும் காலேஜிற்கு வந்தேனே... அன்று நீ, 'இப்ப உடம்பு தேவலாமா சார்?' என தவிப்புடன் கேட்டாய். ஒரு கணம் எனக்கு உள்ளே ஆடிவிட்டது மதி. இதையெல்லாம் யோசித்தபொழுது சந்தேகம் எழத்தான் செய்தது. ஆனால் ஷ்ரத்தி இதைவிட அதிகமாக நடித்து ஏமாற்றவில்லையாயென பிடிவாதமாக நினைவுப் படுத்திக் கொள்வேன். அதுமட்டுமல்லாமல் டிபார்ட்மெண்ட் முழுக்க, 'நீ நினைத்ததை சாதிப்பவள், கெட்டிக்காரி, தோல்வியே கிடையாது' என்றெல்லாம் சொல்லும் பொழுது... நீ கூட சிலசமயம் அப்படி சொல்வாயே மதி, மனம் கலங்கி விடும்.

அத்தோடு ஏற்கனவே உன் ஒவ்வொரு பேச்சும், செயலுமே என்னை பலமாய் உன் பக்கம் சரித்து வரவும், ஒரு வேளை நானாகத்தான் நீ என்னை நிஜமாகவே காதலிப்பதாய் கற்பனை செய்கிறேனோ... ஆசைக் கொண்ட என் மனம் சின்ன செயலையும் பெரிதாக எண்ணி கற்பனையை வளர்க்கிறதோ.. என்றெல்லாம் தோன்றி விடும்'' என பொறுமையாய் அவளுக்கு விளக்கியவன் தொடர்ந்து, ''இதையெல்லாம் மீறிக் கூட உன்னுடன் சகஜமாக பேசியிருப்பேன். என் பயம்தான் என்னைக் கட்டிப் போட்டது'' எனவும் ஆச்சரியம் மேலிட அவனை ஏறிட்டாள் ஷண்மதி.



''பயமா!?'' என குரலிலும் உள்ளத்தின் ஆச்சரியம் வெளிப்பட வினவினாள் அவள்.

மெல்ல சிரித்தவன், ''ஆமாடா! பயமேதான். உன்னைக் கண்டுக் கொள்ளாமல் இருந்தால் பந்தயத்தில் ஜெயிப்பதற்காக நீ என்னிடம் தொடர்ந்து பேசிப்பழக முயற்சித்துக் கொண்டிருப்பாய் அல்லவா? நானும் பதிலுக்கு சகஜமாய் பேசப் போக என்னையுமறியாமல் என் பேச்சிலோ, பார்வையிலோ என்னை நான் காட்டிக் கொண்டு அதை நீ கண்டுபிடித்து விட்டால் என்ன செய்வது? ஜெயித்தபிறகு நீ என்னை திரும்பி பார்க்கமாட்டாயோ... பிறகு என்னிடம் பேசவேமாட்டாயோ... என்ற பயம்தான் மதி. அதான் கொஞ்சம் ஸ்ட்ரிக்ட்டாக நடந்து கொண்டாலும் கூட, ஜெயிப்பதற்காகவாவது நீ என்னிடம் வந்து பேசுவாயே...'' என்று அவன் கூறவும் ஸ்தம்பித்து போனாள் ஷண்மதி.

அவனை விழியகல திகைப்பும் பிரம்மிப்புமாக ஏறிட்டவளுக்கு தன்னிச்சையாக விழிகளில் மீண்டும் நீர் பெருகியது.

''ஐயம் ஸாரி ஸ்ரீதர். உங்களை உங்கள் அன்பைப் புரிந்துக் கொள்ளாமல்... கடவுளே! ஸ்ரீதர்... என் முதல் நாள் பேச்சினால் உங்களை வேதனைப்பட வைத்ததோடு மட்டுமல்லாமல், பிறகும்கூட குணாவோடு திருமணமென்று உங்களை மேலும் கஷ்டப்படுத்தி விட்டேனே!'' என அவள் வெகுவாய் பதறிப் போய் அழவும் அவனும் சட்டென பதறிப் போனான்.

''மை காட்! மதி ப்ளீஸ்! இப்படி அழக்கூடாது. என்னை பாரேன் மதி. நான் சொல்கிறேனில்லையா? போதும் மதி. ஏற்கனவே நீ நிறைய அழுதுவிட்டாய். இனஃப் ஹனி. தட்ஸ் இனஃப்'' எனத் தட்டிக் கொடுத்து தேற்றினான் அவன்.

அவள் அழுகை குறையவே வெகு நேரமாயிற்று. பிறகும் கூட விசும்பலினூடே, ''எப்படி ஸ்ரீதர் இவ்வளவு கஷ்டம் தந்த என்னை வெறுக்காமல் இருக்கிறீர்கள்?'' என வருத்தத்தோடு கேட்டாள்.

''பைத்தியம்'' என அவள் நெற்றியில் அன்போடு முத்தமிட்டான் அவன்.

''வெறுப்பதா? உன்னையா? உன்னை ஷ்ரத்தி போல் என எண்ணியபொழுதே. அவளை துச்சமாய் தூக்கிப் போட்டது போல உன்னை என் மனதிலிருந்து தூக்கியெறிய முடியாமல் தவித்தவன் நான். பிறகும் கூட உன் புத்திசாலித்தனம், தைரியம், கலகலப்பு, குறும்பு என ஒவ்வொரு பரிமாணத்திலும் என்னை இழந்து தவித்தவன் நான். உன்னை போய் வெறுப்பதா?'' என மிருதுவான குரலில் கேட்கவும் விழியகல அவனை பிரமிப்பும், நேசமுமாக நோக்கியவளுக்கு மீண்டும் மீண்டுமாக ஏனோ கண்ணீர் பெருகியது.

''ம்கூம்'' என்றபடி விழிநீரை அன்போடு துடைத்து விட்டவன், ''இன்று நிறையவே அழுதுவிட்டாய் மதி. இனி நீ அழவே கூடாது. உன் அப்பாவை போல நானும் உன்னை அழாமல் பார்த்துக் கொள்ள ஆசைப்படும்பொழுது இப்படி நீ அழலாமா?'' என சிறு கண்டிப்போடு கேட்கவும்,

''இல்லை ஸ்ரீதர். இது அடக்க முடியாத ஆனந்தத்தினால் வந்த அழுகை. இந்த அழுகைக்கும் கொடுத்து வைத்திருக்க வேண்டும் ஸ்ரீதர்'' என்று கூறியவள் எழுந்து சென்று குளிர் நீரில் முகத்தை நன்கு கழுவிக் கொண்டு வந்தாள்.

சிட்அவுட்டில் காற்றாட நின்றுக் கொண்டிருந்த ஸ்ரீதர், முகம் கழுவிக் கொண்டு வந்தவளிடம், ''இங்கே வா மதி! காற்று மிகவும் இதமாய் வீசுகிறது'' என அழைக்



கவும் அருகில் வந்தவளின் பூங்கரத்தினை பற்றிக் கொண்டான்.

புன்முறுவலோடு அவளது விழிகளை நேராக ஊடுருவியவன் ''நன்றாக யோசித்துப் பார்த்தால் நடந்த அனைத்திலும் ஒரு நல்லது இருக்கிறது மதி. முதல் நாள் உன் பேச்சை கேட்ட பிறகும் உன்னை மறக்க முடியாமல் தத்தளித்த பொழுதுதான், நீ எனக்கு எவ்வளவு முக்கியமானவள் என்பதும், என் ஜீவனில் நீங்காது நிறைந்தவள் என்பதும் புரிந்தது. குணாவோடு திருமணம் என்ற பொழுது உன்னை இழக்க முடியாமல் இருபது நாட்களாக நான் பட்ட தவிப்பு... ஒருவரை அவரின் குறை நிறைகளோடு ஏற்பதே உண்மையான அன்பு என்பதை அத்தவிப்பு எனக்கு புரிய வைத்தது மதி. அதேப்போல் இந்த நான்கு நாட்களாக இன்னொருத்தியோடு எனக்கு திருமணம் என்றெண்ணி நீ பட்ட தவிப்பு... இது எல்லாமே ஒருவர்க்கு மற்றவர் எவ்வளவு முக்கியமென்பதை நமக்கு ஐயமின்றி உணர்த்தி விட்டதே. போதும்டா சாமி அந்த கஷ்டங்கள்!

இனி நம் ப்யூச்சரில் மனஸ்தாபமோ, பிரிவோ ஏற்பட வழியேயில்லை மதி. நம்மிடையே ஈகோ க்ளாஷ் வந்தாலும் கண்டிப்பாக நம்மில் ஒருவர் குறைந்தபட்சம் நான் விட்டுக்கொடுத்து விடுவேன் மதிம்மா. அந்த தெளிவை கடந்து போன காலம் நமக்கு பரிசாக தந்திருக்கிறதே. அதை நினைத்து சந்தோஷப்படுவோம் மதி கண்ணம்மா. நம் வாழ்க்கை 'புரிதல்' என்ற வெகு பலமான அஸ்திவாரத்தில் எழப் போகிறதே!'' என நம்பிக்கையோடு கூறி மகிழ்ச்சியோடு நகைத்தான்.

அவனது மனமார்ந்த சிரிப்பை இமைக்காமல் பார்த்தவள், ''உண்மைதான் ஸ்ரீதர். இதுவரை பட்ட வேத

ணைக்கு ஈடுகட்டுவது போல் உங்கள் மேல் அன்பையும், நட்பையும் காட்டுவேன். உங்கள் மனம் வருந்த இடம் தர மாட்டேன். ஐ ப்ராமிஸ் யூ'' என தீவிரமான குரலில் கூறி அவன் மீது சாய்ந்து கொண்டாள்.

சூரியன் செக்கச்செவேலென்று மேல் திசையில் மறைவதைக் கண்ட ஸ்ரீதர் சட்டென்று மணிக்கட்டை உயர்த்தி பார்த்தான். ''மைகாட்! மதி டைமை கவனித்தாயா? இவ்வளவு நேரமாகவா பேசியிருக்கிறோம்?'' என நம்பமுடியாமல் மீண்டும் மணிக்கட்டை கவனித்தான்.

ஆச்சரியத்துடன் தானும் நேரத்தை கவனித்தவள், ''அட ஆமாம் ஸ்ரீதர். நேரம் போனதே தெரியவில்லை'' என வியப்புடன் மொழிந்தவள் சட்டென்று நினைவு வந்தவளாக ''ஸ்ரீதர் என்னோடு வாருங்களேன்'' என்று அவன் கைப்பிடித்து இழுத்து சென்று தன் தாயின் புகைப்படத்தின் முன் நிறுத்தினாள்.

அவன் இடதுகையை தன்னிரு கைகளால் கட்டிக் கொண்டு, அவனது தோளில் புன்னகையோடு தலை சாய்ந்தபடி தாயாரின் படத்தில் பார்வையை பதித்து, ''இவர்கள்தான் என் அம்மா ஸ்ரீதர். உள்ளுணர்வு சொல்வது சரியாக இருக்கும் என்பார்கள். எப்பவும் என் உள்ளுணர்வாக இருந்து என்னை வழி நடத்தும்படி என் அம்மாவிடம் வேண்டிக் கொள்வேன். இதுவரை என் உள்ளுணர்வு பொய்த்ததேயில்லை. இன்று தான் நீங்கள் பத்திரிகை வைத்துவிட்டு போனதும் அம்மாவிடம் கேட்டேன். முதன் முறையாக தவறான வழி காட்டிவிட்டீர்களே என்று! கேட்டுவிட்டு திரும்பினால் நீங்கள் நிற்கிறீர்கள்'' என்றவள் தொடர்ந்து, ''உங்களை முதலில் பார்த்ததுமே நீங்கள் என் அம்மாவை நினைவூட்டினீர்கள் தெரியுமா? நானே பலமுறை யோசித்து ஆச்சரியப்பட்



டிருக்கிறேன். அம்மாவை நான் அறிந்ததே கிடையாது. அப்பா மூலம் அறிந்தது மட்டும்தான் அப்படியிருக்க உங்களைப் பார்த்ததும் அம்மா நினைவு வரக்காரணம் புரியாமல் வியந்திருக்கிறேன். பட் அதனாலேயே உங்களை எனக்கு மிகவும் பிடித்துவிட்டது'' என்றாள் உள்ளார்ந்த குரலில்.

முகம் கனிந்து இளக மென்முறுவலோடு தன் வலக்கரத்தினால் அவள் தலையை வருடினான் ஸ்ரீதர். முகம் மலர நின்றிருந்தவளிடம் ''மதி கையை நீட்டேன்'' என்றபடி தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து அவளது பவழ மோதிரத்தை எடுத்து அணிவித்து விட்டான்.

''இது எப்பவும் இனி இந்த விரலிலேயே இருக்கட்டும்'' என்றான் மென்குரலில்.

மோதிரத்தை ஆசையோடு வருடிய ஷண்மதி, ''இதை இவ்வளவு நாள் எவ்வளவு மிஸ் செய்தேன் தெரியுமா?'' என கனிந்த குரலில் கூறியவள் சற்றே முகம் வாட, ''ஆனால் நம் பிரிவிற்கு ஆரம்பம் இந்த மோதிரத்தாலேயே அமைந்து விட்டதோ ஸ்ரீதர்'' எனக் கேட்டபடி மீண்டும் அம்மோதிரத்தை வருடினாள்.

''இல்லவே இல்லைடா'' என தீர்மானமாக மறுத்தான் ஸ்ரீதர். ''நன்றாக யோசித்து பார் மதி. நீ இந்த மோதிரத்தின் மீது இல்லாமல் வேறு எதன் மீதும் பந்தயம் வைத்திருந்தாலும் நீ பந்தயம் கட்டிய ஒரே காரணத்திற்காகவே நான் ஒதுங்கித்தான் போயிருப்பேன். அதனால் நம் பிரிவிற்கு பந்தயம்தான் காரணமே தவிர இந்த மோதிரம் அல்ல. ஆனால் அன்று உன் பேச்சின் வேகத்தில் நீ என்னை உண்மையாகவே நேசிக்கிறாய் என்பதை நான் புரிந்து கொண்டாலும் அந்த நேசத்தின் ஆழத்தை, அதன் முழு பரிமாணத்தையும் உன் விரலிலிருந்து

பிரிந்த இந்த மோதிரம்தான் எனக்கு உணர்த்தியது'' என்றபடி குனிந்து அந்த மோதிர விரலில் முத்தமிட்டான் ஸ்ரீதர்.

சிரிப்புடன் நிமிர்ந்தவன், ''இன்னொரு விஷயம் சொல்லட்டுமா மதி? மேஜையில் நீ போட்ட மோதிரம் உருண்டு கட்டிலுக்கு கீழே விழுந்து விட்டது. ப்ளைட்டிற்கு நேரமாகிவிட்ட அந்த அவசரத்திலும் குனிந்து கீழே தேடி அதை பத்திரமாக எடுத்துக் கொண்டுதான் கிளம்பினேன். கட்டிலுக்கு கீழே கையை விட்டு துழாவி எடுத்ததில் ஷர்ட்டின் கையில் அழுக்கு பட்டு பளிச் சென்று தெரிந்தது. அம்மா கூட பார்த்துவிட்டு ஷர்ட்டை மாற்றச் சொன்னார்கள். ஆனால் எனக்காக நீ கழற்றிய மோதிரத்தை உனக்காக நான் தேடி எடுத்தேனே, அதன் அடையாளமான அந்த அழுக்கு பட்ட ஷர்ட்டை மாற்ற மனமில்லாமல் அப்படியே கிளம்பிச் சென்று விட்டேன்'' என்றான் அவன் குரல் கனிந்து உருக.

அவன் பேச்சைக் கேட்ட ஷண்மதியின் உள்ளம் நெகிழ்ந்தது. ''ஸ்ரீதர்! இப்ப எனக்கு எவ்வளவு சந்தோஷமாக இருக்கிறது தெரியுமா? எப்பவுமே நான் சொல்வேன், எங்கம்மா எனக்கு தந்த விலை மதிப்பற்ற செல்வம் என் அப்பாவென்று. இன்று புரிந்து கொண்டேன். என் அப்பா, அம்மா ஆசீர்வாதத்தினால் எனக்கு கிடைத்த இன்னொரு விலை மதிப்பற்ற செல்வம் என் ஸ்ரீதரென்று!'' என பரவசமான குரலில் கூறியவள் அவனை நேசம் வழிய பார்த்து, ''ஸ்ரீதர் ஒரு கவிதை சொல்லட்டுமா?'' என ஆசையாக கேட்க,

''சொல்லுடா கண்ணம்மா'' என்றான் அவன் ஆவலாய்.

**அன்னை அறிமுகப்படுத்தினார் தந்தையை**
**தந்தை அறிமுகப்படுத்தினார் குருவை**



குரு அறிமுகப்படுத்தினார் அறிவை
ஆனால்...
நீ அறிமுகப்படுத்தினாய் வெட்கத்தை
நீ அறிமுகப்படுத்தினாய் பெண்மையை
நீ அறிமுகப்படுத்தினாய் காதலை
என்னையே எனக்கு அறிமுகப்படுத்தினாய்
நன்றி கூறுகிறேன்
உனக்கு அல்ல.....
உன்னை அறிமுகப்படுத்திய இறைவனுக்கு!

என்றபடி எம்பி அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள். ''மதி'' என உருகினான் அவன்.

## 37



''அப்பா'' என குதூகலத்தோடு அழைத்த மகளின் குரலில் புன்னகையோடு திரும்பினார் ஷண்முகபிரகாஷ்.

மாடியிலிருந்து துள்ளிக் குதித்து படியிறங்கி வந்த மகளையும் கூடவே வந்த ஸ்ரீதரையும் மகிழ்ச்சியோடு பார்த்தார் அவர்.

ஓடிவந்து அவர் தோளில் சாய்ந்த ஷண்மதி, ''டாட்! நீங்கள் கூட ஸ்ரீதரோடு சேர்ந்து கொண்டு எனக்குத் தெரியாமல் ஏதோ ஏற்பாடெல்லாம் செய்கிறீர்களே'' என சலுகையாய் குறை கூறவும் ஷண்முகபிரகாஷ் சிரித்தார்.

மகளின் தோளில் கைப்போட்டபடி, ''நான் என்னடாம்மா செய்வது? மாப்பிள்ளை தான் உன்னிடம் சொல்லக் கூடாதென்று விட்டார் 'மாமா! என் வீட்டினர் எல்லோரையும் கைக்குள் போட்டுக் கொண்டு ட்ராமா

நடத்தியிருக்கிறாள். அதே போலவே நீங்களும் எனக்கு கோ-ஆப்ரெட் செய்ய வேண்டு'மென்று கேட்டார். அதான் நானும் சரியென்று விட்டேன்'' என்று சிரித்தவர் ஸ்ரீதரிடம் திரும்பி,

''மாப்பிள்ளை! நிச்சயம் வரை ஷண்மதிக்கு உண்மை தெரிய வேண்டாமென்று கூறிவிட்டு நீங்களே இன்று விஷயத்தை போட்டு உடைத்து விட்டீர்களே'' எனக் கிண்டலடிக்கவும் சிரித்தான் ஸ்ரீதர்.

தந்தையின் தோளில் சாய்ந்திருந்த ஷண்மதியின் கேசத்தை பரிவுடன் ஒதுக்கி அவள் கன்னத்தை தட்டியவன், ''நான் என்ன மாமா செய்யட்டும்? நேற்று சாம்பவி இவள் மிகவும் வருத்தப்படுவதாகவும் ஆளே பாதியாகி விட்டதாகவும் கூறவும் மனம் தாங்கவில்லை. அதான் ஓடி வந்து விட்டேன்'' என மென் குரலில் கூறி இலேசாய் சிரிக்கவும் ஷண்முகபிரகாஷே ஒரு கணம் தன் மகள் மீதுள்ள அவனது அன்பின் ஆழத்தை எண்ணி அசந்து போனாரென்றால் ஷண்மதியைப் பற்றிச் சொல்லவே வேண்டாம்.

''நீங்களே பாருங்களேன் மாமா. நான்கே நாட்களில் எப்படி இளைத்து போயிருக்கிறாள். இன்று இவளைப் பார்த்ததும் எனக்கே மிகவும் கஷ்டமாகி விட்டது. ப்யூச்சரில் இந்த மாதிரி விளையாட்டுத்தனமாக ட்ராமா செய்வதை நிறுத்துவதற்காக பதிலுக்கு ஹார்ஷா நடந்துக் கொண்டு அவளை ரொம்பவும் வருத்தி விட்டோமோ என்று எனக்கே கவலையாக போயிற்று'' என்றான் அவன் வருத்தத்துடன்.

அவன் வருந்துவது கண்டு மனம் பொறுக்காமல், ''அப்படியெல்லாம் இல்லை ஸ்ரீதர்'' என்றாள் ஷண்மதி அவசரமாக.

அதற்குள் ஷண்முகபிரகாஷ் மகளிடம், ''முத்துவை பால் பாயசம் செய்யச் சொன்னேன் கண்ணம்மா.



ஓடிப்போய் எல்லோர்க்கும் எடுத்துக் கொண்டு வா'' எனவும் ''இதோ'' என சிட்டாய் உள்ளே பறந்தாள் ஷண்மதி.

''சின்னம்மா! ஐயா இப்பதான் விஷயம் சொன்னார். நாளை மறுநாள் உங்களுக்கு நிச்சயதார்த்தமாம்.'' என மட்டற்ற மகிழ்ச்சியோடு கூறி முத்து சிரிக்கவும் தானும் சிரித்தபடி பாயசத்தோடு வந்த ஷண்மதி தந்தைக்கும், ஸ்ரீதருக்கும் கொடுத்துவிட்டு தனக்கும் எடுத்துக் கொண்டு தந்தை அருகில் அமர்ந்தாள்.

பாயசத்தை அருந்தி முடித்தவுடன் ஸ்ரீதர், ''மாமா! நான் மதியை வெளியே கூப்பிட்டு போகலாமா?'' என அனுமதி கேட்கவும்,

''ஓ! ஷ்யூர்! கேட்கவும் வேண்டுமா?'' என தாராளமாக அனுமதி வழங்கினார் அவர்.

முறுவலுடன் அவளிடம் திரும்பியவன், ''என்ன மதி கிளம்பலாம் தானே!'' என வினவவும்,

குறும்புடன், ''ஓ! ஷ்யூர்! கேட்கவும் வேண்டுமா?'' என்று தன் அப்பாவை போலவே கூறி சிரித்தபடி, ''பைவ் மினிட்ஸ், டிரெஸ் சேஞ்ச் செய்து கொண்டு வந்து விடுகிறேன்'' என்றபடி எழுந்தவள் சற்று நின்று அவன் எதிர்பாராத நேரம் அவன் தலைமுடியை கலைத்து விட்டு குறும்புடன் சிரித்தாள்.

''ஏய்... என்ன இது?'' என்றபடி எழுந்தவன் தன் பேண்ட் பாக்கெட்டிலிருந்து சிறு சீப்பை எடுத்து கனகாரியமாக தலையை சீவவும், அதைக் கண்ட மகளுக்கும், தந்தைக்கும் மேலும் சிரிப்பு பெருகியது.

''மாப்பிள்ளை! நீங்களும் மாட்டிக் கொண்டீர்களா? அடிக்கடி என் தலையை இப்படிதான் கலைத்து விடுவாள்'' என்றபடி மகளின் முதுகில் இலேசாக தட்டினார் ஷண்முகபிரகாஷ்.

புன்சிரிப்போடு அவர்புறம் திரும்பியவன், ''அங்கே, நம் வீட்டிலும் அப்படிதான் மாமா. வினேஷ் தலையை இப்படிதான் வேண்டுமென்று கலைத்து விட்டுவிடுவாள். அவன் உடனே அழ ஆரம்பித்து விடுவான்'' என்று சிரித்தான்.

''அப்பாவிடம் போட்டா கொடுக்கிறீர்கள்'' என்றபடி மீண்டும் அவன் தலைமுடியை கலைத்து விட முயல, இம்முறை எச்சரிக்கையாய் சட்டென தள்ளி நின்று சிரித்தான் அவன்.

மணிக்கட்டை திருப்பி பார்த்தவன், ''மதி! போய் டிரெஸ் சேஞ்ச் பண்ணிட்டு வாயேன்'' எனவும்,

''இதோ!'' என ஓடியவள் பத்தே நிமிடத்தில், ''நான் ரெடி!'' என்றபடி வந்து நின்றாள்.

தூய வெண்ணிறத்தில் அங்கங்கே வெகு அழகாய் குந்தன் ஸ்டோன்ஸ் வேலைப்பாடமைந்த முட்டிமுடிவு வரை வழிந்த அழகு உடையில் வெள்ளி நிலவாய் வந்து நின்றவளை ரசனையோடு பார்த்தவன், ''வாவ்! மதி... இந்த உடையில் நீ அசல் மதியேதான் வெண்மதியேதான்'' என்றான் பாராட்டுடன் கூடிய குரலில்.

''தேங்க்யூ சார்'' என சிரித்தாள் அவள்.

''சரி வா மதி கிளம்பலாம்'' என கைப்பிடித்து இழுத்தவன், ''வருகிறோம் மாமா'' என்றபடி இரண்டெட்டு எடுத்து வைத்தவன் அவள் எதிர்பாராத சமயம் சட்டென போனிடெய்லில் போட்டிருந்த வொயிட்ஸ்டோன் க்ளிப்பை கழற்றி விட்டுவிட்டான்.

ஷாம்பூவில் தேய்த்து கண்டிஷனரில் பளபளத்த குட்டை கூந்தல் குப்பென அடர்ந்து விரிந்து தோள்களில் வழிய, ''மைகாட்!'' என்ற ஷண்மதிக்கு அவன் வம்பைப் பார்த்து சிரிப்பும் வந்துவிட்டது.

''க்ளிப்பை தாருங்கள் ஸ்ரீதர்!''



''ம்கூம்'' என அதை தன் ஷர்ட் பாக்கெட்டில் போட்டுக் கொண்டு சிரித்தான்.

''சரி! கையை விடுங்கள். நான் வேறு க்ளிப்பாவது போட்டுக் கொண்டு வருகிறேன்.''

''ம்கூம்.''

''ஸ்ரீதர்!''

''வேண்டாம் மதி. இந்த விரிந்த கூந்தல்தான் உனக்கு ரொம்ப அழகு. வா போகலாம்'' எனப் பிடித்த கையை விடாமல் கிளம்பி விட்டான்.

''பை மாமா!''

''பை டாட்!''

வெளியே போர்டிகோவில் செல்லில் பேசிக் கொண்டிருந்த ரவி இவர்களை கண்டதும் செல்லை ஆஃப் செய்துவிட்டு உற்சாகமாக எழுந்து நின்றான்.

அவனைக் கண்ட ஷண்மதி, ''ரவி! நானும் ஸ்ரீதரும் வெளியே போகிறோமே!'' என உற்சாகமாக அறிவித்தாள்.

''சந்தோஷமாய் போய் வாருங்கள் சின்னம்மா'' என்ற ரவி தொடர்ந்து, ''முதன் முறையாக சின்னய்யா கூட வெளியே போகிறீர்கள். மறக்காமல் எங்களுக்கு ட்ரீட் தந்து விடுங்கள் சின்னம்மா'' என்றான் விளையாட்டாய்.

''அட கடவுளே! டிரைவர்க்கு கூட நம் விஷயம் தெரியுமா?'' என ஸ்ரீதர் கேட்க பதிலுக்கு சிரித்தாள் ஷண்மதி.

''சின்னய்யா, காரை நீங்களே ஓட்டுங்கள். சின்னம்மா இருக்கிற மூடில் காரை அவர் கையில் தந்து விடாதீர்கள்'' என்ற ரவியின் குரல் பின்னாலிருந்து வரவும், ''உதைபடுவாய் ரவி'' என மிரட்டிவிட்டு ஸ்ரீதரிடம் திரும்பி, ''இம்... டிரைவர்க்கு தெரியும். சர்வெண்ட்ஸ்க்கு தெரியும். எல்லோர்க்கும் தெரியும். கடைசியாக தெரிந்துக் கொண்ட ஆள்தான் நீங்கள்'' என கிண்டலடித்து சிரித்தாள்.

''சர்வெண்ட்ஸ்க்கு கூடவா? அவர்களுக்கு எப்படி தெரியும்?''

''அதுவா...? நாம் பேசிக் கொண்டிருந்தோமே, அந்த ரூமிற்கு உள்ளே பெட்ரூமில் மாட்டி வைத்திருக்கும் உங்கள் போட்டோவை பார்த்து தெரிந்து கொண்டார்கள்'' என குறும்பு சிரிப்புடன் மொழிந்தவள் அவனது பிளம் டபிள்யூ அருகே வந்ததும் அதை ஆவலுடன் தடவி, ''ஸ்ரீதர்! நான் ஓட்டட்டுமா?'' என ஆர்வமாக கேட்கவும், ''வொய் நாட்?'' என்றபடி கீயை அவளிடம் தந்தான் ஸ்ரீதர்.

# 38



''ஏய்! ஸ்டாப்! ஸ்டாப்! காரை நிறுத்து'' என்றான் ஸ்ரீதர்

''போச்சுடா'' என முணங்கியபடி காரை ஓரமாக நிறுத்தினாள் ஷண்மதி.

''மைகாட்!'' என்றபடி காரிலிருந்து இறங்கியவன் அவள்புறம் வந்து கார் கதவை திறந்தபடி, ''நகர்ந்து உட்கார்! ம்... நகர்ந்து உட்கார் மதி'' எனவும் அவள் நகரவும் ட்ரைவர் சீட்டில் அமர்ந்தவன் காரை ஸ்டார்ட் செய்யாமல்,

''என்ன மதி? இவ்வளவு ஸ்பீடாக ஓட்டுவாயா என்ன? ரவி ஏன் அப்படி சொன்னானென்று இப்பொழுது தானே நன்கு புரிகிறது. நல்லவேளை இன்று இந்த பாதையில் ட்ராபிக் இல்லை'' என்றான்.

''ட்ராபிக் இல்லாததால்தானே ஓட்டினேன். அதுவும் என் வழக்கமான ஸ்பீடை இன்னும் நான் ரைஸ் பண்ணவேயில்லை. அதற்குள்ளேயே ஸ்டீயரிங்கை பிடுங்கிக் கொண்டீர்களே'' என்று குறைப்பட்டாள் அவள்.

''என்னது? வழக்கமான ஸ்பீடை விட இது குறைவா? இதுவே ஓவர் ஸ்பீட் மதி. மைகாட்! மதி ப்ராமிஸ்



பண்ணு! இனி இந்த ஸ்பீடிலோ இதற்கு மேலேயோ ட்ரைவ் பண்ணமாட்டேனென்று ப்ராமிஸ் பண்ணு!''

''என்ன ஸ்ரீதர்? இப்படி பயப்படுகிறீர்களே!'' என சிணுங்கினாள் ஷண்மதி.

''மதி ப்ளிஸ்! இவ்வளவு வேகத்தில் ஓட்டுகிறாயே. நீ காரை எடுத்துக் கொண்டு போனால் என் நிம்மதியும் அல்லவா காற்றோடு போய்விடும் போலிருக்கிறது'' எனப் படபடத்தவன், ''மதி ப்ளீஸ்! ப்ராமிஸ் பண்ணும்மா'' என்றான் கெஞ்சுதலாக.

''ம்ம்... நாளைக்கு செய்கிறேன் சரியா?'' என அந்நேரத்திற்கு ஷண்மதி சமாளிக்கவும் மேற்கொண்டு எதுவும் சொல்லமாட்டாமல், ''ம்ம்ம்....'' என்றபடி சமாதானமடையாமல் சாலையை பார்த்தபடி தன் தலையை கோதினான் ஸ்ரீதர்.

''என்ன ஸ்ரீதர் இதற்கு போய் இப்படி பதறுகிறீர்கள்?'' என சிரித்தாள் ஷண்மதி.

''என் பயம் உனக்குப் புரியவில்லையே மதி!'' என்றபடி கவலையோடு அவளை பார்த்தான் ஸ்ரீதர்.

அவன் கண்களில் காணப்பட்ட கவலையை கண்ட ஷண்மதிக்கு உள்ளம் உருகியது.

''அச்சோ என்ன ஸ்ரீதர் நீங்கள்? இதற்கு போய் கவலைப்படுகிறீர்களே... சரிப்பா நான் ப்ராமிஸ் செய்கிறேன். இனி இவ்வளவு ஸ்பீடாகவோ, இதைவிட அதிக ஸ்பீடாகவோ ஓட்டமாட்டேன். ப்ராமிஸ். சரிதானே ஸ்ரீதர்'' எனவும் அவன் முகம் பளிச்சென்று மலர்ந்தது.

''தேங்க் யூ மதி'' என்றான் அவன் நிம்மதியோடு.

திடீரென்று நினைவு வந்தவனாக, ''மதி! இவ்வளவு ஸ்பீடாக ஓட்டும் நீ முதன் முதலில் எனக்கு லிப்ட் தந்தபொழுது ரொம்பவும் ஸ்லோவாக ஓட்டினாயே அது ஏன்? நீ ஓட்டுவதைப் பார்த்து, பேசாமல் நடராஜா சர்வீஸில் கிளம்பியிருந்தால்கூட இந்நேரம் கல்லூரியை

சென்றடைந்திருப்போம் என்று கூட நினைத்தேன்!'' என வியப்புடன் கேட்டான்.

''அது... அது வந்து'' என அவன் மென்று விழுங்கவும் அவனிடம் சுவாரசியம் பிறந்து விட்டது.

''ஏய் சொல்லு... என்ன மேட்டர்?'' எனக் குறுகுறுப் புடன் விசாரித்தான்.

''ஸ்ரீதர்! சொன்னால் சிரிக்கக் கூடாது சரியா?'' என நிபந்தனையிட்டவள், ''வேகமாக ஓட்டினால் சீக்கிரமே நீங்கள் இறங்கி போய் விடுவீர்களே. மெதுவாக ஓட்டி னால் இன்னும் சற்று நேரமாவது என்னுடன் இருப்பீர் களே... அதான் மெதுவாக ஓட்டினேன்'' என சின்ன சிரிப்போடு விளக்கினாள் ஷண்மதி.

அவள் எதிர்பார்த்தது போல் அவன் சிரிக்கவில்லை. மாறாக திகைப்புடன் அவள் புறம் திரும்பி ''மதி!'' என அழைத்தவன் சட்டென அவளை இறுக அணைத்துக் கொண்டான்.

மெதுவாக ஓட்டினால் கூட சற்று நேரம் என்னுடன் இருப்பீர்களே என்ற அவளது வார்த்தைகள் அவன் இதயத்தின் ஆழத்தை பலமாய் தாக்கி விட்டன.

''மதி! எந்தளவிற்கு என் மேல் அன்பிருந்தால் நீ... மைகாட்... மதி! உனது இந்த அன்பினை புரிந்து கொள்ளாமல் அலட்சியப்படுத்திய என்னை...''

மேற்கொண்டு வரப்போவதை அறிந்தவள் சட் டென்று குறுக்கிட்டு, ''ம்கூம். லீவ் இட் ஸ்ரீதர். உங்கள் இடத்தில் யார் இருந்தாலும் அப்படிதான் ஒதுங்கியிருப் பார்கள்'' என்றாள் அவசரமாக.

சற்று நேரம் அவன் எதுவும் பேசவில்லை. பிறகு ஒரு நீண்ட மூச்சை இழுத்து விட்டவன், ''மதி! பாஸ்ட் இஸ் பாஸ்ட் அதைப் பற்றி பேசி மேலும் வருத்தத்தை இழுத்துக் கொள்ளாமல் இந்த நாளை மகிழ்ச்சியாக என்ஜாய் செய்வோமா?'' என கேட்டான்.



அவனை ஒரு கணம் உற்று நோக்கிய அவளும், ''இம்... சரிதான்'' எனப் புன்னகையோடு சீட்டில் சாயவும் அவனும் புன்சிரிப்போடு காரை ஸ்டார்ட் செய்தான்.

அந்த பிரம்மாண்டமான நகைக்கடையின் பார்க்கிங் கில் காரை நிறுத்தி, ''இறங்கி வா மதி'' என்றான் ஸ்ரீதர்.

ஷண்மதி வழக்கமாக வரும் கடைதான்.

''இங்கு ஏன் ஸ்ரீதர்? பிறகு பார்த்துக் கொள்ளக் கூடாதா?'' என அவள் தயங்கவும் ''மூச்'' என்றான் அவன்.

''மறுத்து எதுவும் பேசக் கூடாது. இந்த நாளை செலிபி ரேட் செய்ய வேண்டுமென்று சற்று முன்தானே சொன் னேன்'' என கேலியாக நினைவுறுத்தியவன், ''உனக்கு பொருத்தமாக ஓர் அழகான டிசைன் செலக்ட் செய்து நாளன்னிக்கு என்கேஜ்மெண்ட்டிற்கு என் பரிசாக தரலாமென்று நினைத்திருந்தேன். ஆனால் கொஞ்ச நேரத்திற்கு முன் காரை ஸ்லோவாக ஓட்டியதற்கு ஒரு காரணம் சொன்னாய் பார்... உடனே ஏதாவது பரிசு தர வேண்டுமென்று ஓர் ஆசை. அதுமட்டுமல்ல பர்ஸ்ட் டைம் வெளியே சேர்ந்து வந்திருக்கிறோம். அதான் இங்கே அழைத்து வந்தேன். மதி! நீ மறுத்து ஏதும் பேச முடியாதே. பிகாஸ் இது என் பர்ஸ்ட் கிப்ட்டாயிற்றே'' என அவன் சிரிக்கவும் தானும் முறுவலித்தாள் அவள்.

''இதை பாரேன் மதி. இந்த டிசைன் நன்றாக இருக் கிறதா?'' என்று அவன் அபிப்ராயம் கேட்கவும், எதுவும் சொல்லாமல் சிரித்தாள் அவள்.

''ஸ்ரீதர்! உங்களது பர்ஸ்ட் கிப்ட். நீங்களே செலக்ட் செய்யுங்கள்'' என்றபடி பொறுப்பை அவன் தலையில் கட்டிவிட்டு கை கட்டி வேடிக்கை பார்த்தாள் ஷண்மதி.

அப்படியும் மீண்டும் இருதரம் அவளிடம் அபிப் ராயம் கேட்டவன் அங்கிருந்து உதவி வராதென்று தெரிந்து கொண்டவனாக தானே செலக்ட் செய்தான்.

புன்னகையோடு அவன் செலக்ட் செய்வதைப் பார்த்துக் கொண்டிருந்தாள் ஷண்மதி. ஆனால் அவன் எடுத்துக்

காட்டிய வொயிட் கோல்ட்டில் செய்யப்பட்ட வைர நெக்லஸை பார்த்தவளின் விழிகள் ரசனையில் மலர்ந்தன.

''ஓகேவா மேடம்?''

''வாவ்! அமேஸிங் ஸ்ரீதர்'' என்றாள் அவள் வியப்போடு.

''அப்படியென்றால் போட்டுப் பாரேன்'' என்றபடி தானே அவள் கழுத்தில் அணிவித்தவன் அவளை ரசித்து பார்த்தபடி ''இப்பொழுதுதான் இந்த நெக்லஸே ரொம்ப வும் அழகாக இருக்கிறது'' என்றான்.

அந்த செட்டோடு கூடிய சற்று நீண்டு தொங்கிய காதணிகளையும் அவன் விருப்பப்பட்டானென்று அப்பொழுதே அணிந்து காட்டினாள் ஷண்மதி.

அடர்ந்து விரிந்த கருங்கூந்தலின் அழகிய பின்னணி யில் காதுகளில் ஜொலித்த வைரங்களுக்கும், வெண் சங்கு கழுத்தினை ஒட்டிய ஓடிய வைரங்களுக்கும் இணையாக அவளது அழகு முகமும் வெள்ளி நிலவாக ஜொலித்தது.

''மதி... கண்ணை சிமிட்டும் ஸ்டார்ஸ்க்கு மத்தியில் முழுமதியாய் உன் முகம் பிரகாசிக்கிறது'' என்றான், ஸ்ரீதர் ரசனையில் கண் விரிய.

கூடவே பொருத்தமான வைர வளையல்களையும் அவள் கரம் பற்றி புன்னகையோடு அவன் அணிவித்து விடவும் சற்றே திகைத்தாள் ஷண்மதி.

''ஸ்ரீதர் எதற்கு இவ்வளவு எக்ஸ்பென்சிவ்வா...'' எனும் பொழுதே, ''ம்கூம்'' என சின்ன கண்டிப்பும் சன்ன சிரிப்பு மாக அவன் தலையசைக்கவும் அவளது பேச்சு நின்றது.

தன் பர்ஸிலிருந்து கார்டை எடுத்து கொடுத்தவனை இமைக்காமல் பார்த்தபடி நின்றிருந்தாள் அவள்.

அங்கிருந்து கிளம்பியதும் வாட்சை பார்த்து விட்டு சற்றே யோசித்த ஸ்ரீதர், ''மதி... உனக்கு அப்ஜெக்ஷன் இல்லையென்றால் நம் வீட்டிற்கு போகலாமா? உன்னைப் பார்த்தால் அம்மா, அப்பா, அண்ணி, கிரி எல்லோருமே



ரொம்பவும் சந்தோஷப்படுவார்கள்'' என்று கேட்கவும் உற்சாகத்தோடு சம்மதித்தாள் அவள்.

ஸ்ரீதரின் வீட்டில் அவர்களுக்கு ஒரே உற்சாக வரவேற்பு ''ஹாய் ஷண்மி! வா! வா! வா! நினைத்தேன். மாலை நான்கு மணிக்கெல்லாம் இவன் நைஸாய் எஸ் கேப்பான பொழுதோ உன்னைப் பார்க்கத்தான் வந்திருப் பானென்று நினைத்தேன்'' என்று மலர்ந்த முகத்தோடு மகிழ்ச்சியோடு வரவேற்ற கிரிதரின் குதூகல குரலை கேட்டு வீட்டின் மற்ற அங்கத்தினரும் வந்து குழுமினர். பிறகு ஒரே குதூகல ஆர்ப்பரிப்புதான்.

''ஷண்மி இதென்ன இன்று இப்படி ஜொலிக்கிறாய்? இந்த வொயிட் காஸ்ட்யூமும், அதற்கேற்ற டைமண்ட் செட்டுமாக வானத்திலிருந்து இறங்கி வந்த ஏஞ்சல் போல் இருக்கிறாய்'' என குதூகலத்தோடு உதயா அவள் கன்னத்தில் முத்தமிட்டாள்.

''இந்த டைமண்ட் செட் ஸ்ரீதரோட கிப்ட் அக்கா.''

''எங்கேஜ்மெண்ட்க்கு ப்ரசெண்ட் செய்யப் போவ தாக கூறினாய். அதுவரை கூட பொறுக்க முடியாமல் இன்றே கொடுத்து விட்டாயா?'' என கிரி கிண்டல் செய்தான்.

''வேண்டாம் அண்ணா அப்புறம் உன் கதையெல் லாம் நானும் எடுத்து விட வேண்டியிருக்கும்'' என விளையாட்டாய் வாரினான் ஸ்ரீதர்.

அதற்குள் விநேஷ் ஓடிவந்து ஷண்மதியின் காலை கட்டிக் கொள்ளவே ஆசையோடு அவனை தூக்கி மடியில் வைத்துக் கொண்டாள் ஷண்மதி.

பிறகு நேரம் மிக கலாட்டாவாக கழிந்தது.

பேச்சினிடையே ஷண்மதி சொன்னாள். ''இன்றைய தினம் இவ்வளவு அழகாய், ஆனந்தமாய் வாழ்நாள் முழுவதும் மறக்க முடியாத தினமாக முடியும் என்று கனவில் கூட எண்ணவில்லை. காலை எழும்பொழுது கூட ரொம்பவும் சோர்வாக இருந்தது. அப்பப்பா அதிலும் இந்த நான்கு நாட்கள் பட்டபாடு இருக்கிறதே... மன

செல்லாம் வலியாய், அடுத்தென்ன என்று புரியாத திகைப்புமாய்...'' என்றவள் தன்னருகில் அமர்ந்திருந்த ஸ்ரீதரை நோக்கி, ''ஸாரி ஸ்ரீதர்! இருபது நாட்கள் நீங்கள் என்ன கஷ்டப்பட்டிருப்பீர்கள் என இப்பொழுது எனக்குப் புரிகிறது'' என்றாள் வருத்தத்துடன்.

அன்போடு அவளைப் பார்த்து, ''விட்டுவிடு'' என்பதுபோல தலையசைத்தான் ஸ்ரீதர். ''லீவ் இட் ஹனி. வருத்தம் தரும் எதையும் நினைக்கவே வேண்டாமே!'' என்றான் மிருதுவான குரலில்.

தேவகியும் தொடர்ந்து, ''நிச்சயம் வரை உன்னிடம் உண்மையை சொல்லக் கூடாதென தடா போட்டதே இவன்தான் ஷண்மிம்மா. ஆனால் நேற்று கடையில் சாம்பவி இவனிடம் பொரிந்து கொட்டிவிட்டுச் சென்றதும் இவன் முகத்தைப் பார்க்க வேண்டுமே! ஐயா அப்படியே உருகிவிட்டார்'' என்று கிண்டலடித்துச் சிரித்தார்.

''அதுமட்டுமல்ல ஷண்மி, 'பதிலுக்கு விளையாடி இருக்க வேண்டாமோ, ரொம்பவும் இளைத்து விட்டாளாமே' என்று நைட்டெல்லாம் உங்கள் சார் சரியாக தூங்கவேயில்லை. விட்டால் காலையிலேயே உன் வீட்டிற்கு ஓடி வந்திருப்பான். 'இவ்வளவு நாள் எங்களை போக விட்டாயா நீ? பேசாமல் உட்கார்' என நாங்கள் தான் பிடித்து உட்கார வைத்தோம். அப்படியும் ஈவனிங் நைஸாய் டிமிக்கி கொடுத்துட்டு உன்னிடம் சரண்டராக ஓடிவந்து விட்டான்'' என சிரித்தான் கிரிதர்.

''சரண்டரா...? நீங்கள் வேறு. வந்தும் உண்மையை கூறாமல் ரொம்ப கூலாக எனக்கு நிச்சயதார்த்தம் என பத்திரிகையை நீட்டி, இவருக்கும் ஷ்ரத்திக்கும்தான் என்கேஜ்மெண்ட் என்று நான் நம்பும்படி என்னமாய் நடித்தார் தெரியுமா?'' என்றாள் ஷண்மதி குறையாக.

சிரித்தான் ஸ்ரீதர். ''இன்விடேஷனை பிரித்து படித்ததும் உன் முகத்தில் ஏற்படும் சடன் எக்ஸ்பிரஷன்ஸ் பார்க்க



ஆசையாக இருந்தது. அதான் சற்று விளையாடினேன்'' என்றான் சமாதானமாக.

''ஓஹோஹோ... அப்படியா... உண்மை தெரிந்ததும் ஷண்மி ரியாக்ஷன் எப்படி ஸ்ரீதர்?'' என ஆர்வத்தோடு கேட்டாள் உதயா.

தன்னருகில் இருந்தவளை தோளோடு இலேசாய் அணைத்தபடி, ''அழுதுவிட்டாள் அண்ணி. நான் எதிர் பார்க்கவேயில்லை இப்படி குழந்தையாட்டம் அழுவாளென்று. அழுகை அடங்கவே வெகு நேரமாயிற்று'' என்றான் ஸ்ரீதர் வருத்தத்தோடு.

''டோண்ட் வொர்ரி ஸ்ரீதர். அது சந்தோஷத்தினால் வந்த அழுகைதானே!'' என தேற்றினாள் ஷண்மதி.

அதற்குள் உதயா, ''ஷண்மி! நானும் அத்தையும் ஸ்ரீதருக்குத் தெரியாமல் உன் காதில் மேட்டரை போடலாமென்று உன் செல்லிற்கு எத்தனை முறை ட்ரை செய்தோம் தெரியுமா? நீதான் ஸ்விட்ச் ஆஃப் செய்து வைத்து விட்டாய். வீட்டு நம்பர்க்கு போட்டால், ''நீ பிஸி. இப்பொழுது பேச முடியாதென்றே பதில் வந்தது'' என்றாள்.

அதை ஆமோதித்த தேவகியும், ''ஆமாம்மா... சத்தமில்லாமல் நழுவி நேரில் வந்து சொல்லிவிடலாம் என்று நானும் உதியும் முயன்றோம். இவன் விடவில்லை. கழுகாய் கண்காணித்து எங்கு கிளம்பினாலும், 'வாருங்கள் நான் கொண்டுபோய் விடுகிறேன்' என்று ஒரே வம்பு'' என்று கூறி சிரித்தார்.

ஸ்ரீதர் தன் தந்தையிடம் திரும்பி, ''பார்த்தீர்களா அப்பா, வருங்கால மருமகளுக்காக எனக்கே எட்டப்பன் வேலை செய்ய இவர்கள் இருவரும் எப்படி துடித்திருக்கிறார்கள் பாருங்கள்'' என்றான்.

அவரோ சிரித்தபடி, ''லிஸ்ட்டில் உன் அருமை அண்ணனை விட்டுவிட்டாயே ஸ்ரீதர். ஷண்மியிடம் உன்னை பற்றி போட்டுக் கொடுக்க அவனும் ஒரு விஷயம் வைத்திருக்கிறான்'' என்றார் மர்மக் குரலில்.

''அடக்கடவுளே! எனக்கெதிரான பெரிய சதிவேலை
யாக அல்லவா தெரிகிறது. என்னண்ணா விஷயம்?''
எனப் பயந்தவன் போல் வினவினான் ஸ்ரீதர்.

அப்பொழுதுதான் நினைவு வந்தவளாக உதயாவும்,
''அட ஆமாம்.கிரி அதை ஷண்மியிடம் இன்றே காட்டி
விடலாமா?'' என ஆர்வத்தோடு கேட்டாள்.

அவளது ஆர்வத்தை கண்ட கிரியும், ''கண்டிப்பாக
உதி. இவன் இன்றே சஸ்பென்ஸ் ஷண்மியிடம் உடைத்து
விட்டான். சோ நாமும் இன்றே காட்டிவிடுவோம்''
என்றபடி எழுந்து தன்னறைக்கு சென்றவன் திரும்பி
வந்தபொழுது அவனது கையில் பெரிய கவர் இருந்தது.

அதைக் கண்டதுமே விஷயம் புரிந்தவனாக, ''இரண்டு
நாட்களாக காணோமேயென்று தேடிக் கொண்டிருந்
தேன். உன் கைக்கு எப்படி அண்ணா வந்தது?'' எனக்
கண்டிப்பான குரலில் விசாரித்தான் ஸ்ரீதர்.

ஷண்மதியிடம் கவரை தந்தவன், ''என்னை முறைத்து
பயனில்லை தம்பி பையா. உன் அண்ணிதான் தந்தாள்''
என நமட்டு சிரிப்புடன் மனைவியை மாட்டி வைத்தான் கிரி.

''அண்ணி'' என அவளிடம் திரும்பியவனிடம், ''ஏய்
ஸ்ரீதர்! என் மேல் தவறில்லை. எக்ஸ்ட்ராவாக பத்து
பத்திரிகை கேட்டேனென்று உன்னுடையதிலிருந்து
தந்தாயே அத்தோடு இந்த கவரும் சேர்ந்து வந்து
விட்டது'' என்று அவசரமாக விளக்கியவள், ''பார்த்ததும்
உன்னிடம் தரலாமென்றுதான் நினைத்தேன்... கிரியிட
மும் அதைதான் சொன்னேன்...'' என இழுத்து விட்டு,
''உன்னிடம் தருவதற்குதான்... மறந்தே போய் விட்
டோம்'' என்று கூறி குறும்புடன் சிரித்தாள்.

''பொல்லாதவர்கள் அண்ணி நீங்கள்'' என்று தானும்
சேர்ந்து சிரித்தான் ஸ்ரீதர்.

கிரி தந்த கவரை பிரிக்காமல் ஸ்ரீதரிடமே நீட்டினாள்
ஷண்மதி. அதைக் கவனித்த வாசுதேவன், ''நீங்கள் என்ன
தான் வம்பு செய்தாலும் அவள் கவரை என்னவென்று



பார்க்காமலே அவனிடம் தருவதை பாருங்கள்'' என்றார்
பெருமிதமான குரலில்.

ஸ்ரீதரும் கவரை வாங்காமலே, ''பிரித்து பார் மதி.
எல்லோர்க்கும் தெரிந்த விஷயமாகி விட்டது. உனக்கு
தெரிவதற்கென்ன?'' என்றான் சிரித்த முகமாகவே.

ஆவலுடன் கவரைப் பிரித்தாள் ஷண்மதி. அவள்
ஊகித்தது போலவே அவளது சற்று பெரிய சைஸ் புகைப்
படம்தான். பளிச்சென்ற சிரிப்போடு அவள் நிற்கும்
ஃபுல் சைஸ் போட்டோ.

''இதில் என்ன சஸ்பென்ஸ்' என்பதுபோல் அவள் மற்ற
வர்களை நிமிர்ந்துப் பார்க்க, உதயா குறும்பு சிரிப்புடன்,
''பின்புறம் திருப்பிப் பார் ஷண்மி. வழக்கம்போல் ஐயா
உருகி உருகி எழுதியிருக்கிறார்'' என்றவள் ஸ்ரீதரிடம்
திரும்பி ''இது எப்பொழுது எழுதியது ஸ்ரீதர்?'' என விசா
ரித்தாள்.

''குணாவோடு வந்து இன்விடேஷன் வைத்தானே
அன்று எழுதியது'' என வெளிப்படையாக கூறினான் ஸ்ரீதர்.

ஆர்வத்தோடு புகைப்படத்தை திருப்பி பின்புறம்
பார்வையை பதித்தாள் ஷண்மதி.

**எட்டாத நிலவே!**
**நீ என் கையெட்டும்**
**தூரம்**
**இறங்கி வந்த பொழுது**
**எட்டிப் பிடிக்க**
**மனம் துணியாதிருந்தேன்!**
**மனம் விரும்பி**
**துணிந்த பொழுதோ...**
**கையெட்டும் தூரத்தில்**
**நின்ற நீ...**
**எட்டிச் சென்றாய்**
**எட்டிப் பிடிக்க**

முடியாத தூரத்திற்கு...!
என்றும் நான்
எட்டவே
முடியாத தூரத்திற்கு...!
என்றுமே
எனக்கு
எட்டாத நிலவாகவே நீ...!

படித்த ஷண்மதியின் முகம் இளகி கனிந்தது. எப்படி வருந்தி எழுதியிருக்கிறான் என எண்ணும்பொழுது அவன்பால் அவள் உள்ளம் பாகாய் உருகியது.

அவளது விழிகளில் இலேசாக நீர் திரையிடுவதை கண்ட உதயா அவளை சஜகமாக்குவதற்காக, ''பார்த்தாயா ஷண்மி, இப்படி உருகி எழுதிவிட்டு, குணா திருமணத் தன்று ஷ்ரத்தியை மறுபடியும் சந்தித்தேன், மனம் தெளிந்தோம், உடனே திருமணமென்று கதையெல்லாம் விட்டதை நினைத்தால்... அதை நாமும் எப்படி நம்பி விட்டோம். தப்பு பண்ணிவிட்டோம் ஷண்மி. குணா திருமணத்திற்கு கிளம்பும் முன் மறுபடியும் ஸ்ரீதர் ரூமை செக் செய்திருக்க வேண்டும். இந்த போட்டோ மட்டும் முன்பே கிடைத்திருந்தால் நாமும், 'ஐயா சாமி! விட்ட கதையெல்லாம் போதும். இதற்கு என்னப்பா சொல் கிறாய்?'' எனக் கேட்டு மடக்கியிருக்கலாம்'' எனப் போலி யாய் பெருமூச்சு விட்டாள்.

''என்ன செய்திருப்பான், 'இது என் ஹேண்ட்ரைட் டிங்கே இல்லை' என முழு பூசணிக்காயை சோற்றில் மறைத் திருப்பான். அவன் கையெழுத்துதான் என்ற உண்மை தெரிந்து அதைச் சொல்ல வாயெடுக்கும் அம்மாவையும் ஒரே பார்வையில் மசிய வைத்து விடுவான். அவர்களும் மகனுக்கு சப்போர்ட்டாக வாயை கப்பென்று மூடிக் கொள்வார்கள். அம்மாவுக்கு சப்போர்ட்டாக அப்பாவும் அவனது கையெழுத்துதான் என்று சொல்லாமல் நம்மை



அவன் முட்டாளடிப்பதை வேடிக்கை பார்ப்பார்'' என்றான் கிரி பாதி கிண்டலும், பாதி புலம்பலுமாய்.

வாசுதேவன், ''அது முடியாதடா மகனே! கவிதையின் பொருளிலேயே இவன்தான் எழுதியிருக்க வேண்டு மென்று தெளிவாய் தெரிந்து விடுகிறதே!'' என்று விட்டு ஷண்மதியிடம் திரும்பி,''நீ நன்றாக பாடுவாயென்று நினைத்தேன். இப்படி இவனை கவிதை எழுதவும் வைத்து விட்டாயே!'' என்று கேலி செய்து சிரித்தார்.

ஏதோ நினைவில் சட்டென்று வாய்விட்டு நகைத் தான் ஸ்ரீதர்.

ஷண்மதியை குறும்புடன் நோக்கியவன், ''உங்களுக்கு இன்னும் தெரியாதில்லையா? மதியும் கவிதை எழுது வாள் அப்பா. நானாவது போட்டோ பின்னால் எழுது கிறேன். அவள் எதில் எழுதுவாள் தெரியுமா? டெஸ்ட் பேப்பரில்! ஆன்சர் ஷீட்டில் எழுதி சமர்த்தாக பின் செய்து என்னிடமே தந்தும் விடுவாள்'' என்று கூறி மீண்டும் சிரித்தான்.

''ஹையோ! நான் வேண்டுமென்று பின் செய்ய வில்லை'' என சிணுங்கினாள் ஷண்மதி.

மற்ற அனைவரும் ஆவலோடு விசாரிக்கவும், ''என்ன மதி சொல்லிவிடட்டுமா?'' என குறுஞ்சிரிப்புடன் கேட் டான் ஸ்ரீதர்.

''நோ ஸ்ரீதர்! ப்ளீஸ் நாட் நவ்,அது ஏதோ விளையாட் டாய் எழுதியது. இப்பொழுது சொல்லி என் மானத்தை வாங்கிவிடாதீர்கள்'' என அவசரமாக மறுத்தாள் ஷண்மதி.

''விளையாட்டாய் எழுதியதுதானே! சொன்னால் பரவாயில்லை'' என மற்றவர்கள் ஆவலோடு மீண்டும் கேட்கவும், ''கேட்டுவிட்டு இதெல்லாம் கவிதையா யென்று கிண்டல் செய்யாதீர்கள். ப்ளீஸ், ஏதோ மனதில் பட்டதை எழுதினேன். அவ்வளவுதான்'' என்றாள் ஷண்மதி சிரித்தபடி.

அவள் கவிதையை ஸ்ரீதர் சொல்லவும் ரசித்து சிரித்தனர் மற்றவர்கள்.

''பார்த்தாயா மகனே! நீ மதிமுக மயக்கம், எட்டாத நிலவு என்று சுற்றி வளைத்தாலும் என் மருமகள் 'கைப்பிடிப்பது எப்பொழுது' என்று ஸ்டெயிட்டாக பாயின்டை பிடித்தாள் பார்த்தாயா?'' என்று சிரித்தார் வாசுதேவன்.

''ஏதோ டெஸ்ட்க்கு ஸ்ரீதரிடம் பேனா வாங்கி எழுதினேன் என்றாயே. அன்று எழுதியதுதான் இந்த கவிதையா?'' எனச் சட்டென ஊகித்து தேவகி வினவவும்.

''இம்'' என ஒப்புதலாய் தலையசைத்தாள் ஷண்மதி.

''இதையெல்லாம் பார்த்தால் எனக்கு ஒரு சந்தேகம் வருகிறது. ஷண்மி உண்மையாகவே அந்த பேனா காணாமல் போயிற்றா? இல்லை...'' என குறுஞ்சிரிப்புடன் உதயா இழுக்கவும்,

முறுவலோடு கை நீட்டி தன் கைப்பையை எடுத்தவள் உள்ளே பத்திரமாக இருந்த அவனது பேனாவை எடுத்துக்காட்டி ஸ்ரீதரின் தோளில் சாய்ந்து சிரித்தாள்.

''அடப்பாவி! நான் அப்பொழுதே நினைத்தேன். அம்மா மறுநாள் இவள் என்னிடம் புதுப்பேனாவோடு வந்து என்ன கதை விட்டாள் தெரியுமா? லையர்'' என சிரித்தவன், ''அம்மா! நீங்கள் ஆசையாய் தந்த பேனாவை எடுத்து வைத்துக் கொண்டாள். இதற்கு கண்டிப்பாக பனிஷ் பண்ணியே ஆக வேண்டும்'' என்றான் சீரியஸ் போல.

தேவகியும், ''ஆமாம்டா!'' என மகனுக்கு ஒத்து ஊதியவர் ஷண்மதியிடம், ''ஸ்ரீதரின் பேனாவை எடுத்துக் கொண்டாயல்லவா? அதற்கு பரிகாரமாக இப்பவே நீ ஒரு பாடல் பாடவேண்டும்'' என்றார்.

''இப்பவேவா?'' என அவள் சற்று தயங்கவும், ''ஆமாம்! பாட வேண்டும்'' என எல்லோரும் வற்புறுத்தவும் ''ஓகே'' என்றபடி ஸ்ரீதரிடம் ''என்ன பாட்டு பாடட்டும்?'' என கேட்கவும் அவன் முறுவலுடன், ''உனக்கு தோன்றும் பாட்டை பாடும்மா'' என்றான்.



மெல்ல விழி மூடியவள்.

''கண்ட நாள் முதலாய் காதல் பெருகுதடி' என்ற பாட்டை தேன் குரலில் தன்னை மறந்து நெஞ்சுருகி பாடவும் மற்றவர்களும் மெய் மறந்தனர்.

அவள் பாடி முடித்த பின்பும் கூட அந்த இடமே அர்த்தமுள்ள மவுனத்தில் சில நிமிடங்கள் ஆழ்ந்திருக்க வியப்புடன் கூடிய தலையசைப்புடன், ''வெல்டன் மதி!'' என்றான் ஸ்ரீதர்.

மற்றவர்களும் கைதட்டி உற்சாகமாக பாராட்டினர்.

''பாடும்பொழுது அப்படி உருகிப் போனாயே... ஸ்ரீதரை நினைத்து பாடித்தானே அப்படி உலகம் மறந்து ஒன்றிப் பாடினாய்'' என கேலியாகக் கேட்ட உதயாவை பார்த்து முறுவலுடன் இல்லையென தலையசைத்தாள் ஷண்மதி.

''இல்லை அக்கா! இன்றைய நாளை என் ஆயுளில் மறக்க முடியாத அளவிற்கு அற்புத நாளாக முடித்துக் கொடுத்த அந்த ருகரை நினைத்துதான் பாடினேன். எப்பவுமே நான் கடவுள் மீது இயற்றப்படும் பக்தி பாடல்களில் மனிதர்களை நுழைப்பதில்லை. அதற்கென்றுதான் வேறு எத்தனையோ பாடல்கள் இருக்கின்றதே'' என சிரித்தவள் ''தினம் காலை பூஜையறையில் தேவாரம், திருவாசகத்திலிருந்து குறைந்தது ஒரு பாடலாவது என்னை பாடச்சொல்லி, அப்பாவும் சேர்ந்து பாடுவார். அப்பாடல்களெல்லாம் கடவுள் மீது காதலால் கசிந்துருகி பாடப்பட்டிருக்கும். அப்படிப்பட்ட பக்தி பாடல்களை பாடும்பொழுது நாமும் அக்கடவுளை, அவரின் எல்லையற்ற கருணையை தியானித்து அப்பாடலை அவருக்கே பாமாலையாக அர்ப்பணிக்க வேண்டுமென என் அப்பா சொல்வார். அதுதான் கடவுளுக்கும், அதை இயற்றியவர்களுக்கும் நாம் செய்யும் மரியாதை என்பார் என் அப்பா. அதை தான் இன்று வரை நானும் கடைப்பிடிக்கிறேன். என்னளவில் என் தனிப்பட்ட கருத்து இது அவ்வளவுதான்'' என்று கூறி முறுவலித்தாள் ஷண்மதி.

''ரொம்ப கரெக்ட் ஹனி'' என்றான் ஸ்ரீதர் உற்சாகத்தோடு. ''அத்தை! அந்தப் பாடலை உங்கள் எல்லோர்க்கும் பாடினேன். இப்ப ஸ்ரீதர்க்காக ஒரு பாடல் பாடவா?'' என ஆவலோடு கேட்க,

''ஷண்மி என்ன கேள்வி இது? அதற்காகத்தானே காத்திருக்கிறோம்'' என்றான் கிரிதர் ஆர்வமாக.

''என்ன ஸ்ரீதர் பாடட்டுமா?'' என ஆவலும் உற்சாகமாக கேட்டவளை விழிமலர நோக்கி, ''இம்!'' என தலையசைத்தவன் பாடலை கேட்க தயாரானான்.

**''மன்னவன் வந்தானடி - தோழி**

**மஞ்சத்திலே இருந்து நெஞ்சத்திலே அமர்ந்த...**

என சுருதியோடு அவள் பாட துவங்கவும் ஸ்ரீதரின் முகம் நேசத்தில் இளகியது. முன்பொருமுறை இதே வீட்டில் இதேப் பாடலை... இந்த வரிகளை அவள் பாடிய கணம் தான் உள்ளே நுழைந்தது அவனுக்கு நினைவு வந்தது. அவளிடமும் அதே நினைவு இசையின் பரவசத்தில் கண்களை மூடி லயித்து கேட்டவன் இதயத்தின் ஆழத்திலிருந்து தனக்காக அவள் பாடிய அந்த தேனிசை தன் செவிகளை வருடி பின் அதையும் தாண்டி தனது இதயத்தை இதமாய் வருடுவது போல உணர்ந்தான்.

பாடி முடித்த அவளை வாசுதேவன், தேவகி என அனைவரும் போட்டிப் போட்டுக்கொண்டு பாராட்டியபொழுது அவன் மட்டும் எதுவும் பேச இயலாதவனாய் அமர்ந்திருந்தான்.

''ஸ்ரீதர்! நீங்கள் ஒன்றும் சொல்லவில்லையே'' என சிணுங்கியவளை பார்த்து, ''நோ வேர்ட்ஸ் டு சே ஹனி. ஐ கான்ட்.... ஐ கான்ட் சே எனிதிங் அபௌட் யுவர் ஃபெர்பாமென்ஸ்'' என்றான் அவன் உணர்ச்சியோடு.

''அடடா! என்ன உருக்கம்டா சாமி. தம்பிபையா சரண்டர் ஆகிவிட்டாய் போல'' எனக் கிண்டலடித்தான் அண்ணன்.

''ஆமாம் அண்ணா! டோட்டல் சரண்டர். உன்னைப் போலவே'' என பதிலுக்கு வாரினான் ஸ்ரீதர்.



சற்று பொறுத்து மெயின் ஹாலில் உதயாவுடன் ஷண்மதி பேசிக் கொண்டிருக்கையில் தூக்க கலக்கத்தில் சிணுங்கிக் கொண்டிருந்த வினேஷை தூக்கிக் கொண்டு வந்த ஸ்ரீதர், ''அண்ணி! பெரியவருக்கு தூக்கம் கலைந்து விட்டது. அம்மா வேண்டுமாம்'' என்றபடி அண்ணியிடம் வினேஷை நீட்டினான்.

அவனைத் தூக்கிக் கொண்டு உதயா செல்லவும் ''ஸ்ரீதர் எனக்கும் லேட்டாகிவிட்டது. அப்பா எனக்காக காத்திருப்பார். கிளம்ப வேண்டும்'' என்றாள் ஷண்மதி.

''கிளம்பலாம்'' என்றபடி அவளருகில் அமர்ந்த ஸ்ரீதர், ''மதி! சற்று முன்பு என் கவிதையை படித்துவிட்டு வருத்தத்தில் கண்கலங்கினாயே! இப்பொழுது இதை படித்து பாரேன்'' என்றபடி அதே புகைப்படத்தை அவளிடம் நீட்டியவன் அவள் தோளில் கைப்போட்டு தன்னுடன் சேர்த்து அணைத்துக் கொண்டான். வியப்புடன் வாங்கி படித்தவள் முகத்தில் புன்னகை அரும்பியது.

பழைய கவிதையின் மீது பேனாவினால் குறுக்கே ஒரு கோடு போட்டு அதை அடித்துவிட்டு அக்கவிதைக்கு வலதுபுறமாக பக்கத்திலேயே இன்னொரு கவிதையை எழுதியிருந்தான்.

**கைக்கு எட்டாத மதி**
**இப்பொழுது**
**என் கைப்பிடியில்!**
**இத்தருணம்**
**என் வாழ்வில்**
**பொக்கிஷ தருணம்.**
**அதற்கான வெகுமதி**
**மதியே...**
**இனி உன்னில்**
**தேய்ப்பிறை என்பதே**
**கிடையாது!**
**வாக்களிக்கிறேன்**

என் தோழியாய்...
காதலியாய்...
மனைவியாய்...
என் மழலையின் அன்னையாய்...
வளர்பிறை மட்டுமே
உனக்கு இனி சாசுவதம்.

முகம் மலர, மனம் நெகிழ நிமிர்ந்து அவனை இமைக்காமல் பார்த்தாள் ஷண்மதி. விழிகளில் வெள்ளமென அன்பு பெருக, "தேங்க்யூ ஸ்ரீதர்!" என சிரித்தபடி அவன் கன்னத்தில் இதழ் பதித்தாள் அவள். பின்பு,

என்னவனின் எல்லையற்ற நேசம்
என் மீதுதான் என
வெளிச்சமான தருணமே
தேய்மதி, வளர்மதி
எல்லாம் கடந்து
முழுமதியானேன்
இனி...
என் வாழ்வில்
நிறைவான பௌர்ணமி
மட்டுமே!
உன்
அதிகரிக்கும் அன்பில்
உன் தோழியாய்...
காதலியாய்...
மனைவியாய்...
உன் மழலையின் அன்னையாய்...
என்
ஒளியும் அதிகரிக்கும்

என்று தணிந்த மென்குரலில் கூறி, உள்ளத்தில் எல்லையற்ற நிறைவோடு அவனது தோளில் தலை சாய்ந்து கண் மூடினாள் அவள்.

நிறைவான நேசத்தில் கண்கள் கலங்க, அவள் நெற்றியில் பரிவும் பிரியமுமாக இதழ் பதித்தான் அவன்.